இவர்கள் பார்வையில்

அகலிகை

(அகலிகை பற்றிய படைப்புகளின் விமர்சனம்)

டாக்டர் க. ரத்னம்

வால்மீகி

வியாசர்

கம்பர்

தாகூர்

வெ.ப.சு. முதலியார்

புதுமைப்பித்தன்

ந. பிச்சமூர்த்தி

ச.து.சு. யோகியார்

கு.ப.ரா

பிரபஞ்சன்

சிற்பி

ஞானி

வாலி

ஐந்திணைப் பதிப்பகம்

இவர்கள் பார்வையில்

அகலிகை

டாக்டர் க. ரத்னம்

ஐந்திணைப் பதிப்பகம்
279, பாரதி சாலை
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

நூல் விவரம்

நூலின் பெயர்	:	இவர்கள் பார்வையில் அகலிகை
ஆசிரியர்	:	டாக்டர் க. ரத்னம்
பொருள்	:	அகலிகை பற்றிய படைப்புகளின் திறனாய்வு
காபிரைட் உரிமை	:	ஐந்திணைப் பதிப்பகம்
பதிப்பு	:	முதல் பதிப்பு, ஜூலை 1998
பக்கங்கள்	:	208
தாள்வகை	:	வெள்ளை, கிரவுன் 11 கி.கி
ஒளி அச்சு	:	ஹைடெக் கிராஃபிக்ஸ்
அச்சிட்டோர்	:	மணி ஆப்செட்
வெளியீடு	:	ஐந்திணைப் பதிப்பகம் 279, பாரதி சாலை திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி	:	8549410

விலை : ரூ. 47.50

பொருளடக்கம்

கவிதையில்

முன்னுரை

அகலிகையின் அவல வாழ்வைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட படைப்புகள் பல. இவை பலரது கவனத்தையும் கவர்ந்துள்ள ஒன்று. இப்படைப்புகளுள் சிலவற்றைத் தொகுத்துப் புதிய நோக்கில் காணும் முயற்சியாக 1993 இல் ஆர். வீரபத்திரன் "அகலிகை" என்ற நூலினை வெளியிட்டுள்ளார். அது வான்மீகம், கம்பராமாயணம் ஆகிய இதிகாசங்களில் இடம் பெற்றுள்ள அகலிகை வரலாற்றிடையேயான வேறுபாட்டையே விரிவாக விமர்சிப்பதாக அமைந்துள்ளது. இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய ஸ்ரீபிரமானந்த தீர்த்த சுவாமிகள் தன் அணிந்துரையில் இராமயணத்தில் அகலிகை வரலாறு இடம் பெற்றுள்ளதற்கான காரணத்தை,

> "இராம லட்சுமணர்களை மிதிலைக்கு அழைத்துச் செல்லும் வழியில், கௌதமரின் ஆசிரமத்திற்கு வருகிறார். இராமனுக்குத் திருமணம் நடக்கப்போகும் சமயத்தில் அதனிடையே அகலிகை கதை எதற்கு? விதி இராமனைப் பார்த்து, "ஏ! இராம! கௌதமருக்கும் அகலி கைக்கும் ஏற்பட்டதைப் போன்ற சங்கடமான நிலைமை உனது மண வாழ்விலும் ஏற்படப் போகிறது. நீ அதை எப்படி ஏற்று வெற்றி காணப் போகிறாய்? பார்ப்போம்" என்று அறைகூவல் விடுவதாகக் கருதலாம்"

எனப் புதிய நோக்கில் சிந்தித்து விளக்கியுள்ளார்.

இதே அகலிகை வரலாற்றை வ.ரா. பார்க்கும் பார்வை வேறு கோணத்ததாக உள்ளது. ஒழுக்கமும் கலையும் பற்றிக் கூறும்போது,

> "அகலிகை கௌதமரோடு வாழ முடியாமல் கல்லாய்ச் சமைந்த கதை உங்களுக்குத் தெரியும்.

ஸ்ரீராமனுடைய பாத துளிபட்டு, கல்லாய்ச் சமைந்து கிடந்த அகல்யை உயிர்பெற்று எழுந்தாள். ஒழுக்கத்தில் கௌதம முனியும் சரி! ஸ்ரீராமனும் சரி! நிகரற்றவர்கள் என்று சொல்லலாம். அகல்யை என்ற இயற்கைக் கலை கௌத முனியின் நல்லொழுக்கம் என்ற கொடிய தீயால் அழிக்கப் பட்டுப் போய் விட்டது. ஆனால் ஸ்ரீராமனது ஒழுக்கம் என்ற கருணை வெள்ளப் பெருக்கால் அகல்யை என்ற கலை உயிர் பெற்று எழுந்துவிட்டது.

ஆகவே, எந்த ஒழுக்கத்திற்கும் கலைக்கும் தீவிர நட்பு, என்பதற்கு மேலே சொன்ன கதையைக் கிளறிப் பார்க்கலாம். தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டு உலகத்தைப் பற்றி சிந்தனையில்லாமல் ஆத்ம ஞானம் பெற்று அதன் மூலமாக ஒழுக்கத்தை நாடும் மனிதனுக்குக் கலை பிடிக்காது. அவன் மூலமாக கலை நசிந்து போகும். ஏன்? ஆதரவு இல்லாமையாலே"

"உலகத்தைப் பாதுகாக்கும் லட்சியத்தையும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு, ஒழுக்கத்தை நாடும் ஸ்ரீராமனைப் போன்ற வீரர்களின் மூலமாக கலை பெருக்கடையும் என்பதில் சந்தேகமில்லை. நல்லொழுக்கத்துக்கு அடிப்படையாக இருக்கும் மனோபாவத்தில் வித்தியாசங்கள் உண்டு என்பது கௌதமன் ராமன் என்ற இரண்டு பெரியோர்களிடமிருந்து நமக்குத் தெரிய வருகிறது"*

என அகலிகை வாழ்வின் அவலத்துக்குக் காரணம் கௌதமரின் குறுகிய மனப்போக்கே எனத் தெளிவு படுத்துகிறார். கு.ப.ராவின் அகலிகை நாடகத்தின் முற்பகுதியாக அமைந்த நாரதருக்கும் கௌதமருக்கும் இடையேயான உரையாடல் இக்கருத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருத்தல் கூடும்.

* பாரதமணி 23.10.1938

வ.ரா. அவர்களின் இக்கருத்தை ஒரு பெண்மணியும் உடன்பட்டவராக அகலிகையின் வாழ்வில் நிகழ்ந்ததான அவலத்துக்கான காரணத்தை,

> "Both Ahalya and Indra have erred consciously. The story of Ahalya is really aesthetics. The science of beauty giving through its parable the history of fall and rise. The description of the exterior of Mithila suggesting that we are entering the city of womanhood. It is on the out. skirts of this city where that drama of Ahalya has been enacted. These description hold up before us the reflections of so many illusions and delusions to which unfortunate innocent woman fall a prey. This vision of delution itself forming as it were a contrast to the other version viz. Sita's abduction heightens there by the beauty and force of the latter and attains an organic unity with the main story whose hero becomes the *deux ex in achina* of this subsidiary plot. Like all old stories this has become a parable of the triangle force of beauty, power and Tapas."*

என விளக்கியுள்ளார்

அறிஞர் அண்ணா அவர்கள் கவனத்தையும் அகலிகை கவர்ந்துள்ளாள். சீதையும் அகலிகையும் சொர்க்கத்தில் சந்தித்து உரையாடுகின்றனர். ஆண் ஆதிக்க மனப்பான்மையால் பெண்கள் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டது அவரது கற்பனை உரையாடல் வழி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அகலிகை கதையில் வரும் நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு தற்காலச் சூழலுக்கு ஏற்பச் சிறுகதைகளும் நாவல்களும்கூடப் படைக்கப்பட்டுள்ளன. போலச் செய்தல் (Parody)

---

* E.T. Rajeswari, Tamil Culture Vol. III 1954

என்று இவற்றை வகைப்படுத்தலாம். சி.என்.எம். ஆதவன் எழுதிய "அஹல்யா" என்ற சிறுக்கதை இவ்வகையைச் சார்ந்தது. இந்திரன் காதலித்த அகலிகையை முனிவர் தந்திரத்தால் மனைவியாக்கிக் கொண்டது போல ஓர் இளைஞன் காதலித்த எதிர்வீட்டுப் பெண்ணைத் தன் பணபலத்தால் அந்த இளைஞனின் தந்தை தன் மனைவியாக்கிக் கொள்கின்றார். விடியலில் வெளியூர் செல்ல வேண்டிய அவருடைய திட்டத்தை அறிந்த அவருடைய மகன் கடிகாரத்தின் அலாரத்தைத் திருப்பி வைத்தபின் அவரை வெளியேற்றித் தன் காதலியோடு இன்புற்றதாக அமைகிறது கதை.

விந்தனின் புகழ்பெற்ற நாவலான "பாலும்பாவையும்" பெரிதும் அகலிகை வாழ்வின் நிகழ்வுகளை இக்காலப் பின்னணியில் சித்தரிப்பது. அதன் கதாநாயகி அகல்யா. அவளை ஏமாற்றி கைவிட்டவன் இந்திரன் அவளுக்கு வாழ்வளிப்பதாகக் கூறி ஏமாற்றுபவன் தசரத குமாரன் எனப் பாத்திரங்களின் பெயரால் கூட இந்த நாவல் அகலிகை வழ்வோடு ஒப்புமையுடையது. புராண கால அகலிகை கல்லானாள். விந்தன் படைத்த இவளோ கடலோடு சங்கமமானாள்.

பாலகுமரனின் அகல்யா நாவல் சாவியில் தொடர்கதையாக வந்தபோது அதன் கதாநாயகி பெயரை அகல்யாவாக அவர் அமைத்துக் கொண்டதன் நோக்கம் முதலில் புரியவில்லை. போர்முனையில் இறந்துவிட்டதாக கருதப்படும் ராணுவ. வீரனான அகல்யாவின் கணவன் அவள் தன் காதலனை மறுமணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தும்போது இன்னும் விடியவில்லை என உணர்ந்து கௌதமர் திரும்பியதைப் போல உயிரோடு திரும்பி அகல்யாவைச் சோதனைக்கு உள்ளாக்குகின்றான் என்பது கதையின் போக்கில் புரிபடுகிறது.

சிந்தனை உலகில் இவ்வளவு தாக்கங்களை ஏற்படுத்திய அகலிகையின் வாழ்வு இலக்கிய உலகிலும் தன் தாக்கத்தைத் தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் ஏற்படுத்தி இருப்பது வியப்பில்லை. அவள் வாழ்வை தங்கள் கோட்பாடுகளுக்கு ஏற்பக்

கதையாக, கவிதையாக, நாடகமாகப் படைத்தவர்களின் படைப்புகள் அனைத்தையும் **விமர்சன நோக்கில்** வாசகர்களுக்கு படைக்க வேண்டும் என்ற ஆவலின் உந்துதலில் எழுந்ததே **இவர்கள் பார்வையில் அகலிகை** என்ற இந்த விமர்சனக் கட்டுரைகள்.

அகலிகையின்பால் இராமன் காட்டிய கருணையைப் போல அவளது அவல வாழ்வில் உள்ளம் நெகிழ்ந்து தன் கண்ணீரால் கவிதை அஞ்சலியை நூறு ஆண்டுகளுக்கு முன்பே செலுத்தியவர் கவிஞர் தாகூர் என்பது பலருக்கு வியப்பளிக்கலாம்.

வங்கக் கவிஞரும் நாடக ஆசிரியருமான துவிஜேந்திரலால் ராய் அகலிகை வாழ்வினை வங்க மொழியில் நாடகமாக்கியுள்ளார். அதன் இந்தி மொழிபெயர்ப்பை ஆதாரமாகக் கொண்டு நாகர்கோயிலைச் சேர்ந்த திரு. P. மகாலிங்கம் அவர்கள் 1940 க்கு முன்பே அதனைத் தமிழாக்கியுள்ளார். அது கோட்டாறு செங்குந்த வாலிபர் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்று அச்சில் இல்லாத அதனைத் தழுவி முல்லை முத்தையா அவர்க்ள் அகலிகை என்ற தமிழ் நாடகத்தை 1993இல் படைத்துள்ளார். எனினும் அவர் அதில் அந்தத் தமிழ் மொழிபெயர்ப்பைப் பற்றிக் குறிப்பிடாததோடு தனது கதையின் மூலம் இந்தி மொழி நாகடம் என்றும் அதனைப் படைத்தவர் துவிஜேந்திரலால் ராய் என்றும் குறிப்பிட்டுள்ளது வியப்பைத் தருவதாக உள்ளது.

மலையாளக் கவிஞரான ஐயப்பப் பணிக்கர் "சாபவிமோசனம்" என்ற தலைப்பில் அகலிகை கூற்றாக படைத்துள்ள சிறு கவிதை நீல. பத்மநாபனால் தமிழாக்கப்பட்டு 1967இல் எழுத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்படிப் பிற இந்திய மொழியாளர்களின் கருத்தைக் கவர்ந்த அகலிகை வரலாறு தமிழில் பலரது கற்பனையில் பல்வேறு புதுக்கோலங்கள் கொண்டுள்ளது. அக்கோலங்கள் அவை படைக்கப்பட்ட காலச் சூழலுக்கு ஏற்ப மாறுபட்டனவாக அமைந்திருக்கின்றன. சமூகச் சூழலின் தாக்கம் அக்கலைப் படைப்புகளில் வெளிப்படுவது தவிர்க்க இயலாதது.

புதுமைப்பித்தனின் 'அகலிகை', 'சாபவிமோசனம்' இரண்டும் இரு துருவங்களாக அமைந்திருப்பதற்கான காரணமும் இதுவே.

திரு. சிட்டி மற்றும் திரு. கோவை ஞானி ஆகிய இரு படைப்பாளர்களிடமும் அவர்கள் படைப்பைப் பற்றிய என் விமர்சனத்தைப் படித்துக் காட்டும் வாய்ப்பு ஏற்பட்டது ஒரு நிறைவினைத் தருகின்றது.

என் பார்வைக்கு வராத அகலிகை பற்றிய சில கவிதைப் படைப்புகளைக் கவிஞர் சிற்பி அவர்கள் தமது அகலிகை பற்றிய கவிதைகளோடு தந்துதவியதோடு இந்த நூலின் வளர்ச்சி பற்றி அடிக்கடி கேட்டும் ஊக்கம் தந்தவர். அவருக்கு என் நன்றி.

இந்த நூலினை முழுதும் படித்துப் பார்த்துச் சில கருத்துரைகளை வழங்கியதோடு தேவையான திருத்தங்களையும் செய்து உதவியர் எனது நண்பர் சி.என். மாதவன் அவருக்கும் என் நன்றி உரியது.

இந்த நூல் உருவாகத் தொடங்கிய காலத்திலேயே இதனை வெளியிட இசைந்ததோடு அழகுற அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ள ஐந்திணைப் பதிப்பக உரிமையாளர் குழ. கதிரேசன் அவர்களுக்கும் என் நன்றி உரியது.

க. ரத்னம்

19-B, திருச்சி ரோடு
சூலூர் - 641 402

காவியத்தில்

1. ஆதி காவியத்தில் அகலிகை

2. வியாசர் தரும் புது விருந்து

3. கம்பன் காட்டிய கருணை

ஆதி காவியத்தில் அகலிகை

- வான்மீகி

ஆதிகாவியமாம் வான்மீகி இராமாயணமே அகலிகை வரலாற்றின் மூலமாக உள்ளது. அதனை ஆதாரமாகக் கொண்டே பிற்காலப் புராணங்களும் தற்காலப் படைப்புகளும் அவள் வரலாற்றையும் பல்வேறு புது வடிவங்களில் படைத்துள்ளன.

வான்மீகத்துள் பாலகாண்டத்தில் அகலிகை சாபம் நாற்பத்தெட்டாவது சருக்கமாக அமைந்துள்ளது. அகலிகை சாபவிமோசனம் நாற்பத்தொன்பதாவது சருக்கமாக உள்ளது. ஐம்பதாவதான மிதிலைச் சருக்கத்திலும் ஐம்பத்தொன்றாவதான விசுவாமித்திரர் வரலாறு கூறும் சருக்கத்திலும் அகலிகை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மிதிலையை நெருங்கும்போது மனித நடமாட்டம் அற்றதாக இருந்த அழகியதொரு குடிலைக் கண்டு இராமன் வியப்புற்றவனாக, "முனிவரே! முனிவர்கள் யாரும் குடியில்லாததான அழகுடையதான இந்த ஆச்சிரமம் யாருடையதென அறிந்து கொள்ள விரும்புகின்றேன்" எனக் கூறுகின்றான்.

"இராகவா! முனிவர்களின் இருப்பிடமான இந்தக் குடில் எந்த முனிபுங்கவரின் கோபத்தால் இவ்வாறு சாபத்திற்கு உள்ளானது என்ற துன்ப வரலாற்றை உனக்கு நடந்தபடி சொல்கிறேன் கேள்" என்ற முன்னுரையோடு விசுவாமித்திரர் அகலிகையின் வாழ்வினை இராமனுக்குப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

> "உத்தமனே! முன்பு தேவர் உலகம் போன்றதாக இருந்த இது தேவர்களாலும் மிகவும் மதிக்கப்பட்டதாக கௌதமருடைய ஆசிரமமாக இருந்தது. அவர்

அகலிகையுடன் இல்லறம் நடத்தியவராக நீண்ட காலமாக இங்கே தவம் செய்து வந்தார். ஒரு நாள் அவர் அங்கிருந்து அகன்று நெடுந்தொலைவு சென்றுள்ளதை அறிந்த இந்திரன் கௌதம முனிவரின் வேடம் தரித்தவனாக அகலிகையைப் பார்த்து, நன்றாய் அமைந்தவளே! கலவியில் ஆசையுடையவர்கள் ருது ஸ்நானமான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கமாட்டார்கள். இடையழகி! நான் கலவியைப் பெற ஆசைப்படுகின்றேன் என்றான்.

இரகுநந்தன! முனி வேடம் பூண்டவனை இந்திரனென்று அறிந்தே அந்த துர்புத்தி அவன் தேவர்களுக்கெல்லாம் அரசு என்கிற ஆர்வத்தால் அவனுடைய விருப்பத்திற்கு மனம் இசைந்தாள்.

பின், மனம் மகிழ்ந்த உள்ளத்துடன் தேவராசனைப் பார்த்து, "தேவர்களுக்கு இறைவ! தன்யை ஆனேன். பிரபுவே! இங்கிருந்து சீக்கிரமாய்ப் போய்விடுக. உம்மையும் எம்மையும் எப்பொழுதும் மானத்தைக் காப்பவரே! உள்ளது வெளிப்படாமல் காத்துக் கொள்வீராக!" என்றாள்.

இந்திரனும் சிரித்துக்கொண்டே அகலிகையைப் பார்த்து. "அழகிய ஜகனம் உடையவளே! நான் திருப்தியடைந்தவனாக வந்த வழியே திரும்பி விடுகின்றேன்" என்றான்.

இவ்வாறு அவளுடன் கலவி செய்துவிட்டு அதற்குமேல் கௌதமரை எண்ணி அச்சங் கொண்டவனாகப் பரபரப்புடன் விரைவாக நடந்து ஆச்சிரமத்திலிருந்து வெளிநடப்பானாயினன். அப்போது அவன் தேவர்களாலும் அசுரர்களாலும் தகைய முடியாத தவவலிமையுடையவரான கௌதம முனிவர் உள்ளே வரக்கண்டான்.

தூய நீரால் நனைந்த உடலோடு கூடியவராக, விபூதி பூசிய மேனியோடுங்கூட அக்னிபோலக் கனலும் தோற்றத்தோடு அவர் காட்சியளித்தார். மற்றொரு உமாபதிபோல் சிவபக்தரான அவர் அனைத்து உண்மைப் பொருட்களையும் அறிந்தவராய் சமித்துக்களைச் சேமித்தவராகச் சமித்துக்களோடு அங்கு தோன்றினார்.

உத்தமரான அந்த முனிவரைப் பார்த்த அளவில் தேவராசன் நடுநடுங்கி முகம் விழுந்தவனானான். ஒழுக்க சீலரான அவர் ரிஷி வேடம் போட்டிருக்கும் கெட்ட நடத்தையுடையவனான ஆயிரங்கண்ணனைப் பார்த்து மிக்க சினமுற்றவராக, "புத்தி கெட்டவனே! என் உருவம் எடுத்துச் செய்யத் தகாத இதைச் செய்திருக்கின்றாய். ஆகையால் நீ விருஷணங்கள் ஒழிந்தவனாக ஆகக் கடவாய்" எனச் சபித்தார். சினமுற்ற கௌதமர் இவ்வாறு சபித்த அளவில் இந்திரனுடைய இரண்டு விருஷணங்களும் அற்றுக் கீழே விழுந்தன. இந்திரனைச் சபித்தபின் அவர் தன் மனைவியைப் பார்த்து நீண்ட ஆயிரம் ஆண்டுகள் கல்லாய்ச் சமைந்து காற்றையே உணவாகக் கொண்டு மனம் தவித்தபடி புழுதியில் அழுந்தி யாருடைய கண்களுக்கும் படாமலேயே இந்த ஆசிரமத்திலேயே கிடப்பாயாக. எதிர்த்து நிற்க இயலாத ஒப்பற்ற வீரனான தசரத குமாரனான ஸ்ரீராமன் பாழான இந்தக் காட்டிற்கு என்று வருவாரோ அப்பொழுதே நீ பரிசுத்தம் அடையப் பெறுவாய், நடத்தை கெட்டவளே! அவருக்கு அதிதி பூசை செய்வதால் நீ துராசையும் கண்மூடித்தனமும் நீங்கினவளாய் என்னருகில் மகிழ்ச்சியுடன் மீண்டும் என்னை வந்து கூடும்படியாக உன் உரிய வடிவைப் பெறுவாய்" எனச் சபித்து விட்டுப்பின் இந்த ஆசிரமத்தைவிட்டுச் சித்தர்களும் சாரணர்களும் தங்கி

வாழும் அழகிய இமயமலையின் உச்சியில் பெருந்தவம் புரிய சென்று சேர்ந்தார்."

ஆதி காவியமான வான்மீகத்தில் இடம் பெற்றிருக்கும் இந்த அகலிகை வரலாறு கம்பன் உட்பட பிற்காலத்துப் படைப்பாளர்களின் படைப்பில் பெரிதும் மாறுபட்டதாக உள்ளதல்லவா? பிற்காலப் படைப்புகள் பலவற்றிலும் இடம்பெற்றுள்ள இந்திரன் சேவல்போலக் குரல்கொடுத்து கௌதமரை குடிலிலிருந்து வெளியேற்றினான் என்ற செய்தி இக்காவியத்தில் இல்லை. பின் கௌதமன் விடியல் நெருங்கவில்லை என உணர்ந்து திரும்பியபோது பூனை உருவங்கொண்டு நழுவினான் என்ற விவரமுமில்லை. எந்தப் பெண் உறுப்பின் மீது மோகங் கொண்டவனாக வந்தாயோ அந்த உறுப்பின் ஆயிரம் குறிகள் உன் உடம்பெங்கும் தோன்றுவதாக எனக் கௌதமன் சபித்ததான செய்தியும் இல்லை. மாறாக இந்திரன் இந்த வரலாற்றின் முற்பகுதியிலேயே ஆயிரங்கண்ணன் எனக் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம்.

வான்மீகத்தில் கௌதமர் இந்திரனுக்கு இட்ட சாபம் பண்டைக்காலத்தில் தண்டனை வழங்கும் மரபினை ஒத்ததாக உள்ளது. இன்றும் சமயச்சார்புடைய ஆட்சி நடக்கும் நாடுகளில் அத்தகைய தண்டனை வழங்கும் முறை மேற்கொள்ளப்படுகிறது. திருட்டு புரிபவனுக்கு அத்தொழில் புரிய உதவிய கரங்களை வெட்டுதல், வழிப்பறி செய்பவன் கால்களை வாங்குதல், தகாத நடத்தையில் ஈடுபடுபவனின் ஆண் குறியைத் துண்டித்தல் ஆகியன அத்தகைய தண்டனைகளுள் சில.

இந்திரன் காமம் காரணமாக மாற்றான். மனைவியை, தன் காமத்திற்கு உரியவளாக்கிக் கொண்டவன். அத்தகைய செயலுக்குக் காரணமாக அமைந்தது மிகுந்த காம இச்சையை தூண்டுவதற்குத் துணைபுரியும் ஆணின் விறைகளே. எனவே அவன் மேற்கொண்டும் மற்ற பெண்களிடத்தும் இதுபோலத் தகாத உடலுறவு கொள்ள இயலாதபடி கௌதமர் அவனுடைய விருஷணங்கள் அற்றுவிழும் படியாகச் சபித்தது மிகவும் பொருத்தமானதும்

நியாயமானதும் மரபுப்படியானதுமான தண்டனையாக அமைந்துள்ளது.

இந்திரனோடு கூடிய கலவியில் அகலிகை உடலின் காம இச்சை நிறைவுற்றவளாக மகிழ்ந்தாள். அந்த உடல் உணர்வற்றதாகக் கல்லாக - ஆனால் காற்றையே உணவாகக் கொண்டு உயிர்மட்டும் உள்ளதாக - ஆகும்படி அகலிகைக்குக் கௌதமர் கொடுத்த சாபமும் பொருத்தமானதே. கல்லாகும்படி சாபம் பெற்ற அகலிகை,

"பிழைத்தது பொறுத்தல் என்றும்
பெரியவர் கடனே என்பர்
அழற்றருங் கடவுள் அன்னாய்
முடிவெனக்கு அருளுக"

என்று கேட்ட பின்னரே கௌதமர், "தயரத ராமன் என்பான் கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிரும்" எனச் சாபவிமோசனம் தந்ததாகக் கம்பர் உட்பட பிற்காலப் படைப்பாளர்கள் அகலிகை கேட்ட பின்னரே கௌதமர் சாபவிமோசனம் தந்ததாகப் பாடியுள்ளனர். வான்மீகியோ அகலிகை கேளாமலேயே அவளுக்குக் கௌதமர் சாபவிமோசனமும் அருளியதாகப் படைத்துள்ளார். கணமேயும் காத்தலரிதான சினம் குறைந்தவுடன் இவ்வாறு அவர் கருணையுடைய அருளாளர் ஆனார் எனக்கொள்வது அவருக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

அகலிகை வரலாற்றில் பெரிதும் விவாதத்திற்கு உரியதாக அமைவது முனிவர் வேடத்தில் குடிலுள் நுழைந்த இந்திரனை அகலிகை யாரென அறிந்து கொண்டாளா அறியவில்லையா என்பதாகும். வந்தவன் தன் கணவன் என நினைத்து கலவிக்கு உடன்பட்டாள் என்பதே பலரும் பிற்காலத்தில் மேற்கொண்ட முடிபு. இது பற்றிய கம்பன் சிந்தனை எவ்வாறு விளக்கமும் விரிவாக்கமும் செய்யப்பட்டுள்ளது என்பதனைக் "கம்பன் காட்டிய கருணை" என்ற அடுத்துவரும் கட்டுரையில் காணலாம். வான்மீகம் காட்டும் அகலிகை தன் கணவனோடு பல ஆண்டுகள் இல்லறம் நடத்தியவள். சதானந்தன் என்ற ஒரு மகனையும் பெற்றுக் கொண்டவள். தெருவில்

கேட்கும் நடந்துவரும் காலடி ஓசை கொண்டும், கதவைத் தட்டும் முறைகொண்டும் கணவனோடு வாழ்க்கை தொடங்கிய சில நாட்களுக்குள்ளாகவே தங்கள் கணவன் வருகிறான் என்று அறியும் அறிவுக்கூர்மை பெண்களுக்கு இயல்பாக அமைந்த ஒன்று. அப்படியிருக்க அகலிகை முனிவர் உருவில் வந்த இந்திரனை அடையாளங் கண்டு கொள்ளாதவளாகப் படைப்பது பெண்மை உணர்வுக்கு மதிப்பு அளிக்காததாகும் என்பதாலேயே வான்மீகி அவள் இந்திரனை அறிந்தே அவனோடு உறவு கொண்டாள் எனப்படைத்துள்ளார் எனக் கொள்ளலாம்.

அருந்தவமும் பொறுமையும் கைவரப்பட்ட துறவிகளுக்கு சினம் எப்படிக் கணநேரம் காப்பது அரிய உணர்வாகின்றதோ அதுபோலவே காம உணர்வும் பெண்களைத் தற்காத்துக் கொள்ள இயலாதவர்களாக ஆக்கிவிடும் உணர்வு. அதனாலேயே வள்ளுவரும் சினம் காப்பதுபோல - செல்லிடத்துச் சினம் காப்பது போல - வாய்ப்பு வரப்பெற்றாலும் பெண் தன்னைக் காத்தற்கு உரியவள் என்பதால் "தற்காத்து" என்பதனைத் தனக சான்ற பெண்ணுக்குரிய கடமையாக முதலில் வைத்தார். இதனை வற்புறுத்துவதாக அமைவது வான்மீகியாரின் படைப்பு.

அகலிகை பிறப்பு, வளர்ப்பு, திருமணத்திற்காகப் பிரமன் ஏற்படுத்திய போட்டி, அதில் இந்திரனுக்கு ஏற்பட்ட தோல்வி ஆகியன பற்றி வான்மீகத்தில் எத்தகைய குறிப்பும் இல்லை. கம்பனிலும் அச் செய்திகள் இடம் பெறவில்லை. பிற்காலப் புராணமரபில் இந்நிகழ்ச்சிகள் காரணம் கருதி அமைக்கப் பட்டனவாதல் வேண்டும். அகலிகை இந்திரன் ஆகியோர் தகாத உறவினை நியாயப்படுத்துவதற்காக அகலிகை பிறப்பு, திருமணம் பற்றிய வரலாறு புனையப்பட்டவையாகலாம். கோவலன், மாதவி உறவை நியாயப்படுத்தப் பிற்காலத்துத் தெருக்கூத்து நாடகங்களில் கோவலன் திருமணத்தின் போது நடனமாடிய மாதவி வீசிய மாலை கோவலன் கழுத்தில் விழுந்ததால் அவன் மாதவியோடு உறவு கொள்ள நேர்ந்தது. என நியாயப்படுத்தப் புனைந்த கற்பனையை ஒத்ததே அகலிகை திருமணம் பற்றிய புராண மரபுகள்.

"அகலிகை சாபவிமோசனம்" சருக்கத்தின் முதற்பகுதியில் விறைகளை இழந்த இந்திரனை மீண்டும் ஆண்மை உடையவனாக ஆக்க அக்னி முதலிய தேவர்கள் அவனுக்கு ஆட்டுக்கிடாயின் விருக்ஷணங்களை பொருத்தும் செய்தி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. உடலுறுப்புக்களை மாற்ற இக்கால அறிவியல் கண்டுள்ள நுட்பங்கள் பண்டைய புராணங்களில் பரவலாகக் காணப்படுகின்ற செய்தியாகும். அவை உண்மையில் நிகழ்ந்தனவா இல்லையா என்பது பற்றி எதுவும் துணிந்து கூறுவதற்கில்லை. ஆயினும் இத்தகைய அறிவியல் நுட்பங்கள் பற்றிய சிந்தனை பழங்காலந்தொட்டே மனித அறிவினை ஆட்கொண்டு வந்துள்ளது. இன்று அறிவியல் சார்ந்த புதினம் படைப்பவர்கள் தங்கள் படைப்புகளில் கற்பனையாகப் புகுத்தும் அறிவியல் நிகழ்வுகள் பின்னர் அறிவியலாளர் முயற்சியால் நடப்புக்கு வரும் உண்மையாகி வருவதைக் காண்கின்றோம் அல்லவா?

இச் சருக்கத்தின் பிற்பகுதியில் விசுவாமித்திரன், இராமனிடம், "இராகவனே! புண்ணியம் செய்தவரான ரிஷியின் ஆச்சிரமத்திற்கு வா! மகா பாக்கியசாலியான தேவதை போன்ற வடிவழகுடைய இந்த அகலிகையினைச் சாபக் கொடுமையிலிருந்தும் மீட்பாயாக" எனக் கேட்டுக்கொள்கிறார். பின் மூவரும் குடிலினுள் நுழைய அதுவரை யாருடைய கண்ணுக்கும் புலனாகாதபடி கிடந்த அவள், சாபவிமோசனம் பெற்றுப் பார்வைக்குப் புலனாகும்படி தோன்றினாள். அப்போது இராம இலக்குவனர் அவளுடைய காலடிகளைப் பற்றி வணங்கினர். அவள் முன்பு கணவன் கூறியதை நினைந்தவளாக அவர்களுக்கு அதிதி பூசை செய்து உபசரித்தாள்.

வான்மீகத்தில் இராமன் கால்பட்டு கற்சிலையாக இருந்த அகலிகை உயிர்பெற்றாள் என்றிருப்பதைக் கம்பர் மாற்றி இராமன் கால்துகள் படக் கற்சிலை உயிர் பெற்றது எனப்பாடியுள்ளார் என இராமன் கால் துகளுக்கு பெருமை சேர்க்கும் வகையில் சிலர் பட்டிமன்றங்களில் வாதிடுகின்றனர். இது வான்மீகத்தின் மூலத்தை அறியாதவர்களால் பேசப்படும் செய்தியாகும். அக்குடிலில் அவர்கள்

நுழைந்த அளவிலேயே இராமன் பார்வைபட்டு அவள் உணர்வு வரப்பெற்றாள் என்றே வான்மீகம் கூறுகின்றது.

பின்னர் கௌதமரும் அங்கு வந்து அகலிகையை ஏற்றுக் கொண்டவராக மீண்டும் அகலிகையோடு தன் இல்லற வாழ்வைத் தொடங்குகின்றார்.

மிதிலை சென்றடைந்த மூவரும் அங்கு கௌதமரின் மகனான சதானந்தரால் வரவேற்று உபசரிக்கப்படுகின்றனர். அப்போது சதானந்தர் விசுவாமித்திரரிடம்,

> "முனிசிரேஷ்டரே! நீடித்த காயக்கிலேசத்தை அடைந்தவளான என்னுடைய அந்தத்தாய் இந்த அரசகுமாரர்கள் கண்களில் புலனாகத் தோன்றினாளா? ...என் தாயாருக்கு விதிவசத்தால் நேர்ந்ததும் முற்காலத்தில் நிகழ்ந்ததுமான எல்லாம் இராமபிரானுக்குச் சொல்லப்பட்டதா? என்னுடைய தாய் ஸ்ரீராமபிரானின் சேவை பெற்றது முதல் கொண்டே என்னுடைய தந்தையோடு கூடி வாழ்கின்றாளா?"

என அடுத்தடுத்து தொடுக்கும் வினாக்களுக்கு விசுவாமித்திரர்,

> "முனிவர் பெருமானே! செய்ய வேண்டுவது எதுவோ அது தப்பிவிடவில்லை. என்னால் முற்றிலும் செய்து முடிக்கப்பட்டது. ஜமதக்னியுடன் இரேணுகாதேவி எவ்வண்ணமோ அவ்வண்ணமே தன் கணவரான முனிவரோடு உடனிருந்து வைதிக கருமங்களை நடத்தற்குரிய இல்லக்கிழத்தியாக வாழ்ந்து வருகின்றாள்"

எனக் கூறும் பதிலில் இராமாவதாரத்திற்கு முந்திய அவதாரமான பரசுராம அவதாரத்தில் நிகழ்ந்த "கற்புச் சிக்கல்" பற்றி நினைவு கூர்ந்திருப்பதும் சிந்திப்பதற்குரியது.

வியாசர் தரும் புது விருந்து

- வியாசர்

"பாரதப் பெண்மணிகள்" என்ற தன்னுடைய தொகுதியில் எம்.வி. வெங்கடராம் அகலிகை வரலாற்றைக் கதையாகப் புனைந்திருந்தது எனக்கு வியப்பைத் தந்தது. இராமாயண காலத்திய அகலிகை பாரத காலத்திலும் வாழ்ந்தது எப்படி என்று எண்ணியவனாகப் பாரதத்தில் அகலிகை பற்றிய வரலாறு இடம் பெற்றுள்ள பகுதியைத் தேடத்தொடங்கினேன். இம் முயற்சியில் தஞ்சை சரசுவதி மகால் நூலக வடமொழிப் புலவர்களை அணுகிக் கேட்டபோது பாரதத்தில் "அகலிகை கதையா?" என வியப்பினைத் தெரிவித்தனர். டாக்டர் பட்டம் பெற்றவரும் ஓய்வு பெற்ற வடமொழிப் பேராசியருமான ஒருவரிடம் இதுபற்றிக் கேட்ட போது ஒருக்கால் வனபருவத்தில் அகலிகை வரலாறு இடம் பெற்றிருக்கலாம் என்றார். மகா பாரதத்தில் பெருவழக்கினதாக இல்லாத சாந்தி பர்வத்தில் அகலிகை வரலாறு இடம் பெற்றிருந்ததாலேயே இது இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள அகலிகை வரலாறு போலப் பண்டிதர்களாலும் பாமரர்களாலும் அறியப்படாது போன கதையாகி விட்டது.

சாந்தி பர்வத்தில் தர்மருக்கு பீஷ்மர் உபதேசம் செய்யும் பீஷ்ம கீதையில் வரும் கதைகளுள் ஒன்றாக அகலிகை வரலாறு இருநூற்றெழுபத்திரண்டாவது அத்தியாயமாக இடம்பெற்றுள்ளது. தனக்கு மோக்ஷதர்மத்தை உபுதேசிக்கும் பீஷ்மரிடம் தர்மர்,

> "ஒரு செயலை விரைவாகவோ தாமதமாகவோ எப்படிச் செய்யவேண்டும் என்பதை எப்படிப் பரீக்ஷிக்க வேண்டும்? எல்லாவிதத்தினாலும் நிச்சயிக்க முடியாத இந்தக் காரியத்தில் எங்களுக்கு நீரே உத்தமமான குரு"

என்று வழிகாட்டும்படி கேட்க அதற்குப் பதிலாக பீஷ்மர் அகலிகையின் கடைசிமகனான சிரகாரியின் வரலாற்றைக் கூறுகிறார்.

கௌதமருக்குப் பல புத்திரர்கள் உண்டானார்கள். அவர்களுள் இளையவர் சிரகாரி. அவர் எதனையும் நெடுங்காலம் நன்கு ஆலோசித்துச் செய்பவர். அதனாலேயே அவருக்குச் சிரகாரி என்ற பெயரும் ஏற்பட்டது. இதனைப் புரிந்து கொள்ளாதவர்களான புத்தி குறைவான மக்கள் அவரைச் சோம்பேறியென்றும் கெட்ட எண்ணமுடையவரென்றம் சொல்லி வந்தார்கள்.

ஒரு சமயம் சிரகாரியின் மாதாவான அகலிகைக்குக் கெட்ட நடத்தை உண்டானபோது அதனால் கோபமடைந்த சிரகாரியின் தந்தையான கௌதமர் மற்ற புத்திரர்களைவிட்டு, சிரகாரியைப் பார்த்து, "உன் தாயைக் கொல்" என்று சொல்லிவிட்டு உடனே வனத்திற்குச் சென்றுவிட்டார்.

சிரகாரி இருதலைக்கொள்ளி எறும்பெனத் தந்தையின் கட்டளையை மீறித் தாயைக் காப்பதா அல்லது தந்தையின் கட்டளையை ஏற்றத் தாயைக் கொல்வதா எனத் தனக்குத்தானே மனத்துள் போராடியவனாகக் காலம் தாழ்த்தினான். அவனுடைய சிந்தனை தந்தை என்பதின் புனிதத்தையும் தாய் என்பதின் தியாகத்தையும் எடையிட்டு எதற்கு எது உயர்ந்தது என மதிப்பிடுவதாக அமைந்தாலும் அவனால் ஒரு முடிவுக்கு வரஇயலவில்லை. இவ்வாறான சிந்தனையிலேயே அவன் நீண்டகாலம் கடத்தியவனாகத் தந்தையின் கட்டளையை நிறைவேற்றாமல் இருந்தான்.

இதற்கிடையே கௌதமர் மனம் மாறியவராகத் திரும்பி வந்தார். தன் மனைவி இறந்திருப்பாள் என் எண்ணியபோது அவருக்குத் துக்கம் மேலிட்டுக் கண்ணீர் பெருகியது. நடந்த நிகழ்ச்சி மீண்டும் அவர் மனத்திரையில் இவ்வாறு ஓடியது.

> "மூன்று உலகங்களுக்கும் தலைவனான இந்திரன் பிராம்மண வேஷம் பூண்டு அதிதியின் விரதத்தைக் கைக்கொண்டு என்னுடைய ஆசிரமம் வந்தான். அவன்

என்னால் வரவேற்கப்பட்டு உபசரித்து பூஜிக்கப்பட்டான். நியமப்படி என்னால் அர்க்கியமும் பாத்தியமும் கொடுக்கப்பெற்றான். இப்படிச் சொன்னால் திருப்தி அடைவான் என்று, "நான் உன்னைச் சேர்ந்தவன்" என்று சொன்னேன். இதில்தான் அனர்த்தம் ஏற்பட்டது. என் மனைவியிடத்தில் குற்றமில்லை. நானும் குற்றம் செய்யவில்லை. வழிப்போக்கனான இந்திரனும் குற்றம் செய்யவில்லை. தர்மத்தினுடைய தவறுதலே குற்றம் செய்தது. நான் பொறாமையால் கெடுக்கப்பட்டு, பதிவிரதையும் குடும்பத்தைக் காப்பவளுமான என் மனைவியைக் கொன்று விட்டு துன்பக்கடலில் மூழ்கிவிட்டேன். சிரகாரி என்னால் தாயைக் கொல்லும்படி கட்டளையிடப்பட்டான். அவன் இப்பொழுதும் சிரகாரியாக - யோசித்தபடி தாமதிப்பவன் - இருப்பானானால் என்னைப் பாவத்திலிருந்து காப்பான்."

இவ்வாறு எண்ணமிட்டபடி தன் குடிலுக்குத் திரும்பிய கௌதமரின் காலில் - தாயைக் கொல்வதற்காகக் கையில் தாங்கிய ஆயுதத்தை வீசி எறிந்து விட்டு - வீழ்ந்து வணங்குகின்றான் சிரகாரி. அருகில் வெட்கத்துடன் நிற்கும் அகலிகையையும் கௌதமர் பார்த்தார். தன்னை வணங்கிய புத்திரனை எடுத்து அணைத்து மகிழ்ச்சியினால் அவனை வாழ்த்தியதோடு ஒரு காரியத்தை தாமதித்துச் செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றிய சில சுலோகங்களையும் சொல்லி அருளினார்.

பாரதத்தில் வியாசர் தரும் இந்த அகலிகை வரலாறு இராமாயண அகலிகை வரலாற்றிலும் முற்றிலும் மாறுபட்டதாகப் புதுமை உடையதாக உள்ளது. வீட்டுக்கு அதிதியாக வந்த இந்திரனை அகலிகையின் கணவன் நீயும் நம்முடையவனாகி விட்டாய் எனக்கூறிக் குடும்பத்தில் ஒருவனாக - உடன் பிறந்தவனாக - ஏற்றுக் கொண்டதாலேயே அகலிகை அவனது காம விருப்பத்திற்கு உடன்பட்டாள். மேலும் அதிதியாக வருகின்றவருக்கு உணவு,

உறையுள் ஆகியவற்றோடு மனைவியையும் அன்றைக்கு உரியவளாக்கி உபசரிப்பது வேதகால வழக்கு. இதனாலேயே மனம் மாறிக் குடிலுக்குத் திரும்பும்போது கௌதமர் தர்மம் - இல்லற தர்மம் - குற்றத்திற்குக் காரணமானது எனச் சிந்தித்துக் கவலைப்பட்டவராக வருகின்றார். தன் மகன் சிரகாரியின் எதனையும் சிந்தித்தபடி தாமதித்துச் செய்யும் பழக்கத்தால் மனைவி அகலிகை உயிருடன் இருப்பது கண்டு மனம் மகிழ்ந்துத மகனை வாழ்த்துகின்றார்.

இராமாயணம் கூறும் அகலிகை வரலாற்றிலும் பாரத வரலாறு மாறுபட்டதாகப் புதுமையானதாக உள்ளது. இந்த இரண்டு வரலாறுகளுள் எது உலக நடப்போடு பொருந்தியதாக உள்ளது என்பதனைச் சிந்திக்க வேண்டும். இராம அவதாரத்திற்கு முந்திய அவதாரமான பரசுராம அவதாரத்திலும் தந்தையால் மகன் தாயினைக் கொல்லும்படி ஏவப்படுகின்றான். கற்பிழந்தவர்களாகக் கருதப்படுகின்றவர்கள் கொடிய தண்டனைக்கு ஆளாக்கப்படுவதே அன்றைய வழக்கம். அம் மரபுப்படி பாரதத்தில் வழங்கும் அகலிகை வரலாறு, நடைமுறைக்கு இயைந்ததாக அமைந்துள்ளது. இராமாயண வரலாற்றில் அகலிகை வரலாறு மாற்றப்பட்டதாதல் வேண்டும். இராமன் கடவுள் தன்மையை இதிகாசத்தின் தொடக்கத்திலேயே உணர்த்த அகலிகை கல்லாகும்படி சாபமிடப்பட்டாள் என்றும் இராமன் பார்வை பட்ட கருணையால் அவள் மீண்டும் பெண்ணாக ஆனாள் என்றும் சற்றே கதையை மாற்றி அமைத்தவர்களாதல் வேண்டும். இம்மாற்றம் பாரத காலத்திக்குப் பின்னும் நிகழ்ந்திருக்கலாம். அல்லது பாரதம் பாடிய வியாசர் நடப்பியல் படி கதையை நடத்திச் செல்வதே பொருத்தமானதெனக் கருதியிருக்கலாம்.

வரலாற்று நிகழ்வோடு பொருந்திய நடப்பியல்பாக அமைந்த கதைகளை விட ஒரு கோட்பாட்டினை வலியுறுத்துவதற்காகக் கற்பனை மெருகு ஊட்டப்பெற்று மாற்றம் செய்யப்படும் கதைகளே மக்களை மிகுதியும் கவர்வது என்பதற்கு இராமயணத்திலும் பாரதத்திலும் இடம்பெற்றுள்ள மாறுபட்ட அகலிகை வரலாறுகளே நல்ல எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

கம்பன் காட்டிய கருணை

- கம்பன்

வான்மீகம் மூலநூல். அதனை ஆதாரமாகக் கொண்டே கம்பன் தன் இராம காதையைப் படைத்தான். மூலத்தின் வழித்தடத்தைவிட்டு அவன் பலவிடங்களில் பாதை மாறியுள்ளான். இது படைப்பாளர்களுக்கு உள்ள உரிமை. அவ்வாறு கம்பன் உரிமை எடுத்துக் கொண்ட குறிப்பிடத்தக்க இடங்களுள் அகலிகை வரலாறு கூறும் பகுதியும் ஒன்று.

வான்மீகத்தில் கூறப்பட்டுள்ள அகலிகை கதை நிகழ்ச்சிகளிலும் கம்பன் சில மாற்றங்கள் செய்துள்ளான். பிற்காலப் படைப்புகளுள் இடம்பெற்றுள்ள இந்திரன் சேவல் போலக் கூவி கௌதமனை வெளியேற்றிய செய்தி கம்பராமாயணத்தில் இல்லை. கௌதமன் வருகையை உணர்ந்த இந்திரன் பூனை உருவில் வெளியேற முற்பட்ட செய்தி வான்மீகத்தில் இல்லை. ஆனால் கம்பனில் இடம்பெற்றுள்ளது. இதனைக் கம்பன் புதியதாகப் படைத்துக் கூறினான் எனக் கூறுவதற்கில்லை கம்பனுக்கு முன்பே தமிழகத்தில் அகலிகை வரலாறு வழக்கில் இருந்தது என்பதற்குச் சில இலக்கிய ஆதாரங்கள் உள்ளன.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி.

என்ற குறட்பாவில் வள்ளுவர் அகலிகை வரலாற்றினை மனத்துள் கொண்டே முனிவர்களின் ஆற்றலை வெளிப்படுத்த முற்பட்டுள்ளார். இக்குறட்பா குறிப்பாகத் தேவர்களுக்கு அரசனாயினும் இந்திரன் தகாத ஒழுக்கதால் ஐந்தவித்தானாகிய

கவுதமன் சாபத்திற்கு உள்ளானான் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றது.

இவ்வாறு குறிப்பாக அன்றித் தெளிவாக அகலிகை வரலாற்றினைத் திருப்பரங்குன்றத்தில் கோயில் கொண்டுள்ள செவ்வேளினை வாழ்த்தி நப்பண்ணனார் பாடிய 19ஆம் பரிபாடல் தெரிவிக்கின்றது. திருப்பரங்குன்றில் திருவிழா. அதனைக் கண்டுகளிக்கக் கூடல் மாநகரமே திரண்டு வருகின்றது. அவ்வாறு, வந்தவர்கள் கோயிலில் கலைக் கூடத்தில் உள்ள ஓவியங்களைக் கண்டு மகிழ்கின்றனர். அந்தச் சித்திரங்களுள் ஒன்று அகலிகை வரலாற்றைத் தெளிவுறக் காட்டுவதான காட்சியினைக் கண்ட பார்வையாளர், "இதோ இந்திரன் பூனை உருவில் செல்கின்றான். இவள் தான் அகலிகை. இவன் கவுதமன். இது அவன் சினத்தால் கல்லுருவானவள் உருவமாகும்" என்று ஒருவருக்கொருவர் காட்டி மகிழ்கின்றனர்.[1]

இதிகாசங்களான இராமாயணம் மகாபாரதக் கதைகளில் இடம்பெற்றுள்ள கிளைக்கதைகள் தனியே தனிக் கதைகளாக இந்திய மொழிகளில் இலக்கியத்தரமான படைப்புகளாக உருப்பெற்றுள்ளன. மகாபாரதத்தில் இடம்பெற்ற நளன் வரலாறு நளவெண்பா, நைடதம் எனத் தமிழில் தனிப்படைப்புக்களாகியுள்ளது போலவே மலையாள மொழியிலும் பத்துக்கும் மேற்பட்ட படைப்புகளாகச் சிறப்புப் பெற்றுள்ளது. வான்மீகத்தில் இடம்பெறாத இரணியன் வரலாற்றைக் கம்பர் தம் இராமாயணத்தில் சிறப்பாகப் பாடியுள்ளதாலேயே அவ்வரலாறு தமிழ்க் கூத்துமேடைகளில் தனிச்சிறப்புடன் நடிக்கப்படுவதற்கு அடிப்படைக் காரணமாயிற்று எனலாம். முதன்முதல் அச்சேறிய கம்பராமயணப் பகுதி என்ற சிறப்பும் அவர்பாடிய இரணியன் வரலாறு பெற்றுள்ளது. இத்தகைய

---

1 "இந்திரன் பூசை யிவளக லிகையிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரை செய்வோரும்" வரிகள் 50-52

சிறப்பினை, கம்பரது அகலிகை வரலாறும் இலக்கியத் துறையில் ஏற்படுத்தியுள்ளது. இத்தாக்கத்தின் விளைவாக நிகழ்ந்துள்ள ஆய்வுகள் பலவாகும்.

கம்பரது அகலிகை வரலாறு பத்மபுராணத்தில் காணப்படும் அகலிகை வரலாற்றைத் தழுவிப் படைக்கப்பட்டது என்பதனை டி.எஸ். ராமச்சந்திர ஐயர் தெளிவுபடுத்தியுள்ளார்.[2] நாவலர் சோமசுந்தர பாரதியார்,[3] வித்வான் ரா. இராகவையங்கார்[4] ஆகியோர் அகலிகைப் படலத்தைப் பற்றி விரிவான விளக்கக் கட்டுரைகள் வரைந்துள்ளனர்.

கம்பராமாயணத்தில் அகலிகைப் படலம் 28 பாடல்களைக் கொண்டுள்ளது. அதில் முதலில் அமைந்துள்ள 12 பாடல்கள் விசுவாமித்திரன், இராமன், இலக்குவன் ஆகியோர் மிதிலையை நெருங்கியதையும் மிதிலைப் பகுதியின் நீர், நிலவளங்களையும் தெரிவிப்பன. 13ஆம் பாடல் மிதிலையின் புறத்தே ஒரு மேட்டில் பெண் உருவம் கல்லாகக் கிடந்ததை அவர்கள் காண்பதையும் 14ஆம் பாடல் அக்கல்லுருவம் இராமன் கால் துகள் படப் பெண் உருவாக உயிர் பெற்றதையும் கூறுவன. 15ஆம் பாடல், விசுவாமித்திரன் அகலிகை யாரென இராமனுக்குத் தெரிவித்தலைக் கூறும். அதனைக் கேட்ட இராமன் அகலிகை வாழ்வில் துயர் குறுக்கிட்டது விதி வசத்தாலா அல்லது மற்றவர் செய்த சூழ்ச்சியாலா என்பதனைத் தெரிவிக்கும்படி கேட்பது 16ஆம் பாடல்.

17, 18, 19, 20, 21, 22, 23, 24 ஆகிய எட்டுப்பாடல்களும் விசுவாமித்திரன் கூற்றாக பின்வருமாறு அகலிகை வரலாற்றைத் தெரிவிக்கின்றன.

---

2 கலைமகள் தொகுதி - 3, 1933

3 பெண்மை நலமும் புலமையறமும - நற்றமிழ் - மலர் நிலையம் சென்னை-1

4 அகலிகை வெண்பா நூலுக்கான - முன்னுரை

அவ்வுரை இராமன் கூற அறிஞனும் அவனை நோக்கிச்
செவ்வியோய் கேட்டி! மேனாள் செறிசுடர் குலிசத்து அண்ணல்
அவ்வியம் அவிந்த சிந்தை முனிவனை அற்றம் நோக்கி
நவ்விபோல் விழியினாள் தன்வனமுலை நயக்கல் உற்றான் 17.

தையலாள் நயன வேலும் தனிமதன் சரமும் பாய
உய்யலாம் உறுதி நாடி உழல்பவன் ஒருநாள் உற்ற
மையலால் அறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா உள்ளத் தான்றன் உருவமே கொண்டு புக்கான் 18

புக்குஅவன் ஓடும் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்கவுண்டு இருத்த லோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்கதன்று என்னத் தேறாள் தாழ்ந்தனள் இருப்ப தாழ
முக்கணன் அனைய ஆற்றல் முனிவனும் முடுக வந்தான் 19

சரந்தரும் சாப மல்லால் றடுப்பரும் சாபம் வல்ல
வருந்தரு முனிவன் எய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள் நின்றாள்
புரந்தரன் நடுங்கி ஆங்கோர் பூசையாய்ப் போகல் உற்றான் 20

---

17. செறிசுடர் குலிசத்து அண்ணல் - இந்திரன்; அவ்வியம் - பொறாமை; அற்றம் - ஏமாற்றும் சமயம்; நவ்விபோல் விழியினாள் - மான் போன்ற விழியுடைய அகலிகை

18. தையலாள் நயன வேலும் - அகலிகைபார்வை; மதன் சரம் - மன்பத பாணம்; உழல்பவன் - காம நோயால் வருந்தும் இந்திரன்.

19. தனக்கு புதிய காமசுகம் ஏற்பட்டிருப்பதை அகலிகை உணர்ந்தாள். உணர்ந்த பின்னும் அந்தக் கலவி சுகம் தகுதியுடையதன்று என உணர்ந்து தெளியவில்லை அப்போது சிவனை ஒத்த ஆற்றல் வாய்ந்த கவுதமன் விரைந்து வந்தான்.

20. வெருவி - அஞ்சி; புரந்தரன் - இந்திரன்; பூசை - பூனை உருவம்

தீவிழி சிந்த நோக்கிச் செல்வதை உணர்ந்து செய்ய
தூயவன் அவனை நின்கைச் சுடுசரம் அனைய சொல்லால்
ஆயிரம் மாதர்க்கு உள்ள அறிகுறி உனக்குண் டாகென்று
ஏயினன் அவையெலாம் வந்தியைந்தன இமைப்பின் முன்னர் 21

எல்லையில் நாணம் எய்தி யாவர்க்கும் நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னோடும் புரந்தரன் போய பின்னை
மெல்லிய லாளை நோக்கி விலைமகள் அனைய நீயும்
கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள் 22

பிழைத்தது பொறுத்த லென்னும் பெரியவர் கடனே என்பர்
அழற்றருங் கடவுள் அன்னாய் முடிவெனக் கருளுக என்னத்
தழைத்த வண்டு இமிரும் தண்டார்த் தயரத ராம னென்பான்
கழற்றுகழ் கதுவ இந்தக் கல்லுருத் தவிரும் என்றான் 23

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த உலகுக்கு எல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவது உண்டோ
மைவண்ணத்து அரக்கி போரில் மழைவண்ணத்து அண்ணலேயுன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்
24

விசுவாமித்திரன் கூறுவதாக அமைந்த இந்தப் பாடல்களின் தொடருக்கு விளக்கம் செய்யும் ரா. ராகவையங்கார் அகலிகை உடலளவில் கற்பிழந்தவளே அன்றி மனத்தினால் குற்றம் இல்லாதவள் என்பதனை நிலைநிறுத்தக் கூறும் விளக்கம் வருமாறு.

---

21. அறிகுறி - பெண்குறி; ஏயினன் - சாபமிட்டான்
22. கல்லியலாதி - கல்லின் தன்மை பெறுவாய்; மருங்கு - அருகே வீழ்வாள் - விழுபவளான அகலிகை
23. முடிவு - சாபவிமோசனம்; கழற்றுகழ் - கால்தூசு கதுவ - மேலேபட
24. மைவண்ணத்து அரக்கி - தாடகை; கைவண்ணம் - போர்த்திறன் கால்வண்ணம் - கருணைத் தன்மை

"துஷ்ட புத்தியைய்யுடைய அகலிகை முனிவேஷத்தையுடையவனை ஸஹஸ்ராக்ஷ னென்றறிந்து கொண்டு தேவர்க்கு வேந்தன் என்னும் குதூகலத்தால் ஸம்மஞ் செய்தாள்" என்னும் வான்மீகி பகவான் கருத்துக்கு "நெஞ்சினாள் பிழைப்பிலாள்" என்று கொண்ட கல்வியிற் பெரிய கம்பன் கருத்து மாறாயினும் பொருந்துவதேயாகும்.

அவர் (கம்பர்) அகலிகையின் சரிதத்தை இராமபிரான் தெரிந்துகொண்ட பின்னர் அவளை, "அன்னாய் என்று பொன்னடி வணங்கிப் போனான்" என்றும்,

"நெஞ்சினாற் பிழைப்பிலாளை நீயழைத்திடுதி
யென்னக்
கஞ்சமா முனிவன் அன்ன முனிவனும்
கருத்துட் கொண்டான்"

என்றும் பாடியதனால் இஃதறிந்து கொள்ளலாம்.

அவர் அகலிகையை, "மனையின் மாட்சியை யழித்திழி மாதவன் பன்னி" என்று கூறியுள்ளாரே எனின் தீயினைத் தெரிந்து தொடினும் தெரியாது தொடினும் சுடப்படும் பயன் ஒன்றே யாதல் போல பரபுருட கமனத்தை மனமறிந்து செய்யினும் அறியாது செய்யினும் மானக்கேடுற்று இழிவடையும் பயன் ஒன்றேயாதல் புலப்பட அவ்வாறு கூறினாரென்க.

அவர்,

"மையலா லறிவு நீங்கி மாமுனிக்கு
அற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே
கொண்டு புக்கான்"

என்றும்,

"புக்கவ னோடுங் காமப்புதுமண
மதுவின்றேறல்
ஒக்கவுண் டிருத்தலோடும் உணர்ந்தனள்
உணர்ந்த பின்னும்
தக்கதன்று என்ன ஓராள் தாழ்ந்தனள்"

என்றும் கூறியவிடத்தும் மனத்துக்கண் மாசிலளாகவே பொருள் கோடலே அவர்க்குடன் பாடென்பது. மேல். "நெஞ்சினாற் பிழைப்பிலாளை" எனவும் "மாசறுகற்பின் மிக்க அணங்கினை" எனவும் சீராமர் அவள் சரிதத்தைத் தெரிந்த பின்னர் அவளை அன்னை என்று அடிவணங்கினாரெனவும் கூறியவாற்றான் துணியப்படும்.

"தக்கதன்று என்ன ஓராள்" என்பதனைத் தக்கதென்ன, அன்றென்ன ஓராள் எனப்பிரித்துப் பொருள் கொள்க. ஈண்டு "உணர்ந்தனள்" என்பதற்கு இப்புது மண இன்பத்தினை உணர்ந்தனள் எனக்கூறாது இந்திரனை உணர்ந்தாளென்றும், தக்கதன்றென்ன வோராள் தாழ்ந்தனள்" என்பதற்கு அவ்விந்திரனைச் சேர்தல் தகுதியுடைத்தன்றென ஆராயாதவளாகித் தன் குல ஒழுக்கத்தில் தாழ்ந்தனளென்றும் பொருள்கொள்ளின் அகலிகை நெஞ்சினாற் பிழைப்பிலளாகாமை கண்டு கொள்க.

அன்றியும், இந்திரன் முனி வடிவம் பூண்டது அகலிகையை வஞ்சித்துச் சேர்தற்கே என்பது தெள்ளிது. அதற்கேற்பவே, கம்பர் இந்திரனை உணர்ந்தனள் என்னாதொழிந்தரென்று கண்டுகொள்க. முனிவடிவத் துள்ளவனை இந்திரனெனத் தெரிதற்கோர் ஏதுவும் அந்நூலுள் கூறாமையும் நோக்கிக் கொள்க.

என்றும் அநுபவியாத புதியதோர் இன்ப விசேடத்தை உணர்ந்தனளென்று கூறியவாற்றால், இது

புதியனொருவன் கூட்டமோவென்று சங்கிக்கப் படுமெனின் அதற்கே கல்வியிற் பெரியார் இவ்வின்பம் தக்கநெறியான் உற்றது அல்லாத தீவழியானுற்றது என்று ஆராயாதபடி அப்புதிய இன்பப் பெருக்கம் அவளை மயக்கலால், அதன் கண்ணே மனந்தாழ்ந்தனள் என்று புலப்படுத்தினார் என்க. முனிவடிவு புதியனென உணரவொட்டாமல் தடுத்தலும் இன்பமொன்றே புதியதென்று உணரப்படுதலும் நோக்கிக் கொள்க.

கௌதமன் தன்பால் எய்த வந்தபோதுதான் அந்நியனால் வஞ்சிக்கப்பட்டதற்கு அஞ்சி, "நெடும்பழி பூண்டவளாகி நின்றனள்'' என்று கம்பர் மேற்கோடலானும் அவருக்கு இதுவே கருத்து என்க.

''முனிவனெய்த வருதலும் வெருவிப்பழி பூண்டாள் நின்றாள்'' என்னுமிடத்தில் முனி எய்த வாராதபோது இந்திரனையே முனிவனென்று நினைத்திருத்தலால் வெருவதலின்றிப் பழிபூணாத வளாயினாள் என்று நன்கு துணியப்படும் என்க. இங்ஙனம் கொள்ளாக்கால் மேல் அகலிகையை "மாசறு கற்பின் மிக்க அணங்கு" என்று கம்பர் தங்கூற்றாலே கூறுதல் சிறிதும் பொருந்தாமை கண்டு கொள்க.

இவ்வாறு அகலிகை வெண்பா நூலுக்கு தான் தந்த முன்னுரையில் ரா. ராகவவையங்கார் அவர்கள் விளக்கம் செய்து கம்பர் கண்ட அகலிகை மனத்தினால் மறுவில்லாதவள் என நிறுவியுள்ளது கம்பரின் உட்கிடக்கையை தெளிவு படுத்துவதாக உள்ளது. இதனைக் 'கம்பன் ஆய்வு அடங்கல் நூலாசிரியர் தன் தொகுப்புள் சுட்டிக்காட்டாது போயினமையால் இங்கு விரிவாக எடுத்துக் கூறவேண்டியதாயிற்று.

அகலிகையின் வாழ்வில் நிகழ்ந்த அவலம் அவளது மகனான சதானந்தரை உள்ளத்தை வருத்திக் கொண்டேயிருந்தது என்பதனை, வான்மீகி குறித்துச் செல்கின்றார். வான்மீகியின் இக்குறிப்பை

மிதிலைக் காட்சிப் படலத்தில் இராமனை அகலிகையின் மகனான சதானந்தருக்கு அறிமுகம் செய்து வைக்கும் விசுவாமித்திரன்,

"வடித்த மாதவகேட்டியிவ் வள்ளல்தான்
இடித்த வெங்குரல் தாடகை யாக்கையும்
அடுத்த வேள்வியும் நின்அன்னை சாபமும்
முடித்து என்நெஞ்சத் திடர்முடித் தான்..."

என அறிமுகப்படுத்துவதின் நயம் சிந்திப்பதற்கு உரியது. ஒரு பெண்ணின் உயிரைப் போக்கி அவள் உடலை அழித்த இராமன் இன்னொருத்திக்கு உயிர் தந்த கருணை உள்ளத்தினனாகச் சுட்டப்படுகின்றான்.

மூல நூலில் குற்றத்திற்கு உரியவளாகத் தெளிவாக உணர்த்தப்பட்ட அகலிகையைத் தன் கவித்திறத்தின் நுட்பத்தினைப் பயன்படுத்தி கம்பன் அவளை மாசறு கற்பின் மடந்தை நல்லாளாக்கி உள்ளது இராமன் கால்வண்ணம் காட்டிய கருணையிலும் சிறந்தது கம்பன் காட்டிய கருணை என்பதனைப் புலப்படுத்துகின்றதல்லவா?

மேடையில்

1. அகலிகை

   கு.ப. ராஜகோபாலன்

2. அகலியை நாடகம்

   ஏ.ஆர். ராஜகோபால செட்டியார்

3. சதி அஹல்யா திரைப்படம்

   மாடர்ன் தியேட்டர்ஸ் குழு

4. வ.ரா. நடத்திய வழக்காடு மன்றம்

   வ.ரா

5. அகல்யா

   பிரபஞ்சன்

6. அகல்யா

   துவிஜேந்திரலால் ராய்

அகலிகை

- கு.ப. ராஜகோபாலன்

இந்த நூற்றாண்டின் தொடக்க காலம் முதல் அகலிகை வரலாறு படைப்பிலக்கியம் செய்வோரைக் கவர்ந்துள்ளது. தன் காலத்தவர்களான ச.து.சு. யோகியார், புதுமைப்பித்தன் ஆகியோர் அகலிகை வரலாற்றினைக் கவிதையாகவும் கதையாகவும் படைத்திருப்பதால் அதே இலக்கிய வடிவங்களைக் கையாளுவதைவிட புதிய வடிவில் அவ்வரலாற்றை அணுகலாம் எனக் கு.ப. ராஜகோபாலன் கருதியிருக்க வேண்டும். சிறந்த சிறுகதை எழுத்தாளரான இவர் நல்ல நாடகங்கள் புனைவதிலும் திறமை பெற்றிருந்ததால் அகலிகை வரலாற்றை நாடகமாகத் தந்துள்ளார்.

ஐந்து அங்கங்கள் கொண்ட இந்த ஓரங்க நாடகத்தில் அகலிகை, கௌதமர், இந்திரன், நாரதர் ஆகிய வழக்கமான பாத்திரங்களோடு சாந்தை, இந்திராணி, மேனகை, ரம்பை, ஊர்வசி ஆகிய துணைப் பாத்திரங்களும் புதிதாக இடம் பெறுகின்றனர்.

கௌதமர் அகலிகையை மணந்து இல்வாழ்க்கையில் ஈடுபடக் காரணமாக இருந்தவர் நாரதர் என்ற புராண மரபினை ஏற்றுக் கொண்டுள்ள இவர் அவர்கள் திருமணத்தை நடத்தி வைக்க நாரதர் மேற்கொண்ட முயற்சி, சூழ்ச்சி ஆகிய முந்தைய நிகழ்ச்சிகளை நாடகமாக்கவில்லை. ஒரு திருமணம் நிகழக் காரணமாக இருந்த பெரியவர்கள் தாங்கள் மணம் செய்து வைத்த தம்பதியினர் எப்படி இல்லறம் நடத்துகின்றனர் என்பதனைக் காண விரும்புவது இயல்பே. அத்தகையதொரு விருப்பத்தின் காரணமாக நாரதர் கௌதமரின் ஆசிரமத்திற்கு வருகை தருவதோடு நாடகம் தொடங்குகின்றது.

இவ்வாறு நாரதர் வந்து காண்பதாக அமைத்துக் கொண்ட புதுமை பிற படைப்புக்களில் இடம் பெறவில்லை. எதனையும்

உளவியல் அடிப்படையில் ஆழ்ந்து சிந்திக்கும் போக்கு கு.ப.ரா. வினுடையது. போகத்தில் விருப்பமுடைய இந்திரனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து யோகத்தில் விருப்பமுடைய கௌதமருக்கு அகலிகையை திருமணம் செய்து வைத்துவிட்டது தவறோ என்ற எண்ணம் நாரதர் மனதை உறுத்தியிருக்கவேண்டும். முதலில் விளையாட்டாக இதன்னை நிகழ்த்திவிட்ட அவருக்கு அதன்பின் ஏற்பட்ட மன உறுத்தலின் விளைவே இந்த வருகைக்குக் காரணம் என்பதனைக் கு.ப.ரா. வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும் நாரதருக்கும் கௌதமருக்கும் இடையே நிகழும் பின்வரும் உரையாடல் இத்தகைய குறிப்பினைத் தருவதாக உள்ளது. கௌதமர் தாமரையிலைத் தண்ணீர்போல அகலிகையோடு உள்ளம் ஒட்டாதே வாழ்க்கை நடத்தி வருகிறார் என்பதை அவரோடு பேசத்தொடங்கிய அளவிலேயே நாரதர் புரிந்து கொண்டார். ஒருவன் இல்லறக் கடமையின்ன மனைவியின் துணையின்றி முழுமையாக நிறைவேற்ற இயலாது என்ற நாரதரின் அறிவுரை கௌதமருக்கு உடன்பாடாக இல்லை.

கௌதமர் : பெண்மைக்கே சகல சிறப்பையும் ஏற்றி விட்டீர்கள்.

நாரதர் : அதுதானே உண்மை - பிரத்தியக்ஷம்! என் வீணையைப் பெண் தத்துவமாக வைத்துக் கொள்ளும். அதிலிருந்து நாதத்தைக் கிளப்பும் எனது ஊக்கம் புருஷ தத்துவம். அப்படிப்பட்ட உயிரிசை வெளியாவதற்கு இந்த ஆழ்ந்த ஒற்றுமை அவசியமல்லவா?

கௌதமர் : என் தபஸின் நோக்கத்தை அகலிகையும் உகந்து வளர்த்தால்தான் பலிக்கும் என்கிறீர்களா?

நாரதர் : அதிலென்ன சந்தேகம்?

கௌதமர் : அப்படி மனோபாவம் ஒத்துக் கொள்வது எப்பொழுதும் முடியுமா?

நாரதர் : உம்முடைய நோக்கத்தின் வலிமை யிலிருக்கிறது! அது சரியான வேகமுடையதாக இருந்தால் நீர் சொல்லும் மனோபாவ ஒற்றுமை தானாக ஏற்படுகின்றது. என்ன அகலிகையே உனக்கென்ன தோன்றுகின்றது?

அகலிகை : நான் என்ன தனியாக அபிப்ராயம் கொள்ளக் கூடும்.

(கௌதமரின் முகத்தைப் பார்த்து விட்டுத் தலைகுனிந்து கொள்கிறாள்)

நாரதர் : ஒற்றுமை என்பது கௌதமர் புகட்டுவதாலும் வற்புறுத்துவதாலுமா ஏற்படும்? உமது லட்சியத்திலும் மனதைக் கவரும் அம்சம் இருந்தால்தானே உயிருள்ளதைப்போல வளரும். வளர்ச்சிக்கு உமது மனைவியும் உதவக்கூடும்.

கௌதமர் : தவத்திற்கும் பெண்ணுக்கும் விருத்தம் அல்லவா?

நாரதர் : கௌதம! என்ன பேதமை! சமித்துக்கும் அக்னிக்கும் விருத்தம் என்பது போல இருக்கிறது. உமது மனது பக்குவமடைய வில்லையே! எனக்கு பயமாக அல்லவோ இருக்கிறது.

கௌதமர் : எதற்காக?

நாரதர் : உமது இல்லற தர்மத்திற்கு ஹானி வருமென்று...

கௌதமர் : என்னாலா?

நாரதர் : ஆம்.

கௌதமர் : நான் ஒரு நாளும் ஒழுக்கந் தவறமாட்டேன்.

நாரதர் : ஸதா ஒழுக்கத்திலேயே கண்ணுடையவன் தருமத்திலிருந்து நழுவி விடக்கூடும்.

கௌதமர் : எப்படி?

நாரதர் : வெயிலிலே இருப்பவனுக்கு நிழலில் வந்ததும் கண்ணுக்கு எதிரில் இருப்பதுகூடப் புலப்படாது.

கௌதமர் : அதுபோல...

நாரதர் : உமது தீவிர தவத்தில் உமது இல்லற தவத்தை மறந்து விடுவீர் - அந்த மாதிரி பிசகு எவ்விதமான கண்மூடித் தனமான ஊக்கத்திலும் ஏற்படுவது சகஜம்.

நாரதரைக் கலகத்தை மூட்டி விடுபவராகவே புராணங்களும் இலக்கியங்களும் சித்தரிப்பது வழக்கம். இங்கு விரிசல் விட்டுப் போகவிருக்கும் ஒரு உறவு அடியோடு முறிந்து போகாதிருக்க அவர் முயற்சி மேற்கொள்வதைக் காண்கிறோம். நாரதரின் கேள்விக்கு அகலிகையின் பட்டுக் கொள்ளாத பதில் குடும்ப பந்தத்தில் அவளுக்கு உறுதியான பிடிப்பு ஏற்படவில்லை என்பதையே காட்டுகின்றது. பின்னர் நடக்கவுள்ள கெடுதிக்கான நிலைக்களம் இந்த முதல் அங்கத்தில் திறம்பட அமைக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

கௌதமரின் ஆசிரமத்திற்கு அடுத்துள்ள ஆசிரமத்தில் வாழும் முனிவரின் மனைவியே சாந்தை என்ற துணைப் பாத்திரம். இவள் ஒரு முனிவரின் மனைவியாயினும் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தும் பணக்காரக் குடும்பத் தலைவியைப் போன்ற மனப்போக்குக் கொண்டவள். அகலிகையின் கட்டுப்பெட்டியான எளிய வாழ்க்கையினை அவள் குத்திக்காட்டியவளாக அகலிகையின் மனதில் நச்சு விதைகளைத் தூவுகிறாள். "உன் அகத்துக்கா்ரார் உன்னை

இப்படி வைத்திருக்கக் கூடாது - பாவம்! சிறுவயது. அனுபவம் போதாது" என்றும், "ஒரு நாளாவது நீ சிரித்து நான் பார்த்ததில்லை. அந்தப் பிராமணன், உன்னை என்ன சமாசாரம் என்று கேட்டு, உன் மனம்போல வைத்துக் கொள்ளக் கூடாது?" என்பது போலப் பலவாறு போலிப் பரிவுரைகளை அகலிகையைச் சந்தித்துப் பேசும்போதெல்லாம் கூறியபடி இருப்பவள்.

காட்டில் முனிவர்கள் ஒதுங்கி இருந்து நடத்தும் தவ வாழ்க்கையிலும் நாட்டில் குடும்பங்களிடையே காணப்படும் புறம்பேசுதல், கலகம் மூட்டல், பொறாமை, பூசல் ஆகியனவும் இருக்கவே செய்தன. இவளது பேச்சைக் கேட்டு அகலிகை அவள் ஆட்டுவித்தலுக்கேற்ப ஆடினாளில்லை. அது சாந்தைக்கு ஏமாற்றமாகி விடுகிறது. "எனக்கென்னமோம்மா ஆத்திரம் பொங்குகிறது - உனக்குச் சரியாக இருக்கிறபோது நான் எதற்கு உளற வேண்டும்? நான் போகிறேனம்மா!" என சலித்துக் கொள்ளும் அவளிடம் அகலிகை, "நான் என்ன சொன்னேன் இப்பொழுது? என் அகத்துக்காரரைப் பற்றி நாம் பேசவேண்டாம். வேறு ஏதாவது பேசேன்" எனக்கூறி அவளைச் சமாதானப்படுத்த முயற்சி செய்கிறாள்.

இந்த அங்கத்தின் இறுதியில், "என்ன கர்வம் இவளுக்கு. இவள் பேச்சு என் மனதைக் கலக்குகிறது. சீ! இனிமேல் இவளுடன் பேசக்கூடாது. ஆனால் இவர் ஏன் இப்படி இருக்கிறார்" என்று அகலிகை கூறும் தனிமொழி சாந்தை தூவிய நச்சு விதை அவள் உள்ளத்தில் முளைவிடத் தொடங்கிவிட்டது என்பதனைக் கோடிகாட்டி விடுகின்றது.

அகலிகை இயற்கையின் அழகில் மிகுந்த ஈடுபாடு கொண்டவள். ஆசிரமத்தைச் சுற்றிலும் அவள் வளர்க்கும் செடிகொடிகளின் அழகிலும் அவை பூத்துக் குலுங்கும் மலர்களின் மணத்திலும் தன் மனதைப் பறிகொடுத்தவளாகக் கௌதமரின் புறக்கணிப்பை இந்த ஈடுபாட்டில் ஓரளவு சரிக்கட்டிக் கொண்டு பொழுதைக் கழிக்கின்றாள் என்பதனையும் ஆசிரியர். இந்த அங்கத்தின் இறுதியில் அறிமுகம் செய்து வைக்கின்றார். இது புலன்

உணர்வு நுகர்ச்சியால் பெறும் இன்பம் அவளுக்கு இயற்கையிலேயே அமைந்து விட்ட ஒன்று என்பதனை விளக்குகிறது. இதனைச் சாதகமாக்கிக் கொண்டே இந்திரன் பின்னர் முழுநிலவு, இளவேனில், தென்றல் ஆகியவைகளை ஏவித் தன் சூழ்ச்சியில் வெற்றி பெறுகின்றான்.

மூன்றாவது அங்கம் தேவலோகத்தில் இதற்கான சூழ்ச்சியினை இந்திரன் மேற்கொள்வதை விவரிப்பதாக அமைந்துள்ளது.

நான்காம் அங்கமும் தேவலோகத்தில் நிகழ்வதே. மூன்றாம் அங்கத்தில் அகலிகையை அடைய இந்திரன் மேற்கொண்ட சூழ்ச்சியினை அறிந்த மேனகை, ரம்பை, ஊர்வசி ஆகிய தேவலோக அழகிகள் அவன் அகலிகையிடம் காதல்வெறி உடையவனாக இருக்கக் காரணம் என்ன என்பதை அலசி ஆராய்கின்றனர். ''அதானடி, அவள் கலியாணத் தப்பொழுதே போட்டி. தபோவலிமையால் கௌதமர் அவளை அடித்துக் கொண்டு போய்விட்டார். இந்திரனுக்குக் கோபம். எப்படியாவது அவளை அடைந்துவிட வேண்டுமென்று பிடிவாதம்" என்கிற மேனகைக்கு ''தேவராஜனுடைய இச்சை பிசகல்லவா'' என மறுப்புத் தெரிவிக்கின்றாள் ரம்பை. "பிசகென்றால் அவர் என்ன செய்வார்? மனதைத் தடுக்க யாரால் முடியும்?" எனக் கேட்கிறாள் ஊர்வசி. "மனதைத் திருப்தி செய்ய அடாது செய்வதாயென்ன?" என்று எதிர் கேள்வி தொடுக்கும் ரம்பைக்கு, "பூலோகத்தவரைப் போல் தேவர்களுக்கு அடாததென்பதே கிடையாது. நமது உலகம் மனித தர்மத்தை மீறியது" என விளக்கம் தருகிறாள் மேனகை.

பொழுதுபோக்கப் பூவுலகில் பெண்கள் வம்பளப்பதை போலவே தேவருலகத்துப் பெண்களும் ஊர் விவகாரத்தை வம்பளக்கும் பழக்கமுடையவர்கள் போலும். என்றாலும் இறுதியில் அகலிகையும் தங்களைப் போலவே ஒரு பெண் என்பதால் அவளுக்கு நிகழவுள்ள அவலத்தை நினைத்து அவள்மீது இவர்கள் இரக்கம் கொள்வதாக இந்த அங்கத்தை முடித்துள்ளார் நாடகாசிரியர்.

காலமும் இடமும் சூழல் அமைப்பும் மனிதர் மனநிலையை உருவாக்குவதில் பெரும்பங்கு பெறுகின்றன. மனிதர் எவ்வளவுதான் உள்ள உறுதியுடையவராயினும் மேற்கூறியவற்றின் மாற்றத்தால் ஏற்படும் தாக்குதலிருந்து தப்புதல் இயலாது. மனத்திட்பம், வினைத்திட்பம் ஆகியவற்றை வற்புறுத்திய வள்ளுவரே காலம், இடம் ஆகியவற்றின் சிறப்பினை உணர்ந்து தனி அதிகாரங்களில் அவற்றின் தாக்கம் பற்றிக் கூறியுள்ளதும் கருதத் தக்கது. கோப்பெருந்தேவியின் ஊடல்பற்றிய சிந்தனைச் சூழலே பாண்டியன் தடுமாறியவனாகக் கோவலனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கவும் காரணமாகிய தல்லவா? அத்தகைய சூழலின் தாக்கத்தாலேயே இந்திரன் காமவெறிக்கு அகலிகை பலியாகின்றாள்.

ஐந்தாம் அங்கத்தின் தொடக்கத்தில் கு.ப.ரா. தந்துள்ள காலம், இடம், சூழல் பற்றிய விவரம் வருமாறு :-

> இளவேனிற் காலத்துப் பௌர்ணமி நிலவு காய்கின்றது. வசந்தன் துணையால் கௌதமரின் ஆசிரமத்தின் முன் பூங்கொடிகள் பூத்துக் குலுங்கியபடி மணம் பரப்புகின்றன. மன்மதன் மலர்க்கணைகள் தொடுக்கின்றான்.

இச்சூழலில் அகலிகை தன் வசம் இழந்தவளாக கௌதமரோடு உரையாடுகின்றாள். சுற்று சூழல் தன்னை மெய்மறக்கச் செய்வதைப் பற்றி அவள் கௌதமரிடம் எடுத்துரைத்தபோது அவர் இவையெல்லாம் வசந்த காலத்திற்கு ஏற்பட்ட சின்னங்கள் தானே? இதிலென்ன ஆச்சரியப்பட இருக்கிறது என அவள் ரசனையை அலட்சியப்படுத்துவதோடு, "இவையெல்லாம் ஸ்வப்பனம், மாறக் கூடியவை" என வேதாந்தம் பேசுகிறார்.

நிலைத்த இன்பம் தரவல்லது எது என்ற அகலிகையின் கேள்விக்கு நியமத்தால் ஏற்படும் நிரதிசயயானந்தமே சாசுவதம் என்ற அவர் பதிலைக்கேட்ட அவள் அதற்காக இதனைப் புறக்கணிப்பானேன் என எதிர்க்கேள்வி போடுகின்றாள்.

ஒருவரை ஒருவர் அணைத்து மகிழ்ந்து கொஞ்ச வேண்டிய முழுநிலா இரவில் அவர்கள் நிகழ்த்தும் சர்ச்சை அவர்கள் மனப்போக்கினிடையேயான முரண்பாட்டினை விளக்குவதாக உள்ளதால் அதனை இங்கே அப்படியே தருகின்றேன்.

கௌதமர் : (கண்டிப்புடன்) இது கேவலம் இந்திரிய திருப்தி. இது பிரயோசனமில்லை; நீடிக்காது.

அகலிகை : இந்தத் திருப்தியை நித்தியமாக்க முயன்றால்?

கௌதமர் : (புன் சிரிப்புடன்) பேதைபோலப் பேசுகிறாய்! அது எப்படி முடியும்? நீடித்தாலும் ருசி அற்றுப்போகும். தித்திப்பை உண்டால் திகட்டுகின்றதல்லவா?

அகலிகை : நீங்கள் கூறும் ஆனந்தம் மட்டும்

கௌதமர் : தெவிட்டாத இன்பம்

அகலிகை : எப்படி உணர்வது இந்திரியமில்லாமல்?

கௌதமர் : ஞானேந்திரியங்களால்

அகலிகை : நீங்கள் இகழும் இந்திரியங்களின் சேர்க்கையில்லாவிட்டால் மனதேது? சுவரில்லாமல் சித்திரமேது?

கௌதமர் : தத்துவ விசாரணை செய்வதற்கு உனக்குத் தேர்ச்சி போதாது. ஆதலால் அதைப் பற்றிப் பேசுவதில் உபயோகமில்லை.

அகலிகை : ஏன்? எதனால்? ... சரி, அது கிடக்கட்டும். தத்துவம் வேண்டாம் இப்போது! நிதர்சனமான இன்பத்தில் சற்று லயிப்போம் பாதகமில்லை.

கௌதமர் : அர்த்த ராத்திரியில் நான் நமது பிதாமஹனான சந்திரனுக்கு ஸோமஹோமம்

செய்ய வேண்டும். வா உள்ளே போகலாம். ஸோமோ வை ந:பிதா!

அகலிகை : அவர் இங்கே வெளியே பிரத்தியக்ஷமாக இருக்கிறாரே, இங்கேயே அவருடைய கிரண பாதங்களில் வணங்கி ஈடுபடுவோமே?

கௌதமர் : நியமத்துடன் கூடிய கர்மாதான் பயனளிக்கும்.

அகலிகை : சற்றுக் கழித்துப் போகலாமே! என்னவோ என் தேகம் இப்பொழுது மயிர்க் கூச்செறிகிறது. பரவசமாகின்றேன். இங்கேயே இருங்கள்.

கௌதமர் : (எழுந்து) நீ வேண்டுமானால் சற்று இருந்து வா. நான் போகிறேன். எந்தக் காரணம் கொண்டும் நியமம் தவறக் கூடாது. (போகிறார்)

இதனை அடுத்து நிகழ இருக்கும் இந்திரன் காமவெறிக்கு அகலிகை பலியாவதற்கு கௌதமனுடைய பெண்ணியலைப் - பெண்களின் உடல் தேவையின் வேகத்தின் தன்மையை - புரிந்து கொள்ளாமையே காரணம் என்பதனை இந்தப் பகுதியில் குறிப்பாகப் புரிய வைக்கிறார். கு.ப.ரா. அவருடைய சிறுகதைகள் பலவற்றிலும் பெண்களின் மனப்போக்கினை நுட்பமாகக் கோடி காட்டியுள்ளார் இவர் என்பதும் தமிழ் இலக்கிய உலகம் அறிந்த ஒன்று. படைப்பாளர்கள் சிலரைப் போல இவர் கௌதமனை வயது முதிர்ந்த கிழவனாகக் கொள்ளவில்லை. அப்படி அமைப்பின் கதைக்கரு வலுவற்றதாகிவிடும். உலகியலில் காணப்படும் மணமானவர் களிடையேயான கூடாவொழுக்க ஈடுபாடு (Adultery) ஆணோ பெண்ணோ தன் துணைவரின் உடலிச்சையின் விருப்பைப் புரிந்து கொள்ளாததால் நிகழ்வதென்றே சமூகவியலார் கணித்துள்ளனர். அந்த அடிப்படையைத் தன் படைப்பின் அடித்தளமாக அமைத்துக்

கொண்டதாலேயே இவருடைய படைப்பு புதிய நோக்கிலானதாகவும் நம்பகத் தன்மையுடையதாகவும் விளங்கக் காரணமாகின்றது. நம் நாட்டில் குடும்பங்களில் பிரச்னையைத் தோற்றுவிப்பதில் முதன்மையானதும் மேல்நாட்டில் விவாகரத்துக்களுக்கான காரணங்களில் முக்கியமானதும் கணவன் மனைவியரிடையே இந்த உடலுறவுப் புரிவும் பரிவும் இன்மையே.

பருவங்கண்டு தலைவி தலைவன் வாராமையால் உடல் மெலிந்து சோர்வதாகப் பாடப்பட்டுள்ள சங்கால அகப்பாடல்களில் வரும் தலைவியர் நிலையே அகலிகையின் நிலையும். அவ்வாறு வருந்தும் தலைவியரை, தோழியர் ஆற்றுவிக்கின்ற மரபும் உண்டு. இங்கு தனிமையில் வருந்தும் அகலிகையை ஆற்றுவிப்பார் யாருமற்ற நிலையில் இயற்கைத் தாயாகிய பிரகிருதியே அவளை எச்சரித்துக் காப்பாற்றி ஆற்றுவிக்க முற்படுவதாக ஒரு உத்தியை கு.ப.ரா. கையாண்டுள்ளார். "இளவேனிலும் நிலவும் கூடி உன்னை வஞ்சிக்க வந்துள்ளனர். இவர்களின் பின்னே மன்மதனும் வருவான். பெண்ணே! ஜாக்கிரதையாயிரு! மனம் தடுமாறும். இயற்கை ஏமாற்றும். உணர்ச்சி உணர்வை அழிக்கும்" என்ற பிரகிருதியின் குரலை அவள் கேட்டாலும் தன் வசமிழந்து விட்ட அவள் தன் கணவனை நோக்கி, "சூரிய வெளிச்சத்தில் ரத்தினங்களைப் போல என் அங்கங்கள் இந்தச் சந்திரிகையில் சுடர்விட்டெரிகின்றன. மயிர்க்கூச்சு என்னை உதறியெடுக்கிறது. என்னால் தாங்க முடிய்வில்லை. மகரிஷியே! நீங்கள் காக்க வேண்டிய தருணம் இது! வாருங்கள்! வாருங்கள்" என அவலக் குரலெழுப்புகின்றாள்.

"அவர் வரமாட்டார் பெண்ணே! அவருக்கு நியமம் உன்னைக் காட்டிலும் முக்கியமானது" என அந்தச் சூழலின் உண்மை நிலையை பிரகிருதி எடுத்து கூறினாலும் அகலிகை, அதனை ஏற்றுக் கொள்ளாது, "இல்லை! வருவார். என் விரகக் குரல் அவருக்கு அறிமுகமானது வருவார்" எனத் தன் கணவனின் அன்பில் தான் வைத்த நம்பிக்கையின் அடிப்படையில் பிரகிருதிக்குப் பதிலிறுக்கின்றாள்.

இச் சமயத்தில் இந்திரன் பின் பக்கமாக வருகின்றான். அவன் காலடிச் சத்தம் கேட்டு அகலிகை திரும்பிப் பாராமலேயே "ஆ! வாருங்கள்! என்னைத் தாங்குங்கள். என்னால் இந்த இன்ப வேதனையைத் தாங்க முடியவில்லை" எனக்கூறிப் பின்புறமாக இந்திரன் கைகளில் சாய்கின்றாள்

பிரகிருதியின் குரல் வீறிட்டு அடங்குகின்றது.

முழுநிலவு கருமேகத்தில் மறைகின்றது.

மீண்டும் நிலவு வெளிப்பட்டபோது இந்திரன், "அகலியே" என அழைத்த குரலைக் கேட்டு அகலிகை பிரக்ஞை வந்தவளாக எழுந்து விலகி நின்று, "இந்திரன் அல்லவா நீங்கள்? உங்கள் சூழ்ச்சியா இது?" எனச் சீற்றத்துடன் கேட்கிறாள். அப்போது அங்கே தோன்றிய கௌதமர் அவர் கால்களைக் கட்டிக் கொண்டு அழ முற்படும் அவளை, "தூர நில்! நீ சீலமற்றவள்" என விலகுமாறு கட்டளையிடுகின்றான்.

"நான சுயபிரக்ஞையுடன் அபராதம் செய்யவில்லை" என்ற அவளது வேண்டுதலை உடன் படுபவன் போல இந்திரன், "பிரபோ நான் தான் காரணம்" எனப் பழியை ஏற்றுக் கொள்கின்றான்.

கௌதமர் அவனுடைய அந்த விளக்கத்தைக் காதில் வாங்கிக் கொள்ளாதவராக, "விரத பங்கமடைந்தவளே! எந்த இந்திரியங்களின் மதத்தால் நீ மெய்மறந்து இக்கதியானாயோ அவைகளை இழந்து உணர்வற்று இங்கே கல்போலக் கிட, நான் ஹிமாசலம் செல்கின்றேன்" என அகலிகையை மட்டும் சபிக்கின்றார்.

"நான் குற்றவாளியா? கதிமோக்ஷமில்லையா" எனக் கேட்ட அவளுக்கு, "காலம் உன்னைப் புனிதமாக்க வேண்டும். அன்பின் அடிச்சுவடுகள் உன்னைக் கரையேற்றும்" எனச் சாப விமோசனமும் தருகின்றார்.

கௌதமர் அவளைப் புறக்கணித்தது போல இயற்கைத் தாயான பிரகிருதி அவளைப் புறக்கணிக்கமால் "அம்மா! வா, என்

மார்பில் உனக்கு இடமிருக்கிறது" எனப் பரிவோடு குரல் கொடுத்து அழைப்பதாக நாடகத்தை முடித்துள்ளார் கு.ப.ரா.

வான்மீகியும் கம்பரும் இந்திரன் அகலிகையை முனிவர் உருவில் வந்து புணர்ந்தபோது, அவளது மனப்பான்மையும் உணர்வும் பற்றி வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறியுள்ளவை, ராமன் அன்னை என்று வணங்குதற்குரிய பாத்திரத்தின் தகுதிக்கு ஏற்றதாய் இல்லை. அந்த நிகழ்ச்சியின் நடப்பினை கு.ப.ரா. புணர்ச்சிக்கு முன்னும் புணர்ச்சியின் போதும் அகலிகை தன்னைப் புணர்பவன் தன் கணவனே என்ற எண்ணத்துடனேயே தன் உடலிச்சையைத் தணித்துக் கொண்டாள். என நாடகத்தைப் படிப்பவர்கள் நம்பும் வகையில் சூழலை உருவாக்கி நாடகத்தை நடத்திச் சென்றுள்ளார். பல பெண்களோடு அடிக்கடி காமக்களியாட்டங்களில் ஈடுபடும் இந்திரனோடு ஆன புணர்ச்சி தன் விந்துவைக்கட்டிக் காத்து சீல நெறிப்படி மனைவியோடு புணரும் கௌதமனினோடான புணர்ச்சியைவிட எவ்வகையில் சிறந்ததாக அமைய முடியும்? இவ்வகையில் கு.ப.ரா.வின் நோக்கு முந்தைய புராண மற்றும் தற்காலப் படைப்பாளிகளின் நோக்கிலும் சிறந்ததாகவும் நடப்பியலுக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது என்பதனை மற்ற படைப்புகளைப் பற்றிய விமரிசனத்தோடு ஒப்புநோக்கிப் பார்ப்பவர்கள் தெளிவாக உணர முடியும். அத்தகையதொரு ஒப்பு நோக்கிலான பார்வைக்கு வாசகர்களுக்கு எளிதில் உதவ வேண்டும் என்றே பலரது படைப்புகளையும் ஒருங்கே தேடித் தொகுத்து இந்த விமரிசனக் கட்டுரைகள் படைக்கப்பட்டுள்ளன.

அகலியை நாடகம்

- ஏ.ஆர். ராசகோபால செட்டியார்

கவிஞர்களையும் கதையாசிரியர்களையும் கவர்ந்தது போலவே மேடை நாடகப் படைப்பாளிகளையும் அகலிகை வரலாறு கவர்ந்துள்ளது. தமிழில் மட்டுமன்றிப் பிற இந்திய மொழிகளிலும் இது நாடகமாக ஆக்கப்பட்டுள்ளது. திரையிலும் அகலிகை பிரகாசித்துள்ளாள்.

மேடை நாடக ஆசிரியரான ஏ.ஆர். ராசகோபால செட்டியார் அகலியை என்ற நாடகத்தைப் படைத்து 1931 இல் கும்பகோணம் சாரதா விலாச சபையின் சார்பில் மேடையில் அரங்கேற்றியுள்ளதோடு அதனை நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

அந்த நூலின் முன்னுரை ஆங்கிலத்தில் அமைந்திருப்பதை நோக்க இவர் தமிழிலக்கியத்தை மட்டுமன்றி ஆங்கில இலக்கியத்தையும் கற்றவர் என ஊகிக்க இடமுள்ளது. அந்த முன்னுரையின் மொழிபெயர்ப்பு வருமாறு :-

> ராமாயணத்தை மேடை நாடகமாக அரங்கேற்றிய போது அகலிகையின் வாழ்க்கையில் நிகழ்ந்த வியத்தகு விபரீதங்களும் சோக நிகழ்ச்சிகளும் என்னை மிகவும் பாதித்தன. அவளது வரலாற்றைத் தனி நாடகமாகப் படைத்து அரங்கேற்ற வேண்டுமென்ற எண்ணத்தால் அகலிகையின் பிறப்பு முதல் ராமன் காலடிபட்டு அவள் சாப விமோசனம் பெறும் வரையான அவளது வாழ்வினை நாடகமாக்கியுள்ளேன். இது கும்பகோணம் ஸ்ரீ சாரதா விலாச சபையாரால் இதன் எந்த ஒரு பகுதியும் விடுபடாமல் நான்கு மணி நேரத்தில் வெற்றிகரமாக நடிக்கப்பட்டுள்ளது. இந்த நாடக

ஆசிரியரின் பிற நாடகங்களைப் போலவே இதனையும் மற்றவர்கள் எந்த ராயல்டியும் செலுத்தாமல் மேடையில் நடிக்கலாம். நாடக விளம்பர நோட்டீஸில் நாடக ஆசிரியரின் பெயரை மட்டும் குறிப்பிடவேண்டும்.

இந்த நாடகத்தின் முற்பகுதியில் நாரதர் முக்கியமான பங்கேற்கிறார். அகலிகை இந்திரனை மணக்க முடியாதபடி சூழ்ச்சி செய்து அவளைக் கௌதமருக்கு மனைவியாக்கி வைக்கும் நிகழ்ச்சிகள் விரிவாக அமைகின்றன. பிரம்மாவின் மகளான அகலிகையின் அழகை இந்திரனிடம் எடுத்துக்கூறி அவன் மனதில் அவள் மேல் மையல் உண்டாக்கிய நாரதரே அவன் அவளை மணக்க முடியாதபடி சூழ்ச்சி செய்து அப்பாவியான கௌதமனை அவளுக்குக் கணவனாக்குகின்றார். அகலிகையைத் தேவர்கள் பலரும் திருமணம் செய்து கொள்ள விரும்புவதால் யார் முதலில் உலகை வலம் வருகின்றார்களோ அவனுக்கே அவள் உரியவள் என்ற போட்டியைப் பிரமன் அறிவிக்கின்றான். நாரதர் கௌதமனைக் கன்று ஈன்றபடி உள்ள பசுவை வலம் வரச் செய்து போட்டியில் அவருக்கு வெற்றி தேடித் தருகிறார்.

நாடகத்தின் பின் நிகழ்ச்சிகளின் நடப்பில் நாடகம் பார்ப்பவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் படியாக நாடகத்தின் முற்பகுதியிலேயே தக்க களம் அமைத்துக் கொண்டுள்ளது நாடகத்துறையில் நாடகாசிரியருக்கு உரிய பயிற்சியை உணர்த்துவதாக உள்ளது. இந்திரனை அகலிகை முன்பே அறிந்திருந்தாள். தன் தந்தை நடத்தவிருக்கும் போட்டியில் வெற்றி பெறப்போகின்றவனும் அவனே என்ற துணிவும் அவளுக்கு இருந்தது. அவளைத் தனியே சோலையில் இந்திரன் சந்திக்கவும் நேர்கின்றது. அந்தச் சந்திப்பின் இறுதியில் அவளுடைய மனப்பாங்கை வெளிப்படுத்தும் வகையில் பின்வரும் தனிமொழியை அமைத்துள்ளார் நாடகாசிரியர்.

அகலிகை : ஆகா! நாம் என்ன செய்வது? இவரைக் கண்டு இவருக்கும் என்னிடம் பிரியம்

இருக்கின்றதென்று தெரிந்தும் நமக்கும் இவரை அடைய இவ்வளவு ஆவலிருந்தும் நம் இஷ்டப்படி நடக்க சுவாதீனம் இல்லாமல் போய்விட்டதே? தெய்வமே! எப்படியும் இவரையே கணவனாக அடையும்படி செய்யமாட்டாயா? தேவராஜனை ஏன் கண்டேன்? கண்டவுடன் என் மனதைக் கொள்ளை கொண்டு விட்டாரே? இவர் அழகையும் அந்தஸ்தையும் பார்த்து யார்தான் மோகங்கொள்ளாமல் இருப்பார்கள்? என் மனதைத் திருப்ப நான் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியதாயிற்று? கஷ்டப்பட்டும் என் மனமானது அவருடனேயே சென்றுவிட்டதே. நான் ஸ்திரியானபடியால் மனதை அடக்கச் சக்தி இருந்ததே ஒழிய அவர் ஆசை என்னை விட்டபாடில்லையே? ஆகா! என்ன ரூபம்! என்ன காந்தி! என்ன கம்பீரம்! ஈசன் என் தலையில் எவ்விதம் எழுதி இருக்கின்றானோ? நான் என் இஷ்டப்படி கல்யாணம் செய்துகொள்ளலாம் என்று இருக்கும் பக்ஷத்தில் இவரைத் தவிர வேறு ஒருவரையும் திரும்பிப்பாரேன். பிதாவின் சொற்படி நடக்கவேண்டியவளாக அல்லவோ இருக்கிறேன். ஏன் நான் சஞ்சலப்படவேண்டும்? என் ஆசைக்கு இடம் இருக்கிறது. இந்தப் பூமியை ஐராவதத்தை வாகனமாகக் கொண்ட இந்த தேவராஜனாலன்றி வேறு யாரால் சீக்கிரம் பிரதக்ஷணமாய் வரக்கூடும்? அவரும் போகும் போது ஜாடையாய் சுயம்வரத்தில் ஜயித்தே உன்னைக் கைப்பிடிக்கிறேன் என்று சொல்லிப் போயிருக்கிறார். நிச்சயம் எவ்விதப் பிரயத்தனம் செய்தாவது என்னை மணப்பார். அவருடைய காதலைத் தெரிந்தும் நானும் உம்மேல் காதல் கொண்டிருக்கிறேன். என்று வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் போய்விட்டதே...... நானும் ஜாடையாகத் தெரிவித்திருக்கிறேன். பிராப்தம் எப்படி இருக்கிறதோ?

ஸீன் ஏழின் இறுதிப்பகுதியாக அமைந்துள்ள அகலிகையின் நீண்ட இந்தத் தனிமொழி இல்லையேல் ஸீன் பதினான்கில் இந்திரன் கௌதமரைப் போல் உருவமெடுத்து வந்து கோழியைப் போல் கூவி கௌதமரை வெளியேற்றியபின் அகலிகையைத் தன்னைக் கௌதமன் என நம்ப வைத்து அவளோடு கூடிப் புணர்ந்த பின் நிகழ்த்தும் உரையாடல் தர்க்க பின்னணியின்றி அமைந்ததாகிவிடும்.

ஸீன் பதினான்கின், முதற்பகுதியில் அகலிகை கௌதமன் உருவில் வந்த இந்திரனைக் கௌதமன் என்றே நம்புகிறாள். ஆனால் அந்த நேரத்தில் உடலுறவு பற்றிய தன் கணவன் விருப்பத்தில் அவள் வியப்புற்றவளாக அவனோடு உடலுறவு கொள்கின்றாள். அதன்பின் இந்திரன் அவளுக்குத் தன் மீது அவளுக்குக் காதல் உண்டா எனத் தெரிந்து கொள்வதற்காகக் கையாளும் தந்திரம் சிறந்த நாடக உத்தியாக அமைகின்றது. தன் வாழ்நாளிலே அன்றே மனம் மகிழ்ச்சி கொள்ளநேர்ந்தது எனக் கூறும் இந்திரனிடம் அகலிகை "தாங்கள் என்னிடத்தில் இன்றுதினம் வைத்த பிரியம் இதற்கு முந்தி ஒரு நாளும் இருந்ததில்லை" எனக் கூறும் பதில் வழக்கமாக அவள் கௌதமனோடு உடலுறவு கொள்வதில் பெறும் இன்பத்தினும் இந்தப் புதிய அனுபவம் சிறந்ததாகத் தோன்றியது என்பதைத் தெரிவிக்கின்றது. மீண்டும் தன்னிடம் முத்தம் வேண்டும் இந்திரனை "ஸ்நானத்திற்கு நாழிகையாகிவிட்டதே" என நினைவூட்டுகிறாள். அது பற்றிக் கண்டு கொள்ளாதவனாகத் தன் சுயரூபத்தை அவளிடம் காட்டுவதற்கு முன் அவள் மனப்போக்கை அறிந்துகொள்ளும் வகையில் நிகழ்த்தும் உரையாடல் வருமாறு :

இந் : உன்னுடன் இருக்கும் குதூகலத்தில் நாழிகை ஆனதும் ஆகாததுங் கூடத்தெரியவில்லை. கண்ணே! உன்னைக் கல்யாணம் செய்த நாளாய் இன்றுதான் உன்னை இனிமையாய் அணைக்கும் பாக்யம் பெற்றேன். உன் கல்யாணத்திற்கு எவரெவர்கள் பிரயத்தனப் பட்டார்கள்?

அக : எத்தனையோ பெயர்கள் பிரயத்தனப் பட்டார்கள். சுரபதி (இந்திரன்) கூட எவ்வளவோ பிரயாசை எடுத்துக் கொண்டார். பிராப்தம் இருக்க வேண்டாமா?

இந் : இப்பொழுது நாம் இருவரும் இவ்வளவு ஸல்லாபமாய் இருக்க வேண்டுமென்று பிராப்தம் இருக்கையில் அவர்களுக்கு எப்படிக்கிட்டும்? அந்தத் தேவராஜனுக்கு மாத்திரம் உன் பேரில் மோஹமுண்டென்று நாரதர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அக : ஆமாம். எனக்குங்கூட அது விஷயம் தெரியும்.

இந் : பலே! எனக்குங்கூட என்று ஏன் மறைக்கின்றாய்? இது சமயம் நானே தேவராஜன் என்று வைத்துக் கொண்டால் உன் மனம் எவ்வளவு சந்தோஷத்தை அடையும்?

அக : பிராணநாதா! என்ன என் மனதைப் பரிசோதிக்கிறீர்களா என்ன? எனக்கு முன்பு எண்ணமிருந்த போதிலும் விவாகமானபின் அதைப்பற்றி நினைப்பது பதிவ்ருதைகளுக்கு அழகல்லவே?

இந் : நீ காதலித்திருந்த தேவராஜன் நானே. உன் மனதைப் பரிசோதிக்கவே இவ்வாறு வந்தேன்.

(வேஷத்தைக் கலைத்து நிஜரூபத்துடன் நிற்கின்றான்)

உண்மை அறிந்த அகலிகை முதலில் அதிர்ச்சியுற்றவளாக இந்திரன் தன் கற்பிற்குப் பங்கம் இழைத்துவிட்டதாகக் குற்றம் சாட்டினாலும் பின்னர் இந்திரன் தேற்றத்தேறி, இந்திரனிடம் "உம்மைச் சேர்ந்து அணைந்தபின் இனி யாரிடம் என் மனம் செல்லும்? எவ்விதமேனும் நாம் இருவரும் மறைவாய்ச் சந்திக்க ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்" என்ற வேண்டுகோளை வெளியிடுவதோடு சாயங்கால நேரத்தில் தீர்த்தம் எடுக்கத் தான்

கங்கைக் கரைக்கு வரும்போது அங்கே உள்ள பூஞ்சோலையில் வந்து சந்திக்க வேண்டுமென அதற்கான வழிவகைகளையும் கூறுகிறாள்.

இவ்வளவும் நடந்து முடிந்த பிறகே உண்மைக் கௌதமர் வந்து கதவைத் தட்டுகின்றார். பதறிப்போன அகலிகை இந்திரன் தப்பிச் செல்லும் வரை தாமதித்து கதவைத் திறக்கவே கௌதமருக்கு அவள் மீது சந்தேகம் பிறக்கின்றது. என்ன நடந்தது எனக் கேட்ட அவருக்கு அகலிகை உண்மையை மறைக்கின்றாள். கௌதமன் ஞான திருஷ்டியால் இந்திரன் வந்துபோனதை உணர்ந்து அவளைக் கல்லாகுமாறு சபிக்கின்றான். தான் உண்மையைக் கூறுவதாகவும் தன்னை மன்னிக்கும்படியும் அகலிகை வேண்டுகிறாள். வந்தவன் இந்திரன் என்று அறியாதவளாக அது அகாலமாக இருந்தும் கணவன் கோபத்திற்கு அஞ்சிக் கலவிக்கு உடன் பட்டதாகவும் நடந்ததை உள்ளபடி எடுத்துரைக்கின்றாள். கலவியின்போது தன்னைக் கலப்பவன் தன் கணவனல்லன் என்று தெரிந்து கொண்டதாகக் கூறும் அகலிகையிடம், "தெரிந்தவுடன் ஏன் நீ மறுத்திருக்கக் கூடாது?" எனக் கேட்ட கௌதமனுக்கு அகலிகை கூறும் பதில் உடலுறவு பற்றிய அறிவியலாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதமாக, "அது விஷயத்தில் தான் ஸ்திரீகளாகிய எங்கள் மனதைக் கட்டுப்படுத்த முடிவதில்லையே" எனப்பொருத்தமுற அமைந்துள்ளது.

நாடகத்தின் பதிப்பில் `A Puranic Tamil Drama' என அறிமுகப்படுத்தியிருப்பதற்கேற்ப இவருடைய நாடகம் வான்மீகியின் இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள அகலிகை வரலாற்றின் விரிவாக்கமாக நாடகப்படுத்தப்பட்டுள்ளது. அகலிகை கௌதமன் உருவில் வந்தவன் இந்திரன் என்று அறியாதவளாக அவனோடு கலவியில் ஈடுபட்டாள். ஈடுபட்டபின் அவள் அவன் தன் கணவன் அல்லன் என உணர்ந்தாள். உணர்ந்த பின்னும் அது "தக்கது அன்று எனத் தேறாளாகித் தாழ்ந்தனள் இருந்தாள்". அவ்வளவில் முனிவன் அங்கு தோன்றினான் எனக் கம்பர் கலவிக் கதையைச் சுருங்கிய அளவில் முடித்துக் கொண்டார். அவள் அவ்வாறு இருந்தமைக்காரணம் கௌதமன் வினாவிற்கான

விடையாக இந்த நாடக ஆசிரியரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது உளவியல், உடலியல் கூறுகளின் அடிப்படையினைப் புரிந்து கொண்டவர்களால் மறுக்க முடியாத ஒன்று.

கு.ப.ரா. வின் அகலிகை நாடக அணுகுமுறையைக் காட்டிலும் இவரது அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டதாக இருப்பதை இரண்டு நாடகங்களையும் படிப்பவர் தெளிவாக உணர முடியும்.

இருவரும் புராண மரபின் வழிநின்றே தங்கள் நாடகங்களைப் படைத்துள்ளனர். இவர் மேடையில் நடிப்பதை நோக்கமாகக் கொண்டு அகலிகை கதையினை அணுகியுள்ளார். பாமரரும் புரிந்து ஒப்புக் கொள்ளக் கூடிய வகையில் எத்தகைய சிந்தனைச் சிக்கல்களையும் உட்புகுத்தாமல் நாடகக் கதைப் போக்கை அமைத்துக் கொண்டுள்ளார்.

கு.ப.ரா. வின் நாடகம் படித்து ரசிப்பதற்காகப் படைக்கப்பட்டது. புலன் உணர்வு, அறிவு நெறி ஆகிய இரண்டுக்குமிடையேயான போராட்டத்தைப் பற்றிய சிந்தனைகளை மையக் கருத்தாகக் கொண்டு அவர் கதையை நடத்திச் செல்கிறார். இறுதி வெற்றி புலன் உணர்வின் ஆட்சிக்கே என்ற உண்மையையும் நிறுவியுள்ளார். அந்த உண்மை உணர்ந்த காரணத்தினாலேயே தவறிய அவளைக் கௌதமனும் புலன் உணர்வு இல்லாத ஆனால் உயிர் உணர்வுடைய கல்லாகுமாறு சாபமிட்டான் போலும்.

பின்னர் திரைப்படமாக்கப்பட்ட அகலிகையில் இடம் பெற்றிருப்பதுபோல இந்த நாடகத்தில் பாடல்கள் ஏதும் இடம் பெறவில்லை. ஒரு வேளை நூற்பதிப்பில் பாடல்கள் இடம்பெறத் தேவையில்லை என நூலாசிரியர் கருதியிருக்கக் கூடும்.

சதி அஹல்யா - திரைப்படம்

- மாடர்ன் தியேட்டர்ஸ் குழு

1931 இல் தனது அகலிகை நாடகத்தை ஏ.ஆர். ராஜகோபால செட்டியார் நூலாக வெளியிட்டார். 1937இல் அகலிகை கதையினை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரம் திரைப்படமாக உருவாக்கி வெளியிட்டார். எனக்குக் கிடைத்த சதி அஹல்யா திரைப்படத்தின் பாட்டுப் புத்தகத்தில் முதலில் திரைக்கதை சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

இக்கதைச் சுருக்கத்தை 1931-ல் வெளியான அகலிகை நாடக நூலோடு ஒப்பிட்டு பார்க்கும்போது அந்த நாடக நூலின் கதைப்போக்கில் அதிக மாற்றம் இன்றி எடுத்துப் பயன்படுத்திக் கொண்ட திரைக்கதையின் சுருக்கமாகவே தெரிகின்றது.

இந்தத் திரைப்படத்தில் கே. தவமணிதேவி அகலிகையாகவும் டி.எம். சங்கர் இந்திரனாகவும் எஸ்.டி. சுப்பையா நாரதராகவும் எஸ்.வி. தாத்தாச்சார் கௌதமராகவும் நடித்துள்ளனர்.

மதுரை பாஸ்கரதாஸ் பாடல்களை இயற்றியுள்ளார். ஆர். பாலுசாமி இசை அமைத்துள்ளார். கதையாசிரியர் யாரென்ற விவரம் தரப்படவில்லை. அகலிகை நாடக நூலாசிரியர் தன் நாடகத்தை ராயல்டி ஏதும் தராமலேயே மற்றவர்களும் மேடையில் நடிக்கலாம் என முன்னுரையில் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் இயக்குநர் டி.ஆர். சுந்தரம் அந்த நாடகத்தை அப்படியே தழுவித் திரைக்கதை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும். என ஊகிக்க இடம் உள்ளது.

திரைக்கதை வசனம் கிடைக்கப் பெறாத நிலையில் இதில் இடம்பெற்றுள்ள 29 பாடல்களின் துணை கொண்டு கதைப் போக்கினை ஓரளவு ஊகம் செய்ய முடிகின்றது.

6 பாடல்கள் கூட்டப் பாடல்கள். இவை நாடக மாந்தர் மனப்போக்கை அறிய உதவமாட்டா.

4 பாடல்கள் காமிக் பாத்திரங்களுக்குரியவை.

எஞ்சிய 19 பாடல்களுள்,

இராமன் பாடுவதாக அமைந்தது	1
நாரதர் பாடுவதாக அமைந்தது	4
நாரதரும் இந்திரனும் இணைந்து பாடுவது	1
இந்திரன் பாடுவதாக அமைந்தது	3
இந்திரன் அகலிகை இணைந்துபாடுவது	1
இந்திராணி பாடுவது	1
தேவலோகப் பெண் பாடுவது	1
அகலிகை பாடுவது	5
கௌதமன் பாடுவது	1
கௌதமன் அகலிக்கை இணைந்து பாடுவது	1

சோலையில் பாடியாடும் அகலிகையிடம் சென்று இந்திரன் தன் காதலைக் கூறுவதாக அமைந்த பாடலும் அதற்குப் பதிலாக அகலிகை அவன் காதலைப் புறக்கணித்து கூறும் அறிவுரை அமைந்த பாடலும் அவர்கள் ஒருவரை ஒருவர் அகலிகையின் திருமணத்திற்கு முன்பே நேரில் கண்டு அறிந்தவர்கள் எனத் தெரிந்துகொள்ள உதவுவன.

நாரதர் பாடல்கள் இந்திரன் போட்டியில் வெல்ல இயலாதபடி சூழ்ச்சி செய்து கௌதமனுக்கு அகலிகையை மணம் முடித்தவர் என்பதனைத் தெளிவு செய்வன.

போட்டியில் தோற்ற இந்திரன் அதனால் மனவருத்தமுற்று வஞ்ச வழியில் அகலிகையை அடைய முற்படும்போது அவனை அது தகாது எனக் கூறித்தடுக்க இந்திராணி முயற்சி

மேற்கொண்டுள்ளாள் என்பதனைத் தெரிவிப்பது இந்திராணியின் பாடல்.

இராமன் பாடல் தாங்கள் சென்று கொண்டுள்ள காட்டின் வெம்மைக்கான காரணத்தை விசுவாமித்திரனிடம் வினவுவதாக அமைந்தது.

அகலிகையைத் திருமணம் செய்துகொண்ட பின்னரும் கௌதமன் சிந்தை இல்லற நாட்டம் அற்றதாக இறை நாட்டமே கொண்டதாக இருந்ததோடு அவன் அகலிகையையும் அந்நெறியிலேயே ஈடுபடுத்த முற்பட்டுள்ளான் என்பதனை,

கற்புடைய மாதே ஆன்று
கடலிடைப் பிறந்த கோதே ஈசன்
பொற்பத மடைய யான்று
புரிந்திடில் மாதவமே
நற்பதம் யாவும் பெற்று
நமனையும் வென்று வாழ்வோம்
இப்பதிக் கோதும் உண்டோ
இயம்புவாய் இணையும் தானே

என அவன் பாடும்பாடல் தெளிவாக்குகின்றது.

கௌதமனின் இந்த அறிவுரையை ஏற்றுக் கொண்டவளாக அகலிகை இல்லறம் நடத்தி வந்தாள் என்பது ஆசிரமத்தில் தான் வளர்க்கும் மானிடம் எடுத்துரைப்பதாக அமைந்த,

கவரிமானே உன்னைக் கண்ணால் கண்டேனே
கனிவுடன் விளையாடத் துணிவுங்
கொண்டேனே
சிவனருங்கரமே சேர்ந்த பேரினமே
திருடனைப்போல் மருளாதே என் முனமே
சீருடனே தவம்செய நினைதினமே
சிறந்த உன்னிடமன்பு நிறைந்திங்ஙனமே

என்ற பாடலால் புலனாகும்.

இவ்வாறு ஒழுக்கநெறி நின்ற அகலிகையிடம் இந்திரன் தன் சுயவடிவில் வந்து அவன் காதலை,

சேர்ந்திருமடமானே மோகினியே
தேவர்க்கமுதத்தேனே - மாங்கனியே
இந்திரபோகம் இனிது சீராய் எய்தவே நேராய்
நீ வாராய் எய்தவே நேராய் வாராய்

என வெளிப்படுத்த, அதற்கு மறுமொழியாக,

கற்புடையோர்க்கே பெரிதோ உன்போகம்
கருதி நீ யறியாத தென் அவிவேகம்
அற்பத்தனமாய் அறிவையிழந்தே அவதியுறநேரே
வந்தீரே - அவதியுற நேரே வந்தீரே

என தனது உள்ளத்து உறுதியை எடுத்துக்கூறி அவன் காதலைப் புறக்கணிக்கின்றாள். இப்பாடல் 28 ஆவது பாடலாக அமைந்துள்ளது.

இந்திரன் கௌதமர் உருவில் வந்து அவளை ஏமாற்றிக் கலவி செய்வது, அதனை அறிந்த கௌதமன் சாபம் தருவது அகலிகை அவரிடம் சாபவிமோசனம் வேண்டுவதான நிகழ்ச்சிகளுக்கான பாடல் எதுவும் இல்லை.

சாப விமோசம் பெற்று உயிர்த்தெழுந்த அகலிகையை ஏற்றுக் கொண்ட கௌதமர் அகலிகையுடன் இணைந்து ராமனை வாழ்த்தி வழி அனுப்புவதாக அமைந்ததே இப்படத்தின் இறுதிப் பாடலான 30 ஆவது பாடல்.

புராண, இலக்கிய அடிப்படையிலான கதைகள் தொடக்க காலத்தில் எத்தகைய மாற்றங்களோடு திரைப்படங்களாக உருப்பெற்றன என்பதனை அறிந்துகொள்ள இன்று நமக்கு உதவுபவை அன்று திரையரங்குகளின் காட்சியின்போது 0-0-3 பைசா விலையில் விற்கப்பட்ட திரைப்பாடல் புத்தகங்களே. அத்தகைய ஒரு புத்தகமே இக்கட்டுரை உருவாகத் துணை நின்றது.

வ.ரா. நடத்திய வழக்காடு மன்றம்

- வ.ரா.

அகலிகையின் அவல வாழ்வு சிந்தனையில் அச்சம் சிறிதும் இல்லாத புதுமை நோக்கும், சமூக முன்னேற்றத்தில் தீவிரத்தோடு கூடிய ஆர்வமும் கொண்ட வ.ரா. அவர்களைக் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை. பெண்கள் முன்னேற்றம் கருதி அவர் படைத்த புதுமைப் புதினம் **கோதைத் தீவு**. அதில் அகலிகை, ஆண்டாள், சாவித்திரி ஆகிய மூவரின் கதையையும் புதிய கண்ணோட்டத்தில் அலசியுள்ளார்.

கோதைத் தீவில் ஆண்டாள் வரலாற்றுக்கு அவர் தந்துள்ள புதிய விளக்கத்தை அந்தக் கதையில் வரும் ஒரு பாத்திரமே, "நேற்றைக்கு நீங்கள் ஆண்டாளைப் பற்றிப் பேசினது ரசமாயிருந்தது. கோதைத் தீவுக்கு வெளியே அதை நீங்கள் சொல்லியிருக்க முடியாது. உங்களை அவ்விடத்திலேயே பிண்டமாகப் பிடித்து உயிரை வாங்கியிருப்பார்கள்" என விமர்சிப்பதிலிருந்து வ.ரா. வின் புதிய பார்வையின் தீவிரத்தை ஊகிக்கலாம்.

சாவித்திரி தன்னுடைய சொல்லாடல் திறனால் எமனை ஏமாற்றிச் சத்தியவான் உயிரை மீட்டதான புராண மரபுக்கு மாறாக வ.ரா. ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார். சத்தியவான்னிடம் தான் கொண்டுள்ள காதலின் மகத்துவத்தை அறிந்து கொள்ள முடியாதவன் எமன் என வாதிட்டு, இல்லற வாழ்வினை இயந்திரமயமான கடமையாக நடத்திக் கொண்டிருக்கும் அவன் உணர்வின்மையின் கொடுமையை அவன் மனைவியிடம் எடுத்துக் கூறவே அவனை விடாது பின்தொடர்வதாகச் சாவித்திரி கூறவே தன் குடும்ப வாழ்வில்

விரிசல் ஏற்படுவதை விரும்பாத எமன் சத்தியவானை அவளிடம் ஒப்படைக்கின்றான்.

அகலிகை வரலாறு கோதைத் தீவு நாவலில் 17ஆம் அத்தியாயத்தில் 'குற்றவாளி யார்?' என்ற தலைப்பில் வழக்கு மன்ற நிகழ்வாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இது மற்றவர்கள் யாரும் மேற்கொள்ளாத புதிய உத்தி. அகலிகையின் வாழ்வில் நிகழ்ந்த அவல நிகழ்ச்சிக்கு அவள் தந்தை பிரமன், கணவன் கௌதமன், காதலன் இந்திரன், அகலிகை ஆகிய நால்வரில் யார் காரணம் என்பதனைக் கோதைத் தீவின் புதுமைப் பெண்கள் வழக்காடு மன்ற நிகழ்ச்சி நாடகமாக நிகழ்த்தித் தெளிவுபடுத்துகின்றனர். அவள் சூழ்நிலையால் வழுக்கி விழுந்தாள், இயற்கை சதி செய்தது, உள்ளத்தால் தவறினாளில்லை என்பது போலப் பிற படைப்பாளர்களைப் போல வ.ரா. சப்பைக்கட்டுக்கட்டி அவளைக் காப்பாற்றவில்லை. உலக-மேல் உலக-தீங்குகளுக்கு சிந்தனையின் தெளிவின்மையே காரணம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்ட வ.ரா. அதனை இந்தக் கற்பனை வழக்குமன்ற நிகழ்ச்சி வாயிலாகத் தெளிவுபடுத்துகிறார்.

வாழ்க்கை, வாழ்ந்து அனுபவிப்பதற்கே என்பதில் நம்பிக்கை கொண்டவள் அகலிகை. ஆன்மிக வாழ்வில் நாட்டமும் நம்பிக்கையும் கொண்ட கௌதமன் அவளுடைய இந்த மனப்போக்கை அறிந்து கொள்ளாதவனாக அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்கின்றான். பின் அவள் இந்திரனோடு இன்பம் அனுபவித்தது தவறு என்று அவளைக் கல்லாகும்படி சபிக்கின்றான். இதுவே அவன்மீது தொடுக்கப்பட்ட வழக்கின் சாரம்.

குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்ட கௌதமன், அகலிகையைத் தான் மணந்த வரலாற்றையும் அதன் பின் விளைவுகளையும் தொடக்கத்திலிருந்து எடுத்துரைத்து அகலிகை செய்த தவறுக்குத் தன்னைப் பொறுப்பாக்குவது முறையாகாது என்பதை,

"போட்டியில் கலந்து வென்ற போது வேறு வழியில்லாமல் பிரம்மா அகல்யையை எனக்குத் தந்தார். அவளை நான் அழைத்துக் கொண்டு பூலோகத்துக்கு வந்தேன். நாங்கள் இருவரும் சிறிது காலம் வாழ்ந்து வந்தோம். காமவெறி கொண்ட இந்திரனுக்கு இவள் பேரில் ஆசை என்று எனக்குத் தெரியாது. இவள் சாது என்று எண்ணியிருந்தேன். ஏமாந்து போனேன். என் மனது உடைந்து போகும் படியாக இந்த மாயக்காரி காரியம் செய்தாள். ஆகவே இவளுக்கும் இந்திரனுக்கும் சாபம் கொடுத்தேன். ஆத்மஞான பரிபக்குவம் பெற்ற எனக்கு ஸ்திரீ சபலம் உண்டாகி, கலியாணத்தில் ஆசை ஏற்படவேதான் அவள் எனக்குத் துரோகம் செய்ய நேர்ந்தது. விதி யாரை விடும்?"

என விளக்குகின்றான்.

அடுத்துக் குற்றவாளிக் கூண்டில் ஏறிய பிரமன், போட்டியில் குறுக்குவழியில் கௌதமன் வெற்றிபெற உதவிய சூத்திரம் தான் படைத்த வேதத்தில் இருப்பது தனக்கு ஞாபகமில்லாமல் போய்விட்டது என்றும் தான் ஏற்படுத்திய பிரமாணத்திற்கு தானே கட்டுப்பட வேண்டியவனாகி கட்டழகியான அகலிகையை ஆத்ம விசாரத்தில் ஈடுபட்ட ஒருவருக்கு மனவருத்தத்தோடு கொடுக்க நேர்ந்தது என்றும், இது தான் மனமறிந்து செய்த தவறு என்றும் கூறுகிறான்.

அடுத்துக் குற்றவாளிக் கூண்டில் ஏறிய அகலிகையிடம் நீதிபதியான நீதிதேவி அவள் வாழ்க்கை எவ்வாறு பாழானது என்ற விவரத்தைக் கூறும்படி கேட்கிறாள்.

"என்னுடைய இளம்பிராயத்தில், என்னைப் பார்த்து என் தகப்பனார் (பிரம்மா) தமது படைப்புத் திறனைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்வார்........ என்னைக் கலியாணம் செய்து கொள்ளவேண்டும் என்பது தேவேந்திரன் ஆசை, நான் ஏன்

இந்திராணியாகக் கூடாது என்று என்னையே நான் கேட்டுக் கொள்வேன். வாழ்வை ருசியாக அனுபவிக்க வேண்டுமானால் இந்திரபோகம் தான் வேண்டும் என்று எனக்குள்ளாகவே தீர்மானித்துக் கொண்டிருந்தேன். இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டார் என் தகப்பனார். இந்த முனிவருக்கு என்னைக் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானர். நான் என் புருஷனான முனிபுங்கவரோடு போனேன்.

"அவருக்குத் தவமும் சிசுருஷையும் தான் தெரியும். என்னோடு சல்லாபம் செய்ய அவருக்கு மனமும் இல்லை,, பொழுதுமில்லை "காதலை அனுபவிக்கத் தெரியாத ஒருவர் ஏன் கலியாணம் செய்து கொள்ளவேண்டும்" என நான் அவரை இரண்டொருதரம் கேட்டதுண்டு. "காதலாவது! அதுதான் காமம். காமத்துக்குப் பலியாகுபவன் ஆத்ம விசாரம் செய்ய முடியாது. நீ இங்கே, எனக்கு சிசுருஷை செய்ய வந்திருக்கிறாய், அதற்கு மீறிய எதுவும் என்னிடம் பேச வேண்டாம்" என்று தவமுனி திருவாய் மலர்ந்தருளினார்.

"நான் அவருடைய பணிப்பெண்ணாம்! என்ன அநியாயம்! எங்கேயாவது ஓடிவிடலாமா என்று எண்ணினேன். உரிமையை நிலைநிறுத்திக் கொள்ளாமல் ஓட்டம் எடுப்பதில் என்ன லாபம்?

"ஒரு நாள் இரவு இந்திரன் வந்தான். நான் குதூகலம் அடைந்தேன். முனிவருக்குக் கோபம். இருவருக்கும் சாபம் கொடுத்தார். முனிவருடைய ஆசிரமத்தில் கல்லைப்போல இருந்த நான் கல்லாகப் போனதில் வருத்தமே இல்லை. பெண் ஜன்மத்தைப் பாழாக்கிக் கொண்டு, பெண் மாதிரி இருப்பதைக் காட்டிலும் எப்பாழுதுமே கல்லாக இருப்பதில் எனக்குப் பிரம்மானந்தம். ஆனால் ஸ்ரீ ராமன் பாததூளிபட்டு நான் மீண்டும் பெண்ணானதுதான் எனக்குப் பிடிக்கவில்லை."

எனத் தன் வாழ்வில் நிகழ்ந்த துயரங்களை எடுத்துரைக்கிறாள் அகலிகை.

அகலிகை வரலாற்றைப் புதிய நோக்கில் படைத்த எவரும் வாழ்வில் ஏமாற்றங்களுக்கு ஆளான அவள் மனநிலை எத்தகையதாக இருந்தது என இது போலத் தெளிவுபடுத்தவில்லை.

அடுத்துக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டவன் இந்திரன். மற்றவர்களின் படைப்பில்போல வ.ரா. காமவசப்பட்டவனாக, அகலிகையின் கற்பைச் சூழ்ச்சி செய்து பறித்தவனாக அவனைக் காட்டவில்லை. இவன் புதிதாகப் பட்டத்திற்கு வந்தவன். தான் காதல் கொண்ட அகலிகையை மணந்து அவளை இந்திராணியாக்கி வாழ்வை அனுபவிக்க வேண்டுமென்று நினைத்தவன். தன் காதலும் கனவுகளும் கைகூடாமல் போனதற்கு கௌதமனே காரணம் எனப் பழி முழுவதையும் அவர் தலையில் போடுகிறான்.

இந்த வழக்கில் விதுரன், பாரதி, சீதை, ஆண்டாள், மேரி மாக்டலேனா ஆகிய ஐவரும் ஜூரிகளாக அமர்ந்து வழக்கு முழுவதையும் கேட்கின்றனர். இந்த ஐவரும் ஒரு மனதாகக் கௌதமனே குற்றவாளி என முடிவு செய்தாலும் அவருக்குத் தனியே தண்டனை வேண்டியதில்லை என்றும் தவமுனிவரான அவரை வழக்கு மன்றத்தில் நிறுத்தியதே போதுமான தண்டனை என்றும் தீர்ப்பு வழங்குகின்றனர்.

கோதைத் தீவு நாவலில் கதைக்குள் ஒரு கிளைக் கதைபோல அமைந்துள்ள அகலிகை வரலாறு மற்ற படைப்பாளிகளின் படைப்புக்களைக் காட்டிலும் புதுமையானதாகவும் புரட்சிகரமானதாகவும் அமைந்துள்ளது.

வழக்கு மன்றத்தில் இறுதியில், "என் கதி என்ன ஆகிறது?" என்று கேட்ட அகலிகையிடம் நீதிதேவி, "நீ உன் இஷ்டப்படி செய்யலாம். விசாரணை முடிந்து விட்டது" எனக் கூறுவதோடு வழக்கு மன்றம் கலைகிறது.

அகலிகையின் நிலை என்ன?

மீண்டும் கௌதமனோடு வாழ்ந்தாளா?

பிறந்த வீடான பிரமனிடமே சென்று சேர்ந்தாளா?

அல்லது

தன்னைக் காதலித்துத் தோல்வி கண்டு பின் கௌதமனைப் போலவே குறுக்கு வழியில் அவளைச் சேர்ந்து இன்புறுத்திய இந்திரனோடு சென்றாளா?

அகலிகையின் நிலை என்னவானது என்பதனை ஏனோ இந்த வழக்கின் முடிவில் வ.ரா. தெளிவு படுத்தாதுவிட்டு விட்டார்.

அகல்யா - நாடகம்

- பிரபஞ்சன்

மேடையில் நடிப்பதற்கு ஏற்ற வகையில் படைக்கப்பட்ட ஓரங்க நாடகம் பிரஞ்சன் படைப்பான "அகல்யா!" 1983 இல் அன்னம் வெளியீடாக "மூட்டை" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள நாடகத் தொகுதியில் இது இடம் பெற்றுள்ளது.

இந்த நாடகத்தின் இறுதியில் பின்னுரையாக,

> "அகல்யா" நான் சமீபத்தில் எழுதிய நாடகம். இதை மேடைக்கு கொண்டு போகும்போது மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும் எனத் தோன்றுகின்றது இப்போது. ''அகல்யா''வை மணிக்கொடிக் கலைஞர்களிலிருந்து பலரும் எழுதிப் பார்த்திருக்கிறார்கள். நானும் என் போக்கில் எனக்கு விருப்பமாக இருந்ததால் எழுதியுள்ளேன்"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேடையேற்றும் போது சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளாரல்லவா? நாடகத்துள் நிழற் காட்சி நாடகங்களாக இடம்பெறும் காட்சியமைப்பினை மேடையில் நிகழ்த்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல் பற்றி இவ்வாறு கூறியிருக்க வேண்டும்.

அகலிகை கதையின் கதாநாயகனான கௌதமர் இந்த நாடகத்தில் ஒரு பாத்திரமாக நேரடியாக மேடையில் தோன்றாதது ஒரு புதுமை. ராமனுடைய பங்கும் மிகச்சிறியதே. நாடகம் முழுமையும் விஸ்வாமித்திரருக்கும் அகல்யாவுக்கும் நடக்கும் விவாதமாகவே பின்னப்பட்டுள்ளது.

விஸ்வாமித்திரர் அகல்யாவின் வரலாற்றை ராமனுக்கு அவள் ஆசிரமத்திற்கு வரும் வழியில் கூறுகின்றார். ஆசிரமத்தை அடைந்த மூவரையும் அகல்யா வரவேற்கின்றாள் கல்லாகக் கிடந்தாள் என்ற பழங்கதையைப் பிரபஞ்சன் ஒதுக்கிவிட்டு நடைமுறைக்கேற்ப அவள் கௌதமனைப் பிரிந்து தனித்து வாழ்பவளாக நாடகத்தை அமைத்துக் கொண்டுள்ளார். ராமனும் லட்சுமணனும் அவளை வணங்குகின்றனர். அவள் அருகே அமர்ந்த ராமன், வரும் வழியில் அவள் வரலாற்றைக் கேட்டறிந்ததாகக் கூறுகின்றான். வரலாறு கூறுபவர்கள் உண்மையின் ஒரு பகுதியை மட்டும் தங்களுக்குச் சாதகமான முறையில் கூறிவிட்டு பின்னணியை மறைத்து விடுவதுதான் வழக்கம் என்பதை அறிந்தவளான அகல்யா, "என்னை எவ்வாறு அறிந்தாய்?" எனக் கேட்கின்றாள்.

விஸ்வாமித்திரர் தனக்குக் கூறிய அகல்யாவின் வழக்கமான வரலாற்று வழியே அவளைத் தான் அறிந்ததாக ராமன் கூறவும் அது பொய்யான வரலாறு என மறுக்கிறாள் அகல்யா.

ராமன் தன் அருகே அமர்ந்திருக்கும் விஸ்வாமித்திரரைப் பார்க்க, விஸ்வாமித்திரருக்கும் அகல்யாவுக்கும் இடையே ஒழுக்கம், கற்பு, கணவன், கடமை ஆகியன பற்றிய சர்ச்சை நீண்ட விவாதமாக நிகழ்கின்றது. இதுவே இந்த நாடகத்தின் புதுமையும் உயிர்நாடியும் ஆக உள்ள பகுதி.

"நான் ராமனுக்கு நடந்தது நடந்தபடி தான் சொன்னேன் அதை ஏன் பொய் என்கிறாய்?" என அகல்யாவைப் பார்த்து விஸ்வாமித்திரர் கேட்கிறார்.

உலகனைத்துக்கும் (விஸ்வம்) மித்திரரான அவர் தனக்கு மட்டும் இப்படிப் பகையாளியாக இருப்பது வியப்பளிப்பதாகக் கூறிய அகல்யா, தனக்கு நியாயம் வழங்க வந்திருக்கும் ராமனிடம் தன் கட்சியை இதுபோல அவர் தவறாக எடுத்துரைத்துள்ளாரே என்ற மன வருத்தத்துடன், ராமனைப் பார்த்து, "ராமா! உன் நியாயத்தை எந்தப் பிரமாணத்தின் மீது பிரதிஷ்டை செய்யப் போகிறாய்?" எனக் கேட்கிறாள்.

மனுவும், மகாராஜர்களும், ரிஷிகளும், ஞானிகளும் மனுஷ குலத்துக்கு வகுத்த சட்ட நியதிகளின் படியே என் நியாயம் அமையும் என்கிறான் ராமன்.

சமுதாயத்திற்கு - மனிதக் கூட்டத்திற்கு - என்று வகுக்கப்பட்ட நியாயம் தனி மனிதர்கள் விஷயத்தில் எப்படிப் பொருந்தும் என்பது அகல்யாவின் கேள்வி. தனிமனிதன் முழுமையின் ஒரு பகுதி தானே என்று பதிலுரைக்கிறான் ராமன். "ஒவ்வொரு ஆணுக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் இங்கு லபிக்கப்பட்ட வாழ்க்கை அதன் அளவில் முழுமை பெற்றதாகுமல்லவா?" என்று கேட்ட அகல்யாவின் வாதத்தைத் தான் ஏற்றுக் கொண்டதாகக் கூறிய ராமன், "எனினும் சமூக முன்னேற்றத்தையும் ஒழுங்கையும் கருதிப் போடப்படும் சட்டதிட்டங்களுக்குத் தனிமனிதன் கட்டுப்பட்டே தீர வேண்டும்" எனக் கூறுகிறான்.

வருங்காலத்தில் நாட்டை ஆளப்போகும் அவனிடம் இதைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை எனக் கூறிய அகல்யா,

> "நான் உன்னையும் உன் முன்னோர்களையும் உங்களது குருட்டுச் சட்டங்களையும் நிராசரிக்கின்றேன். மனிதர்களை அவர்களின் சுக துக்கங்களோடு, உணர்வுகளோடு, ஆசாபாசங்களோடு புரிந்து கொள்ள முடியாது அவர்களது கிரியைகளை மட்டும் விமர்சிக்கிற உங்கள் ராஜரீகம் அராஜகமானது"

எனச் சாடுகின்றாள்.

நாடகத்தில் இந்தக் கட்டத்தில் ராமன் ஒதுங்கியவனாகிவிட விஸ்வாமித்திரருக்கும் அகல்யாவுக்குமிடையே வாதம் தொடர்கிறது. அகல்யா பேசுவது தர்மத்திற்கு முரணானது என்ற விசுவாத்திரரிடம், கோபத்துடன் இருக்கையை விட்டு எழுந்து அகல்யா,

> "உங்கள் பயம் எனக்குப் புரிகிறது. அகல்யாவின் இடத்தில் உங்கள் வீட்டுப் பெண்களை வைத்துப் பார்க்கறீர்கள் இந்திரனாக உங்களிடம் கல்வி பயிலும்

இளைஞர்களைக் காண்கின்றீர்கள். கௌதமராக. கட்டிய மனைவியை அறவே மறந்து. தீ வளர்ப்பதில் மட்டும் கவனம் செலுத்தி. உடம்பு பசிக்கிறது என்று சொல்லும் போது மட்டும் சகதர்மணிகளை நாடும் உங்களை வைத்துப் பார்க்கின்றீர் அப்படித்தானே?"

எனக்கேட்ட போது முதலில் தக்க பதில் சொல்ல முடியாது மௌனம் சாதித்த விசுவாமித்திரர். "தவறுகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டியவை. நியாயப்படுத்தப்பட வேண்டியவை அல்ல" என்கிறார்.

இந்த இடத்தில் பிரபஞ்சன் நாடகத்துள்-நிழற்காட்சி நாடகமாக உபநிடதத்தில் இடம் பெற்றுள்ள சாக்ராயனர் வாழ்வின் ஒரு நிகழ்ச்சியை அமைத்துள்ளார்.

தொடர்ந்து பெய்த இடி மழையின் கடுமையால் குருதேசம் நாசமடைந்துவிட்ட காலக்கட்டத்தில் சாக்ராயன முனிவர் தன் இளம் மனைவியுடன் பசியால் வாடிக் களைத்தவராக யானைப்பாகர் கிராமம் ஒன்றினை அடைந்து யானைப்பாகனிடம் பசியால் தாங்கள் சாகும் நிலையை அடைந்துள்ளதாகக் கூறுகிறார். யானைப்பாகன் தான் தின்று கொண்டிருக்கும் கொள்ளின் மிச்சத்தைத் தவிரத் தன்னிடம் வேறு ஒன்றுமில்லை எனக்கூறிய போது அதையாவது பிச்சையாக இடும்படி கேட்டுப் பெற்று முனிவரும் அவர் மனைவியும் அதைத் தின்று பசிப்பிணியால் சாவின் வாசலை நெருங்கிய அவர்கள் உயிர் பிழைக்கின்றனர். அதன்பின் யானைப் பாகன் இந்தத் தண்ணீரையும் குடித்துத் தாகத்தையும் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று தண்ணீர் இருந்த கலத்தை நீட்ட சாக்ராயனர். அந்தத் தண்ணீரைக் குடித்தால் எச்சிலை ஏற்றவனாவேன் என்கிறார். நீங்கள் தின்ற கொள்ளும் என் எச்சில் பட்டதுதானே எனக் கேட்கிறான் யானைப்பாகன். அதனை உண்ணாவிடில் என் உயிர் நிலைக்காது ஆகவே உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அதனை வாங்கி உண்டேன். இந்த நீரைப் பருகினால் அது வேட்கையைத் தணிக்க நான் பருகியதாகி விடும். ஆகையால் அது எச்சிலைப் பருகிய குற்றத்திற்கு என்னை ஆளாக்கும் எனச் சமாதானம் கூறுகின்றார் சாக்ராயனர்.

சரி. தவறுகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நியாயப்படுத்தப்படுபவை என்பதை இந்தப் பழைய வரலாற்று நிழற்காட்சியின் வாயிலாக அகலிகை விஸ்வாமித்திரருக்குப் புரிய வைக்கின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

> "சாக்ராயனரைப் போலவே நானும் பசித்துப் போய்க் கிடந்தேன். மக்களைக் காக்க வேண்டிய மன்னர் ஆட்சியில் ஒரு முனிவர் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள காட்டில் யானைப்பாகன் முன் கையேந்தினாரில்லையா? அது சூழலின் நிர்ப்பந்தம். இன்ப துன்பங்களில் பாதியாய் நிற்பேன் என அக்னி சாட்சியாய் என்னைக் கைப்பிடித்தவர் என் தேகம் எரியும் போது எரிந்த கட்டையாக இருந்தார். நான் அவருக்கு ஏவல் செய்யும் ஒருத்தியாகத் தானே வைக்கப்பட்டேன். இதுதான் சகதர்மணி என்பதன் பொருளா?"

என்ற அகலிகையின் வாதத்திற்குச் சரியான பதிலுரைக்க இயலாத விஸ்வாமித்திரர் இறுதியில் கௌதமர் செய்தது தவறு என்பதனை உடன்பட்டாலும் அகல்யை செய்தது துரோகம் எனக் குற்றம் சாட்டுகிறார்.

அந்தக் குற்றச் சாட்டும் தவறு என்பதனை அகல்யா நிரூபிக்க உதவும் வகையில் மற்றுமொரு நிழற்காட்சி நாடகத்தினூடே நாடகமாக இடம் பெறுகின்றது. இது அகல்யாவின் வாழ்வின் பழைய நிகழ்ச்சி ஒன்றினை விளக்குவது. அதில் அகல்யாவின் திருமணத்திற்கு முன் இந்திரனுக்கும் அகல்யாவுக்குமிடையேயான தொடக்ககாலக் காதலும் அதில் அவர்களிடையேயான மனமொருமித்து நிகழ்ந்த உடலுறவும் இடம்பெறுகின்றன.

இந்த நிழற்காட்சிக்குப் பின் அகல்யா தன் பழைய நினைவுகளிலிருந்து மீண்டவளாகத் தான் தன் காதலனான இந்திரனைத் திருமணம் செய்து கொள்ள முடியாது போனதும் தந்தையால் கௌதமருக்குக் கட்டாயக் கல்யாணம் செய்து

வைக்கப்பட்டதுமான தன் வாழ்வின் சென்றகால அவலங்களை எடுத்துரைப்பது புராண இதிகாசங்களின் போக்கினை ஓரளவு ஒட்டிப் புனையப் பெற்றதாக அமைந்துள்ளது.

"திருமணத்திற்குப் பின் கௌதமரோடு அவர் மனைவியாக வாழ்ந்திருக்கிறாயே!" என்று கேட்ட விஸ்வாமித்திரருக்கு.

> – "நான் என்றும் கௌதமரோடு வாழ்ந்ததில்லை. நான் வாழ்ந்ததெல்லாம் இந்திரனோடு மட்டும் தான். இந்திர வெளிச்சம் என் கன்னிமை விழிகளைத் திறந்து வைத்தன. கௌதமர் என் தேகத்தை ஆலிங்கனம் செய்த போதெல்லாம் என் கைகளுக்குள் கட்டுப்பட்டிருந்தவன் இந்திரனே தான். என் மேனியின் மீது படர்ந்த கை, உடல் அனைத்தும் இந்திரனுடையதே. நான் வாழ்ந்ததெல்லாம் அவனோடு தான் – என் ஆன்மா சங்கமித்தது அவனோடன்றி வேறு யாரோடும் அல்ல"

என்று கூறும் பதில் உடலுறவின் போது ஆண் பெண் ஆகியோர் மனநிலை எத்தகைய போக்கினதாக இருக்கும் என்பது பற்றி, உளவியல் அடிப்படையில் உடலுறவு இயயார் கூறும் உண்மையின் அடிப்படையிலானதாக பிற படைப்புகளில் காணப்படாத யதார்த்தமான புதிய விளக்கமாக அமைந்துள்ளது.

இத்தகைய மனப்போக்குக்கு ஆட்பட்டவளாகிவிட்ட அகல்யா இந்திரன் அவளை நாடி வந்த அன்றிரவிலும் எப்படி அவன் தழுவலில் தன்னை இழந்தவள்ாக நேரிட்டது என்பதனை மற்றுமொரு நிழற்காட்சி வாயிலாக அவர்களுக்குப் புரிய வைப்பதாக அமைத்துள்ளார்.

> "முழுநிலாக் காயும் இரவு. அகலிகை இந்திரன் நினைவிலாழ்ந்தவளாக விரகதாபத்திற்குஆட்பட்டுக் கிடக்கின்றாள். கௌதமர் வழக்கமான தன் கடன்களின் நிமித்தம் அவளைப் பிரிந்து சென்றுவிடுகிறார்.

> தனிமையில் வாடும் அவள் கனவுக் கற்பனையே உயிர் பெற்றதுபோல இந்திரனே நேரில் வர அவள் அவன் வசமாகித் தன்னை இழக்கிறாள். திரும்பிய கௌதமர் அவர்கள் நிலை கண்டு வெகுண்டு சாபமிடுகிறார். அவளை வேசி என்று ஏசுகிறார்."

இந்த அளவில் நிழற்காட்சி முடிகிறது. மனத்தளவில் என்றும் இந்திரனோடேயே - கௌதமர் அணைப்புக்கு உடலளவில் கட்டுப்பட்டாலும் - சுகித்த தான் இப்பொழுது அவனோடு உண்மையிலேயே உடலுறவு கொண்டதால் தன்னை வேசி என்று ஏசுவது எவ்வகையில் நியாயம் எனக் கேட்பதாக இப்பகுதியை முடித்துள்ளார் பிரபஞ்சன்.

கு.ப.ரா. வின் நாடகத்தில் இந்திரன் அகலிகை மீது கொண்ட மோகத்தால் அவளைத் தன் வசம் இழக்கச் செய்ய மன்மதன், தென்றல், நிலா எனப் பலரது துணையுடன் அவளைத் தனக்கு வசமாக்கிக் கொள்கிறான். பிரபஞ்சன் தன் நாடகத்தில், இந்திரன் மோகத்தை முன்னிலைப் படுத்தமால் தன் காதலனான இந்திரன் மீது அகல்யா கொண்ட மோகத்தையே முதன்மைப்படுத்தி நாடகத்தை நடத்திச் செல்கிறார். கு.ப.ரா.வின் நாடகத்தில் மாற்றான் மனைவியாகி விட்ட தன் காதலியை மீண்டும் சுகிக்க இந்திரன் விரித்த சூழ்ச்சிவலை முதன்மை படுத்தப்படுகிறது. இங்கு இந்திரன் பின்னுக்குத் தள்ளப்பட்டு அகலிகையின் தாபம் முதன்மைப் படுத்தப்படுகிறது. கு.ப.ரா.வின் நாடகம் அகல்யை தன் வசமிழந்து சூழலுக்குப் பலியாகி இந்திரன் மோகத்திற்கு ஆட்படுவதோடு முடிந்துவிடுகிறது. அதன் பின்விளைவுகளையோ அது சரியா தவறா என்பது பற்றியோ அடுத்துத் தெரிவிக்கும் வகையில் கு.ப.ரா. நாடகத்தை மேலே நடத்திச் செல்லவில்லை. வழக்கமாக அவருடைய சிறுகதைகளில் ஆண்-பெண் உறவு முதன்மைப்படுவது போல அகல்யா நாடகத்திலும் காமம் அறிவை வெல்லும் என்ற அளவில் நாடகம் தெரிவிப்பதாக அமைந்து முடிந்து விடுகின்றது.

அத்தகைய குழலில் ஒருத்தி தன்னை இழப்பது சரியா? தவறா? சமூகத்தின் பார்வையும் கௌதமரின் பார்வையை ஒத்ததாக இருக்க வேண்டுமா அல்லது அவள்மீது அனுதாபம் காட்ட வேண்டுமா என்ற பிரச்னையையே பிரபஞ்சன் தன் நாடகத்தின் கருப்பொருளாக அமைத்துக் கொண்டுள்ளார். இது கோதைத் தீவு நாவலில் வரும் வழக்கு மன்ற நிகழ்ச்சியை ஓரளவு ஒத்ததாக அமைகின்றது.

வான்மீகி, கம்பன் தொடங்கி இருபதாம் நூற்றாண்டுப் படைப்பாளிகள் வரை அனைவரின் நோக்கமும் அகல்யாவிடம் அனுதாபம் காட்டுவதாகவே அமைந்துள்ளது. ராமன் கால் துகளின் பெருமை சேர்க்கக் கல்லாயிருந்தவள் உயிர் பெற்றாள் எனச் சித்திரித்தார்களா அல்லது இவள் கல்லாகவே கிடப்பது ஒரு சமூக அநீதியாகும் என்பதால் அவளை மீண்டும் உயிர்ப்பித்தார்களா என்று பார்க்கும்போது பின்னதே படைப்பாளிகளின் நோக்கமாக அமைந்திருக்கக் காண்கின்றோம்.

கௌதமர் ஆசிரமத்தில் அன்றிரவு நிகழ்ந்த தவறுக்குப் பின்னணியில் முன்பே நிகழ்ந்தப்பட்ட ஒரு மாபெரும் தவறு உள்ளது என்பதனை மற்ற படைப்பாளிகளைவிடத் தெளிவாகவும் நுட்பமாகவும் இந்த நாடகத்தில் பிரபஞ்சன் வெளிப்படுத்தியுள்ளார்.

நாடகத்தின் முடிவும் மற்ற நாடகங்களிலும் வேறுபட்டதாக அமைந்துள்ளது. ஆசிரமத்திலிருந்து மீண்டும் புறப்படத் தயாரான ராமன் அகல்யாவிடம்,

> "நான் கௌதமரைப் பார்க்கிறேன். நீயே வாதியாகவும் நீயே பிரதிவாதியாகவும் இருந்து வாக்குரைத்திருக்கிறாய். கௌதமர் உங்கள் பிரச்னையை நான் தீர்ப்பவன் என்று நம்பி இருக்கிறார்"

என்று கூறுவது கௌதமர் மனம்மாறி அகல்யாவை ஏற்றுக் கொள்ள உடன்பட்டவராக இருந்தாலும் அகல்யா மீண்டும் அவரோடு

வாழ்க்கை நடத்த விருப்பமற்றவளாக இருக்கிறாள் என்பதனைக் குறிப்பாகக் காட்டுவதாக உள்ளது.

கணவன் மனைவியரிடையான மனக்கசப்பு தெய்வத்தாலும் சீர்படுத்த இயலாதது என்பதனை "என் பிரச்னையை நீ தீர்த்துவிட்டதாக நம்புகிறாயா?" என்று அகல்யா கேட்கும் கேள்விக்கு "யார் பிரச்னையையும் யாரும் தீர்த்துவிட முடியாது என்றே எனக்கு இந்த க்ஷணத்தில் தோன்றுகின்றது மனச்சான்று வழிநடத்தும் வழியில் நடப்பதே அறம். அந்த வழியில் உன் வாழ்வை அமைத்துக் கொள்" என்பதான பதிலோடு அவளிடமிருந்து விடைபெறும் ராமனை 'மங்களம் உண்டாகட்டும்' என வாழ்த்தி அனுப்புகிறாள். ராமனுடன் புறப்பட எழுந்த விஸ்வாமித்திரர் ராமனுக்கு மங்களம் தேடவே நான் அவனை வழிநடத்திச் செல்கிறேன் உன் வாக்கு பலிக்கட்டும் எனக்கூறி, தன்னை வணங்கிய அவளைத் "தீர்க்க சுமங்கலி பவ..." என வாழ்த்துகிறார். அகல்யா அவரை நிமிர்ந்து பார்த்து, "யாரோடு? இந்திரனோடா - கௌதமரோடா?" என்று கேட்கும் கேள்விக்கு விடை சொல்ல இயலாதவராக விஸ்வாமித்திரர் சிரித்துவிட்டுச் செல்வதாக நாடகத்தை முடித்துள்ளார் பிரபஞ்சன்.

காவியம், கவிதை, கதை போன்ற படைப்புகளில் போலவே நாடகங்களின் படைப்பிலும் காலப்போக்கில் சமுதாய மாற்றங்களுக்கேற்ப ஒவ்வொரு காலகட்டத்திலும் படைப்பாளிகள் பழைய பாத்திரங்களின் மீது தங்கள் காலத்திய சமுதாய விழிப்புணர்வை ஏற்றியுள்ளனர். அப்பாத்திரங்களை அந்தப் படைப்புகள் தோன்றிய காலச் சமுதாயச் சூழலுக்கேற்ற கவனிப்புக்கு உரியதாக்கிப் புதுமை செய்துள்ள நாடகப் படைப்பாளிகளுள் பிரபஞ்சன் முதன்மை பெறுகிறார். பிரபஞ்சனது இந்த நாடகம் ஓரங்க நாடகமாக அளவில் சிறியதே. இருப்பினும் இது தீவிரமான சிந்தனைத் தீப்பொறியினை உள்ளடக்கிய புரட்சிகரமானதொரு படைப்பு. அத்துடன் சில பிரச்சனைகள் என்றும் தீர்வுக்கு அப்பாற்பட்டவை என்பதனையும் தெளிவுபடுத்துகிறது. அத்தகைய

பிரச்னைகளுள் கணவன் மனைவியிடையேயான விரிசலும் மனக்கசப்பும் என்றும் முதன்மை பெறுவது என்பதனைப் பிரபஞ்சன் கலைநுட்பத்துடன் நவீன நாடக உத்திகளைப் பயன்படுத்தி தெளிபடுத்தியுள்ளார்.

அண்மையில் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் கிராமிய நிகழ்ச்சிகளில் கூடப் பழைய மரபிலான அகலிகை வரலாறு இடம் பெற்றதைக் கேட்கவும் பார்க்கவும் நேர்ந்தபோது இதுபோன்ற புதுமைப் படைப்புகளுக்கு அத்தகைய வாய்ப்புக் கிடைக்காது போனது மனதை உறுத்தவே செய்தது.

அகல்யா

- துவிஜேந்திரலால் ராய்

வங்கமொழிக் கவிஞரும் நாடக ஆசிரியருமான துவிஜேந்திரலால் ராய் அகலிகையின் வாழ்வையும் தாழ்வையும் விளக்கும் "அகல்யா" என்ற நாடகத்தை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் படைத்துள்ளார். அதனை ரூபாத் பாண்டே என்பவர் இந்தியில் மொழி பெயர்த்துள்ளார். அந்த இந்திமொழி பெயர்ப்பின் உதவியால் அந்த நாடகத்தை இந்தியும் தமிழும் கற்றறிந்த பண்டிட் பி.மகாலிங்கம் அவர்கள் தமிழ்ப்படுத்தியுள்ளார். இந்தத் தமிழ் வடிவம் கோட்டாறு செங்குந்த வாலிபர் சங்கத்தினரால் 1940-ல் அச்சேற்றி வெளியிடப்பட்டுள்ளது.

படிப்பதற்கும் மேடையில் நடிப்பதற்கும் ஏற்றவகையில் அமைந்துள்ள இந்நாடகத்தில் அந்நாளைய மேடை நாடக மரபுப்படி சில இசைப்பாடல்களும் இடம் பெற்றுள்ளன. மேடையில் நடிக்கப்பட்ட விவரம் நூலின் முன்னுரையில் இடம் பெறவில்லை.

அப்போது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்துறையில் ரீடராக இருந்த கே.என். சிவராஜ பிள்ளை அவர்கள் இந்த நாடகத்திற்கான தன்னுடைய் முன்னுரையில், "பௌராணிகக் கதையில் நம்பத் தகாத சிற்சில பாகங்களை ஒதுக்கிச் செப்பனிடப்பட்ட கதையமைப்பையுடைய நாடகம்" என இதனைப் பாராட்டியுள்ளார்.

சதாவதானி கா.ப. செய்குத்தம்பிப் பாவலர் தனது நூன்முக உரையில், "இந்நூல் பண்டைய சரித்திரங்களுக்குப் பெரும்பாலும் ஒத்ததாயிருப்பினும் சிற்சில இடங்களில் காலப் போக்கிற்கும் மக்கள் இயற்கைக்கும் ஒத்தவாறு கொள்ளுவன கொண்டும், தள்ளுவன தள்ளியும் புதுக்குவன புதுக்கியும் இயற்றப் பட்டுள்ளது" என நாடக

ஆசிரியரின் புரட்சிப் போக்கினைப் பாராட்டியுள்ளதோடு, "இப்புதுமைப் போக்கு மூல நூலான வங்கமொழி நூலாசிரியரின் கோட்பாட்டை வெளிப்படுத்துவதே அல்லாமல் மொழிபெயர்ப்பாளருடைய கோட்பாட்டை குறிப்பதாகக் கொள்வதற்கில்லை" என்றும் விவரித்துள்ளார்.

கௌதமர் அகலிகையை மணந்த புராண மரபிலான வரலாறு இந்நாடகத்தில் இடம்பெறவில்லை. கௌதமரும் அகலிமையும் கணவன் மனைவியராக இல்லறத்தில் ஈடுபட்டுள்ளனர். சதானந்தன் என்ற மகனையும் பெற்றெடுத்துள்ளனர். கௌதமருடைய ஆசிரமத்தில் சீடர்கள் தங்கி அவரிடம் கல்வி கற்று வருகின்றனர். அவருடைய ஆசிரமத்திற்கு அதிதியாக வந்த விசுவாமித்திரரின் தூண்டுதலால் கௌதமர் அகலிகையைப் பிரிந்து தவம் செய்யச் செல்கின்றார்.

இந்தக் கணவன் மனைவியரிடையான பிரிவினை எப்படியும் அகலிகையைத் தன் காமவலையில் வீழ்த்த வேண்டும் என்ற ஆவலோடு இருந்த இந்திரன் பயன்படுத்திக் கொள்கின்றான். மன்மதன், ரதி, வசந்தன் ஆகிய தேவர்கள் அவனுக்கு உதவும் வகையில் கணவனைப் பிரிந்திருக்கும் அகலிகையின் உள்ளத்தில் காமத்தீயை மூட்டுகின்றனர். அதன் பின் இந்திரன் தவவேடந்தாங்கிக் கௌதமர் ஆசிரமம் அடைந்து அங்கு அத்தியாக தங்கவேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தெரிவிக்கின்றான்.

வந்தவன் இந்திரனே என்பதனை அகலிகை புரிந்து கொள்கின்றாள். அவன் காமநோக்கமும் அவளுக்குப் புரிகின்றது.

அவர்கள் காமக் களியாட்டத்திற்கு இடையூறாக அகலிகையின் மகனான சதானந்தன் இருப்பதாக இந்திரன் கருதுகின்றான்.

இந்திரன் : ரொம்பவும் நல்லது. வா. இப்போதே போவோம். சாதனந்தன் தூங்கிக் கொண்டிருக்கிறான். வனம் முழுதும்

நிசப்தமாய் உள்ளது. ஒரு இலைகூட அசையவில்லை.

அகல்யா : மழை பெய்கிறது.

இந்திரன் : இது இன்னும் நல்லதாயிற்று. இரவின் இருளில் மழையில் ஏற்பட்ட குளிர்காற்றில் உலகம் முழுதும் உணர்வற்று தூங்குகிறது. சீக்கிரம் வா.

அகல்யா : போகலாம்.

சதானந்தன் : (விழித்துக் கொண்டு) அம்மா! அம்மா!!

அகல்யா : என்ன செய்வேன்? புத்திரன் விழித்துக் கொண்டானே!

இந்திரன் : பார், பையன் திரும்பவும் தூங்கிவிட்டான் சீக்கிரம். தாமதியாதே.

அகல்யா : நல்லது.

சதானந்தன் : அம்மா! அம்மா!!

இந்திரன் : நில்லுடா பையா! அகல்யா பையனை பேசாதிருக்கச் செய். இல்லையானால் இவன் எல்லா ஏற்பாடுகளையும் பிரயோஜனமற்றதாக்கி விடுவான்.

அகல்யா : சதானந்தா பேசாதிரு.

சதானந்தன் : அம்மா இவர் யார்? நீ எங்கு போகிறாய்?

இந்திரன் : இந்தப் பையன் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டான்.

அகல்யா : என்ன செய்வேன்.

இந்திரன் : கழுத்தைத் திருகிவிடு.

அகல்யா : நல்லது. இனி அவனுக்குப் பசியே இல்லாது செய்து விடுகிறேன்.

இந்திரன் : பாக்கியம் கெட்டவனுக்கு இனிப் பசிக்காது. வா. சீக்கிரம் போகலாம் வா. வெளியே யாரோ பேசுகிறார்கள். வா.

இந்திரன் மீது கொண்ட மோகம் புத்திர பாசத்தையும் வென்று விடுகின்றது. மகனையும் கொல்லத் துணியும் கொடியவளாக அகலிகை படைக்கப்பட்டிருப்பது நம்பக்கூடியதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் காமம் தலைக்கு ஏறிவிட்டால் அது மனிதரைக் கொலைவெறி கொண்ட கொலைகாரனை விடவும் கீழானநிலைக்குத் தள்ளிவிடும் என்ற உண்மையை இந்த நாடகக் காட்சி தெளிவாகவே விளக்குகிறது.

இத்தகைய காமம், நிலைத்த இன்பத்தைத் தருவதில்லை. அதனாலேயே இதனைச் சிற்றின்பம் என்கின்றனர் போலும். காதலுனுக்காக மகனைக் கொல்லவும் துணிந்த அகலிகையைத் தன் காமவெறி தணிந்தவுடன் கைவிட்டுச் செல்ல இந்திரன் முடிவு செய்கின்றான். இது அகலிகையை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றது.

அகல்யா : உங்கள் மனம் மகிழ்ச்சியாய் இல்லையே ஏன்?

இந்திரன் : காரணம் எனக்கே தெரியவில்லை.

அகல்யா : கவலையை விட்டுவிடு. நான் உன் பக்கத்தில் இருக்கிறேன். இன்னும் ஏன் நீ கவலையடைகிறாய். அதோ பார். இன்று பூரண சந்திரன் சிரித்துக் கொண்டிருக்கிறான். அன்பா! அந்த நாள் ஞாபகமிருக்கிறதா?

இந்திரன் : எந்த நாள்?

அகல்யா : இந்த மாதிரி சந்திரன் சிரித்துக் கொண்டிருந்தான். அதன் பக்கத்தில் ஒரு

ஒளி பொருந்திய நக்ஷத்திரம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அச்சமயம் நீ என்முன் வந்து நின்றாய். அப்போது...

இந்திரன் : அந்த ஞாபகங்களை மறந்துவிடு. நான் இச்சமயம் ஒரு திடுக்கிடும் விஷயம் கூற வந்துள்ளேன்.

அகல்யா : என்ன? என்ன சமாச்சாரம்?

இந்திரன் : அகல்யா நாம் உடனே போக வேண்டும்.

அகல்யா : எங்கே?

இந்திரன் : சொர்க்கத்திற்கு

அகல்யா : சொர்க்த்திற்கு ஏன்? இந்த இடம் நமக்கு சொர்க்கமில்லையா? கரத்தோடு கரம், மார்போடு மார்பு, அதரத்தோடு அதரமாகச் சேர்ந்திருக்கிறோம். உச்சியின் மேல்பரந்த நீல ஆகாயம். கால்களுக்கடியில் பசும் புல் நிறைந்த பூமி. இது நமக்குச் சுவர்க்கமில்லையா? நாதா! அந்தச் சுவர்க்க ராஜ்யம் அழிந்து போகட்டும். நான் அங்கு வர விரும்பவில்லை.

இந்திரன் : நீ வரவில்லையானால் நான் தனியாகப் போவேன்

அகல்யா : தனியாகப் போவாயா? தனியாகவா? நான்?

இந்திரன் : மிதிலைக்குத் திரும்பிப்போ. உனது ஆஸ்மரத்துக்குப் போ.

அகல்யா : நீ கேலி பண்ணுகிறாய்.

இந்திரன் : இல்லை கேலி இல்லை. முற்றிலும் உண்மை. அகல்யா உன்னிடம் வேறு

என்ன சொல்லவேண்டும்? இதுவரை நீ அறிந்து கொள்ளவில்லையா?

அகல்யா : எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!

இந்திரன் : நல்லது. கூறுகிறேன் கேள். இவ்வளவு நாட்களும் உன்னோடு சிற்றின்ப சுகத்தை அடைந்தேன். இப்போது என் ஆசை தீர்ந்து விட்டது. இப்போது சில நாட்களாக நடந்துவரும் நமது உதாசீனமான சம்போகத்தாலும் விருப்பக் குறைவாலும் நமது காம இச்சையின் இறக்கத்தை நீ அறியவில்லையா? காமத் தீ தணிந்துவிட்டது. காதல் தாகம் மறைந்து விட்டது.

இவ்வாறு இந்திரன் அகலிகையைக் கைவிட்டுப் போக முற்பட்டபோது அகலிகை சினத்துக்குள்ளாகின்றாள். கணவனுக்கும் மகனுக்கும் துரோகம் இழைத்து விட்டு யாரை நம்பி ஆசிரமத்தை விட்டு ஓடிவந்தாளோ அவனே இப்பொழுது அவளைக் கைவிட்டவனாகத் தனக்குத் துரோகம் இழைக்க முற்பட்டதால் உள்ளம் கொதித்தவளாக இந்திரன் எதிர்பாராத விதத்தில் கட்டாரியால் அவனைக் குத்தித் தன் கோபத்தைத் தணித்துக் கொண்டவளாகக் காட்டில் பைத்தியம் போல் அலைகின்றாள். காலம் அவளுக்கு அவள் தவற்றை உணர்த்துகின்றது. கணவனுக்குத் துரோகம் இழைத்ததால் உள்ளம் நொந்து போனதால் மனம் கல்லாக இறுகி அவள் உணர்வற்றவளாகின்றாள்.

இவ்வாறு வனத்தில் அலைந்து திரிந்தபடி இருந்த அகலிகை ராமனைக் காண நேர்கின்றது.

ராமன் செய்த நல் உபதேசத்தால் மீண்டும் நல் அறிவும் நல் உணர்வும் வரபெற்றவளாக மாறி கௌதமனிடம் மன்னிப்பு வேண்டிப் பெறலாம் என்ற நம்பிக்கையோடு ஆசிரமம் திரும்புகின்றாள்.

இதனிடையே தவம் செய்யச் சென்ற கௌதமர் ஜனகரின் சபையிலிருந்து வந்த அழைப்பின் பேரில் காட்டிலிருந்து திரும்புகிறார். வழியில் காயம் பட்ட இந்திரனைக் கண்டு அவனைத் தன் ஆசிரமத்திற்கு அழைத்து வந்து சீடர்களின் உதவியுடன் அவனுக்கு மருத்துவமும் செய்து குணப்படுத்துகிறார்.

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

எனத் துறவறவியலில் துறவிகளுக்குரியதாக வள்ளுவர் வகுத்துள்ள பண்பாளர் இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாக இந்த நாடகத்தில் கௌதமர் படைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பு

அகலிகை பற்றிய இரண்டு புதுமைப்பித்தன் கதைகளுள் முதலவதான "அகல்யை" என்ற கதையில் வரும் கௌதமர் பண்போடு. இவரது பண்பு இந்த நாடகத்தில் ஒற்றுமையுடையதாக அமைந்துள்ளது. மொழிகளால் வேறுபட்ட சிறந்த படைப்பாளர்களுடைய சிந்தனை விழுமியதாக அமையும் என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

இந்திரனை மன்னித்தது போலவே ஒழுக்கம் தவறியவளான அகலிகையினையும் அவர் மன்னிக்கும் மனப்பக்குவம் பெற்ற தவசீலராகக் காட்டப்பட்டுள்ளார் என்பதனை,

கௌதமர் : அகல்யா

அகல்யா : நான் அகல்யா வல்ல. கடினசித்தம் உடையவள். கற்சிலைக்கு ஒப்பானவள். அன்னிய புருஷனை இச்சித்தவள். புத்திரனைக் கொலை செய்யத் துணிந்தவள்.

கௌதமர் : நான் உன் கதையைக் கேட்க விரும்பவில்லை. நீ தவறிழைத்த மனைவி. வீழ்ச்சியடைந்தவள். உன் வேஷமே உன் கதையைச் சொல்கிறதே.

அகல்யா : சுவாமி, நான் இவ்வளவு நாட்களும் நரகத்தீயின் கொடுமையைச் சகித்துக் கொண்டிருந்தேன். நான் செய்த பாவச் செயல்களால் என் இருதயம் கல்லாகிவிட எங்கு செல்வது என்ன செல்யவது என்று அறியாது திரிந்தேன். ஒரு நாள் கடவுள் கிருபையால் என் இருதயம் பழைய நிலையை அடைந்தது...... நாதா? களங்கமுற்ற என்னை மன்னியுங்கள்.

சதானந்தன் : மன்னிப்பு! நம்பிக்கை துரோகியான பெண் மன்னிப்பளிக்கத் தகுதியற்றவள்.... மனைவியாயினும் சரி, பெற்ற தாயாயினும் சரி, தண்டனைக் குரியவள்.

கௌதமர் : சதானந்தா! கோபத்தைச் சாந்தப்படுத்து. நான் தண்டனையளிக்கத் தகுந்தவனா? நான் பாவம் செய்யாதவனா? நான் அறிவில்லாத மனிதன். கடமையைச் சரியாகச் செய்ய வகையறியாத நான் கடமையினின்றும் தவறிய பிறருக்குத் தண்டனையளிப்பவனா? பாக்கிய மற்ற அகல்யா! வா, நான் இதற்கு முன் உணர்ந்தறியாத ஒரு உணர்ச்சியை இன்று அடைகிறேன் வா

விஸ்வாமித்திரர்: நீர் இவ்வளவு உயர்ந்த மனப்பான்மை உடையவர், சகிப்புத் தன்மையுடையவர் என்று நான் இதுவரை அறியேன். நீர் உண்மையான மகாத்மா. நான் உமது முன்னிலையில் தலை குனிகின்றேன். ராஜரிஷி ஜனகரே! உம் வார்த்தை உண்மையென நான் இப்போது அறிந்தேன்.

வரத்தால் பிராமணியத்தை அடைந்தும் நான் உண்மையான பிராமணனல்ல கடமையில் உயர்ந்தவன்தான் உண்மையான பிராமணன்.

ஜனகர் : கௌதமருடைய சகவாசத்தால் வேசை ஒருத்தி குடும்ப ஸ்தீரியானாள். கொள்ளைக்காரனான சிரஞ்சீவி சாதுவனானன் கௌதமர் போற்றத் தகுந்தவர்.

அகல்யா : பிராணநாத : தங்கள் புண்ணியத்திற்கு முன் நான் கண்ணற்றவளாகி நிற்கிறேன். எனக்கு உதவி செய்யுங்கள்.

இவ்வாறு தன்னிடம் தன் தவறு உணர்ந்து மன்னிப்புக் கேட்ட அகலிகையை அவர் ஏற்றுக்கொண்டதே அவரது பெருமையைத் தெளிவு படுத்தும்.

அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரனைப் பொய்சொல்லச் செய்வதாக விஸ்வாமித்திரர் சபதம் செய்து இறுதியில் தோல்வியுற்றார் அல்லவா? இந்த நாடகத்திலும் கௌதமர் உள்ளத் திண்மையுடைய. தவசீலர் அல்லர் என மெய்பிக்கப் போவதாக நாடகத்தின் தொடக்கத்தில் சபதம் செய்கிறார் விஸ்வமித்திரர். அகலிகையிடமிருந்து பிரிந்து போய் தவ செய்யுங்கள் என கௌதமரை வஞ்சனையாக வெளியேற்றிய பின் இந்திரனை அனுப்பி அகலிகையைக் கற்பிழக்கச் செய்கின்றார். இதனால் கௌதமர் மனக்கொதிப்புடையவராகி சின்ந்து சாபமிட்டுத் தன் தவத்தின் பயனை இழப்பார் என எதிர்பார்த்து ஏமாற்ற மடைந்து தன் தோல்வியை ராஜரிஷியான ஜனகர் முன்னிலையில் விசுவாமித்திரர் ஒப்புக் கொள்வதாக நாடகத்தை முடித்துள்ளார் நாடக ஆசிரியர். தொடக்கமும் முடிவும் புராண மரபை ஒட்டியதாக அமைக்கபட்டு, பிற அகலிகை வரலாறுகளிலும் பெரிதும் மாறுபட்டிருப்பது இதன் தனித்தன்மையை காட்டுகின்றது.

கதையில்

அகல்யை

புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தனின் அகல்யை, சாபவிமோசனம் ஆகிய இரு கதைகளும் அகலிகையின் துயர வாழ்வினை இருவேறு கோணங்களில் நோக்கிப படைக்கப்பட்டவை. அகலிகை வரலாற்றினைப் படைப்பாளிகள் பலரும் தங்கள் தங்கள் மனோபாவத்திற்கேற்பத் தாங்கள் வாழ்ந்த காலகட்டத்தின் தாக்குதலுக்கு உட்பட்டவர்களாகப் பல வேறு கோணங்களில் அணுகியுள்ளதற்கான ஒரு விளக்கமாக புதுமைப்பித்தனின் இந்த இருகதைகளும் அமைகின்றன. ஒரே நிகழ்ச்சிலய ஒரு படைப்பாளியே இருவேறு கோணங்களில் அணுகியுள்ளதை வைத்துப் பார்க்கும்போது பல்வேறு வகையான படைப்புகள் உருவானதில் வியப்பதற்கு எதுவும் இல்லை என்ற உண்மை புலனாகும். சோக முடிவினைத் தமிழ்த் திரைப்பட ரசிகர்கள் விரும்பமாட்டார்கள் என்பதால் தமிழ்நாட்டில் திரையிட நல்ல முடிவும் அண்டை மாநிலமான கேரளத்தில் திரையிடக் கதைக்குப் பொருத்தமான சோக முடிவும் உடையதாக ஒரே திரைப்படத்தில் மாற்றம் செய்து வெளியிடுகின்றார்களல்லவா? சில புதினப் படைப்பாளிகள் தங்கள் படைப்புக்களின் மறுபதிப்புகளின் முடிவையும் சிலர் கதைப்போக்கையும் மாற்றம் செய்து வெளியிட்டிருப்பதும் காலப்போக்கில் அவர்கள் மனோபாவத்தின் மாற்றத்தால் ஏற்பட்ட விளைவுதானே?

1934 இல் ஊழியன் இதழில் வெளிவந்த **அகல்யை** பின்னர் நவயுகப் பிரசுலாயத்தினர் 1940 இல் வெளியிட்ட **புதுமைப்பித்தன் கதைகள்** என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. **சாபவிமோசனம்** 1943-இல் கலைமகள் இதழில் வெளிவந்தது. பின்னர் அதே ஆண்டின் இறுதியில் கலைமகள் காரியாலத்தினர் வெளியிட்ட

காஞ்சனை என்ற தொகுதியில் இடம் பெற்றுள்ளது. **சாபவிமோசனம்**, அளவில் **அகல்யை** கதையைவிட மும்மடங்கு பெரியது. **அகல்யை** கதைநிகழ்ச்சி ஒருநாள் எல்லைக்குள் நடந்து முடிவது. **சாபவிமோசனம்** பல ஆண்டுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

மூன்று பகுதிகளாக அமைந்துள்ள அகல்யை கதையின் முதற் பகுதியில் கௌதமரும் அகலிகையும் மனம் ஒத்தவர்களாக நடத்தும் இல்லற வாழ்வின் இனிமையினை விளக்கியுள்ளார்.

> "அவருக்கு வயது முப்பது, கறுத்து அடர்ந்த தாடி, அகன்று பிரகாசமான ஒளிவிடும் கண்கள், மெல்லிய உதடு, பரந்து விரிந்து திரண்ட மார்பு, ஒடுங்கிய வயிறு, எல்லாவற்றிலும் இயற்கையின் கனிவு பொங்கியது. மிருக அழகன்று - ஆளை மயக்காது, வசீகரிக்கும். அந்தக் கண்களில், அந்த உதடுகளில் ஒரு தெய்வீக ஒளி - தேஜஸ் - உள்ளத்தின் சாந்தியை எடுத்துக் காட்டிற்று.
>
> அவர் மனைவி - அவள் தான் அகல்யை. அவர் ஆணுக்கு இலட்சியம் என்றால், இவள் பெண் குலத்துக்கு வெற்றி. மருண்ட பார்வை. அவரைக் காணுந்தோறும் காதல் பொங்கும் கண்கள். அவரைத் தனது உள்ளத்தில் மட்டும் வைத்துவிடவில்லை. அவளது ஒவ்வொரு செயலும் அவரது இன்பதிற்காகவே. அதிலே அவளுக்கு ஓர் இன்பம்."

எனக்கௌதமரையும் அகலிகையினையும் அறிமுகம் செய்து வைத்துக் கதையைத் தொடங்குகின்றார். இளங்கோவடிகள் கோவலனையும் கண்ணகியையும் சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் அறிமுகம் செய்து வைப்பதை நினைவூட்டுவது போல அமைந்து இந்த அறிமுகம். கௌதமனை இளைஞனாகவும் அகலிகைக்கு ஏற்ற கணவனாகவும் இந்திரனுக்கு எந்த வகையிலும் குறையாத ஆண்மையும் அழகும் உள்ளவனாகவும் காட்டுகிறது. சிலர்

படைப்பினைப் போல அகலிகையின் இளமையையும் அழகினையும் அனுபவிக்கத் தகுதியற்ற வயதான துறவியல்லன் கௌதமன். முதல் பகுதியில் முக்கிய பாத்திரங்களின் அறிமுகம். இவ்வாறு புது நோக்கில் அமைந்துள்ளது.

ஒரு நாள் மாலையில் குடிசையின் வெளிமுற்றத்தில் கிரந்தத்தில் லயித்தவராக இருக்கிறார் கௌதமர். இடுப்பில் குடத்தோடு குடிசையை விட்டு வெளிவந்த அகலிகை ஆற்றுக்குக் குளிக்கத் தன்னோடு உடன்வரும்படி கௌதமரை அழைக்கிறாள். கிரந்தத்தில் கொஞ்சம் பாக்கி இருக்கிறது எனக்கூறி அவர் அவளை முன்னே செல்லுமாறு கூறுகின்றார். குடத்தைக் கீழே வைத்த அகலிகை அவரை அணைத்து அவர் நெற்றியில் அதரங்களைப் பதித்தபின் குடத்தை எடுத்துச் செல்கின்றாள். கணவன் தன் விருப்பப்படி உடன் வரவில்லை என்பதால் அவள் அவர் மீது கோபித்துக் கொள்ளவில்லை.

தனிமையில் ஆற்றில் நீந்தி விளையாடிக் குளிப்பதில் ஈடுபட்டிருந்த அகலிகையினை இந்திரன் எதிர்க்கரையிலிருந்து நோக்கியபடி இருப்பதை அவள் பார்க்கவில்லை. அவள் அழகில் மயங்கிய அவன் எப்படியேனும் அவளை அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு அவளை நெருங்க ஒரு பாறையில் இறங்குகின்றான். இந்தச் சப்தம் அவள் காதில்படத் திரும்பிப் பார்த்த அவள், அவன் முகத்திலும் கண்களிலும் நிலவிய மிருக இச்சையைப் புரிந்துகொண்டு அவனை வெறித்து ஒரு கோபப்பார்வை பார்க்கிறாள். அவளது கனிவான பார்வையை எதிர்பார்த்து வந்தவனுக்கு ஏமாற்றமாகப் போய் விடுகிறது.

ஒரு பாறையின் மறைவில் சென்று உடைகளை அணிந்து குடத்தில் தண்ணீருடன் புறப்பட்ட அவள், தன் கிரந்த ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு எதிரே வந்த கௌதமரைக் கண்டவுடன் குடத்தை நழுவ விட்டவளாக ஓடிச்சென்று அவர் மார்பில் விழுந்து கதறி அழுகிறாள். கௌதமர் அவளை அணைத்து, நடந்தது என்னவெனக் கேட்கிறார். நடந்ததைத் தெரிவித்த அவளைத் தேற்றிக்

குடிசைவரை கொண்டுவிட்டு வரவேண்டியதாகின்றது அவருக்கு. கணவனிடம் காதல் வயப்பட்ட கற்புடை மகளிரை பிற ஆடவர்கள் காமக்கண் கொண்டு நோக்கின் அத்தகைய மகளிர் மனதில் ஓர் அருவருப்பு ஏற்படும் என்ற புதிய உண்மையினை இந்த நிகழ்ச்சியால் கௌதமர், புரிந்து கொள்கிறார் என்ற விளக்கத்தோடு இரண்டாம் பகுதி முடிகின்றது.

டிடி. மீனாட்சி சுந்தரனாரின் அகல்யா குறுங்காவியத்திலும் அகலிகையும் கௌதமரும் இதேபோல மனம் ஒத்த காதலர்களாக வாழ்ந்து வருவதாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். குழந்தைப் பருவ விளையாட்டின் போதான பழைய காதல் நினைவுகளால் தனிமையில் தன்னிடம் இந்திரன் காமவெறியோடு நெருங்கிய நிகழ்ச்சியினை அவள் தன் அன்புக் கணவனிடமிருந்து மறைத்து விடுகிறாள். அவருக்குத் தன்மீது சந்தேகம் வந்துவிடுமோ என்ற பயத்தால் அவள் அந்த நிகழ்ச்சியை மறைத்ததே அவர்கள் வாழ்வில் விரிசல் ஏற்படக் காரணமாகின்றது. உண்மைக் காதலர்களுக்கிடையே அக வாழ்வு தொடர்பான நிகழ்ச்சிகளில் ஒளிவு மறைவுக்கு இடமில்லை என்ற அடிப்படையில் இக்கதையில் அகலிகையின் குணசித்திரத்தைப் புதுமைப்பித்தன் படைத்துள்ளார். பின்னர் இந்திரன் முனிவர் வேடத்தில் வந்து அகலிகையோடு உடல் உறவு கொண்டதைக் கௌதமர் தவறாகப் புரிந்து கொள்ளாமைக்கான அடித்தளமாக அமைந்து விடுகிறது இது.

இந்திரனின் அன்றைய நடத்தை அகலிகையின் உள்ளத்தில் பெரும் துயரத்தை ஏற்படுத்துகிறது. "உனக்காக எல்லோரும் குருடராக இருக்க முடியுமா?" என்பது போலக் கௌதமர் அவளைத் தேற்றுகின்றார். "ஆனால் ஆந்தையாகவா விழிக்க வேண்டும்?" என எதிர் வினாத் தொடுக்கிறாள் அகலிகை.

இரவு நெடுநேரம் தூக்கமின்றி அவர்கள் இருவரும் அன்று நடந்த நிகழ்ச்சி பற்றி விவாதித்தபடி இருந்த பின்னர் உறங்குகின்றனர்.

இந்திரன் எப்படியும் தன் காமவெறியினைத் தணித்துக் கொள்வது என்று கௌதமர் குடிசையைச் ,சுற்றித் திரிந்தபடியிருக்கின்றான். நடுநிசியில் கோழி மாதிரி கூவுகிறான். குடிசையினுள் அகலிகையினைத் தழுவியும் தழுவாமலும் உறங்கும் கௌதமர் அக்குரல் கேட்டதும் எழுந்து காலைக் கடன்களைக் கழிக்கக் குடிசையை விட்டு வெளியேறுகின்றார்.

"அன்று நெடுநேரம் தூங்காததனால் அகலிகைக்கு அயர்ந்த தூக்கம். பாதிக்கனவு, பாதித்தூக்கம். கணவனுடன் கொஞ்சித் தழுவி அவருடனேயே இருப்பது போல் கனவு. இந்திரன் பூனை போல மெதுவாக உள்ளே வருகின்றான். ஆடைகள் சற்று நெகிழ்ந்து உறங்கும் அபலையைப் பார்க்கிறான்.

ஒரு மிருகத்தின் வேட்கை அன்று பூர்த்தியாயிற்று. பாதிக்கனவு உறக்கத்திலிருந்து அகல்யை விழிக்கவில்லை. கணவர் என்று நினைத்துத் தழுவுகிறாள். ஓரளவு இயற்கையின் வெற்றி.

கணவனை முத்தமிடக் கண்களை விழிக்கிறாள்.

"ஐயோ, அந்தச் சண்டாளன்" - எல்லாம் சுழல்கிறது. ஒன்றும் அர்த்தமாகவில்லை. சொந்த வீட்டிற்குள் இவன் எப்படி ......?

பக்கத்தில் உள்ள தடியால் அவன் மண்டையில் அடித்து உதறித்தள்ளிவிட்டு ஒரு புறம் கிடந்து புரண்டு துடிக்கின்றாள்.

இந்திரனுக்குச் சுயஅறிவு வருகிறது. தன் பைத்தியகாரத்தனம், தன் மிருகத்தனமான கொடுமை!... அவன் உள்ளமே வெடித்துவிடும் போல் இருக்கிறது.

நதிக்குச் சென்ற கௌதமர் இன்னும் விடியாததைக் கண்டு ஏதோ சூது நடந்திருக்கிறது என விரைகிறார்."

குடிலில் நுழைந்த அவர் அகலிகை கிடந்த கோலத்தைக் கண்டு அவளை வாரி எடுக்கிறார். அருகில் குற்றத்தின் பாரமே உருவாக நிற்கும் இந்திரனைப் பார்த்து நிகழ்ந்ததை ஊகித்தவராக, "அப்பா இந்திரா! உலகத்துப் பெண்களைச் சற்றே சகோதரிகளாக நினைக்கக் கூடாதா?" எனக்கேட்டு விட்டுத் தன் அணைப்பிலிருந்த அகலிகையிடம், "கண்ணே அகல்யா! அந்தச் சமயத்தில் உனது உடலுமா உணர்ச்சியற்ற கல்லாய்ச் சமைந்துவிட்டது?" எனக்கேட்டு அவள் தலையைத் தடவிக் கொடுக்கிறார்.

கோபம் இல்லை! சாபம் இல்லை!

அமைதியாகச் சிந்தித்ததில் அவர் மனதில், "உணர்ச்சி, தேவனையும் மிருகமாக்கி விடுகின்றது. மனத்தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?" என்ற புதியதோர் உண்மை புலனாகின்றது.

> "இந்திரா போய்வா" என்றார் கௌதமர் அப்பொழுது அவர் மனத்தின் சாந்தி தெளிவாகத் தெரிந்தது.
>
> அகல்யை?
>
> அவள் உள்ளத்தில் நிகழ்ந்த ஊழியின் இறுதிக் கூத்து, கணவரின் சாந்திக்குப் பகைப்புலமாக அமைந்தது.

எனக் கதையினை முடித்துள்ளார் புதுமைப்பித்தன்,

சிறுகதையின் முதல் வாக்கியம் கதையின் அடித்தளம். அது சரிவர அமையவில்லையாயின் கதையின் கட்டுக்கோப்பு படுத்துவிடும். சிறுகதையின் இறுதி வாக்கியம் கதைக்கோபுரத்தின் மகுடகலசம். கதைக்கு உயிர்நிலையாக விளங்கி அதனை என்றும் உயிருடையதாக வாழ்விப்பது அது.

இக் கதையின் இறுதி வாக்கியம் ஒரு வினாக்குறியாக படிப்பவர் மனதில் தோன்றும்படியாக அமைந்துள்ளது.

இக்கதையினை மீண்டும் தொட்டுத் தொடரும் எண்ணம் புதுமைப்பித்தனுக்கு இக்கதை எழுதும் காலத்திலேயே இருந்திருக்கவேண்டும். அந்த எண்ணக் கரு பத்தாண்டு காலம் அவர் நெஞ்சில் வளர்ந்து **சாப விமோசனமாகப்** பிறந்துள்ளது.

சாப விமோசனத்தைப் போல இக்கதை பலரது திறனாய்வுக்கு உள்ளானதன்று. **'புதுமைப்பித்தன் சிறுகதைக் கலை'** என்ற தனது நூலில் தி. முருகரத்தினம் இக்கதை பற்றிய தனது விமர்சனத்தின் முடிவில் பின்வருமாறு மதிப்பிட்டுள்ளார்.

> "புதுமைப்பித்தன் கதையினை ஆழ்ந்து படிப்போருக்கு மேலும் ஒருண்மை புலப்படும். அதுதான் கதையிலமைந்த **உலகியல்பு**. இயற்கையிறந்த நிகழ்ச்சி கதையில் ஒன்றேனும் இடம் பெறவில்லை. "இந்திரன் கோழி மாதிரி கூவுகிறான்" கோழியாக வடிவெடுத்து வரவில்லை. "இந்திரன் பூனைபோல மெதுவாக உள்ளே வருகின்றான்". பூனையே ஆகிவரவில்லை. இந்திரன் அகல்யையை இந்திரனாகவே அணுகுகின்றான். கௌதமன் உருவம் தாங்கி அல்ல. காரிகை கல்லாகவில்லை. இயல்பு; முழுக்க முழுக்க உலக இயல்பு சிறுகதை யாசிரியரின் தலைசிறந்த பண்பொன்றை இங்கு காண்கின்றோம். இருபதாம் நூற்றாண்டின் இருபெரும் படைப்பிலக்கிலக்கியங்களான சிறுகதையும் நெடுங்கதையும் உலகியல்பை ஒட்டிச் செல்கின்ற காரணத்தாலேயே மக்களிலக்கியங்களாகத் திகழ்கின்றன........ அகல்யை கதையின் சிறப்புகளுள் இது முதன்மையானது.
>
> அகல்யை கதையின் அடுத்த சிறப்பு பெண்டிர் கற்பொழுக்கம் பற்றி அது ஒரு புதுவிளக்கம் தருவது; மனத்தூய்மையில் தான் கற்பு. "சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?"

> இவ்விளக்கத்தின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமே **சாபவிமோசனம்.** சாபவிமோசனத்தில்தான் ஆசிரியரின் கற்பனைச் சிறப்பையும் சிந்தனை வளத்தையும் காணமுடிகிறது. இரண்டையும் ஒப்பிட்டுக் கூறுவதானால் **அகல்யை** குளம் எனலாம். **சாபவிமோசனத்தை** ஆறு எனலாம்."

இயற்கையிறந்த நிகழ்ச்சிகள் ஒன்றேனும் இடம்பெறாததால் மட்டுமே இக்கதை தனிச் சிறப்புப் பெற்றதாகி விட முடியுமா? **கடவுளும் கந்தசாமி பிள்ளையும், ஞானக்குகை, காலனும் கிழவியும்** ஆகிய கதைகள் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளைக் கதைக்கருவாகக் கொண்டிருந்தும் சிறந்த கதைகளாகப் போற்றப்படுபவை தானே? கற்பு பற்றிய புதுமைப்பித்தன் கருத்தும் இக்கதையினைவிடத் தெளிவாகப் **பொன்னகரம்** கதையில் விளக்கப்பட்டுள்ளது. அகலிகை கதையினைப் புதுமைப் படைப்பிலக்கியம் ஆக்கியுள்ள இருபதாம் நூற்றாண்டுப் படைப்பாளர்களின் பிறபடைப்புகளோடு ஒப்பிட்டு இதனை மதிப்பீடு செய்வதே பொருத்தமானது.

இக்கதையின் தனிச்சிறப்பு கௌதமரின் பாத்திரப் படைப்பே. குணம் என்னும் குன்றேறி நின்ற அவரைக் கணநேரம் கூட அப்பண்பிலிருந்து தவறாதவராகப் படைத்துள்ளது புராண மரபிலான பாத்திரங்களை மேலும் உயர்ந்த பண்பினராகப் புதிய வார்ப்புகள் செய்யமுடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

இவ்வாறு பண்பால் உயர்த்தப்படும் புராண, காவிய நாயக நாயகிகள் பொதுமக்களிடையே வரவேற்பையும் பாராட்டையும் பெறுதல் அரிது. மேடை நாடகமாக இந்தக் கதையினை உருவாக்கியவர் இத்தகைய உயர்முத்திரைப் பதிப்புகள் மக்களிடையே எடுபாடாது என்ற காரணத்தாலேயே இந்திரன் வலையில் வீழ்ந்த அகலிகை, அவனிடம் தொடர்ந்து தனிமையில் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள் எனக் கேட்டுக் கொள்வதாகப் படைத்துள்ளார். அந்த மேடை நாடகத்திலே தான் மக்கள்

மனப்போக்கை ஒட்டிய உலகியற்கையைக் காண்கின்றோம். இது உயர்ந்த குறிக்கோளினை - கோவலன் இறந்த பின். மாதவி துறவு மேற்கொண்டது போன்ற - குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்ட கதை. இத்தகைய மனப்பான்மை மனித உணர்வுடையவர்களுக்கு வாய்ப்பது அரிது. அதனாலேயே இளங்கோ கண்ட மாதவியை பின்வந்த கூத்து மேடை நாடகப் படைப்பாளிகள் அந்த குறிக்கோள் உலகத்திலிருந்தும் இறக்கி மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய, பேராசையும் பொறாமையும் உள்ளத்தில் குடிகொண்டுள்ள மாதவியாகப் படைத்து மக்கள் இலக்கியமாக்கி வெற்றியும் கண்டுள்ளனர்.

புதுமைப்பித்தனது **அகல்யா** கதையும் ஏ.ஆர். ராசகோபால செட்டியாரது **அகலியை** நாடகமும் கிட்டத்தட்ட ஒரே காலகட்டத்தில் படைக்கப்பட்டவையே. என்றாலும் அவற்றிடையேயான வேறுபாடு கலைநுட்ப நோக்கிலான படைப்பு இருவேறு இலக்கியப் போக்குகள் தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றுவரை வழக்கில் உள்ளதைத் தெளிவுபடுத்துகின்றுது.

சாப விமோசனம்

புதுமைப்பித்தன்

"ராமாயண பரிச்சயமுள்ளவர்களுக்கு இந்தக் கதை பிடிபடாமல் (பிடிக்காமல் கூட) இருக்கலாம். அதை நான் பொருட்படுத்தவில்லை" என்ற சிறு முன்னுரையோடு கலைமகளில் வெளியான கதை **சாப விமோசனம்**. தன்னுடைய இக்கதையைப் படிக்கும் மரபு வழியின் மீது மதிப்பு வைக்கும் ஆன்மீகச் செல்வர்களிடமிருந்து தெய்வமாகப் போற்றப்படும் ராமனுக்கு இழிவு கற்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்ப்பு வரும் என்பதனை எதிர்பார்த்தே புதுமைப்பித்தன், கதைக்கு முன்னுரையாக இத்தகையதொரு அறிவிப்பைத் தந்தார் போலும். அவருடைய எதிர்பார்ப்பும் கணிப்பும் பொய்த்துவிடவில்லை. கதை வெளியான இதழுக்கு அடுத்த இதழிலேயே இத்தகைய படைப்பு மகாகவியான வால்மீகியின் இதிகாசத்திற்கு இழிவு உண்டாக்குவது என்ற எதிர்ப்புக் குரலும் எழுப்பப்பட்டது. குரல் கொடுத்தவர் மூதறிஞர் ராஜாஜி.

கலைமகளில் வெளியான **சாபவிமோசனம்** உள்ளிட்ட கதைகளை 1943-இல் கலைமகள் காரியாலத்தினர் **காஞ்சனை** என்ற தலைப்பில் ஒரு தொகுதியாக வெளியிட்டனர். அதற்கு "எச்சரிக்கை" என்ற தலைப்பில் எழுதியுள்ள முன்னுரையில் **சாபவிமோசனம்** கதையைப் பற்றிப் புதுமைப்பித்தன் சற்று விரிவாகவே பின்வருமாறு கூறியுள்ளார்.

"**காஞ்சனைக்குப்** பிறகு **சாப விமோசனம்** இதே மாதிரி* அவதிக்கு உள்ளாயிற்று. முக்கால்வாசிப்

---

* காஞ்சனை கதையைப் படித்த நண்பர் ஒருவர் புதுமைப்பித்தனிடம் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உண்டா எனக் கேட்டாராம். "பேயும் பிசாசும் இல்லை என்று தான் நம்புகிறேன். ஆனால் பயமாக இருக்கிறதே" என்ற புதிரான புதுமைப்பித்தன் பதிலால் திருப்தியடையாத அவர், அந்த கதைக்கு அர்த்தம் என்ன எனக் கேட்டபோது "சத்தியமாக எனக்குத் தெரியாது" எனக் கூறிய பதில் அந்த நண்பரைத் திருப்திப் படுத்தவில்லை.

பேருக்கு அந்தக் கதை பிடிக்கவில்லை. காரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. ஒரு விமரிசகர் "சென்று தேய்ந்திறுதல்" என்றார். ஆனால் இன்னும் ஒருவர் வால்மீகி கதையில் அகலிகை கல்லாக வில்லையென்றும் ஜனங்களுக்கு உண்மையை விட உண்மையின் மீதுள்ள பாசிதான் கண்களுக்குப் பளபளப்பாக இருக்கிறது என்றார். பாசி என்பதுதான் என்ன? மனப் பக்குவத்தின் ஒரு நிலைதானே அதுவும்? அப்படிப் பார்க்கப் போனால் ஜனக ராகங்களிலிருந்து ஜன்ய ராகங்கள் பிறப்பது எல்லாமே பாசிதானே? தொன்னைக்கு நெய்தான் ஆதாரம் என்று கருதுகின்றவர்கள்தாம், ஒரு குறிப்பிட்ட கோலவகையில் தான் எதுவும் அமைந்திருக்க முடியும் என்று நினைக்கின்றார்கள். வேறு, ஒரு விதமான கோலம் போட்டுக் காண்பிக்க முடியாது, கூடாது என்று கருதுகிறவர்கள் - இவர்கள் தத்துவ வாதிகள். உலக சிருஷ்டி இவர்களுடைய தத்துவங்களுக்குள் மட்டும் ஒடுங்கிவிட, வில்லை

நான் கதை எழுதுகிறவன். கதையிலே கல் உயிர்பெற்று மனிதத்தன்மை அடைந்து விடும்; மூட்டைப்பூச்சிகள் அபிவாதயே சொல்லும். அதற்கு நான் என்ன செய்யட்டும்? கதையுலகத்தின் நியதி அது. நீங்கள் கண்கூடாகக் காணும் உலகத்தில் மனிதன் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்க்கவில்லையா? மனிதன் கல்மாதிரி இருக்கும் போது கல்தான் சற்று மனிதன் மாதிரி இருந்து பார்க்கட்டுமே! தவிரவும் பழைய கதைகளை எடுத்துக்கொண்டு அதை இஷ்டமான கோணங்களிலெல்லாம் நின்றுகொண்டு பார்க்க எங்களுக்கு உரிமையுண்டு.

சாபவிமோசனத்தைப் பற்றிய வரையில் எனக்கு ஒரே ஒரு குறைதான் உண்டு. அதில் வசிஷ்டனையும்

கூனியையும் கூட்டிக் கொண்டு வர மறந்துபோனதுதான் அது. மற்றபடி யார் எப்படிக் கருதினாலும் ராமாயணக் கதையின் அமைதி முற்றும் பொருந்தித்தான் இருக்கிறது."

புதுமைப்பித்தன் தன்னுடைய வேறு எந்தக் கதைக்கும் இத்தகைய விரிவான விளக்கம் தரவில்லை. ராஜாஜி எதிர்ப்புக் குரலை மனதில் வைத்துக் கொண்டு அதற்குப் பதில் தருவதுபோல இந்த விளக்கம் தரப்பட்டதாகக் கொள்ளலாம்.

கடவுளர் தரும் வரங்களே கடவுளர்களுக்கு இறுதியில் பெரும் பிரச்னையாகிவிடுவதே பெரும்பாலான புராணங்களில் காணப்படுவது. ராமன் கால் துகள் பட்டுக் கல்லாகக் கிடந்த அகலிகை உயிர்ப்புடைய பெண்ணாக எழுவதும் கிட்டத்தட்ட ஒரு வரத்தைப் பெறுவது போன்றதே. அங்கு நிஷ்டை நீங்கிக் கோதமனும் வந்து சேர்கின்றான்.

தன்னை வணங்கி நின்றவளைப் பற்றி வியந்தவனாக ராமன் விசுவாமித்திரனைப் பார்க்கின்றான். ராமன் குறிப்புணர்ந்த விசுவாமித்திரன் "இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்" என அகலிகையின் வரலாற்றை எடுத்துக் கூறி முடிக்கின்றான். வரலாறு கேட்ட ராமன் நிலை சற்றுச் சங்கடமானதாக உள்ளதைப் பற்றியும் அப்பிரச்னைக்கு அவன் தீர்வு கண்டவிதம் பற்றியும் புதுமைப்பித்தன் கூறுவன ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை.

"ராமனுடைய கல்வி, தர்மக்கண் கொண்டு அவர்களைப் பார்த்தது. தெளிவின் ஒளிபூண்டது. அநுபவச் சாணையில் பட்டை பிடிக்காதது; வாழ்வின் சிக்கலின் ஒவ்வொரு நூலையும் பின்னலோடு பின்னல் ஒடியாமல் பார்த்த வசிஷ்டனுடைய போதனை. ஆனால் சிறுமை அறியாதது. புதுவழியில் துணிந்து போக அறிவுக்குத் தெம்பு கொடுப்பது.

உலகத்தின் தன்மை என்ன இப்படி விபரீதமாக முறுக்கேறி உறுத்துகிறது! மனசுக்கும் காரண சக்தியின்

நிதானத்திற்கும் கட்டுப்படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்காகப் பாத்திரத்தின் மீது தண்டனை? "அம்மா!" என்று சொல்லி அவள் காலில் விழுந்து வணங்குகின்றான் ராமன்."

அகலிகை படலத்தின் 25ஆம் பாடலின் கருத்தே இங்கே விரித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கோதிலாக் குணத்தான் ஆகிய அகலிகை வரலாற்றினை விசுவாமித்திரன் கூறக்கேட்ட ராமன் "அதன் பொருளெல்லாம் மனதுட் கொண்டான்" எனக் கம்பர் சுருக்கமாகச் சொன்னதன் விளக்கமாக மேற்கண்டவாறு ராமன் சிந்தனையையும் அந்தச் சிந்தனையின் முடிவில் பிரச்னைக்குத் தீர்வு காணச் சொல்லால் எதுவும் கூறாமல் அகலிகையின் காலில் விழுந்து வணங்கி செய்லால் தன் தீர்வை வெளிப்படுத்தும் விதமும் நுட்பமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ராமன் கருத்துணர்ந்த விசுவாமித்திரன் அகலிகையைக் கோதமனிடம் சேர்ப்பிக்கின்றான். கோதமனும் ஏற்றுக் கொள்கின்றான். இதிகாசக்கதை இவ்வளவில் முடிந்துவிடுகின்றது. இதனை மேலே தன் கற்பனைத் திறமையால் புதுமைப்பித்தன் தொடர்வது தனித்துவம் உடையது. இருவரும் பழைய குடிலைப் புதுப்பித்து அங்கு மீண்டும் வாழ்வைத் தொடங்கினர். ஆனால் அதில் முந்தைய மலர்ச்சியில்லை.

"அவர்கள் மனதில் பூரணமான கனிவு இருந்தது. ஆனால் இருவரும் இருவிதமான மனக்கோட்டைக்குள் இருந்து தவித்தார்கள்.

கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்பதே அகலிகையின் கவலை.

அகலிகைக்குத் தான் ஏற்றவனா என்பதே கோதமனின் கவலை.

சாலையோரத்தில் பூத்திருந்த மலர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்தன."

உட்பிரிவுற்ற உள்ளங்கள் செப்பின் புணர்ச்சிபோலக்

கூட்டினும் முழுவதுமாக இயைந்து கூடுதலில்லை என்ற வள்ளுவன் கூற்றைக் கற்றவைபோலும் அந்தச் சாலையோரத்து மலர்கள். சாபவிமோசனத்தின் முதற்பகுதியை இவ்வாறு தன் முத்திரையைப் பதித்து முடித்துள்ளார் புதுமைப்பித்தன். அகலிகை வரலாற்றினைத் தொட்டவர்கள் பலரும் இந்த இடத்திலேயே கதையினை முடித்துக் கொள்கின்றனர்.

மேலும் கதையை வளர்க்க இடமுள்ளது என்பதனைக் கம்பராமாயணத்தை முழுவதுமாக ஊன்றிப் படித்தவர்கள் உணரலாம். ஒரு விமரிசகர் குற்றம் சாட்டுவது போலப் புதுமைப்பித்தனது தமிழலக்கியப் பயிற்சி "நுனிப்புல் மேய்வாக" இருக்குமானால் சாபவிமோசனம் சாத்தியமில்லை.

அகல்யா கதையினை எழுதியபின் ஏற்பட்ட பத்தாண்டு எழுத்து அனுபவ முதிர்ச்சியும் உலகியல் நடப்புப் பற்றி வாழ்க்கையில் அடிபட்டுப் பெற்ற அனுபவமும் தொடர்ந்து தமிழிலக்கியத்தில் தோய்ந்த உணர்வுமே கதையினை மேலும் வ்ளர்க்கும் ஒருதனித் திறனை அவருக்குத் தந்தன. இந்தத் தொடர்ச்சியே அவருடைய "சொந்தச் சரக்கு". கடன் வாங்கியதோ தழுவியதோ இல்லை.

சிதைந்து போன தங்கள் குடிலை மட்டுமே அவர்களால் புதுப்பித்துக் கொள்ள முடிந்தது. விரிசல் விட்டுப்போன இதயங்களை இணைத்துக் கொள்ள இயலவில்லை. கோதமன் அகலிகை மீது பரிபூர்ண நம்பிக்கை வைத்தவனாகத் தர்ம விசாரத்தில் ஈடுபடுகின்றான். இந்திரன் மடிமீது அவள் கிடந்தால் கூட அவன் சந்தேகிக்க மாட்டான் எனக் கோதமன். மனமாற்றத்தைக் குறிப்பிடுகின்றார் புதுமைப்பித்தன். ஆனால் அகலிகையின் மனநிலை வேறு மாதிரியாக இருந்தது. உள்ளன்புடன் இல்லறக் கடமைகளை ஆற்றினாலும் அவள் மனதில் ஏறிய கல் அகவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி நடக்க விரும்பினாள். சூழ நிற்பவர்கள் அனைவருமே இந்திரர்களாகத் தென்பட்டார்கள். பழைய பேச்சும் விளையாட்டும் விடைபெற்றுக் கொள்ள ஒவ்வொரு

வார்த்தையையும் நான்கு கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்த்த பிறகே பேசுவாள். அதிதிகளாக வரும் முனிபுங்கவர்களைக் கூட ஏறிட்டுப் பார்க்காமல் கூசியவளாக இருந்தாள்.

கோதமனுடைய மனதில் அகலிகை மாசற்றவளாகவே உலாவினாள். சாபத்தீயை எழுப்பிய கோபம் தன்னை மாசுபடுத்தி விட்டது எனக்கருதிய அவன் அவளைத் தீண்டத் தான் அருகதை அற்றவன் என்றே கருதி ஒதுங்கியிருந்து தனியே தர்ம விசாரத்தில் காலத்தை கடத்தினான்.

இவர்களுடைய இந்த மனக் கலக்கத்திற்கும் துயருக்கும் மருந்தாக அமைந்தது சீதையும் ராமனும் அவ்வப்போது அவர்கள் குடிலுக்கு வருகை தந்தது என்பதனை,

> "அவதாரக் குழந்தை, கோதமன் மனசில் லக்ஷ்ய வாலிபனாக உருவாகித் தோன்றினான். அவனது சிரிப்பும் விளையாட்டுமே தர்ம சாஸ்திரத்தின் தூண்டா விளக்குகளாகச் சாயனம் (வியாக்கியானம்) பண்ணின. அந்த இளம் தம்பதிகளின் பந்தந்தான் என்ன? அது கோதமனுக்கு தனது அந்தக் காலத்து வாழ்வை ஞாபகப்படுத்தும்.
>
> அகலிகையின் மனப்பாரத்தை நீக்க வந்த மாடப்புறா சீதை. அவளது பேச்சும் சிரிப்பும், தன் மீதுள்ள கறையைத் தேய்த்துக் கழுவுவனபோல் இருந்தன அகலிகைக்கு. அவள் வரும் போதுதான் அகலிகையின் அதரங்கள் புன்சிரிப்பால் நெளியும். கண்களில் உல்லாசம் உதயவொளி காட்டும்."

உலகிலிருந்து ஒதுங்கியவளாக இருந்து வந்த அகலிகை இந்த நட்பின் பிணைப்பால் ராமன் பட்டாபிஷேக விழாவின்போது அயோத்திக்கு வருவதாக ஒபபுக் கொண்டிருந்தாள். இடையே அயோத்தி அரண்மனையில் ஏற்பட்ட உணர்ச்சிச் சுழிப்புப் புயலின் வலிமை வேகத்தால் ராமனும் சீதையும் வனம் புகவேண்டியதாயிற்று.

அந்தப் புயல் கோதமன் குடிலையும் விட்டுவைக்கவில்லை. அயோத்தியில் வாழப் பிடிக்காமல் அந்தத் தம்பதியினர் மகன் சதானந்தன் வாழும் மிதிலைக்குச் சென்று சேருகின்றனர் என முடிகிறது பகுதி இரண்டு.

மிதிலை வாழ்வைச் சித்திரிப்பது பகுதி மூன்று.

தன் வாழ்வில் நிகழ்ந்துவிட்ட அவலம் அங்கும் தன்னைத் தொடர்ந்து வரும் என அகலிகை எதிர்பார்க்கவில்லை. கங்கையில் அதிகாலையில் குளித்துவிட்டுத் திரும்பிய அவளைப் பற்றி ரிஷிபத்தினிகள் அவள் காதுபட அபவாதம் பேசியது. கோதமன் சாபத்தைவிடக் கடுமையாகச் சுட்டது. அவளது அமைதியின்மை கோதமன் மனதிலும் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. ஜனகனது தத்துவ விசாரணை சபை நிகழ்ச்சிகள் அவன் மனத்திற்குச் சாந்தி அளிக்கவில்லை. "தீர்த்தயாத்திரை செய்தால் என்ன?" என்று கேட்டாள் அகலிகை. அவன் அதிலே தனக்கு அங்கிருந்து விடுதலை கிடைப்பதாக மகிழ்ந்து அகலிகை பின்தொடர வடக்கு நோக்கிப் பயணமானான். பெற்றோர் பிரிவு மகன் சதானந்தன் மனதை தகித்தது.

* * *

காலவெள்ளத்தில் பதினான்கு ஆண்டுகள் கலந்து மறைந்தன.

மிதிலை மண்ணைவிட்டுப் புறப்பட்ட அகலிகையும் கோதமனும் இமய முதல் குமரிவரையான தங்கள் தீர்த்த யாத்திரையை முடித்துக் கொண்டு மீண்டும் சரயூ கரைக்கே திரும்புகின்றனர். பழைய குடில் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. இருவரும் ராமனும் சீதையும் வரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்தபடி காத்திருக்கின்றனர்.

ஒருநாள் அதிகாலையில் நீராடச் சென்றுகொண்டிருந்த அகலிகை தன்னெதிரில் தனக்கு முன்னே நீராடித் திரும்புபவள் தன்னை அடையாளங் கண்டு கொண்டு தன் காலில் வந்து விழுந்தபோது வியப்புக்கு உள்ளாகின்றாள்.

அவள் கைகேயி என்று அறிந்ததும் அரசபோகத்தைத் துறந்து இப்படி மாறிவிட்டது அகலிகைக்குப் புதிராகத் தோன்றுகின்றது. ஆற்றுதலுக்கும் தேற்றுதலுக்கும் யாருமற்றவளாகப் பெரும்பழிச் சுமையைத் தாங்கி நிற்கும் கைகேயி, தன்னைப் போலப் பழிக்கு ஆளான அகலிகை தன்னைப் புரிந்து கொள்வாள் என்ற நம்பிக்கையில் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறாள்.

பரதன் தன் மனதில் தனக்கு இடந்தராமல் வைராக்கிய சிந்தையுடையவனாக இருக்கிறான் என்ற தன் மனக்குறையைக் கைகேயி அகலிகையிடம் எடுத்துக் கூறுகிறாள். குறித்தகாலக் கெடுவில் ராமன் திரும்பாவிடில் அவன் எரியில் விழுவதற்காக செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகள் தன் மனதை மேலும் வேதனைப் படுத்துவதாகக் கூறுகின்றாள். வசிட்டரைக் கொண்டாவது அவன் முயற்சியைத் தடை செய்யக் கூடாதோ எனக்கேட்ட அகலிகைக்கு, "பரதன் தருமத்துக்குத்தான் க்ட்டுப்படுவான்; வசிட்டருக்குக் கட்டுப்படமாட்டான்" எனப் பதிலிறுக்கிறாள் கைகேயி. "மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்துக்குச் சத்துரு" எனக் கொதிப்புடன் கூறிய அகலிகை, பரதன் மனதை மாற்றலாம் என்ற நம்பிக்கையில் கோதமனைப் பரதனுக்கு அறிவுரை கூற அனுப்பிவைக்கிறாள். அதனால் பலன் ஏதும் விளையவில்லை. நல்ல காலமாக அனுமன் தூதாக வந்து நெருப்பை அவிக்கின்றான். சோகத்தில் மூழ்கியிருந்த அயோத்தியில் இன்ப வெறி தாண்டவமாடுகிறது. அங்கு தனக்கு வேலையில்லை என்று கோதமன் குடிலுக்கே திரும்பி விடுகின்றான்.

இந்தக் கதையின் ஓட்டத்திற்கு ஒரு தடைக்கல்போல கைகேயி பாத்திரத்தை நுழைத்திருப்பதாகத் தோன்றலாம். கைகேயியை அறிமுகப் படுத்தாமலேயே கதையினை முடிக்கலாம். அதனால் கதையின் - அகலிகை கதையின் - கட்டுக்கோப்பிற்கு எத்தகைய குறையும் ஏற்பட்டிருக்காது. அவ்வாறு முடித்திருப்பின் கதை மேலும் நல்ல கட்டுக்கோப்புடையதாகவும் அமைந்திருக்கும்.

பின் ஏன் இடைப்பிறவரல்?

வஞ்சனையாகப் பெறப்படும் வெற்றிகளுக்கெல்லாம் பின்னர் அதற்கு உரிய நியாயமான விலை தரப்படவேண்டி வரும் என்பது உலக நியதி.

அகலிகை ராமன் கால் துகள்பட்டு உயிர்த்தெழுந்த பின் அவளோடு மீண்டும் இல்லறத்தைத் தொடங்கிய கோதமன் அவன் அகலிகையை மணந்த அந்த நாள் பற்றிய சிந்தனையில் ஆழ்கின்றான். அவளிடம் அப்போது தான் காட்டிய ஆசையும் அன்பும் போலியானவையா்க அவனுக்குத் தோன்றுகின்றன. பசுவை வலம் வந்து ஏமாற்றிப் பிறருக்கு இல்லாமல் பறித்து வந்தது தானே அவளை அடைந்ததான அந்த வெற்றி என்ற எண்ணம் இப்போது அவன் மனதைச் சுடுகிறது எனப்பழைய நிகழ்ச்சியைப் புதுமைப்பித்தன் குறிப்பிடுகின்றார்.

பிற படைப்பாளர்களைப் போல கோதமன் அகலிகையை மனைவியாகப் பெற்ற வரலாற்றைப் புதுமைப்பித்தன் ஆதியோடு அந்தமாகக் கூறவில்லை. சாபவிமோசனத்திலான மேற்கண்ட ஒரு சிறுகுறிப்பினைக் காரணம் கருதியே இடையே தந்தவராதல் வேண்டும். நியாயமான முறையில் நேர்மையாகப் பெறப்படாத வெற்றி பின்னர் வாழ்நாள் முழுவதும் மனதைச் சுட்டபடிதானே இருக்கும்?

தசரதன் ராமனுக்கு அரசை நல்க முற்பட்ட போது அந்த அரசு முறைப்படி பரதனுக்கு உரியது என்ற எண்ணம் இல்லாதிருந்திருக்காது. ராமனும், பரதனும் வேண்டுமானால் அதனை அறியாதவர்களாகலாம். ராமன் கைகேயியின் அணைப்பிலே வளரத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தவன் கூடத் தசரதனே ஆகலாம். பரதனும் அவன் தம்பியும் இல்லாதபோது ராமனுக்கு முடிசூட்ட எண்ணிய எண்ணமே அவன் மனதில் வளர்ந்து வந்த திட்டத்தை வெளிப்படுத்துகிறது. எப்படியோ ராமனை அரசுக்கட்டிலில் அமர்த்திவிடவேண்டும் என்ற எண்ணத்தில் தசரதன் மேற்கொண்ட குறுக்குவழி முயற்சிக்கு அவன் உயிரை விலையாகத் தரவேண்டியதாயிற்று. ராமன் காடாள வேண்டியதாயிற்று.

இந்த இரு நிகழ்ச்சிகளுக்குமிடையேயான ஒற்றுமையைக் வஞ்சக வழி இறுதியில் துன்பத்தில் கொண்டு சேர்க்கும் என்ற உண்மையை - குறிப்பாகக் காட்டவே கைகேயியை அறிமுகப்படுத்தினரோ என எண்ண இடமுள்ளது. சாப விமோசனம் பற்றி காஞ்சனை முன்னுரையில் வசிஷ்டனையும் கூனியையும் இந்தக் கதையில் நுழைக்க மறந்து போனது தனக்கு மனக்குறையாக உள்ளது எனக் குறிப்பிட்டிருப்பது இந்த எண்ணத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது. மறந்து போனது என்றதால் சாபவிமோசனம் பற்றி நீண்டகாலம் சிந்தித்தபடியே இருந்திருப்பார் என்ற குறிப்பையும் தருகின்றது. அகலிகை பாத்திரத்தைப் போலவே கைகேயி பாத்திரத்தையும் மற்றவர்கள் யாரும் பாராத புதியகோணத்தில் பார்த்துள்ளது அகலிகை கதையிடையேயான இந்த நுழைப்பைப் பெருங்குறையாகக் கருத இடமில்லாது செய்துவிடுகின்றது.

பாவப்பட்டவர்கள், வீண்பழிக்கு ஆளானவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரைப் பரிவோடு அணுகுவது புதுமைப்பித்தன் கதைகளில் பொதுவாகக் காணப்படுவது. அகலிகையைப் போல, சீதையைப் போல கைகேயியும் வீண்பழிக்கு ஆளானவள் என்ற பொதுமை நோக்கில் அவளுடைய மன விரக்தியையும் எடுத்துக் காட்ட அவள் பாத்திரத்தை இடையே நுழைந்திருக்கலாம்.

வசிட்டன் என்றோ கனவு கண்ட ராமராஜ்யக் கனவு பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் பலித்தது. ராமன் முடிசூடிக் கொண்டான். அயோத்தியில் ஆரவாரம் அடங்கிய பின் ராமனும் சீதையும் அகலிகை எதிர்பார்த்தது போலவே அவளைக் காண வருகின்றனர்.

> "ரதத்தை விட்டிறங்கிய ராமனது நெற்றியில் அநுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது. சீதையின் பொலிவு அநுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயமும் மோக்ஷ லாகிரியை ஊட்டியது.

ராமனை அழைத்துக் கொண்டு கோதமன் வெளியே உலாவச் சென்று விட்டான்.

தன் கருப்பையில் கிடந்த வளர்ந்த குழந்தையால் சுரக்கும் ஒரு பரிவுடன் அகலிகை சீதையை உள்ளே அழைத்துச் சென்றாள். இருவரும் புன்சிரிப்புடன் உட்கார்ந்திருந்தார்கள்.

ராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. ராமனுடன் சேர்ந்து விட்ட பிறகு துன்பத்திற்கு அவளிடம் இடம் ஏது?

அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள்

அகலிகை துடித்துவிட்டாள்.

"அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?" என்று கேட்டாள்.

"அவர் கேட்டார்; நான் செய்தேன்" என்றாள் சீதை அமைதியாக.

"அவன் கேட்டானா?" என்று கத்தினாள் அகலிகை. அவள் மனசில் கண்ணகி வெறி தாண்டவ மாடியது."

தனக்கு ஒரு நீதி; சீதைக்கு ஒரு நீதி என ராமன் தர்மநியாயத்தையே ஏமாற்றுக்கு உள்ளாக்கியதில் தான் அவளுக்கு அத்தனை ஆத்திரம். உலகத்துக்கு நிருபிக்க வேண்டாமா எனக்கேட்ட சீதைக்கு உள்ளத்திற்கு தெரிந்தால் போதாதா என எதிர் வினாத் தொடுக்கிறாள் அகலிகை.

வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

அரண்மனைக்குப் போவதற்காகப் புறப்பட்ட சீதையை வழியனுப்ப அகலிகை வெளியே வரவில்லை. வந்த விருந்தாளிகளை வரவேற்பது போலவே வழியனுப்புவதும் இல்லற தர்மம். அகலிகையின் இச்செயல் ராமன் மனதைச் சுட்டது.

அகலிகையின் இந்தப் புறக்கணிப்பு கோதமனுக்குப் புதிராயிருந்தது. அவள் மனச் சுமையை நீக்கிப் பழைய பந்தத்தை வருவித்தால் அவள் மனம் தவிப்பிலிருந்து விடுபடும் என நினைத்தவனாகக் குடிலில் நுழைந்த அவன் அகலிகையை அணைத்தபோது அவள் அவனைக் கோதமன் உருவில் வந்த இந்திரனாகக் கருதினாள். அவள் நெஞ்சு கல்லாய் இறுகியது. கோதமன் கைக்குள் சிக்கிக் கிடந்தது ஒரு கற்சிலை.

தன்னால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்ற விரக்தியால் அவன் இமயமலையை நோக்கித் துறவியாக வைரம் பாய்ந்த நெஞ்சுடன் நடக்கத் தொடங்கினான் எனக் கதையை முடித்துள்ளார் புதுமைப்பித்தன்.

அதன்பின் அகலிகை என்னவானாள் என்பதற்கான பதில் கதையில் இல்லை.

சாபங்களும் பின் அதற்கான விமோசனங்களும், நரகில் வீழ்ச்சியும் பின் மீட்பும், பாவங்களும் பிராயச்சித்தங்களும் தான் மனித குலத்திற்கு விதிக்கப்பட்டுள்ளவை. இந்த நிலைத்த உண்மையை மீண்டும் நிலைநாட்டும் புதுமைப் படைப்புகளுள் ஒன்று இக்கதை. நமது பண்டைய இதிகாசங்களை அழியாமல் தாங்கி வாழவ்வைக்கும் புதிய விழுதுகளாக விளங்குபவை இத்தகைய புரட்சிப் படைப்புக்களே.

காஞ்சனை தொகுதியினைப் படித்திருக்கிறீர்களா? என்ற தனது நூலில் அறிமுகப்படுத்தும் க.நா. சுப்ரமணியம் **சாபவிமோசனம்** பற்றி.

> "அற்புதமான கதை; அற்புதமான உருவத்தில் விழுந்திருக்கிறது. இந்தத் தலைமுறையின் சிறந்த சிறுகதைகளில் அது ஒன்று என்பது தான் என் அபிப்பிராயம். அது வெளிவந்ததிலிருந்து இன்றுவரை அந்தக் கதையை மட்டும் நான் இருபது தரமாவது படித்திருப்பேன். படிக்கும் தோறும் படிக்கும் தோறும் புதிது புதிதாக இன்பம் தரும் கதை அது."

என விமர்சித்திருப்பதே இதன் இலக்கியத் தரத்தினை நிலை நிறுத்துவதாகும்.

இலக்கியத் தரத்தில் சிறந்ததாக மதிக்கப்படும் இக்கதை புதுமைப்பித்தன் பின்னாளில் தன் முற்போக்குச் சிந்தனைகளைக் கைவிட்டவராக உலகியல் நியதிக்கு அடிமை யாகிவிட்டார் என்பதற்கு நிரூபணமாக விளங்குகிறது என **அகல்யா**வையும் **சபாவிமோசனத்**தையும் ஒப்பிட்டு மதிப்பிட்டுள்ளார் ரகுநாதன்.*

ரகுநாதனுடைய இந்த வாதம் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடியதா?

அகல்யா கதையில் உடலால் களங்கப்பட்டவளை, "மனத் தூய்மையில் தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?" எனக் கோதமன் மன்னித்து ஏற்றுக் கொண்டதாகப் படைத்திருப்பது முற்போக்குச் சிந்தனையே. "**சாப விமோசன**"த்தில் ரகுநாதன் குறிப்பிடுவதுபோல "சாபத்திற்குத் தான் விமோசனம் பாபத்திற்கில்லையே" என்று மனம் குமைந்து அகலி கையை மீண்டும் கல்லாக்கினார் என்பதற்கான ஆதாரம் இல்லை. கல்லாகக் கிடந்த தன்னைப் பெண்ணாக்கிய ராமன் புறவாழ்க்கையில் காட்டில் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கும் பட்டங்கட்டி நாட்டொரு நீதியும் காட்டொரு நீதியுமாக நடந்து கொண்டது போலவே அகவாழ்விலும் மாசுபட்ட தனக்கு வாழ்வளித்து காட்டில் ஒரு நீதியும் உலகத்தாருக்காக மாசுபடாத சீதையை தீக்குளிக்க வைத்து நாட்டில் ஒரு நீதியுமாக நடந்து கொண்டான் என்பதால் அவன் மீது கொண்ட கோபத்தால் அவன் தந்த வரத்தால் தான் பெற்ற புத்துணர்வை மீண்டும் அடியோடு இழந்துவிட்டாள் எனப்படைத்துள்ளார் எனக்கொள்வதே பொருந்தும். ஆண் வர்க்கத்தின் அநீதிக்கு எதிராக முதன் முதல் குரல் கொடுத்த பெண்ணாக அகலிகையை படைத்திருப்பது எவ்வகையில் பிற்போக்குச் சிந்தனையாகும்?

* திருச்சி வானொலி நிலையத்திலிருந்து 25.6.78 ஒலிபரப்பான "இலக்கியச் சிந்தனைகள்" தொடரில் புதுமைப்பித்தன் "வாழ்வும் எழுத்தும்" என்ற தலைப்பில் சுந்தர ராமசாமியின் கேள்விக்கு ரகுநாதன் அளித்த பதில்

அகலிகை

எம்.வி. வெங்கடராம்

இந்த நூற்றாண்டின் படைப்பாளிகளைப் போலவே இதிகாச புராண காலப் படைப்பாளர்களும் புதுப்புதுக் கோணங்களில் ஒரே நிகழ்ச்சியை அணுகியுள்ளனர் என்பது வியப்புக்குரியதே. இதிகாசக் கதைகளை மொழிபெயர்த்தவர்கள் தங்கள் மொழிக்கும் பண்பாட்டுக்கும் ஏற்ப புதுமை செய்துள்ளனர் என்பதற்குக் கம்பனும் துளசிதாசனும் ராமாயணத்தை அணுகியுள்ள விதமே சிறந்த சான்றாக உள்ளது.

அகலிகை கதையும் இதிகாச காலத்திலேயே வேறு வேறு கோலங்கொண்டுள்ளது என்பதனை ராமாயண வரலாற்றிலும் மாறுபட்டதாகப் பாரதத்தில் காணப்படும் அகலிகை வரலாறு கொண்டு அறியலாம். இந்த நூற்றாண்டுப் படைப்பாளர்களில் பலரும் ராமாயண வரலாற்றை அடிப்படையாக வைத்து அகலிகை வரலாற்றைக் காவியமாக, நாடகமாக, சிறு கதையாகப் படைத்திருக்கவும் எம்.வி. வெங்கடராம் **பாரதப் பெண்மணிகள்** என்ற தன் நூலில் பாரதத்தில் வரும் அகலிகை வரலாற்றைத் தன் மனோபாவத்திற்கு ஏற்ப எப்படிக் கதையாக்கியுள்ளார் என்பதனைப் பார்ப்போம்.

மகாபாரதத் தமிழ் மொழிபெயர்ப்பில் ஆறுபக்க அளவினதான இக்கதை சாந்தி பர்வத்தின் இருநூற்றெழுபத்திரண்டாவது அத்தியாயமாக அமைந்துள்ளது. தர்மருக்கு மோக்ஷ தர்மத்தை விளக்குவதற்காகப் பீஷ்மர் கூறும் உபகதைகளுள் இதுவும் ஒன்று. காரியத்தை ஆராய்ந்து செய்யும் விஷயத்திற்கு உதாரணமாக கௌதமனின் மகனான சிரகாரியின் கதையினைப் பீஷ்மர் தர்மருக்குக் கூறுகின்றார். இக்கதையின்

தலைமைப் பாத்திரம் அகலிகையின் மகனான சிரகாரியே. எனினும் கௌதமன், அகலிகை, இந்திரன் ஆகிய மூவரின் வாழ்வோடும் தொடர்புடையதான அவல நிகழ்ச்சி சிரகாரி பற்றிய கதையின் பின்புலமாக உள்ளது.

அகலிகை இந்திரன் காமத்திற்குப் பலியாவதை மிகச் சுருக்கமாக முன்னுரைபோல் தந்தபின் அதன்பின் விளைவுகளையே விரிவாகப் புனைந்துள்ளார். அகலிகை இந்திரன் இச்சைக்கு இணங்கித் தன் கற்பைப் பலிகொடுத்தாள் என அறிந்த கௌதமன் கோபத்தால் கொதித்தவனாக இந்திரனைச் சபித்தபின் தன் மகன் சிரகாரியிடம் கோடலியினைத் தந்து அகலிகையின் தலையை வெட்டி வீழ்த்தும்படி கட்டளையிட்டவனாகக் காட்டகத்தே செல்கின்றான்.

தந்தையின் இந்தக் கட்டளைக்கான காரணத்தை அறியாத சிரகாரி வழக்கம்போலச் சோம்பலின் பிடியில் சிக்குண்டவனாகத் தூங்கி எழுந்து தன் தாயிருக்கும் குடிலை அடைகின்றான். தாயிடம் தான் தூக்கத்தில் கெட்ட கனவு ஒன்று கண்டதாகக் கூறுகின்றான். தந்தையின் ஆணையினைச் சிரகாரி கனவெனக் கூறியதன் பின்னணியில் உள்ள உண்மையைப் புரிந்து கொண்டாள் அகலிகை. தன் கணவன் தான் இந்திரன் காமத்திற்கு பலியானதின் உண்மையைப் புரிந்து கொள்ளாமல் போக நேர்ந்ததே என வேதனைப்பட்டாள் அவள். சிரகாரியிடம் வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியினால் அகலிகை உடனே அந்த ஆணையை நிறைவேற்றும்படி வேண்டுகிறாள்.

"அப்பா ஆத்திரப்படுகிறார்; நீ அவசரப்படுகிறாய். என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளாமல் இந்தக் கொடிய செயலை நான் எப்படிச் செய்வது?" எனக்கேட்டு அவள் வேண்டுகோளை மறுத்துவிடுகின்றான் சிரகாரி.

பொய்யுடல் புனைந்த பாவி தன் கற்பைச் சூறையாடியதை ஒரு தாய் எப்படி மகளிடம் எடுத்துரைக்க முடியும்?

அகலிகையின் மௌனத்தின் காரணம் புரியாத சிரகாரி காலைக்கடன் கழித்து வருவதாகக் கூறி ஆற்றங்கரைக்குச் செல்கிறான்.

❈ ❈ ❈

ஆற்றங்கரை நோக்கிச் செல்லும் சிரகாரி தாய் தந்தையரிடையான பூசலின் உண்மைக் காரணம் என்னவாயிருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தவனாக இருக்கின்றான்.

உடலைப் போர்த்தபடி இந்திரன் அவன் எதிரே வருகிறான். இந்திரன் செயலில் வியப்படைந்த அவன் காலை வெயில் புழுக்கும் அந்த வேளையில் இந்திரனிடம் உடலைப் போர்த்தியவனாக வரும் காரணத்தை வினவுகின்றான்.

எம்.வி. வெங்கடராம் அகலிகை வரலாற்றில் வேறு எவரும் கையாளாத உத்தியைப் புகுத்தி அகலிகை கற்பிழக்க நேர்ந்த விதத்தை இந்திரன் வாயிலாகவே வெளிப்படுத்துகிறார்.

> "சிரகாரி, உடலை மூடிக்கொள்ளும் நிலையில் என்னை வைத்துவிட்டார் உன் தந்தையார்.
>
> "என் தந்தையார் வெயிலுக்கு உடம்பைப் போர்த்துக் கொள்ளச் சொன்னாரா?"
>
> "இல்லை! நேற்று நான் அவர் அதிதியாக இருந்தேன்"
>
> "அதிதிக்கு அவர் போர்வை பரிசளித்தாராக்கும்"
>
> "இல்லை. உன்னிடம் சொல்லவே எனக்கு பயமாக இருக்கிறது."

கேலியும் கிண்டலும் கலந்த சிரகாரியின் வினாக்கள் அவன் எதிலும் அவசரப்படாமல் பொறுமை காப்பவன் என்பதற்கேற்ற நல்ல குணசித்திரமாக அமைந்துள்ளது.

சிரகாரி இந்திரனுக்கு அபயம் அளிப்பதாக உறுதி கூறுகின்றான்.

இந்திரன் அகலிகையினை அடைவதற்கான போட்டியில் தான் தோற்றதையும் கௌதமன் குறுக்கு வழியில் வென்றதுமான பழைய நிகழ்ச்சியிலிருந்து கதையைத் தொடங்க முற்பட்டபோது "இந்தப் பழைய கதை எனக்குத் தெரியும்! அதற்கு இப்போது என்ன?" எனக் கேட்கிறான் சிரகாரி.

சிரகாரி இந்திரன், சந்திப்பு பாரதக் கதையில் இடம் பெறவில்லை. எனினும் படிப்பவர்களுக்கு கௌதமன் ஆணையும் சிரகாரியின் தயக்கமும் புதிராக இருக்கக் கூடாது என்ற காரணத்தால் பழைய புராண நிகழ்ச்சியை இவர்களது உரையாடல் வாயிலாகத் தந்துள்ளார் கதையாசிரியர்.

கௌதமன் ஆசிரமத்தில் நடந்த அடாத செயலை ஆசிரியர் இந்திரன் வாயிலாக வெளிப்படுத்துவது வழக்கு மன்றத்தில் குற்றவாளி ஒருவன் தரும் ஒப்புதல் வாக்கு மூலத்தை ஒத்ததாக அமைந்திருப்பது இக்கதையின் புதுமை. இங்கு ராமாயணக் கதையின் மூலத்தை மேற்கொள்ளாமல் பாரதக் கதையில் மிகச் சுருக்கமாக சிரகாரியிடம் மனைவியை கொல்லும்படி ஆணையிட்டபின் அதன் கொடுமையை நினைத்து மனம் மாறிய கௌதமன் சிந்தனையாகக் கூறப்பட்டுள்ள பகுதியை இந்திரன் சொற்களால் விளக்கமாக எடுத்துரைத்துரைக்கப் பட்டுள்ளது.

> "சிரகாரி! நீ பிரமச்சாரி! மன்மதன் கணைகளுக்கு நீ இன்னமும் இலக்காகவில்லை.
>
> ஆகையால் சுளுவாகப் பேசிவிட்டாய். அகலிகையை இழந்ததால் நான் தவித்த தவிப்பை உன்னால் கற்பனை செய்ய முடியவில்லை."
>
> "நீ தவித்திருக்கலாம். அது அர்த்தமற்ற தவிப்பு. அக்கிரமமானது. இந்திராணியும் அப்சரசுகளும் உன் இச்சையின் ஏவலுக்குக் காத்திருக்க, நீ ரிஷிபத்தினியை எண்ணி ஏங்கியது அநீதம்".

"நீதமோ, அநீதமோ, நான் தவித்தேன். என் மனையை அலங்கரித்து, எனக்குச் சுகம் அளிக்க வேண்டியவள் ஆசிரமத்தில் ரிஷிபத்தினியாக இருக்கிறாள் என்ற நினைப்பு என்னைப் பொசுக்கியது."

"உன் இயற்கைதானே அது? கிடைக்காத பொருளுக்காக ஏங்குவதும், பிறகு அதனால் துன்பப் படுவதும் - இதுதானே உன் சரித்திரம்?"

"இருக்கலாம். ஆனால் உன் தந்தையின் வஞ்சனை என்னை வதைத்தது. அகலிகையை என்னால் மறக்க முடியவில்லை."

என இந்திரன் தான் செய்த தவறுக்கு நியாயம் கற்பிக்க முற்படுகிறான். ஒரு நாளாவது அவளை அருகிருந்து பார்த்து மகிழவேண்டும் என்ற ஆசையில் கௌதமர் ஆசிரமத்திற்கு அந்தண வேடம் பூண்டு அதிதியாகச் சென்ற அவன் அங்கு தான் மனப்போராட்டத்திற்கு உள்ளான பிறகு அகலிகைக்கு இழைத்த அவலத்தை,

"அந்த உயரிய தம்பதிகளின் சத்காரத்தால் உவகை கொண்ட உள்ளத்தோடு இரவு படுத்தேன். நிசிக்குமேல் இருக்கும். மனத்தையும் அறிவையும் மயங்கச் செய்யும் ஒரு கனவு கண்டு விழித்தேன்... தூங்க முயன்றேன். முடியவில்லை. எழுந்து ஓட முயன்றேன். முடியவில்லை. கால்கள் ஆசிரமத்தையே நாடின. கண்களை மூடியபடி கிடந்தேன். நிலவு வெளிச்சத்தைக் கண்டு விடிந்ததென எண்ணிச் சில காகங்கள் கரைந்தன... எப்படி நேர்ந்தது என்று எனக்குத் தெரியாது சேவலைப் போல் நானும் குரல் கொடுத்தேன். சிறிது நேரத்தில் கௌதமர் வெளியில் வந்தார். விடிந்ததாய் நிச்சயப்படுத்திக் கொண்டு ஆற்றுக் கிளம்பி விட்டார்... பிறகும் நான் தயங்கினேன். மன்மதன் தூண்டினான். வசந்தன் உசிப்பினான். நான் மதிமயங்கினேன். கௌதமரைப் போலவே உருத்தாங்கி. ஆசிரமத்தில்

> புகுந்து ஐயோ. கணவர் தாம் என்று அவள் நம்பும்படி செய்து..."

என எடுத்துரைக்கிறான்.

இதனைக் கேட்ட சிரகாரி தன் தாயின் கற்பை இந்திரன் அபகரித்தால் முதலில் சினம் கொண்டாலும் தன் தந்தை தனக்கிட்ட ஆணையின் காரணத்தைப் புரிந்து கொள்கின்றான். அதனை இந்திரனிடமும் கூறுகிறான். அது இந்திரனுக்குப் பேரிடியாகின்றது.

தான் கற்பிழந்த விதத்தை அகலிகை மகனிடம் எடுத்துக் கூறுதல் நாகரிகமானதாகாதல்லவா? உன் தாய் கற்பிழந்தாள், அவளைத் தண்டிப்பாய் எனக் காரணங்காட்டி ஆணையிடும் நிலையிலும் கௌதமன் மன அமைதி உடையவனாக இல்லை. நடந்ததைச் சிரகாரி தெரிந்து கொள்ள இந்திரன் மனம் வருந்தித் தன் குற்றத்தை ஒப்புக் கொள்வது போலக் கதைப் போக்கில் புதுமை செய்திருக்கின்றார் எம்.வி. வெங்கட்ராம்.

இதன் பின் நடைபெறும் நிகழ்ச்சிகள் வழக்கமான அகலிகை கதைப்போக்கில் இடம் பெறாதவை. எனினும் புரட்சிகரமான போக்குடையவை. தந்தையின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தால் பெற்று வளர்த்த தாயைக் கொன்ற பாவம் சேரும். தந்தையின் ஆணையை புறக்கணிப்பதும் கடமையிலிருந்து தவறுவதாகும். இத்தகைய மனப்போராட்டத்தில் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தடுமாறியவனாகச் சிந்தனையில் மூழ்கிய சிரகாரி இறுதியில் குற்றம் தன் தந்தையின் மீதும் உள்ளது என்ற முடிவுக்கு வந்தவனாகத் தன் தந்தை கொடுத்த கோடரியை ஆற்றில் வீசியெறிந்து விடுகின்றான்.

அகலிகையைக் கொல்லுமாறு கோபத்தில் ஆணையிட்டுச் சென்ற கௌதமன் மனதிலும் அமைதியில்லை. சிரகாரி சிந்தனையில் ஆழ்ந்தவனாகக் வழக்கம்போல் காலங்கடத்தியவனாக இருப்பானேயாகில் தான் ஒரு பெண்ணின் கொலைபாதகத்தி லிருந்து விடுபட்டவனாகலாம் என்ற நம்பிக்கை நெஞ்சில் துளிர்க்க கௌதமன் மனம் மாறியவராகக் காட்டிலிருந்து திரும்புகின்றார்.

ஆற்றங்கரை மணலில் கண்ணயர்ந்து தூங்கும் சிரகாரியைக் கண்ட கௌதமன் தன் கட்டளைப்படி தாயின் தலையைக் கொய்த வருத்தம் தாங்காமல் தூங்கின்றானோ என அச்சமுற்றவராக அவனை எழுப்பி, "என்ன செய்தாய் சிரகாரி" எனப் பதறியபடி கேட்கின்றார்.

"கோடரியை ஆற்றில் எறிந்து விட்டேன்" என்ற மகனை அணைத்து மகிழ்ந்த அவர் அவனையும் அழைத்துக் கொண்டு ஆசிரமம் திரும்புகின்றார்.

ஆசிரம வாசலில் ஏழு நாட்களாக உணர்வற்றவளாக முடங்கிக் கிடந்த தாயின் கால்களில் விழுந்து தான் செய்ய நினைத்த பாவத்தை எண்ணிச் சிரகாரி அழுதான்.

"அகலிகை, நீ மனமறிந்து ஒரு குற்றமும் செய்யவில்லை. நான் ஆத்திரப்பட்டு உன்னை வெட்டும்படி சொல்லிவிட்டேன். உன் களங்கம் அகலும் வரையில் தீர்த்த யாத்திரை போய் வருகிறேன்" என கௌதமர் அவளிடம் விடை பெறுகிறார்.

வாய் திறந்து பேசாது வெட்கித் தலை குனிந்தவளாக அகலிகை நிற்கின்றாள் - சிலையெனவே நிற்கின்றாள் எனத் தன் கதையை முடித்துள்ளார் எம்.வி. வெங்கடராம்.

காரியத்தைச் செய்வதில் எப்பொழுதும் தயக்கம் காட்டுவதால் சிரகாரி எனக் காரணப்பெயர் பெற்றவன் கௌதமரின் கடைசிப் பிள்ளையான இவன். தந்தையின் ஆணையைக் கேட்ட பின், மனப் போராட்டத்தில் ஈடுபட்டவனாகத் தூக்கத்திலும் நினைப்பிலுமாக இவன் சிந்தனை வயப்பட்டு ஆற்றங்கரையில் கழித்த நாட்கள் ஏழு.

சிரகாரியின் இந்தப் பாத்திரத்தின் இயல்பும் மனப்போக்கும் ஓரளவு கும்பகர்ணன் மனப்போக்கினை ஒத்ததாக இங்கு அமையக் காண்கின்றோம். இராவணன் அரசவையிலிருந்து திரும்பியபின் வழக்கமான தூக்கத்தில் ஆழ்கின்றான் கும்பகர்ணன். ஆலோசனை மண்டப நிகழ்ச்சிகள் தூக்கத்தின் போது அவன் மனதில் நினைவாடியதாலேயே போர் முகம் செல்வதற்காக வலுக்கட்டாயமாக எழுப்பப்பட்ட அவன் மனம் மாறியவனாக, வியப்பில் ஆழ்ந்து

"ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடை சானகி துயரினம் தவிர்ந்ததில்லையோ" எனக் கேட்கும் புது மனிதனாகக் காட்சி தருகின்றான்.

மனப்போராட்டத்திலிருப்பவர்கள் ஒரு நல்ல முடிவினை எட்ட அந்தப் போராட்டம் பற்றிச் சிந்தித்தவர்களாக உறங்கச் சென்றால் தூக்கத்தின் போது பிரச்னைக்குத் தீர்வு காணும் வழி புலப்படும் என்ற உளநூல் கருத்தைச் சிரகாரியின் செயல் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

நடப்பியலோடு ஒத்துப் போவது பாரதம். உயர்ந்த குறிக்கோளை வற்புறுத்துவது ராமாயணம். கோடாரியால் வெட்டிக் கொல்லுகின்ற கொடுமையை ராமாயணம் ஏற்றுக் கொள்ளாதது அதன் நெறிக்கு ஏற்றதே. அகலிகையைக் கௌதமன் கல்லாக்கியதில் பாரதத்தில் கூறப்படுவது போன்ற ரத்தவெறிக் கொடுமையில்லை என்ற அளவில் ராமாயண அகலிகை வரலாறு சிறப்புப் பெறுகின்றது. என்றாலும் நடைமுறையில் காட்டு வாழ்க்கையாயினும் நாட்டு வாழ்க்கையாயினும் வாழ்க்கை எவ்வளவு சிக்கலும் போராட்டமும் நிறைந்தது என்ற உண்மையினை அகலிகையின் இந்தப் பாரதக் கதை தெளிவுபடுத்துகின்றது.

மாசறு கற்பினாள்

- பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி)

புதுமைப்பித்தனின் **அகல்யாவும் சாபவிமோசனமும்** வெளியானது அகலிகை வரலாறு வேறுபல கோலங்கள் கொள்ளக் காரணமாயிற்று. அதுவரை புலவர் உலகத்து அலசல்களுக்கு உள்ளாகி வந்த அகலிகை வரலாற்றை இலக்கியப் படைப்பாளர்கள் தங்கள் கவிதை, கதை, நாடகம் ஆகியவற்றுக்குக் கருவாகக் கொண்டனர். 1943 இல் கலைமகளில் **சாபவிமோசனம்** சிறுகதை வெளியானபின் 1944 இல் சிட்டியின் படைப்பான **மாசறு கற்பினாள்** சிறுகதை அதே கலைமகள் இதழில் வெளியாயிற்று.

பத்துப் பக்க அளவுடைய இக்கதையின் முதல் ஆறுபக்கங்கள் ஒரு மாலை வேளையில் அகல்யாவுக்கும் கௌதமனுக்குமிடையே நடைபெறும் நீண்ட உரையாடலாக அமைந்துள்ளன. அந்த உரையாடலின் வழியே புராண நிகழ்ச்சிகளின் அடிப்படையிலான அகலிகை, கௌதமர் திருமணமும் அதற்கு முந்திய அகலிகை, இந்திரன் ஆகியோரது காதலும் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அகலிகையை மணந்துகொண்ட கௌதமன் தன் தவ லக்ஷியம் நிறைவேறிய பின்னரே அவளோடு முறையாக இல்லற இன்பத்தில் ஈடுபடப் போவதாகக் கூறித் தவநெறியினை மேற்கொண்டவனாக நாட்களைக் கடத்தி வருகிறான்.

ஒரு நாள் மாலை அகல்யா குளித்துவிட்டு வந்து குடிலின் வாயிலில் கூந்தலை உலர்த்தியபடி இருக்கிறாள். அவளது அழகுத் தோற்றம் கௌதமனுடைய உள்ள உறுதியைக் குலைக்கிறது. இருந்தாலும் தன் தடுமாற்றத்திற்குக் காரணம் அவள் அழகுத்

தோற்றம் தன் உள்ளத்தில் ஏற்படுத்திய கிளர்ச்சியே என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள அவன் ஆணவம் அவனுக்கு இடம் தரவில்லை. இல்லற சுகத்தை அடையாதவளாகப் பரிதவிக்கும் அவளுக்கு ஆறுதல் கூறவேண்டுவது தன் கடமை என்ற நினைப்பில் அவளை அழைத்துத் தன் அருகே அமருமாறு பணிக்கின்றான்.

இந்த அன்பு அழைப்பு அகல்யாவை வியப்பில் ஆழ்த்துகிறது. தனிமையில் அவளை வாடவிட்டிருப்பதாகக் கூறிக் கௌதமன் அவள் மனக்குறையை அவள் வாயிலிருந்தே வரவழைக்க வேண்டும் எனப் பேச்சுக் கொடுக்கின்றான்.

"ஒவ்வொரு சமயம் உன் முகத்தில் ஏதோ கவலை குடிகொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றுகின்றது. ஏன்?"

"எனக்குக் கவலை ஏது ஸ்வாமி?"

"கவலையில்லை என்றால் நிறைவின் கசப்பா?"

"நிறைவுக் கசப்பு இருந்தால் அதுவே குறைவு அல்லவா?

"ஆனால் உன் மனதில் என்ன எண்ணங்கள் தோன்றி அப்படி உன் களையை மறைக்கின்றன?"

"ஒன்றும் இல்லையே!" என்று சொல்ல வந்தவள், "ஸ்வாமி, நான் என்ன நினைத்தாலும் என் கருத்து என்னவானாலும், அது உங்களுக்குத் தெரியாமல் இருக்கமுடியுமா? வெறும் புலன்களை மீறிய அறிவு படைத்த தாங்கள், கேட்டா தெரிந்து கொள்ளவேண்டும்?"

எனச் சாமர்த்தியமாகப் பதில் கூறித் தன் நெஞ்சில் பெருஞ்சுமையாக இருக்கும் கவலையை மறைக்கின்றாள். அவள் தன்னிடம் வைத்திருக்கும் நம்பிக்கைக்குத் தான் அருகதையுள்ளவனா என்ற தன் சந்தேகத்தை கௌதமன் அவளிடம் தெரிவிக்கின்றான். அத்தோடு அகல்யாவின் இளமைக் காலக் கனவுகள்

ஈடேறியிருந்தால் இந்த வாழ்க்கையில் அவள் அல்லல் பட நேர்ந்திராதே என்றும் கூறுகின்றான். அதனை அவள் ஒப்புக்கு மறுத்தாலும் தன் மனத்தில் கவலையின் சாயல் படிந்திருப்பதைத் தன் கணவன் புரிந்து கொண்டிருக்கின்றான் என்ற ஐயம் அவள் மனதில் எழுகிறது. அவனுக்குச் சேவை செய்வதே தன் வாழ்வின் லட்சியம் எனக் கூறும் அவளிடம் அவள் இச்சைகளைப் பூர்த்தி செய்ய இயலாதவனாக இருப்பதற்காக வருந்துவதாகக் கௌதமன் கூறுகின்றான். அதற்கு அவள் கூறும் பதிலும் அதனைக் கேட்ட கௌதமன் அவளுக்கு விடுக்கும் பின்வரும் எச்சரிக்கையும் அவர்கள் மனப்போராட்டத்தைத் தெளிவாக வெளிப்படுத்துவனவாக உள்ளன.

> "இச்சைகள் மனக்கண்ணாடியின் நிழல்கள் தாமே? உண்மை வாழ்க்கையில் கர்மபூர்த்தியைவிட இச்சைக்குச் சலுகை உண்டா?"
>
> "அகல்யா! உன்னுடைய ஊக்கம் என்னைப் பிரமிக்கச் செய்கிறது. ஆனால் இப்படி இன்னம் எவ்வளவு காலம் நீ வைராக்கியமாய் இருக்க முடியும்?"
>
> "என்ன கேள்வி ஸ்வாமி? எத்தனை நாள்? எவ்வளவு காலம்? உங்கள் ஆதரவில் காலவரையறையைப் பற்றி எனக்கு என்ன கவலை?"
>
> "உன் அறிவின் சக்திதான் உணர்ச்சிக்குத் திரையிட்டு வைத்திருக்கிறது. அந்தத் திரையை விலக்காமலேயே உணர்ச்சி மங்கி மாய்ந்து விடும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறாய்!"
>
> "திரையும் இல்லை, காட்சியும் இல்லை. வெளியில் வெறுமையில் உணர்ச்சி முறையற்ற சித்திரங்களைக் கிறுக்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம்?"

> "சாமர்த்திய சாலி. ஆனால் உணர்ச்சியை அசட்டை செய்வதால் வென்றுவிட முடியாது" அகல்யா. அணைந்துபோன ஹோமகுண்டத்தின் அடியில் கனியும் நெருப்புப் போன்றது அடக்கிய உணர்ச்சி".

அகல்யாவின் உள்ளத்தில் இந்திரன் மீதான பழைய காதல் நினைவுகள் வேதனை தந்து வருவதையும் அதனால் அவள் உள்ளத்தில் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருப்பதையும் தான் அறிந்து கொண்டிருப்பதாக கௌதமன் மேற்கண்ட உரையாடல் வாயிலாக அவளுக்குக் குறிப்பாக உணர்த்துகிறான்.

இதனால் அவள் உள்ளத்தில் பயம் தோன்றுகிறது.

அந்தப் பழைய காதல் நினைவுகளாக நெஞ்சில்கனன்று கொண்டிருக்கும் ஆசையை அணைத்துவிடும் உள்ள உறுதி தனக்கு உண்டு என அகல்யா கூறுகிறாள்.

அதனைக் கேட்ட கௌதமன் அவள் மன உறுதியைப் பாராட்டுகின்றான். தான் இனித் தைரியமாகத் தன் தவ முயற்சியைத் தொடரப் போவதாகக் கூறுகிறான். தன் தவ முயற்சியில் குறைநேரின் அந்தப் பொறுப்பு முழுவதையும் தன்னையே சாரும் எனக் கூறக்கேட்ட அகல்யா அதனால் மனம் நெகிழ்ந்தவளாக அவ்வப்போது தன் உள்ளத்தில் இந்திரனைப் பற்றி எண்ணம் தோன்றி தன் மதியை மயக்கி வந்ததை இவ்வளவு காலமும் மறைத்து வந்ததை மன்னிக்கக் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறாள். இதனால் அவர்களிடையேயான திரை விலக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டவர்களாக மனம் ஒத்த தம்பதிகளாகின்றனர். விரைவில் தவம் முடித்து இல்வாழ்க்கையில் ஈடுபடப் போவதாக கௌதமன் அவளிடம் உறுதி கூறுகின்றான்.

கௌதமன் தவ முயற்சிக்கு அகல்யா தன் பணி விடைகளால் முழு ஒத்துழைப்புத் தருகிறாள். அவர்களது இந்த உள்ளம் இணைந்த வாழ்வினைக் கண்ட இந்திரன் இனி அவள் உள்ளத்தில் தனக்கு இடமில்லை என்பதைப் புரிந்து கொள்கின்றான். வஞ்சக வழியில் அவளை அடையும் திட்டம் அவன் உள்ளத்தில் உருவாகின்றது.

புட்குரல் கொடுத்து உரிய நேரத்திற்கு முன்பே கௌதமனை வெளியேறச் செய்த இந்திரன் அவர் உருவில் குடிலில் நுழைகிறான். எதிர்பாராத வகையில் தன் கணவன் திரும்ப வந்து தன்னை நெருங்குவதைக் கண்ட அவள் உள்ளத்தில் வியப்பே மேலிடுகின்றது. தன் பெண்மை உணர்வைப் புரிந்து கொள்ளாமல் இத்தனை காலமும் தன்னிடமிருந்து ஒதுங்கியிருந்ததற்காகத் தன் மீது கழிவிரக்கம் கொண்டு தன்னைத் திருப்திப்படுத்தவே அவன் இப்போது தன்னை நெருங்குவதாக நினைத்த அகல்யா, அவனிடம், எனக்காக உங்கள் வேள்வி விரதத்தைக் கைவிடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறாள்.

வந்தவன் குலுங்கிச் சிரித்தவனாக அவள் கையைப் பற்றிய அளவிலேயே அவன் தன் கணவன் இல்லை என்பதைப் புரிந்து கொண்டவளாகத் தன் கையை உதறிக்கொண்டு விலகி நிற்கின்றாள்.

வேறு படைப்பாளிகளிலிருந்தும் கதையாசிரியர் இவ்விடத்தில் புதுமை புகுத்தியுள்ளார். பெண்களின் ஸ்பரிச அறிவு உணர்ச்சி மிகக் கூர்மையானது என்ற உண்மையின் அடிப்படையிலான இம்மாற்றம் அகல்யாவின் பண்பினை மேலும் உயர்த்துவதாகின்றது. இத்தகைய உணர்ச்சி உடையவர்களே கணவனின் புறக்கணிப்புக்கு ஆளாகும்போது அந்த உணர்ச்சி மழுங்கப்பெற்று உணர்வற்ற கல் போல ஆவார் என்ற பின் நிகழ்ச்சிக்கு இது ஏற்ற அடித்தளமாக அமைகின்றது.

அச்சமயம் மீண்டும் குடிலின் கதவு திறக்கின்றது. உண்மைக் கௌதமன் விடியவில்லை என்பது உணர்ந்து திரும்பி வந்து விட்டான்.

> "அட சண்டாளா" கௌதமன் கோபக் குரல் துரத்த இந்திரன் ஓடி மறைந்தான்.
>
> புத்தியும் பொறியும் கலங்கிப் போன அகல்யா அப்பொழுதுதான் உண்மை உணர்ந்தாள். தன் கணவனை நோக்கிப் பாய்ந்தாள்

"ஸ்வாமி!"

"சீ! துரோகி! உன் பசப்பு வார்த்தைகளில் மயங்கிய நான் அல்லவா மூடன்? எவ்வளவு சாதுர்யமாய் என் காமத்தைக் கொண்டே என்னை விலக்கி வைத்து விட்டாய்?"

இவ்வார்த்தையின் துன்பம் அவளைப் பாதிக்க வில்லை. அந்த அபாண்டத்தில் அவள் உணர்விழந்து ஸ்தம்பித்து விட்டாள். கோபம் முழுவதையும் வசையில் பொழிந்த கௌதமன் அவள் தன்னையே நோக்கியவாறு நிற்பதைக் கண்டான். கற்சிலை போன்று நின்ற அவள் கண்கள் அவனைப் பழித்தன. "இவ்வளவு தானா உன் ஞானம்? இது தானா நீ கண்ட திருஷ்டி! அட அறிவிலி! இதற்கா இவ்வளவு பாடுபட்டு எல்லாவற்றையும் துறந்து என் வாழ்வையும் பாழாக்கினாய்'' என்று அலறுவனபோல இருந்தன அவள் கண்கள்.

கோபம் தணிந்து நடந்ததை, நடக்காததை அறிந்த கௌதமனுக்குப் பிரமை பிடித்து விடும் போல் இருந்தது. அவனுடைய ஞானம் மடிந்து திருஷ்டி மங்கிவிட்டது. பைத்தியம் பிடித்தவனைப்போல் தள்ளாடிக் கொண்டு வெளியில் சென்றான்.

கல்லாகும்படியாக அகல்யாவை சபிப்பதோ, இந்திரனுக்குச் சாபம் கொடுப்பதோ இக்கதையில் இடம் பெறவில்லை. அவர்களுக்கிடையேயான திரை விலகிய சில நாட்களுக்குள்ளாகவே மீண்டும் ஒருவரைவிட்டு ஒருவர் மனத்தளவில் விலகியவர்களாகி விடுகின்றனர். அகல்யா ஒரு சூத்திரப் பதுமைபோல தன் கணவனுக்குத் தொடர்ந்து பணிவிடை செய்து கொண்டிருக்கிறாள். நடைப்பிணமாக மாறிவிட்ட அவள் காலச்சுழற்சியில் ராமன் வருகையில் மீண்டும் உணர்வு வரப் பெற்றவளாகின்றாள்.

ராமனுக்கு அகல்யாவின் வரலாற்றினைக் கௌசிகன் எடுத்துக்கூற ராமன் கௌதமனிடம் மாசற்ற கற்புடையவளான அவளை மீண்டும் ஏற்றுக் கொள்ளும்படி பணிக்கின்றான்.

தன் வாழ்வில் ஏற்பட்ட இந்தச் சோதனையின் புதிரை விடுவிக்கும்படி கௌதமன் கோசிகனிடம் கேட்கின்றான்.

> "இது பிரபஞ்ச இயற்கை. உன் ஞானதிருஷ்டியால் நீ உண்மையை அறிந்திருந்தால்கூட உலகம் அவளைச் சும்மாவிட்டிராது"
>
> "என்ன உலகம்! என்ன நியதி! ஞான மார்க்கத்தைத் தேடும் நமக்குக் கூடவா இந்தச் சோதனை?"
>
> கோசிகன் சிரித்தபடியே, "முனி சிரேஷ்டா! அதோ உன் பத்தினியின் பெருமைக்குக் காணிக்கை செலுத்தும் அந்த ராஜகுமாரனுக்கும் உண்டு இந்த நியதி - பிரபஞ்ச நிர்பந்தம்"

என ராமன் சீதையை மணக்கச் சென்று கொண்டிருக்கும் அப்போதே அவன் வாழ்வில் பல்லாண்டுகளுக்குப் பிறகு என்றோ நடக்கவுள்ள அகவாழ்வுப் போராட்டத்தினைத் தன் ஞான திருஷ்டியால் கண்டு கூறுவதாகக் கதை முடிகிறது.

கொடூரமான சாபங்கள், மனக்கசப்பை உண்டாக்கும் வசை மொழிகள் ஆகியன இன்றி கதை அமைந்துள்ளது. கௌதமன் கணநேரக் கோபம், ஒளிபெற்ற அகல்யாவின் வாழ்வினை மீண்டும் இருட்டில் ஆழ்த்தியது. இந்திரன் வரம்பு மீறியவனாகத் தன்னோடு செய்யும் கலவி வரை அவனைப்பற்றிய உணர்வற்றவளாக அகல்யா இருந்தாள் என்ற குறைக்கு அவளை ஆட்படுத்தாமல் கதையின் முக்கியமான கட்டத்தை ஆசிரியர் படைத்துள்ளார்.

அகல்யா இந்திரனை முன்பே அறிந்தவள், அவனிடத்துக் காதல் மயக்கம் கொண்டவள், விதிவசத்தால் கௌதமன்

மனைவியாகிவிட்ட அவள் படிப்படியே தன் மனதைத் தேற்றிக் கொண்டவளாக பழைய காதல் மயக்கத்திலிருந்து விடுபட்டவளாக மாறிய அளவிலே அவள்மீது பழி விழுகின்றது.

உலக இலக்கியங்களில் திருடர்களாக, ஒழுக்கங் கெட்டவர்களாக வாழ்க்கை நடத்துபவர்கள் மனம் திருந்தி, புதிய வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்தவுடன், அவர்களை அபாண்டப் பழிக்கு உள்ளாக்கி நாம் நல்லபடி வாழ இந்த உலகம் இடந்தராது என்ற முடிவுக்கு வரும்படி செய்வதான கதைப் போக்கினைப் பலவாகக் காண்கின்றோம். அந்த கதை உத்தியினை இந்தப் பழைய கதையில் புகுத்திப் புதுமை செய்துள்ளார் கதையாசிரியர் சிட்டி அவர்கள்.

பாபமும் சாபமும்

- டி.கே. சீனிவாசன்

"பாபமும் சாபமும்" கதையில் அகலிகை புதுமையானவளாகக் காட்சி தருகிறாள்.

ஓர் எழுத்தாளன் இரவு நேரத்தில் கதை எழுத மேஜை முன் அமர்ந்து முன் இரவு நேரத்தில் வர்ணனையாகச் சில வரிகள் எழுதுகின்றான். கதை மேலே ஓடவில்லை. சிந்தனையில் ஆழ்கின்றான்.

"என்ன எழுதுகிறாய்?" என்ற ஒரு பெண் குரல் அவனை வியப்பில் ஆழ்த்துகின்றது. உருவம் வெளிப்படாததால் அது யாருடைய குரல் எனப் புரியாமல் திகைக்கின்றான்.

"கதை எழுதுகிறேன்" எனக் கூறிய அவனிடம் அக்குரல் அவன் எழுதியதைப் படிக்கும்படி கேட்கிறது.

அவன் தொடங்கிய கதையின் முதல் பத்தியான பனிக்கால நிலா வீசும் இரவின் நீண்ட வருணனையைப் படிக்கக் கேட்ட அக்குரல், "பனிக்காலம் - நிலவு காயும் இரவு" என்று சொல்லவா இத்தனை சொற்குவியல் என விமர்சனம் வேறு செய்கிறது.

"மேலே தொடர்ந்து படி" என்கிறது குரல்.

"கதை மேலே ஓட மறுக்கின்றது. சிகரெட்டை ஊதி ஊதிச் சாம்பலாக்கியது தான் மிச்சம்" என அவன் சலித்துக் கொள்கிறான்.

"நான் ஒரு கதை சொல்கிறேன் எழுதுகிறாயா? உன் முன்னுரைக்கேற்ற பின்னுரையாக அமையும்" என்கிறது குரல்.

அது ஒரு பெண்ணின் குரல் என அறிந்து கொண்ட அவன் அவள் யாரெனக் கேட்கிறான்.

"மெருகிழந்த ஒரு மென்கொடி - பார்வைக்கு!
கற்பிழந்த காரிகை -. காலட்சேபங்களில்!
பாழாக்கப்பட்ட பாவை - பகுத்தறிவு மன்றத்தில்!"

என முதலில் புதிர் போட்ட அக்குரல் பின்னர் தன்னை அகல்யா என அறிமுகப்படுத்திக் கொள்கிறது.

குரலும் அவனும் அகல்யா என்ற பெயரின் தத்துவம் பற்றி விவாதிக்கின்றனர். பின் அகல்யா தன் வரலாற்றினைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ள அவனுக்கு உண்மை வரலாற்றினைப் பின்வருமாறு தெரிவிக்கின்றாள்.

"நானும் இந்திரனும் சிறு வயதிலிருந்தே சேர்ந்து வளர்ந்தவர்கள். வானத்துச் சந்திரனை வட்டமான பந்தென்ற நினைக்கும் வயதிலிருந்து வாட்டி வதைக்கும் ஒளிப்பிழம்பாக உணரும் பருவம் வரும்வரை ஒத்து வளர்ந்தோம் - விட்டுப் பிரிந்ததில்லை. இந்திரனை நான் நேசித்தேன் - அவன் உடலில் காமுற்றேன் - உள்ளத்தைக் காதலித்தேன் - உயிர்மேல் உயிர் வைத்தேன். ஏன் தெரியுமா? எல்லாம் என்னுடைய இன்ப வாழ்வுக்காகத் தான். ஆனால் - அவனோ...? ஆட்டி அசைத்துவிட்டு அப்பாலே பறந்துபோகும் காற்றாக மறைந்தான்.

"பின் என்னைக் கௌதமருக்குக் கொடுத்தார்கள். நான் வாழ்வில் எதையும் இழக்கமுடியாத இளம்பெண் - அவரோ எல்லாவற்றையும் துறக்கத் துணிந்தவர்.

"எல்லா பெண்களும் இன்ப நாட்டத்தைக் கொஞ்சினோம் - குலவினோம் என்று வர்ணிப்பார்கள். ஆனால் நானோ...? கேட்டேன் - கெஞ்சினேன் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. உடலின்பத்தை

> எனக்கு மருந்தாக்கி அளவிட்டுக் காலம் குறித்துக் கட்டுப்பாடும் செய்தார் அந்த வைத்தியர்!
>
> "வறண்ட வயலைச் சாசனமாகப் பெற்ற நான் வளத்தைப் பக்கத்து வயல்களில் தேடினேன். தென்பட்டது. தின்று களித்தேன். காலப்போக்கில்... உடல்வலி வந்தது. உள்ளம் நைந்தது...

இந்த இடத்தில் அந்த எழுத்தாளன், "சீதையும் சாவித்திரியும் பிறந்த நாட்டில் போயும் போயும் நீயும் பிறந்தாயே?" என அவளைப் பழிக்கின்றான்.

"சீதையும் சாவித்திரியும் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்கள். கற்போடிருந்தார்கள் ஆனால் நானோ...? கல்யாணமான பிறகும் காதலிக்க முடியவில்லை. அறிவிருந்தால் உனக்கே இந்த உண்மை புரிந்திருக்கும் என அவன் தலையில் குட்டிய பின் கதையை மேலே தொடர்கிறாள்.

> "அப்போது இந்திரன் வந்தான் என் நடவடிக்கைகளைக் கேள்விப்பட்டு. முறிந்த பாலைத் துணிந்து எப்படி விற்பது? அதுவும் இனந் தெரிந்தவனிடம்? மறுத்து விட்டேன். மாறுவேடத்தில் வந்தான் - என் கணவரைப் போல. என்னால் கண்டுபிடிக்க முடியாமல் போனது. நான் என் கணவருக்குத் தர்மபத்தினி ஆயிற்றே - தட்டிப்பேச முடியுமா? இக்கட்டான அந்த என் நிலையை எப்படி மனம் விட்டு வாய் திறந்து விளக்க முடியும்? இணங்கினேன்..."

"அப்போது முனிவர் வந்தார். உன்னைக் கல்லாகச் சபித்தார். அதுதானே உன் கதையின்" முடிவு என்கிறான் எழுத்தாளன்.

"நீயும் உன் மூளையும்! புதிதாக எதாவது புத்தகம் வந்தால் படித்து ஆராயும் நீ பழம் புராணத்தை மட்டும் அப்படியே ஏற்றுக் கொள்கிறாயே! ஒரு பெண்ணைக் "கல்லாகப் போ" என்றால் உருவற்ற

சிறுகல்லாக ஆக மாட்டாள் உருவுள்ள சிலையாகத் தானே ஆவாள்?" என எதிர்க் கேள்வி போடுகிறது குரல்

"இந்திரன் உடலெல்லாம் கண்ணாகச் சபித்தது ...?" என்று சந்தேகத்தைக் கிளப்புகிறான் எழுத்தாளன்.

"பாவத்துக்குப் பரிகாரம் சாபம் ஆகாது. கண்ணாகவுமில்லை மண்ணாகவுமில்லை. உடம்பெல்லாம் புண்ணாகத்தான் ஆனது!" என்ற அவளிடம் "ஏன்?" என்று கேட்ட எழுத்தாளனிடம் "வெட்கமோ விவஸ்தையோ இல்லாமல் என்னையே சொல்லுபடி வாயைக் கிளறுகிறாயே! உனக்கு மூளை இல்லையா சிந்திக்க?" எனக் கேட்கிறது குரல்.

"சரி! பரிதாபத்துக்குரிய உன் உருவத்தைக் கொஞ்சம் காட்டு. பார்க்கிறேன்" எனக்கேட்ட அவனிடம் "எனக்கேது உருவம்? நான் உனக்குள் அல்லவா அடங்கியிருக்கிறேன்" எனக் கூற, அவன், "அப்படியானால் நீ அகலிகை அல்லவா?" எனக் கேட்கிறான்.

"அகலிகையுமில்லை, அருந்ததியுமில்லை!"

"பிறகு... நீ யார்?"

"............... ...."

என்ற கேள்வியோடு கதையை முடித்துள்ளார் டி.கே. சீனிவாசன்.

அகலிகை வரலாற்றில் புரட்சிகரமான ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளதே இக்கதையின் தனிச்சிறப்பு.

இல்லறத்தில் அகவாழ்வில் க்ணவனுக்கும் மனைவிக்கும் ஒருவருக்காக மற்றவர் தியாகம் செய்கின்ற மனப்பக்குவம் அமையும்போது தான் இல்லறம் இனிமையுடையதாக இருக்கும். இங்கு கௌதமன் அகலிகையின் இயல்பான உடலிச்சையைப் பற்றிச் சிந்திக்காது தன் தவ வாழ்விலேயே முழுக்கவனம் உடையவனாக இருந்ததால் அகலிகை வேறு பிற ஆடவர்களை நாடித் தன் உடல் வேட்கையைத் தீர்த்துக் கொண்டதால் அதனால் வரும் நோய்க்கு ஆளானவளாகத் தன் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டாள் என

அகலிகை பாத்திரத்தைப் புதிய நோக்கில் அணுகிப் புரட்சி செய்துள்ளார்.

இது - பெண்கள் கணவன் புறக்கணிப்பால் ஒழுக்கம் கெடுவது - இயல்புக்கு மாறானதன்று. உலகியல் நடைமுறையில் காணப்படுவதே. ஆகவே இக்கதையில் இதனை ஒவ்வாத கற்பனை என்று குறைகூற இடமில்லை.

இவ்வாறு தன் உடலை உள்ளத்தின் பலவீனத்தால் பாழாக்கிக் கொண்ட அவள் தன் பழைய காதலனான இந்திரன் காதல் பிச்சை கேட்டுக் காமவெறியோடு அவளை அணுகியபோது அவள் அவன் விருப்பத்திற்கு உடன்படாதவளாக மறுப்பது அவள் வாழ்வின் இருளிடையேயான ஒரு ஒளிக்கீற்று.

இந்திரன் பின் கௌதமன் வேடந்தாங்கி வருகிறான்.

காம வேட்கையோடு அவளோடு உடல் உறவுகொள்ள விரும்புகின்றான் - கௌதமன் உருவில் வந்த அவன்.

ஒரு மனைவி இச்சூழலில் தன்னைக் கைப்பிடித்த கணவனிடம் தன் உடலின் இழிநிலையைக் கூறி அவனைப் புறக்கணிக்கக் கடமைப் பட்டவளா என்பதே சிந்திப்பதற்குரியது.

"இக்கட்டான அந்த நிலையை எப்படி மனம் விட்டு வாய்திறந்து விளக்க முடியும்? இணங்கினேன்" என அகலிகையே எழுத்தாளனிடம் அது இயலாத ஒரு சிக்கலான சூழ்நிலை என்பதனைத் தெளிவுபட உரைக்கின்றாள்.

அவள் வான்மீகி படைத்துள்ளதைப்போல வந்தவன் தேவர்களுக்கு அரசனான இந்திரன் எனக் குதூகலிக்கவில்லை. கணவன் விருப்பத்துக்கு உடன்படுவது மனைவியின் கடமை என்ற கட்டாயத்திற்கு உள்ளானவளாகவே முனிவன் வேடத்தில் வந்த இந்திரனோடு உடல் உறவு கொண்டாள்.

அதன் விளைவு! உடலெங்கும் புண்ணாகும், ஒழுக்கக் கேட்டால் வரும் நோய்க்கு இந்திரன் ஆளாகின்றான்.

இது டி.கே. சீனிவாசன் புகுத்தியுள்ள மற்றுமொரு புதுமை.

இதுவும் நடைமுறையோடு பொருந்தியதாகவே அமைந்துள்ளது.

"எய்ட்ஸ்" பற்றி அன்றாடம் எங்கும் எச்சரிக்கைகள் தரப்படும் இன்றும் ஒழுக்கம் தவறுபவர்கள் பாவத்துக்கு ஆளாவோம் என்ற பயமில்லாதவர்களாயினும் "எய்ட்ஸ்"க்குப் பயப்படத்தானே செய்கின்றனர்.

இவ்வகையில் இது மற்ற எல்லாப் படைப்புகளிலும் மாறுபட்ட புதுமைப் படைப்பாகப் புரட்சிப் படைப்பாக அமைந்துள்ளது.

கதை சொல்லப்படும் உத்தியிலும் மற்றவர்கள் யாரும் மேற்கொள்ளாத புதுமையைப் புகுத்தியுள்ளார் கதையாசிரியர். பழிப்புக்கு உள்ளான பாத்திரமே நேரில் வந்து தன் கதையைக் கூறுகிறாள். குறுக்கு விசாரணை போல எழுத்தாளன் இடையிடையே தொடுக்கும் கேள்விக் கணைகளைச் சமாளித்தவளாக அவ்வப்போது அவன் அறிவின்மையையும் சுட்டிக் காட்டுகிற வகையில் அவனுக்கு - மறைமுகமாக அவளை இந்த அவலநிலைக்கு ஆளாக்கிய சமூகத்துக்கு - சுடச்சுடப் பதிலும் தருகின்றாள்.

நமக்குத் தெரிந்த கதைதானே எனப் படிப்பவர் புத்தகத்தை மூடிவிட முடியாதபடி இறுதிவரை ஆர்வத்தைத் நிலை நிறுத்தும் வகையில் கதை புனையப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் நாற்பதுகளில் அகலிகை வரலாறு தமிழ் நாட்டுப் படைப்பாளர் பலரின் கவனத்தை கவர்ந்த ஒன்று. அவற்றுள் சில படைப்புகளே பலராலும் அறியப்பட்ட ஒன்றாக விமர்சன அலசல்களுக்கு உள்ளாகியுள்ளன.

"உலக அரங்கில்" என்ற தலைப்பிலான தொகுதியில் 1951 இல் பொன்னி வெளியீடாக வெளிவந்துள்ள சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள இக்கதை ஒரு சிலர் பார்வைக்கே தட்டிப்பட்டிருக்கக் கூடும். அகலிகை பற்றிய ஆய்வுக்கான

மூலங்களை ஏழாண்டுகளுக்கு முன் தொகுக்கத் தொடங்கிய எனக்கே, இந்த ஆய்வு நூல் முடிவுறும் நேரத்தில் எதிர்பாராது கண்ணில் பட்டதாலேயே இதனை ஆய்வுக்குட்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. இதுபோல விடுபட்டுப்போன படைப்புகள் மேலும் சில இருத்தல்கூடும்.

கவிதையில்

அகலிகை வெண்பா

- வெ ப. சுப்ரமணிய முதலியார்

இந்த நூற்றாண்டில் படைக்கப்பட்ட அகலிகை வரலாற்றின் மீட்டுருவாக்கப் படைப்புகளுள் தொன்மையானது வெ.ப. சுப்ரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா. இதன் முதற்பதிப்பு 1914லும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 1920லும் மேலும் திருத்தம் பெற்ற மூன்றாம் பதிப்பு 1938லும் வெளிவந்துள்ளன. மூன்று பதிப்புகளுக்கும் நூலாசிரியர் தனித்தனியே முன்னுரை வரைந்துள்ளது. மூன்று பதிப்புக்களும் ஆசிரியர் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய மேற்பார்வையில் பதிப்பிக்கப்பட்டவை என்பதனை உறுதிப்படுத்துகின்றது.

293 வெண்பாக்களைக் கொண்டது இச்சிறு காப்பியம். இவர் அகலிகை வரலாற்றைக் காப்பியமாகப் படைக்க வேண்டும் எனத் திட்டமிட்டு நூலினை இயற்றவில்லை. அகலிகை கற்பிழக்க நேர்ந்த அவலத்திற்குரிய சூழ்நிலையையும் அப்பொழுது அவள் பட்ட துயரத்தையும் முதலில் இவர் சில தனிப்பாடல்களாக இயற்றினார். சிறிது காலம் சென்ற பின் அகலிகையின் கதையினைச் சிறு நூலாக இயற்றினால் அதனிடையே முன்பே தான் இயற்றி முடித்திருக்கும் பாடல்களையும் பொருத்தமாக இணைக்கலாம் என்ற எண்ணம் தோன்ற அகலிகை வெண்பா உருவானதாக நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.* இவ்வாறு உருவான காப்பியம் இராமநாத புரத்தில் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 13 ஆம் ஆண்டு

---

* மாலையில் சூரியன் மறையும் காட்சி வருணனையை முதலில் தனிப்பாடலாகப் பாடிய பாரதியார் பின்னர் அதனைப் பாஞ்சாலி சபதம் காவியத்தில் தக்க இடத்தில் பொருத்தமாக அமைந்துள்ளது இங்கு ஒப்பு நோக்குதற்கு உரியது. கம்பனின் இரணியவதைப்படலமும் அவ்வாறு படைத்து இணைக்கப் பெற்றது எனக் கருதுவோர் சிலர் உள்ளனர்.

நிறைவு விழாவில் 1914-ல் அன்றைய மரபுப்படி அரங்கேற்றப்பட்டுள்ளது. இதனைக் கேட்டு மகிழ்ந்த அன்றைய முன்னணிப் புலவர்களும் பண்டிதர்களும் வாழ்த்துரைகளும் சாற்றுக் கவிகளும் தந்துள்ளனர்.

இந்த நூலுக்கு நீண்டதொரு முகவுரையினை ரா. இராகவையங்கார் வழங்கியுள்ளார். கம்பனின் அகலிகைப் படலத்தின் கருத்து பற்றிய அந்நாளையப் புலவர்களிடையே நிலவிய வாதப் பிரதிவாதங்களைச் சீர்தூக்கித் தீர்ப்பு வழங்கும் சிறப்புரையாக அது விளங்குகின்றது. அதன் சீர்மை நோக்கிக் கம்பன் காட்டிய கருணை என்ற சென்ற பகுதியில் அதன் நுட்பமான பகுதியில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது.

அறிஞர் அவையில் அரங்கேற்றப்பட்ட நூல் இரண்டாம் பதிப்பில் மாற்றத்திற்கு உள்ளானதற்கான காரணத்தை இரண்டாம் பதிப்பின் முன்னுரையில்,

> "முதற் பதிப்பைப் பார்வையிட்ட நண்பருட் சிலர் அகலிகை கற்பிழந்தாளாகக் கூறும் பகுதியை மாற்றல் நலமென்று குறிப்பித்தனர் ...அந் நண்பர்களது கருத்துக்கிணங்கியும், முந்திய பல நூல்களுடனும் இந்நூலின் முதற் பதிப்புடனும் விசேடமாக வேறுபடாமலும் உள்ளக் கற்புக்குப் பங்கமின்றி உடற்கற்பை மட்டும் அகலிகை இழந்தாளாக இப்பொழுது கூறியுள்ளேன். .....மேலே கூறியுள்ள வேறுபாட்டுக்கிணங்க முதற் பதிப்பிலுள்ள பழைய பாட்டுக்கள் சில நீக்கப்பட்டும் புதுப்பாட்டுக்கள் சில சேர்க்கப்பட்டும் இருக்கின்றன"

எனக் கூறியுள்ளார்.

வான்மீகம் கூறிய அகலிகை வரலாற்றை அப்படியே தன் இராமகாதையில் அமைத்துக் கொள்ளாமல் கம்பர் தன் காலத்து மக்கள் மனப்போக்குக்கும் சமூக உடன்பாட்டுக்கும் ஏற்ப மாற்றம் செய்து கொண்டது ஒப்புக் கொள்ளக்கூடிய இலக்கிய வழக்காற்று

நெறியாகும் என்பதற்கு மேற்கண்ட முன்னுரைப் பகுதி அரணாக அமைகின்றது.

அகலிகையினை நாரதர் உதவியால் கௌதமர் மனைவியாகப் பெற்ற வரலாற்றையும் அம் முயற்சியில் இந்திரன் கௌதமரோடான போட்டியில் தோல்வியுற்றதையும் கதையின் முதற்காண்டமான இந்திர காண்டம் விளக்குகின்றது. நீருள் நெடுநேரம் மூழ்கியிருக்கும் போட்டியில் வென்றவர் கௌதமர். முனிவருக்கு மூச்சு அடக்குதல் பழக்கமாதலால் இருவருக்கும் ஏற்ற வகையிலான போட்டி வேண்டுமெனப் பிரமனிடம் இந்திரன் முறையிடுகின்றான். வென்ற கௌதமனும், விட்டுக்கொடுத்து மற்றுமொரு போட்டிக்கு உடன்படுவதாகப் படைத்திருப்பது இக்காப்பிய ஆசிரியரின் நுட்பமான கற்பனைத் திறனைக் காட்டுவதோடு கௌதமன் குணச்சிறப்பையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

முன்னும் பின்னும் முகமுடைய ஒரு பசுவைக் கண்டு, அதனை மும்முறை வலம்வந்து முதலில் திரும்புபவர்களுக்கே அகலிகை உரிமையாவாள் என்ற இரண்டாவது போட்டி. நாரதர் உதவியால் கன்று ஈன்றபடி இருக்கும் பசுவினைக் கௌதமன் மும்முறை வலம் வந்து மீண்டும் வெற்றி பெற்று அகலிகையை மனைவியாகப் பெறுகின்றான்.

இழத்தொறும் காதலிக்கும் சூதே போன்றதுதானே போட்டிகளும்! போட்டிகளில் தோல்வியுறுவோர் அதனால் வெறிகொண்டு வெற்றிக்கு மேலும் மேலும் முயற்சி மேற்கொள்வர். இந்திரன் அகலிகையினிடம் தான் கொண்ட காதலினும் கௌதமனிடம் உற்ற தோல்வியாலேயே மிக மன வருத்தம் அடைந்து அவளை எப்படியும் அடைவது என்ற முடிவுக்கு வருவதனை,

> **"ஆற்றல்மிகு காமத்தீ அன்றியான் கோதமற்குத்**
> **தோற்றஅவ் மானத்தீச் சுட்டிடுவெப் - பாற்றரிதே**
> **தேந்தாழ் மலர்க்குழலாள் சீத வனமேனி**
> **தோய்ந்தால் தணியும் துனைந்து"** (பாடல். 79)

என்ற வெண்பாவால் ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

இத்துடன் இந்திரகாண்டம் முடிகின்றது.

முன்பு தான் மேற்கொண்ட முடிவினை நிறைவேற்ற இந்திரன் நள்ளிரவில் சேவல் கூவுவதுபோல் குரல் கொடுக்கக் கௌதமனும் "காலைக்கடன் கழிக்கும் காலமென எண்ணித் தன் குடிலை விட்டு வெளியேறுகின்றான். இந்திரன் கோதமன் போல் உருக்கொண்டு குடிலுள் நுழைகின்றான். சென்ற கௌதமன் மீண்டும் திரும்பியதாக நினைத்து அகலிகை போலிக் கௌதமனை வரவேற்கின்றாள். இந்திரன் அவள் கையைப் பற்றிய அளவிலே அவன் தன் கணவன் அல்லன் என்று உணர்ந்து பின்னடைகின்றாள். இந்திரன் பிடியைத் தளர்த்தினானில்லை. புலி, கௌவிப் பற்றிய மானாகத் துவண்ட அகலிகை, கற்பு இழக்க நேர்ந்து உயிர் வாழ்வதைவிட உயிரைவிடுவதே மேல் என எண்ணி உயிரைவிட முற்படுகின்றாள். அப்போது இந்திரன் தன் உண்மை உருவை வெளிப்படுத்த உண்மை உணர்ந்த அகலிகை அவனை வைது சபிப்பதோடு பல நீதிகளை எடுத்துக் கூறி அவனை நல்வழிப்படுத்தும் முயற்சியினை மேற்கொள்கின்றாள்.

அகலிகையின் இந்த அறவுரை பதினைந்து வெண்பாக்களாக நீள அமைந்துள்ளது. சிறுகாப்பிய போக்கிற்கு இது ஒரு தொய்வாகஅமைகின்றது. வழக்குரை காதையில் இளங்கோ நறுக்குத்தெறித்தால் போல் கண்ணகிக்கும் பாண்டியனுக்கும் இடையேயான உரையாடலை அமைத்த நுட்பத்தை ஆசிரியர் மனம் கொண்டிருப்பாராயின் இத்தகைய தொய்வினைத் தவிர்த்திருக்கலாம்.

அகலிகையின் அறவுரை கேட்டு இந்திரன் மனம் மாறினானில்லை. கோபத்தால் அவள் அழகு மேலும் கூடியதாக்க் கூறித் தன்னைத் தழுவி முத்தமிடுமாறும் இல்லையேல் தான் அவளை வன்முறையில் புணர நேரும் எனவும் அச்சுறுத்துகின்றான்.

அதற்கு அவள் உடன்படாது மேலும் அவனுக்குச் சில ஒழுக்க நெறிகளை எடுத்துக் கூறுகிறாள். இந்திரனும் சில போலி நியாயங்களை எடுத்துக் கூறி அவளைத்தன் விருப்பத்திற்கு உடன்படுமாறு வேண்டுகின்றான். அதற்கும் அகலிகை மனம் இசைந்தாளில்லை.

இதனால் மனதில் மிகச்சினம் கொண்ட இந்திரன்,

> "கருப்பிரசம் ஆலையினால், கார் அகிலின் தூமம்
> நெருப்பதனில், எய்தல் நெறியாம் - விருப்பின்
> மெலியா இரந்தும்நல் காமின்னார் தம்இன்பை
> வலியால் உறலே வழி"

எனக்கூறி வன்முறையில் அவளைத் துய்க்க முயற்சிக்க அவன் வலிமைக்கு ஆற்றாளாகி அகலிகை மூர்ச்சித்து விழுகின்றாள். பிணத்திடம் பொருளைக் கவர்ந்து செல்லும் கள்வர் போல் வெங்காமப் பித்துக் கொண்ட இந்திரன் மூர்ச்சித்து மயங்கிய நிலையில் கிடந்த அகலிகையிடம் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டான் என்பதோடு அகலிகை காண்டம் முடிகின்றது.

117 வெண்பாக்களைக் கொண்ட அகலிகை காண்டமே இச்சிறு காப்பியத்துள் அளவில் பெரியது. இதன் கண் நிகழும் நிகழ்ச்சி ஓர் அரை நாழிகை அளவினது என்பதனை எண்ணும்போது இதனை ஆசிரியர் தேவையற்ற வகையில் நீட்டித்துள்ளார் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. ஒரு முனிவரின் குடிலில் நள்ளிரவில் விரைவாக நிகழ்ந்து - அதுவும் வெளியேறிய கௌதமன் எந்த வினாடி திரும்புவானோ என்ற அச்ச உணர்வினிடையே நிகழ்ந்து - முடிய வேண்டிய நிகழ்ச்சி நீதி மன்றத்து வாதப் பிரதிவாதங்களைப் போல நீண்டு செல்வது காப்பியத்தின் கதைக் கருவுக்கு முரண்பட்டதாக அமைந்துவிடுகின்றது. கம்பன் காப்பியத்தில் திளைத்து ஊறிய இவர் இராமாயணத்துள் யுத்த காண்டத்தில் இராவணன் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி இரந்து வேண்டுதலும் அதற்குச் சீதை தரும் மறுமொழியுமான நாடகப் பாங்குடைய நிகழ்ச்சியின் போக்கில் இந்தக் காண்டத்தை அமைத்துள்ளார். அங்குச் சீதை கூறும் மறுப்புரையும் அறிவுறுத்தும் அறநெறிகளும் போன்ற சொற்களை அகலிகை நள்ளிரவில் தன்னைப் பெண்டாள வந்தவனிடம் பேசி வாதிடுவதாக அமைத்துள்ளது ஏற்புடையதாக இல்லை. வந்தவன் இந்திரன் என்று அறிந்ததும் அகலிகை அச்சத்தால் மூர்ச்சிக்க அவன் அவளைத் தன்னிச்சைக்கு

உள்ளாக்கினான் என அமைத்திருப்பாரானால் நிகழ்ச்சியின் சூழலுக்கும் கால எல்லைக்கும் பொருத்தமுடையதாக அமைந்திருக்கும்.

இறுதியாக அமைந்த கௌதம காண்டம் 68 வெண்பாக்களைக் கொண்டது. இதன் கண் நிகழ்ச்சிகள் பல. அவை சென்ற காண்டத்தைப் போலன்றி வேகமுடையனவாக நிகழ்கின்றன.

குடிலைவிட்டு வெளியேறிய கௌதமன் விடியலுக்கான அறிகுறி காணாது திரும்பி வந்து தன் இல்வாழ்வு இருண்டதைக் காண்கின்றான். சினங்கொண்டு இந்திரனைச் சபிக்கின்றான். உடலெல்லாம் அவன் விரும்பி வந்த குறி வாய்க்கப் பெற்றமையால் மானம் இழந்தவனான அவன் தேவனாய் இருப்பதால் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொள்ளக்கூட வழியில்லையே என வருந்துவதாக ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார் கவிஞர்.

இந்திரனுக்குச் சாபமிட்ட கௌதமன் மூர்ச்சையுற்ற அகலிகையின் மூர்ச்சையினைத் தெளிவிக்கின்றான். அவள் தான் கற்பிழந்தது அறிந்து மீண்டும் மூர்ச்சையுறுகின்றாள். மீண்டும் கௌசிகனால் மூர்ச்சை தெளிவிக்கப்பட்ட அவள் அவ்வாறு மூர்ச்சை தெளிவிக்கப்பட்டதற்காக வருந்தி, "பாவியுயிர் மாண்டு விடாமல் மறித்து மறித்து ஈண்டதனை மீட்டலந்தோ பரிதாபம்" என வருந்திப் புலம்புகின்றாள். அவ்வாறு புலம்பும் அவளைக் கௌசிகன் கல்லாகுமாறு சபிக்கின்றான்.

இங்கு, கவிஞர் நயம்பட ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார். தன் மனையாள் கற்பிழந்தமையால் சினங் கொண்டு இந்திரனைச் சபித்தது போலவே அகலிகையினையும் சபித்தான் கௌசிகன் என்பதே பலரும் கையாண்டுள்ள கதைப்போக்கு. அதற்கு மாறாகக் கற்பிழந்தோமே என வருந்திப் புலம்பும் அவள் துன்பத்தினின்றும் அவளுக்கு விடுதலை தரவே கௌசிகன் அவளைக் கல்லாகச் சமைத்தான் என்ற புதுமையைப் புகுத்தியுள்ளார். இந்த நிகழ்ச்சியை விளக்கும்,

"நின்னை அறியாமல் நேர்மாசு நீங்கஅதை
உன்னி உனித்துன் புறல்தவிரத் - துன்னியுள
பொல்லாத வன்பழியும் போயொழிய நின்மேனி
கல்லாக என்றான் கனிந்து"

என்ற வெண்பாவின் கனிந்து என்ற சொல்லாட்சி இச்சாபம் கருணையினால் இடப்பட்டது என்பதனை நயம்பட அமைத்துக் காட்டுகின்றது. இது தாங்க முடியாத உடல்வலியால் துன்புறும் நோயாளிக்கு மருத்துவர் அவன் அந்த உடல் வலியை மறக்க மருந்து தந்து அவனைச் சுயநினைவற்றவனாக ஆக்கும் செயலை ஒத்தது. மருத்துவர் வருந்தும் உடலுக்குச் செய்யும் உதவியை கௌசிகன் வருந்தும் அகலிகையின் உள்ளத்திற்கு செய்து அவள் மனத்துயரம் மாற்றினான் எனக் கொண்டு அவன் அருள் உள்ளத்தைப் போற்றலாம். காலம் எத்துயரையும் ஆற்றக்கூடியது. நெடுங்காலம் கல்லாகச் சமைந்திருந்த அவள் இராமன் திருவடி தீண்டப்பெற்று மீண்டும் பெண்ணானதை இக்காண்டத்தின் இறுதிப் பகுதி எடுத்துரைக்கின்றது. பின் இராமன் அவளைக் கௌசிகனிடம் கொண்டு சேர்ப்பிக்க அவர்கள் மீண்டும் இல்வாழ்வினைத் தொடங்குகின்றனர் என முடிகிறது காப்பியம்.

இதிகாச வரலாற்றினும் மாறுபட்டதாக இக்காப்பியம் அமைந்துள்ளது. அகலிகையை உள்ளத்தால் பொய்யாதவளாக மேம்படுத்திக் காட்டியது போலவே கௌதமனையும் அருட்பண்பால் உயர்ந்தவனாக மேம்படுத்தியுள்ளார் வெ.ப.சு. முதலியார். பழங்கதைகள் புதுமெருகு பெற்று மீண்டும் புதிய வடிவினதாக உருவாக்கம் பெறும்போது அப்பாத்திரங்கள் மேலும் பண்பால் உயர்த்தப்படுதல் உலக இலக்கியங்களில் காணப்படும் ஒரு பொது நெறியே. அந்த மரபை ஒட்டிப் படைக்கப்பட்ட அகலிகை வெண்பா வழி வெ.ப.சு. பிள்ளையவர்கள் தமிழில் அகலிகை தொடர்பான புதிய படைப்புகள் பல தோன்ற அடிக்கல் இட்டுள்ளார்.

இங்கு நாம் மற்றொன்றையும் சிந்தித்தல் வேண்டும். இத்தகைய படைப்புகள் மக்களுக்கான - பாமர மக்களுக்கான -

கதைப்பாடலாக, கூத்தாக, நாடகமாக மாற்றுருவாக்கம் செய்யப்படும் போது அவர்கள் சற்றே குணங்கள் குறைந்தவர்களாகப் படைக்கப்படுகின்றனர். மாதவி, கைகேயி, கர்ணன் போன்றோர் பொதுவாக இத்தகைய சிதைவுக்கு உள்ளக்கப்பட்டுள்ளமை அப்பாத்திரங்களின் போக்கு பேரிலக்கியப் போக்கின்றும் மாறுபட்டதாக மக்கள் இலக்கியங்களுள் அமைவதைக் கொண்டு தெளியலாம்.

நாடகப் படைப்பாளிகளுள் சிறந்தவராகக் கருதப்படும் ஷேக்ஸ்பியரும் படித்தவர், பாமரர் என்ற பாகுபாட்டினை உணர்ந்து அவரவர் சுவைக்கேற்பத் தன் நாடகங்களைப் படைத்துள்ளார் என்பதனை இன்று விமர்சகர்கள் தெளிவு செய்துள்ளனர்.

ஒரு கதைக் கரு படிப்பாளிகளுக்காக எனப் படைக்கப்படும்போது அதன் பாத்திரங்கள் சற்றே பண்பால் உயர்ந்தவர்களாதலும் பாமருக்காக எனப் படைப்பாக்கம் பெறும்போது சற்றே தாழ்ந்தவர்களாலும் ஓர் இலக்கியக் கோட்பாட்டு நெறியாகின்றது என்ற உண்மையினை நிறுவும் வகையில் அகலிகை வெண்பா அமைந்துள்ளது. இது வெண்பா இலக்கணம் கற்ற பண்டிதருக்கான இலக்கியம். சீரும் தளையும் பிரித்தறிய இயலாத சாதாரணப் படிப்பாளிகள் கூட இதனைச் சுவைக்க முடியாது.

இந்த நூற்றாண்டில் வெ.ப.சு. விற்குப் பின் வந்த படைப்பாளிகள் பலரும் அகலிகையின் வரலாற்றை, வாழ்க்கை அவலத்தைச் சிந்தித்துப் புதிய படைப்புக்களை உருவாக்க உதவும் வகையில் ஓர் அறிமுக நூலாக அமைந்த பெருமை இந்த நூலுக்கு உண்டு என்பதனை யாரும் மறுக்க இயலாது.

அகல்யா

ச.து.சு. யோகியார்

யோகியாரின் அகல்யா குறுங்காவியம் 486 வரிகளைக் கொண்டது. "தமிழ்க் குமரி" என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இதனை எந்த ஆண்டில் இவர் இற்றினார் என்பது தெரியவில்லை. இத்தொகுப்பு 1945-இல் இரண்டாம் பதிப்பாக திருச்சி, பாலக்கரை, ஸ்டார் பிரசுரத்தினரால் வெளியிடப்பட்டுள்ளதால் நாற்பதுகளில் இப்படைப்பு உருவாகி இருக்கவேண்டும் எனக் கொள்ளலாம்.

ஆரம்பம், திருமணம், கற்புக்கனல், சூட்சி, மீட்சி, முடிவு என ஆறு பகுதிகளைக் கொண்ட கவிதை நூலாக இது அமைந்துள்ளது.

> "வேதத்தில் அகல்யாவைப் பற்றிப் பல சூசகமான கருத்துகள் இருக்கின்றன. அவள் ஒளி, ஆகவே குற்றமற்றவள் என்பது அவற்றுள் மிகவும் முக்கியமான கருத்து. பின்னர் கலப்பையால் பண்படுத்தப்படாத பூமி தேவி அகல்யா என்னும் கருத்தும் ஏற்பட்டது. பிறகு இவ்விரு கொள்கைகளும் ஒன்றாகப் பிணைக்கப் பட்டன. இப்பிணைப்பே இதிகாசத்தில் அகல்யாவின் கதையாக வெளிப்படுகிறது"

எனத் தன் கவிதைக்கு முன்னுரை அமைத்துள்ள இவர் அக்கோட்பாட்டினைத் தழுவியவராக,

"புகைநீக்கிச் செந்தழலின்
புரிநீக்கிச் செவ்வொளியை
நகையாக்க அந்நகையோர்
நறுமலராய்ப் பூத்ததெனப்

பங்கயத்து நான்முகனார்
பங்கயத்துப் பொங்கெரியில்
தங்கம்தழைத்த மதுத்தழற்
கனவாய்த் தோன்றினையே"

என அகலிகையின் பிறப்புப் பற்றி ஆரம்பம் என்ற பகுதியில் கூறுகின்றார்.

இப்படி ஒளியின் உருவாக அவதரித்த அகலிகையினை அவளுடைய பிதா ஸ்தானத்தில் உள்ள பிரமன் உலகத்தை எவன் முதலில் சுற்றி வருகின்றானோ அவனுக்கே மணம் செய்து கொடுப்பதாக ஒரு போட்டி வைக்கின்றான்.

மேகநாதனாகிய இந்திரன் அகல்யாவின் விளையாட்டுத் தோழன். மேகம் ஒளியைக் காதலிப்பதும் அதனால் மின்னலென விளக்கம் உறுவதும் வானில் நடக்கும் விந்தை நிகழ்ச்சிகளல்லவா? இதுவே இந்திரன் அகல்யா ஆகியோரிடையேயான தொடக்க கால உறவுக்கு அடிப்படை.

தன் மனம் கவர்ந்த ஒளிமகளை அடைய மேகநாதன் போட்டியில் முனைப்போடு ஈடுபடுகின்றான். முனிவனான கோதமனும் அகலிகையின் அழகைக் கேள்விப்பட்டு அவளை விரும்பிப் பசு ஒன்றினை வலம் வந்து "ஆவினுக்குள் அண்டாண்டத் தகிலாண்டம் யாவையுமே மேவி நிற்கும்" என வேதம் கூறுவதாக நிலைநாட்டி அகலிகையினை மணக்கின்றான். அகலிகை இந்திரனிடத்துக் கொண்ட காதற்கனவு நிறைவேறாது போய்விடுகின்றது.

காவியத்தின் முதற்பகுதியில் அகலிகை இந்திரனிடம் காதல் கொண்டவளாக இருந்தாள் என யோகியார் வெளிப்படையாகக் கூறவில்லை. திருமணம் என்ற இரண்டாம் பகுதியில் அவள் உள்ளத்தே இந்திரன் மீது ஒரு மயக்கம் இருந்தது என்பதனை,

"தாடிமுனி உன்கைத்
தளிரைப் பிடித்தவுடன்

நாடும் உயிரெல்லாம்
நடுங்கித் துடித்ததுவோ?
தாரைவார்க்கும் தண்ணீர்த்
தாரைநின் கண்ணீரின்
தாரையுடன் கூடித்
தகைமாறிப் போயிற்றோ?

என அகலிகையினை நோக்கி ஆசிரியர் கூற்றாக இவர் தொடுக்கும் வினாக்கள் குறிப்பாய் உணர்த்துகின்றன. வஞ்சக வழியில் நிகழ்ந்த இந்தத் திருமண உறவு ஆசிரியருக்கும் அதிர்ச்சியினைத் தந்துள்ளது என்பதனை அவரது வினாக்கள் உணர்த்துகின்றன.

இந்தத் திருமணத்தின் முடிவில் அண்டங்களைச் சுற்றி வரச் சென்ற இந்திரனும் திரும்பி அதிர்ச்சிக்கு உள்ளாகின்றான். அவனுக்கு அகலிகையின் மீதான காமவெறி தலைக்கு ஏறுகின்றது என்பதாகத் திருமணம் என்ற இரண்டாம் பகுதியினை முடித்துள்ளார்.

எப்படியும் அகலிகையினை அடைந்தே தீருவது என மனதில் உறுதிகொள்கின்றான் இந்திரன். மற்றொருவனுக்கு மனைவியாகிவிட்ட அகலிகை அவன் விருப்பத்திற்கு மனம் இயைந்து உடன்படுவாளாகில் இந்தக் கதையில் போராட்டத்திற்கு இடமில்லை.

ஒருவனைக் காதலித்து வேறொருவனைக் கைப்பிடிக்க நேர்ந்ததால் அல்லலுறும் முக்கோணக் கதைமாந்தர் பல விதத்தினர். இவர்கள் ஒரே போக்கினர் அல்லர். திருமணத்திற்குப் பின்னும் காதலனோடு கள்ளத்தனமாக உறவு வைத்துக் கொள்பவள், கணவனைக் கைப்பிடித்தபின் பழைய காதலனை அடியோடு தலை முழுகி விடுபவள், கணவனுக்குத் துரோகம் இழைக்காதவளாகக் காதலன் வாழ்க்கை மலர வேறொருத்தியை அவன் வாழ்க்கையோடு இணைத்து வைப்பவள், கணவனோடு வாழ்ந்தாலும் இடையிடையே பழைய காதலின் நினைவால் வருந்தினாலும் வேண்டாவெறுப்போடு பெற்றுக் கொண்ட குழந்தைகள் மீது வளரும் பாசத்தால் இறுதியில் தான் பாலை என நினைத்த வாழ்வினைச் சோலையாகக் காண்பவள்

என பல்வேறு மனப்போக்கினராக உலகியலில் இருக்கக் காண்கின்றோம்.

காதலிகளைப் போலவே காதலர்களும் பலரகத்தினர். "எங்கிருந்தாலும் வாழ்க" என வாழ்த்தி ஒதுங்கும் ரகம், அவள் கற்பை மதித்து அவளைச் சகோதரியாகப் பாவித்து அவள் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும் ரகம், காதல் தோல்வியின் ஏமாற்றத்தைத் தாங்காது தேவதாஸைப் போல குடித்துத் தன் வாழ்வை நரகமாக்கிக் கொள்ளும் ரகம், அவள் தனக்குத் துரோகம் இழைத்து விட்டதாக மனதில் வஞ்சம் கொண்டு அவள் அமைதியான இல்லற வாழ்க்கையைக் குலைக்கத் தன்னால் இயன்றதை செய்யும் வில்லத்தனமாக மாறும் ரகம் எனப் பலரகத்தினராக உள்ளனர்.

அவளுடைய காதலைப் பற்றி அறியாது தான் அவளைக் கைப்பிடிக்க நேர்ந்தமைக்கு வருந்தி அவளைக் காதலனோடு சேர்த்து வைக்கும் கணவன்கள், வெறொருத்தன் காதலி தனக்கு மனைவியாக வாய்க்க நேர்ந்ததே என அவளோடு உள்ளம் ஒட்டாது மௌனமாகச் சோக வாழ்வு நடத்தும் கணவன்கள், நடந்துவிட்ட பழையதைப் பற்றி கவலைப்படாது இன்று புதிதாய்ப் பிறந்தோம் என மனைவியின் மனதில் தன் மீது அன்பு மலரும்படி வாழும் கணவன்கள், அவள் செய்யும் சிறு தவறுகளுக்கும் கூட அவளுடைய பழைய காதல் நினைவுகளே காரணம் என அவள் மீது வாழ்நாள் முழுவதும் குற்றம் சுமத்தியபடி தங்கள் குடும்ப வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்ளும் கணவன்கள் என கணவன்மார்களிலும் பலவிதங்களைக் காணலாம்.

இவ்வாறு பல்வேறு கோணங்களில் பாத்திரப்படைப்புக்களை உருவாக்க இடம் தருவதாலேயே உலக இலக்கியங்களில் காதல் முக்கோணக் கதைகளே பெரும்பான்மையனவாக உள்ளன. அவற்றுள் ஒன்றாக அமைந்து விடுவதாலேயே அகலிகை கதையும் பல இலக்கியப் படைப்புகளுக்கு மூலக்கதையாக இன்றளவும் விளங்கி வருகின்றது.

அகலிகையின் பழைய மனமயக்கத்தில் நம்பிக்கை வைத்தவனாக இந்திரன் அவளிடம் காதல் பிச்சை கேட்டு வருவதும்

கற்புநெறியில் பிறழ விரும்பாதவளான அகலிகை அவனை அலட்சியப்படுத்தி ஒதுக்குவதுமே யோகியார் காவியத்தில் கற்புக்கனல் என்ற மூன்றாம் பகுதியில் இடம் பெறுகின்றது. அவளுடைய இந்த நெஞ்சுறுதியை - கற்பெனும் திண்மையை - கவிஞரே,

"கற்பகத்தின் பூப்பறித்துக்
கனிந்தமலர்த் தேன்விரல்கள்
தர்ப்பைகளின் வேரறுத்துத்
தடுமாறிப் போயினவோ?
மின்னல்கோல் ஒடித்து -
விளையாடும் கோலாட்டம்
சின்னச் சமித்தொடிக்கும்
சிறுமையினில் தேய்ந்தவோ?
என்றாலும் நின்முகத்தில்
ஏமாற்றம் காணோமே?
நின்றாடும் ஓரமைதி
நிலையாகப் போயிற்றே
சாந்தம் - எளிமை
தவம்ஞானம் தனிமையெல்லாம்
போந்து விளையாடும்
புதுமையொன்று பூத்ததுவே!!"

என வியந்து பாராட்டுகின்றார்.

அவளுடைய உள்ள உறுதியைக் குலைக்க இந்திரன் பலவாறு அவளிடம் காதல் பிச்சை கேட்டு வேண்டுவதோடு அவள் தன் வேண்டுதலுக்கு இணங்குவது பாவமும் ஆகாது என்பதனை,

"உள்ளமிரண்டு ஒன்றானால்
உடலிரண்டு ஒன்றலவோ?
கள்ளமுனி வஞ்சனைக்காய்க்
கற்புவிற்கப் போமோதான்?

மற்றொருவன் தாரம்நீ
ஆனாலும் வானரம்கைப்
பற்றுமலர் மாலைபறித்
தணைத்தால் பாவமுண்டோ?"

என்பதுபோன்ற வாதங்களால் நிலைநாட்டி அவள் மனதை மாற்ற முயல்கின்றான்.

இத்தகைய வாதங்களால் அகலிகையின் உள்ள உறுதி குலையவில்லை. அவள் தன் கணவனை - கௌதமனை - மட்கலத்து அமுதமாகவும் அவனைப் பொற்கலயத்து மலமாகவும் மதிப்பதாகக் கூறி அவன் வாதங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றாள். இதனால் இந்திரன் மனம் மாறினானில்லை. எப்படியும் அவளை அடைவது என்ற முடிவோடு அங்கிருந்து செல்வதாகக் கற்புக்கனல் என்ற பகுதி முடிகின்றது.

வாதாடி வெற்றிபெற முடியாத இந்திரன் எப்படிச் சூதாகத் தன் திட்டத்தில் வெற்றி கண்டான் என்பதனை விளக்குவதே "சூட்சி" என்ற நான்காம் பகுதி.

இப்பகுதியில் இந்திரன் சிந்தனையின் போக்கினை அவன் கூறும்,

"மந்திரத்தால் மாங்கனிதான்
வீழ்வதுண்டோ! மாதவளைத்
தந்திரத்தால் ஏமாற்றித்
தழுவுவேன்.........
என்னைப் பழித்தாளே
யானவளைக் கற்பழித்துத்
தன்னை பழிப்பாக்கத்
தவறேன்.........
பிச்சைச் சிறுமுனிவன்
பேயன் பொருட் டெந்தன்
இச்சை குலைத்தாள்
இவள்குலையப் பார்ப்பேனே"

என்பது போன்ற சபத மொழிகள் தெளிவாக்குகின்றன.

பின் ஓர் இரவில் இரண்டாம் யாமத்தில் வேடன் உருவில் வந்த இந்திரன் "கொக்கரக்கோ" எனப் போலிக் குரல் கொடுக்க அதனை உண்மையென நம்பிக் கௌதமன் சந்தி செய்யக் குடிலை விட்டு வெளிச் செல்கின்றான். இந்திரன் கௌதமன் வடிவில் குடிசையில் நுழைந்து புரிந்த அடாத செயலை,

"ஆசை அவசரத்தில்
அஞ்சுங் கணத்துள்ளே
மோசச் சுளிப்பினிலே
முன்னேறும் வானரசன்
ஆங்கவளைக் கண்டான்
அழகுண்டான் கொண்டான்
தீங்கு தடுப்பாரில்லை
தீமை புரிந்துவிட்டான்"

என விவரிக்கின்றார்.

அப்பொழுது அகலிகை

"என்றுமில்லாப் பேராசை
என்கணவர் கொண்டாரே
இன்று கண்டேன் பேரின்பம்"

எனத் தன் மனத்து எண்ணிய எண்ணமே இக்காவியத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றது.

அகலிகை வெண்பாவில் கூறப்பட்டுள்ளது போல இந்திரன் தன்னோடு போராடித் தோற்று மயங்கி மூர்ச்சையுற்ற அகலிகையைப் புணர்ந்தான் என்றோ வான்மீகம் கூறுவதுபோலத் தன்னைத் தழுவிக் கலவி செய்பவன் தேவர்கோன் என்று உணர்ந்து மனதில் மகிழ்ச்சி கொண்டாள் என்றோ கூறாமல் ஒரு புதிய போக்கினைத் தன் புனைவில் யோகியார் கடைப்பிடித்துள்ளார். அகலிகை வெண்பா ஆசிரியர் புனைவு, இந்திரனை இழிநிலைக்குத் தள்ளுவதாகவும் வான்மீகத்தின் போக்கு அகலிகையினை இழிநிலைக்குத் தள்ளுவதாகவும் அமைகின்றன. இரண்டிற்கும் இடைப்பட்டதான

இவரது புனைவு, பின்னர் அகலிகை "நெஞ்சினாள் பிழைப்பிலாள்" என இராமன் எடுத்துக் கூறி நிறுவ ஏற்ற அடித்தளம் கொண்டதாகும்.

விடியல் நெருங்கவில்லை என உணர்ந்த முனிவன் திரும்பி வரும் ஓசை கேட்ட இந்திரன் ஒரு பொந்தின் வழியே பூனை உருக்கொண்டு வெளிச் செல்கின்றான். இருளில் தன்னைத் தழுவி இன்புறுத்தியவன் தன் கணவனில்லை என்பதனை அகலிகை அப்போதுதான் உணர்கின்றாள். இது அவளை மிகுந்த அவலத்துக்கு உள்ளாக்குகின்றது. நடந்ததை உணர்ந்த முனிவரன், "தீங்கு செய்த இந்திரன் மேனி பெண்குறி ஆயிரமாகத் தீமையுறச் சபிக்கின்றான். "இல்லாம் பெருந்தருமம் இழிந்த" அகலிகை கல்லாகுமாறு சபிக்கின்றான்.

தேவர்கள் இந்திரன் சார்பில் கோதமனை அணுகி அவன் உடலில் தோன்றிய பெண்குறிகளை மாற்ற வேண்டுகின்றார். அவற்றைக் கண்களாக மாற்றிய கோதமன் கல்லான அகலிகையின் நிலைக்கு மனமிரங்கினானில்லை. இந்த அநீதியைக் கவிஞர்,

"அறம்நின்றாள் வீழ்ந்தாள்
அறம்கொன்றார் வாழ்கின்றார்
திறம்கொண்ட செம்மாப்பால்
தீமைபுரிந்து விட்டார்
காதலன்தான் கற்பழித்தான்
கணவன்அவள் பொற்பழித்தான்"

எனச்சாடி சூட்சிப் பகுதியை முடிக்கின்றார்.

மீட்சிப் பகுதி மிகச் சுருக்கமானது. கல்லாகக் கிடந்த அகலிகை இராமன் காலடி தீண்டப் பெற்று மீண்டும் பெண்ணாகின்றாள். இதனால் வியப்புற்ற இராமனுக்கு விசுவாமித்திரன் பண்டு நிகழ்ந்ததனைத்தையும் எடுத்துகூற இராமன் அதனைக் கேட்டபின் அவள் காலில் விழுந்து வணங்கி,

"நீ பிழைத்தாய் அல்லைநினைப்
பிழைத்தார் எல்லோரும்

ஆயிழைநீ தருமத்திற்கு
அறிகுறியாய் நின்றாயே
ஆதலினால் துன்பமுறேல்
அன்னாய்......"

என அவளைத் தேற்றி கோதமனிடத்து அழைத்துச் செல்கின்றான்.

மீட்சிப் பகுதி புராண இதிகாச மரபினை ஒட்டியதாக அமைந்தது. முடிவுப் பகுதியில் யோகியார் சில மாற்றங்களைப் புகுத்திப் புதுமை செய்துள்ளார்.

அகலிகையோடு தன்னை வந்தடைந்த இராகவனைக் கோதமன் வரவேற்றான் எனினும் அகலிகையினை அவன் கண்டுகொள்ளவில்லை. இராகவன் மனதுள் இதனால் சினம் மூண்டதை உணர்ந்த விசுவாமித்திரன்,

"பெண்பிழைத்த தில்லைஅவள்
பிறன்பிழைக்கப் பிழையுற்றாள்
மனைக்குற்றம் என்றாலும்
மனக்குற்றம் இல்லாளை
உனக்குற்ற மனையாளை
ஒதுக்குவதால் பழிபோமோ?"

எனக் கோதமனை வினவி இராகவன் குறிப்பை உணர்த்தவும், கோதமன் அறிந்து குற்றத்திற்கு ஆட்பட்டாலும் அறியாது குற்றத்திற்கு ஆட்பட்டாலும் அதன் காரணமான பழி நீங்காது என எதிர்வாதம் செய்கின்றான். இறுதியாக அவன் நெஞ்சத்தில் நெடுங்காலமாகப் புதைந்துகிடைந்த சந்தேகப் பேயும்,

"வஞ்சமகள் வாலிபத்தில்
வானரசைக் காதலித்தாள்;
அப்போதைக் காதலன்றே
இப்போது இப்பிழையாக
எப்போதும் இழிந்தவளாய்
எளிமையுறச் செய்ததுவே"

என்ற சொற்களின் வாயிலாக வெளிப்படுகின்றது.

இதனைக் கேட்ட இராமன் சினமுற்றவனாக,

"அப்போதே வானரசைக்
காதலித்தாளாம் அறிந்தும்
மெய்ப்போத முனிவன் நீ
வேட்டாயே"

அது ஏன் என்று கேட்டதோடு,

"விளையாட்டுப் பருவத்தில்
விளையாட்டுத் தோழன்அவன்
களைகாட்டி அதில்குற்றம்
கற்பிக்கலாமா?"

என்றும்

"தான் ஏமாந்தாள் குற்றந்தானே
என்பா யேல் நீ
தான்கோழிக் குரல்கேட்டு
ஏமாந்தாயே"

என்றும்

"கண்ணால் உனைக் கண்டால்
வானரசைக் காணவில்லை
எண்ணத்து உனைஏற்றாள்
வானரசை ஏற்கவில்லை"

என்றும் அகலிகைக்காகப் பரிந்து வாதிடுவதோடு சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இவ்வாறு பெண்கள் ஆண்களால் பழிக்கு உள்ளாக்கப்படுவதை நினைத்து,

"ஐயோ! தருமமே
ஆண்வஞ் சனைக்காகப்
பொய்யாத பெண்பெருமை
போயொழியப் பார்த்தாயே
வேதமே! வேதவிதியே!
விலைமகள் போல

மாதரசின் கற்பழியா
மாட்சி குலைத்தாயே"

என வருந்தவும் செய்கின்றான்.

கோதமன் அகலிகையினைத் தன் தவறு உணர்ந்து ஏற்றுக்கொள்வதில் சிறப்பில்லை. தன்னைப் புரிந்து கொள்ளாத கௌதமனை மீண்டும் அவள் ஏற்றுக் கொள்வதில்தான் பெண்ணினத்தின் பெருமையுள்ளது எனக் கருதும் இராமன்,

"தீயேற்குமோ வேள்விச்சிதை
ஈரம் புனகந்தால்?
அவள் உன்னை ஏற்பாளேல்
அதுவன்றோ பெருந்தன்மை!

ஆதலினால் அடிபணிந்தே
அவள் பொறுமை வேண்டிடுநீ
காதலினால் அல்லவெனில்
கடமையினால் கடன்தீர்ப்பாய்"

எனக் கௌதமனுக்கு கட்டளையிட இராமன் சொற்களைத் தெய்வ வாக்காக ஏற்று அகலிகையின் பாதத்தில் பணிய முற்படுகின்றான்.

தன் கணவன் எவ்வளவு கொடியவனாயினும் அவன் மற்றவர் முன்னிலையில் - அவர்கள் தனக்கு வாழ்வளித்த தெய்வமாயினும் - தலைகுனிய அனுமதிபது பெண்மைக்கு அழகாகுமா?

"வீழ்வானை விழாமுன்
மேலெடுத்துத் தான்தாழ்ந்த"

பெருமைக்குரியவளாக அகலிகையினை மேலும் ஒருபடி உயர்த்தித் தன் காவியத்தை முடிக்கின்றார் யோகியார்.

சென்று தேய்ந்து இறுதல் என்ற குற்றத்திற்கு ஆட்பட்டு விடுதல் பொதுவாகக் காவியங்களில் காணப்படும் பெருங்குறை. அத்தகைய குறை நேராமல் இறுதிப் பகுதியினைச் சுவையாகவும் புதுமைக் கருத்துக்களும் புரட்சி எண்ணங்களும் கொண்டதாகவும்

படைத்துள்ளார் யோகியார். பாரதி பாரதக் கதையில் பாஞ்சாலி சபதத்தில் செய்துள்ள புதுமைகளையும் புரட்சிகளையும் ஒத்த மிகச் சிறியதான கருவுடைய இதிகாசக் கதையை வைத்து யோகியார் செய்துள்ள புதுமை. அதனாலேயே இது கவிதை நடையில் அமைந்து அகலிகை காவியங்களுள் முதலிடம் பெறும் சிறப்புக்கு உரியதாக ஆவதோடு தன் சமகாலத்து வாசகர்கள் விமர்சகர்கள் ஆகியோர் பாராட்டுக்கும் உரியதாகத் திகழ்ந்தது.

இதன்கண் அமைந்துள்ள கருத்து நலனே இங்கு எடுத்துக் கூறப்பட்டது. கவிதைக்குரிய நயங்கள் அந்த நோக்கில் மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டிய குறுங்காவியம் இது.

அகல்யா

டி.டி. மீனாட்சி சுந்தரம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளராக இருந்த டி.டி. மீனாட்சி சுந்தரம் "ஒரு சிறந்த கலா ரசிகர். நூலாசிரியர். நாடகாசிரியர், ஓர் உயர்ந்த கவிஞர்" என்று தமிழறிஞர்களால் பாராட்டப்பெற்றவர். பதவியிலிருப்பவர்களுக்குத் தமிழ் மீது தனி மோகம் ஏற்படுவதற்குத் தமிழ்நாட்டில் நிறையவே உதாரணங்கள் காட்டலாம். கவிஞராக விளங்கிய இவர் "கலைவாணி", "ஓவியம் செய்த வேலை" என்ற இரு நாடகங்களையும் படைத்துள்ளார்.

அகலிகையின் பாத்திரத்தின் கனம் இவர் கவனத்தையும் கவர்ந்துள்ளது. அதன் விளைவாகத் தோன்றியதே இவரது குறுங்காவியமான "அகல்யா". தவறுவது மனித இயல்பு. அவ்வாறு தவறுபவர்களை மன்னிப்பது மனித இயல்பின் உயர்நிலை. உலகில் தவறு செய்பவர்களில் பெரும்பாலோர் தங்கள் தவற்றினை நேர்மையாக ஒப்புக்கொள்வதில்லை. அதற்கான நொண்டிச் சமாதானங்கள் சொல்லவே செய்கின்றனர். வழக்கு மன்றங்களில் கொலைகாரனுக்காக வாதாடும் வழக்கறிஞர்கள் கூட இந்த வகைதானே. சந்தர்ப்ப சூழ்நிலைகளைத் தங்கள் கட்சிக்காரனுக்குச் சாதகமாக எடுத்துக்காட்டி அவனைத் தண்டனையிலிருந்து தப்புவிக்க முயற்சி செய்வதைத்தானே காண்கின்றோம்.

மீனாட்சி சுந்தரம் அவர்களும் அகலிகையின் கதையினை இந்த நோக்கிலேயே அணுகிக் காவியமாக்கி உள்ளார். இத்தகைய அணுகு முறைக்கான காரணத்தை அவரே.

> "பழங்கதையில் கண்ட அகல்யா பலவிதமாகத் தோன்றுகின்றாள். பலர் பலவிதமாக அவளைத் தீட்டி இருக்கின்றார்கள். அவள் மனக்குற்றம் புரியாவிட்டாலும்

> வலையில் அகப்பட்டுக் கொண்ட மானைப் போன்றது அவள் நிலை. இந்திரனின் காமவேட்கை தணியும் படிக்குத் தன்னைக்காவா நிலைக்குக் கொண்டு வந்து வைத்தது. இதையே நாம் பலர் காட்டும் அகல்யாவிடம் காண்கின்றோம். அகல்யா ஒரு குற்றமும் புரியாத ஒப்பற்ற கற்பின் தெய்வம் என்பதனைக் காட்டவும் கதையைத் திருத்தி அமைக்கலாம். அவள் உடலும் தூய்மையே அவள் உள்ளத்தைப்போன்று என்பதையும் காட்டிவிடலாம். அதுவே நான் செய்துள்ளது. கற்புடைய கண்மணி பழியைத் தடுத்தாள் கற்பைக் காத்தாள் என்பதே இக்கதையின் சாரம்".

எனத் தன் காவியத்தின் முன்னுரையில் விளக்கியுள்ளார்.

படைப்பாளர்கள் இவ்வாறு புதுமையான மாற்றங்கள் செய்வதேன்? இதற்கு அவர்களுடைய மனநிலை மட்டும் காரணமன்று. அவர்கள் வாழும் சமூகத்தின் தாக்கமும் காரணமாகின்றது என்பதனை மாதவியின் பாத்திரப் படைப்புப் பல்வேறு காலகட்டங்களிலும் பெற்றுள்ள புத்துருவாக்கங்கள் வழி தெளியலாம். மாதவி கணிகையர் குலத்தவள். இளங்கோ அவளிடத்து மிகுந்த பரிவு காட்டியவராக அவள் பாத்திரப் படைப்பைப் புனைந்துள்ளார். பின்னர் வந்த கூத்துக்காரர்களும் திரைப்படக்கதை ஆசிரியர்களும் அவளை வேறு நோக்கில் பார்த்தனர். கண்ணகி உற்ற துன்பங்களுக்கான பொறுப்பு முழுவதையும் மாதவி தலையில் சுமத்தினர். பார்ப்பவர்கள் அவள் மீது வெறுப்பும் சினமும் கொள்ளும் வகையில் தன்னலமே வடிவான ஒரு பாத்திரமாக்கி அவளை உயர்நிலையிலிருந்தும் கீழ்நிலைக்குத் தள்ளியுள்ளனர். இந்த மாற்றத்திற்கான காரணத்தைச் சமூகவியல் நோக்கில் காணும்போது தெளியலாம். இளங்கோ, தன் காலத்தில் காமக்கிழத்தியராக வாழ்ந்த மகளிரின் மாதிரியில் மாதவியினை உருவாக்கியுள்ளார். பிற்காலத்தில் கணிகையரின் சமூகநிலை சங்ககாலப் பரத்தையர் சமூகநிலையிலும் வேறுபட்டதாக இழிநிலையுற்றுத் தம்மை நாடி வருவோர் பொருள் ஒன்றையே

குறிக்கோளாகக் கொண்டதாக மாறிவிட்டது. பிற்காலச் சிற்றிலக்கியமான விறலிவிடு தூது முதலியன இந்த மாற்றத்தின் விளைவாகப் படைக்கப்பட்டவை. காலச் சக்கரச் சுழற்சியில் வரலாறு திரும்புவது இயல்பான நியதி. தேவதாசிகள் ஒழிப்புச் சட்டத்தின் வழி பரத்தமைத் தொழிலுக்கு உரிய ஒரு சாதி சமூக உரிமம் பறிக்கப்பட்டதாகி விட்டது. சமூக அமைப்பின் குறையே பரத்தையர் என்ற ஓரினத்தின் நிலைக்குக் காரணம் என்று நிறுவப்பட்டுவிட்டது - சட்டத்தால் இந்தச் சூழலின் பின்னணியில் படைக்கப்பட்டவளே கலைஞர் கருணாநிதியின் பூம்புகார் நாயகி மாதவி. இவள் இளங்கோ படைத்த மாதவியைக் காட்டிலும் பண்பிலும் தியாகத்திலும் சிறந்தவளாக மீட்டுருவாக்கம் பெறுகின்றாள். இத்தகையதொரு உயர்நிலையினை அகலிகையின் பாத்திரத்தின் மீதும் ஏற்றி அவளை ஒரு மாசற்ற மாணிக்கக் கல்லாக கற்பின் ஒளிதிகழும் சோதியாகக் காட்ட "அகல்யா" காவிய ஆசிரியர் முற்பட்டுள்ளார்.

இதற்கேற்ப கௌதமர் பாத்திரத்திலும் சில புதுமைகளைப் புகுத்தியுள்ளார். இக் காவிய நாயகனான கௌதமன் இளைஞன்; கலைஞன். அகலிகையிடம் நீங்காக் காதல் கொண்டவன். அழகை ஆராதிப்பவன். இத்தகைய நல்ல பண்புகள் வாய்க்கப் பெற்றவன் தன் காதல் மனையாளை வெறுத்துச் செல்லக் காரணம் விதி செய்த சதி என்பது காவிய ஆசிரியரின் வாதம்

அகல்யா கல்லாகச் சபிக்கப்படுதல், கல் இராமன் பாதம்படப் பெண் உருவடைதல், இந்திரன் சேவல் உருக்கொண்டு கூவி உட்புகுந்து பின் பூனை வடிவில் வெளியில் பயந்தோடல், அவன் உடம்பெல்லாம் ஆயிரம் கண்கள் தோன்ற அவன் அவதியுறல் ஆகிய பூர்வ கதை நிகழ்ச்சிகள் நடக்க இயலாத நம்பமுடியாதன எனக்கூறும் மீனாட்சி சுந்தரம் இவற்றில் பொதிந்துள்ள தத்துவங்களின் உண்மையினைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

> "பாலைக் குடித்துச் செல்லும் கள்ளப்பூனை பதுங்கிப் பதுங்கி ஓடுவது போன்று இந்திரன் கௌதமரைக் கண்டவுடன் பயந்து நடுங்கி ஓடி

இருப்பான். அகல்யா கல்லானாள் என்றால் அவள்ளைக் கௌதமர் பாபி என்ற முடிவு கட்டியபின் அவளை அவர் ஒரு கல்லாகவே மதித்திருப்பார். அவருடைய காதல் மறைந்திருக்கும். இப்படியே இந்திரன் உடல் ஆயிரம் கண்களாக மாறியது என்றால் அவன் இழைத்த தீங்கு உலகத்தையே அவனுக்கு எதிராகத் திரட்டியிருக்கும். ஒருவனுக்கு ஓரிரண்டு பேரே விரோதிகளானால் அவர்கள் எங்கிருப்பாரோ என அங்குமிங்கம் மோதி ஏங்கித் தவிக்கும் அவனது இரு கண்கள். அவனை உலகமே விரட்டியடித்துப் பழிக்குப் பழி வாங்க முந்துமேயானால் அவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இரண்டு கண்கள் இருந்தால் போதாது. ஆயிரம் கண்கள் வேண்டும்".

புராணக் கதைகளை எள்ளி நகையாடும் இன்றைய பகுத்தறிவாளர்களுக்குப் பதில் உரைப்பது போல இராவணனுக்குப் பத்துத்தலை என்பது அவன் தலைகனத்தை - ஆணவத்தை - குறிக்கும் படைப்பாளியின் குறியீடே என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அடிக்கடி கூறும் விளக்கத்தைப் போன்ற மேற்கண்ட விளக்கம் ஓரளவு பகுத்தறிவுக்கு பொருத்தமானதாக அமைகின்றது. இந்தப் புதிய நோக்கில் புராண வரலாற்றை மாற்றுருவாக்கம் செய்திருக்கும் இவர் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளை நீக்கி அகலிகையின் வரலாற்றைக் காவியமாக்கியுள்ளார்.

இவருடைய படைப்பில் அகலிகை இந்திரனை இளமையிலே அறிந்திருந்தாள். அவனோடு நட்புரிமையோடு பழகினாள். ஆனால் அவனைக் காதலிக்கவில்லை என்பதனை,

நண்பன் என நினைத்து
　　நேசத்துட னிருந்தேன்
அன்பை அறியாமல் நீ
　　ஆசை கொண்டாய் வீணே
ஒளியென நானிருந்தேன்
　　ஒளியெனவே மிளிர்வேன்

பழி என்மேல் கொண்டுவரப்
பாபச் சொல்லை உரைத்தாய்

(பாடல் : 12)

என்று அகலிகையின் கூற்றாகவே எடுத்துரைக்கின்றார்.

பின்னர் அகலிகை கலைஞனான இளைஞன் கௌதமனைக் கண்டு காதல் வயப்படுகின்றாள். கௌதமனும் அவளை விரும்புகின்றான். இவர்கள் காதலுக்குத் தடையேதுமில்லை. கௌதமன் அகல்யாவை மணந்து கொண்டு இல்லறம் நடத்துகின்றான்.

ஒரு நாள் அகல்யா நீராடி வருகையில் இந்திரன் குறுக்கிட்டுத் தன் ஆசையை வெளியிடுகின்றான். அவள் அவன் விருப்பத்தை மறுத்துக் கடிந்து விரட்டுகிறாள். அவ்வேளை கௌதமன் அகல்யாவைத் தேடி வருகின்றான். இந்திரன் அகல்யா சந்திப்பு அவன் மனதில் சந்தேக வித்தை ஊன்றுகின்றது. இந்திரனின் இத்தகாத செயலைத் தன் கணவனிடம் கூறி அவன் மனதைப் புண்படுத்த அகல்யா விரும்பவில்லை.

அன்றிரவு நடுநிசியில் கௌதமன் இல்லாத வேளையில் இந்திரன் பொய்த்தாடி புனைந்து கௌதமன் உருவில் குடிவில் நுழைந்து அகல்யாவைக் கற்பழிக்க முயல்கின்றான். அவள் சீறியெழுந்து அவனைத் தடுக்கின்றாள். இந்திரன் வலிந்து அவள் கையைப் பற்றுகின்றான். அவள் தன்னைக் காத்துக் கொள்ள அவனைத் தள்ளுகின்றாள். அவ்வேளையில் கௌதமன் அங்கு வந்து விளக்கைத் தூண்டி இக்காட்சியைக் கண்டு திகைப்பதை,

கௌதமன் விளக்கைத் தூண்டிக்
காண்பது கனவா ஐயோ
கௌதமன் வாழ்க்கை விளக்காய்க்
காதலைக் காட்டி ஒளிர்ந்த
அகலிகை அன்பா இன்று
அணைந்தது, ஐயோ பாவம்

அகலிகை களங்க மற்றே
ஒளிர்வதும் அறிய நேரான்

(பாடல் : 115)

எனச் சித்தரிக்கின்றார். சந்தர்ப்ப சூழ்நிலை கௌதமன் மனதில் விழுந்த சந்தேக வித்து முளைத்து வளர்ந்து அவர்கள் வாழ்க்கையைச் சீர்குலைத்து விடுகின்றது. அன்று மாலையில் அவர்களிடையேயான 'சந்திப்பை இந்நிகழ்ச்சியோடு முடிச்சிட்டுப் பார்த்த கௌதமன் அகல்யா இந்திரனிடம் காதல் வயப்பட்டாள் என்ற முடிவிற்கு வந்தவனாக அவளைச் சபித்துவிட்டு அங்கிருந்து வெளியேறுகின்றான்.

இராமன் அகல்யாவின் குடிலை அடைந்த போது அகல்யாவின் விளக்கம் காரணமாக நடந்த உண்மை வெளிப்படுகின்றது. இராமன் கௌதமனை அழைத்து,

"பத்தினிப் பெண்தான் அகல்யா
பதியென ஏற்பாய் நண்பா
சத்தியம் ஜெயத்தை நாட்டும்
சிந்தையின் சலனம் விடுவாய்
அத்தினம் நடந்த தெல்லாம்
அறிவேன் யான்நீ தான்அந்தோ
வித்தியாச மாய்நினைத்தாய்
விதிசெய்த சதிதான் அன்பா"

(பாடல் : 127)

என உண்மையினை எடுத்துரைத்து அவர்களை மீண்டும் ஒன்று சேர்த்து வைப்பதாகத் தன் காவியத்தை முடித்துள்ளார் மீனாட்சி சுந்தரனார்.

168 பாடல்களைக் கொண்ட இக்குறுங்காவியத்தில் பாடல்கள் கவிதை நயம் வாய்க்கப் பெறாது போனதே இது நல்ல வரவேற்பினைப் பெறாது போனதிற்குக் காரணமாகலாம். கவிதைக் கலை கைவரப்பெறாதவர்கள் அம்முயற்சியில் ஈடுபடும்போது

எவ்வாறு பரிதாபத்திற்கு உரிய படைப்பாளிகளாக ஆகின்றனர் என்பதற்கு இப்படைப்பு ஓர் எடுத்துக்காட்டாகின்றது.

அகலிகை வெண்பா புலவர்கள் குழுவிடையே நல்ல வரவேற்பைப் பெற்று மூன்று பதிப்புக்கள் வெளிவந்தது. பாலபாரதி ச.து.சு. யோகியாரின் அகல்யா காவியம் கவிஞர் உலகத்தின் பாராட்டைப் பெற்றது. இந்த இரு சாராரின் கவனத்திற்கும் உரியதாகாது இக் காவியம் புறக்கணிக்கப்பட்டதற்குக் காரணம் புதிய கருத்து வளம் கொண்டதாயினும் கவிதை நயம் இல்லாது போனதேயாகும். நாடகத்துறை அனுபவம் உள்ள இவர் இதனைத் தன் புதுமைக் கருத்துக்கேற்ப நாடகமாகப் படைத்திருப்பாரானால் இலக்கிய உலகில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கக் கூடும்.

உயிர் மகள்

ந. பிச்சமூர்த்தி

பாரதிக்குப் பின் வசன கவிதையைத் தமிழில் வளர்த்த படைப்பாளி ந. பிச்சமூர்த்தி. அகலிகையின் கதையினை வசன கவிதையில் முதன்முதலாகப் படைத்த பெருமைக்கு உரியவர். 525 வரிகளில் அமைந்த இக் குறுங்காவியம் 1945 ஆம் ஆண்டில் கிராம ஊழியன் இதழில் தொடராக வெளிவந்துள்ளது.

இக் காவியத்தின் முதற் பகுதி இதிகாச மரபினை ஒட்டிப் புனையப்பட்டுள்ளது. பிரம்மன் வேள்வியில் அவனுடைய கற்பனையின் கடுந்தவத்தில் பிறந்த ஒளிமகளே அகலிகை என அவளுடைய பிறப்பைப் பற்றிக் கூறுகின்றார். அந்த அழகு மகள் மீது அவனே மோகம் கொண்டவனானான். தந்தை நிலையில் உள்ள அவன் தான் படைத்த அந்த உயிரினைத் தானே துணைவியாக ஏற்றல் தகாது என்ற எண்ணத்தால் அவளுக்கு ஏற்ற மணமகனைத் தேர்ந்தெடுக்க,

> "அண்டத்தை ஓர் நொடிக்குள்
> சுற்றிவரும் வீரனுக்கே
> ஆரணங்காள் அகலிகையை
> அளித்திடுவேன்......"

என ஒரு போட்டியை ஏற்பாடு செய்கின்றான்

மற்ற தேவர்கள் இப்போட்டியின் கடுமையை எண்ணிப் பின் வாங்க இந்திரன் மட்டும் முயற்சி மேற்கொள்கின்றான். முனிவருள் கோதமனுக்கும் இப்போட்டியில் வெற்றி கண்டு அகலிகையை அடையவேண்டும் என்ற வேட்கை முகிழ்க்கின்றது.

கவிஞர், இந்திரனை உடல் வலிமையின் குறியீடாகவும் கோதமனை அறிவு ஆற்றலின் குறியீடாகவும் கொண்டு கதையினை நடத்திச் செல்கின்றார். புராண இதிகாசகக் கதைகளில் வரும் பாத்திரங்கள் பண்பின் குறியீடே. தருமன் பொறுமையின் குறியீடாக விளங்கக் கர்ணன் நன்றியறிதலின் குறியீடாக அமைகின்றான். பாரதக் கதையில் இப்படியே ஒவ்வொரு பாத்திரத்தையும், ஒரு பண்பின் குறியீடாகக் கொண்டு செலுத்தலாம். இக் குறியீடுகளுக்கு உயிர்கொடுத்துப் பாத்திரங்களாக்கி அவைகளிடையேயான போராட்டத்தால் வாழ்க்கையின் சிக்கலை விளக்குவதே பண்டை இலக்கியங்களின் நோக்கம். இந்த அடிப்படையில் பார்க்கும் போது அகலிகை அழகு என்ற பண்பின் குறியீடான பாத்திரமாக விளங்குகின்றாள். அழகினை ஆண்டு அனுபவிக்கும் திறன் அறிவுக்கா அல்லது ஆற்றலுக்கா? இந்தக் கேள்விக்கு விடைகாணும் நோக்கிலே தன் காவியத்தை நடத்திச் செல்கிறார் ந. பிச்சமூர்த்தி.

"நெருப்புக்கோர் நீரைப்போல
யானைக்கோர் யாளிபோல
இந்திரனின் ஆசைவரையை
அறுக்கவோர் அறிஞன் வந்தான்
உலகத்தைக் கவ்வுமிருளை
வெட்டிடும் வெய்யில்போல்வான்"

என்ற கோதமனைப் பற்றிய அறிமுகம் அவன் அறிவின் பிரதிநிதியாக அழகை ஆராதிக்க அடிமைகொள்ள முற்படுகின்றான் என்பதனைத் தெளிவாக்குகின்றது.

இந்திரன் ஐராவத்தில் ஏறி உலகத்தைச் சுற்றப் புறப்படுகின்றான். வாகனம் ஏதும் இல்லாத கோதமன்,

"எண்ணத்தின் மின்வேகத்தில்
ஈரேழுலகம் சுற்றி
அருகிருந்த ஆவைத்தொழுது
அகலிகை தாரும்எனக்"

கேட்க அவன் நியாயத்தை ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளான பிரமன் இந்திரன் திரும்பும் முன்பே அகலிகையைக் கோதமன் மனைவியாகத் தாரை வார்க்கின்றான்.

மானுடரோடு காதல் போட்டியில் தேவர்கள் தோல்வியே அடைகின்றனர். தமயந்தியை நாடி வந்த தேவர்களைப் போலவே இங்கும் இந்திரன் தோல்வியாலும் ஏமாற்றத்தாலும் நெஞ்சு எரிந்து அகலிகையின் இல்வாழ்க்கையைச் சுட்டுப் பொசுக்கத் திட்டம் இடுகின்றான். அதனைத் தன் சபதமாகவும் அகலிகையிடமே,

"நெஞ்சை நான் பறிகொடுத்து
நஞ்சையே மார்பி லிட்டேன்
எனினும் இக்காதல் நெருப்பு
நெஞ்சிலே நீராகாது
இன்றல்ல நாளையல்ல
ஏழாண்டு ஆன பின்னும்
மனநரி யின்கால் மண்ணால்
உயிர்வழி தூர்ந்து போகத்
தடம்கெட்டுத் தவிக்கும் போது
தென்றலாய், மலராய், மதியாய்
இந்திரனாம் இன்பம் வருவேன்
தவிப்பன்று அடங்கக் காண்பாய்
உயிர்க்குழல் இசைக்கக் கேட்பாய்..."

எனக் கூறிச் செல்கின்றான்.

இந்திரனின் இந்தச் சபதமொழி அகலிகையின் அடிமனதில் ஆழப்பதிந்துவிட்ட ஒன்று. தன் வாழ்க்கையின் சுவையற்ற இயந்திர கதியை எண்ணி, பின்னர் அகலிகை மனம் வருந்துகின்றாள். பாலையாக உள்ள தன் வாழ்வு சோலையாக மாறத் துணை செய்யும்படி தன் கணவன் கோதமனிடம் வேண்டுகின்றாள். தன் உடல் தாபத்தைத் தணித்தல் தன்னைச் சூழ்ச்சியால் வென்று தன் உடைமையாக்கிக் கொண்ட முனிவன் கடமை என்பதை அகலிகை நயமாகவும் குறிப்பாகவும் எடுத்துரைத்ததை அவன் ஏற்றுக்

கொள்ளவில்லை. "அகலிகை சொற்கள் நும்பம் காட்டிலோர் நிலவாயிற்று".

மாசி மாதத்து நிலவு பொழியும் இரவு ஒன்றில், அகலிகையும் கோதமனும் தூக்கம் பிடிக்காமல் மனம் கலங்கியபடி உள்ளனர். அன்று பௌர்ணமி நிலவொளியில் வெளி உலகம் ஆரவாரம் மிக்கதாக உள்ளது. தன் மனச்சான்றே தன்னை உறுத்தியதால் தூக்கமின்றித் தவித்த கோதமன் விடியல் வேளை வந்துவிட்டது என்று தவறாகப் புரிந்து கொண்டு ஆற்றங்கரை நோக்கிச் செல்கின்றான். அகலிகை குடிலை விட்டு வெளியே வந்து இயற்கையின் அழகில் மயங்கியவளாகத் தன்னை மறந்து இருக்கின்றாள். அப்போது வானவர் அரசனான இந்திரன் அவள் முன் தோன்றிப் புலன்களின் மயக்கத்தில் - போதையில் - ஆழ்ந்தவளான அகலிகையினை எளிதில் தன்வசமாக்கிக் கொண்டு உடலுறுவு கொள்ள.

> **"புலன் வழி உயிர் இணங்கி**
> **மலர்ந்தது இன்பம் பொழிய"**

என அவர்கள் உறவை விவரிக்கின்றார் கவிஞர்.

இந்திரன் சேவலாக வந்து கூவி முனிவனை வெளியேற்றுவதும், பாதிதூக்கத்தில் தன்னை மறந்தவளாக இருந்த அகலிகையினை இந்திரன் முனிவன் வேடத்தில் கூடி மகிழ்தலும், பின் முனிவன் திரும்பப் பூனை உருவில் இந்திரன் வெளியேறுதலும், ஆகிய புராண நிகழ்ச்சிகளைத் தவிர்த்து இயல்பான நடைமுறைக்கு இயைந்த நெறியில் தன் குறுங்காவியத்தை நடத்திச் சென்றுள்ளமை இப்புதுக்கவிதையில் அமைந்த மற்றுமொரு புதுமையாகும்.

சென்ற முனிவன் வெள்ளி முளைக்கவும் இல்லை என்பது அறிந்து திரும்புகின்றான். கலவியில் தங்களை மறந்தவர்களாக இருந்த அவர்கள் நிலை அவனை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றது. குணம் எனும் குன்றேறியவனாயினும் அகலிகையின் துரோகம் அவனுள் சினத்தீயை மூட்டுகின்றது. சினந்த கோதமன்,

"கனவுகள் மண்ணதாக்கும்
கல்மனம் படைத்தாய் பெண்ணே!
கல்லதாய்க் கிடந்து என்றும்
பொழிந்திடும் தேன் எழில்கள்
பருக வோர் திறமுமின்றி
ஊமையாய்த் துடிக்கக் கடவாய்"

எனச் சாபம் இட அகலிகை கல்லாகின்றாள்.

இந்திரன் உடலெல்லாம் கண்ணாகச் சாபம் இடம் பெறாதது கவிஞர் செய்துள்ள மற்றுமொரு புதுமை.

காலம் சுழன்றோடுகின்றது. ராமன் கால் துகள் பட்டு அகலிகை உயிர்பெற்றெழுகின்றாள். அகலிகை வரலாற்றினைக் கேட்டறிந்த அவன் கோதமனைப் பார்த்து இயற்கை நெறிக்கு முரண்பட இல்லறம் நடத்தி அகலிகை நெறிதவறக் காரணமாவனவன் அவனே என்பதனை எடுத்துணர்த்தி மீண்டும் அவர்கள் இல்லறவாழ்வில் இணைந்து வாழத் துணை செய்கின்றான்.

கற்பு, ஆண் பெண் ஆகியோரிடையேயான உடலுறவு, கள்ளக் காதல் ஆகியன பற்றி ராமன் கூற்றாக கவிஞர் உணர்த்தும் கருத்துகள் புதிய நோக்கிலானவை.

கணவனோ பெண்களுக்கு
இருவரென் றியற்கை ஆணை
தீயின்முன் கொண்ட கணவன்
உலகினர் உலகத்தோர்கள்
அறிவார்கள் ஓரோர்பொழுது
பாசம் ஒன்றே கொள்ளும் பெண்ணைப்
பாரிலே காணலரிது
கள்ளப் புருஷனென்றோ
மின்னிடும் அணிகளென்றோ
மயக்கிடும் துணிகளென்றோ
மணந்திடும் மலர்களென்றோ
பெண்மனம் கொள்ளை கொள்ளும்

என்று ராமன் விளக்க
முனிவன்கண் மறைத்த திரையும்
அறுந்திடத் தெளிவு பெற்றான்
அகலிகை நிமிர்ந்து நின்றாள்

என்ற நோக்கிலான ராமனின் பெண் மனம் பற்றியதான அறிவுரை தெளிவற்றதாக உள்ளது. பெண் மனத்தின் உள் உணர்வுகளின் போக்கின் விந்தையினை உளவியல் அடிப்படையில் விளக்க முற்பட்ட தன் முயற்சியில் கவிஞர் வெற்றி பெற்றராரில்லை.

ராமனது இந்த உரைகேட்ட கோதமன் மனமாற்றம் பெறுகின்றான். கண்ணே, மணியே என அகலிகையைக் கொஞ்சுவதோடு,

"உரிமையின் ஆசைக் கண்கள்
சட்டதிட்டங்கள் அமைத்த
ராமன் கால் கல்லில் படவே
கன்னி நீ மீண்டதோடு
வந்தது கண் எனக்கும்"

எனத் தன் தவறு உணர்ந்து வருந்துகின்றான்

"உயிரே" அகலிகையே!
வாழ்விக்க வந்த ஒளியே
மனம் புலன் வைரமற்று
உன்னிடம் சரண் புகுந்தோம்
உயிரே! மணி விளக்கே!
வேள்வியைப் புதுக்கும் எழிலே!
மனத்துடன் புலனைச் சேர்த்துச்
சமித்தாக வேள்வி இட்டேன்
உயிரிலே புதிய தேனை
வடிக்கவே கூட வாராய்"

என்ற கோதமன் கூற்றோடு கவிஞர் தன் குறுங்காவியத்தை முடித்துள்ளார்.

11

அகலிகை கதைக்கும் புதிய விளக்கமாக அமைந்துள்ள கவிதை இது.

தழலின்றிப் புகையின்றிப் பிறந்த ஒளிமகள் அகலிகை. அவளைத் தன் இருண்ட மனக்குகையில் சிறைப்படுத்த மேற்கொண்ட முயற்சியில் தோற்றவன் கோதமன். புலன்வழி ஒளி மகளான அவள் இயல்புணர்ந்து அவளை வெற்றி கொண்டவன் இந்திரன். மனம், புலன், அறிவொளி என கோதமன், இந்திரன், அகலிகை ஆகியோரைக் கவிஞர் உருவகப்படுத்திக் காவியம் செய்ய முற்பட்டுள்ளார். புலனின் துணையின்றி மனம் அறிவொளி பெறுதல் இயலாது என்பதே ஆசிரியர் விடுக்கும் காவியச் செய்தியாக உள்ளது.

மரபுக் கவிதையில் கவிஞர் ச.து.சு. யோகியார் பேசுவது போன்ற தர்க்க நியாயத்தை உள்ளீடாகக் கொண்ட காவியமாக அமையாது, ஆண் பெண் உறவிலான உள் மனத்தின் போராட்ட உணர்வுகளை மையக் கருத்தாகக் கொண்டு பின்னப்பட்ட புதிர்க் காவியமாகவே "உயிர் மகளை" ந. பிச்சமூர்த்தி படைத்துள்ளார்.

1945 இல் கிராம ஊழியன் இதழில் தொடங்கப்பெற்ற இக் காவியம் 17 இதழ்களில் வெளிவந்துள்ளது. ஒரே வீச்சில் இதனைக் கவிதை உத்வேகத்தால் ஆட்கொள்ளப்பட்டு எழுதாமல் அவ்வப்போது தொடராக எழுதியிருக்கக் கூடும் என எண்ண இடமுள்ளது. காவியம் ஒரு முழுமையானதாக உருப்பெறாமல் கவிஞரின் புதிய சிந்தனை எண்ணச் சிதறல்களாக அமைந்திருப்பது இத்தகைய முடிவினை மேற்கொள்ள இடம் தருவதாக உள்ளது.

கல்லிகை

- ஞானி

இதிகாச காலத்து அகலிகையின் புரட்சியான மறுபிறப்பு ஞானியின் **கல்லிகை.** அவள் இன்னமும் எத்தனையோ பிறவிகள் எடுக்கக் கூடும். இதிகாசக் கதைகள் விழுதுகள் விட்டுப் படர்ந்தபடி யுகயுகமாக வாழும் ஆலமரம் போன்றவை. புதிய விழுதுகள் விடும் ஆற்றலை ஒரு கதை இழக்கும்போது அது மக்கள் மனதிலிருந்து மறையும்.

1984 இல் பிறந்த கல்லிகை தளர் நடையிடும் சிறுமியாக இருந்தாலும் தன் முன்னவர்களிலும் மாறுபட்ட புதுமைப் பெண்ணாக வாசகர்களையும் விமர்சகர்களையும் ஒருங்கே கவர்ந்துள்ளாள் என்பதற்கு நூலின் முன்னும் பின்னும் இடம் பெற்றிருக்கும் விமர்சன உரைகளே சான்றாகும். இவளது பாதக் கிண்கிணி சலசலக்கக் காணோம். கைவளைகள் குலுங்கிச் சிணுங்கவில்லை. பெண்மைக்கு உரிய அன்ன நடையைத் துறந்து வசன நடையிடும் வனிதையாக உள்ளாள். காவிய நாயகி ஆயினும் முன்னவர்களைப் போல அணிச் சுமையால் அவதியுறாதவளாக எளிமைக் கோலத்தில் கற்போர் இதயம் கவர்கின்றாள். முன்னவர்கள் பெண்மைக்குரிய அடக்கத்தோடு பேச அறியாத ஊமைகளாக மௌனித்திருக்க அவர்கள் அவலக் கதையினைக் கவிஞர்களே தங்கள் வாய்மொழியாக எடுத்துரைக்கின்றனர். இவளோ தன் கதையினைத் தானே தன் கூற்றாக எடுத்துரைக்கின்றாள். இம்முறையால் திரித்தலுக்கும் இடைச்செருகலுக்கும் இடமில்லாது போய் விடுகின்றது. ஒருவர் உள்ளத்தால் உணர்ந்ததை மற்றவர் எடுத்துரைப்பதைவிடத் அவரே எடுத்துரைக்கும்போது அது கேட்டாரைப் பிணைப்பதில் இறுக்கம் உடையதாகவே இருக்குமல்லவா?

அகலிகை கல்லிகையாக மாறியது ஏன் எனச் சிலருக்கு ஐயம் எழுதுல் கூடும். கல்லாகக் கிடக்கும் அவள் மீண்டும் பெண்ணாக உருவெடுக்கும் முன்னர் தூரத்தே வரும் இராமன் காலடி ஓசை கேட்டுத் தனக்கு விடிவு நிகழப்போகின்றது என்ற எண்ணத்தில் அவள் மனம் தன் கடந்த கால வாழ்க்கையை எண்ணி அசைபோடும் சிந்தனை ஓட்டமாக காவியம் அமைந்துள்ளது. கல்லாகக் கிடக்கும் அவள் சிந்தனையின் வெளிபாடாகக் காவியம் அமைந்துள்ளதால் காவிய நாயகியைக் கல்லிகை ஆக்கியது பொருத்தமே.

நெடுங்காலம் கருவாகத் தன் நெஞ்சத்தில் கிடந்த இக் கதை புதுமைக் காவியமாக உருவான வரலாற்றைத் தன் முன்னுரையில்,

> "வானம்பாடிகளுள் சிறப்பாகக் கவிதை தெரிந்த சிலருள் ஒருவர் நண்பர் இளமுருகு. அவருடன் விவாதித்தேன். நமது சமூகத்தில் பெண்கள் படும் பாடுபற்றி நாம் கவிதை எழுத வேண்டும். அகலிகை கதை அற்புதமாக இப்பிரச்னையை இன்றும் சொல்லும். புராணக்கதை என்று சிலரால் இகழப்பட்டாலும் இவ்வகைக் கதைகள் காலத்தால் அழியாத வலிமை பெற்றவை. புதுக்கவிதை, மரபின் தொடர்ச்சியாக - அதே சமயம் விடுபடலாக - மரபின் சாரத்தோடு வலி மை பெறுமே ஒழியத் தளர்ச்சி பெறாது. கவிதை அறிந்த அவர், அகலிகை கதையை நிகழ்கால உள்ளடக்கத்தோடு படைப்பாக்க வேண்டும் என்ற விருப்பத்தை அவரிடம் பலமுறை தெரிவித்தேன்... அவர் வழியே கவிதை உருவாகவில்லை... அகலிகை காத்துக் கொண்டிருந்தாள். என் மனத்தில் கனத்துக் கொண்டிருந்தாள். கனத்துக் கொண்டிருந்த அகலிகை கதையைக் கரு அளவில் இனியும் வைத்துக் கொண்டிருக்க முடியாது என்ற நிலையில், நானே எழுதுவது என்று துணிந்து நான்கே நாட்களில் எழுதி முடித்தேன். பிறகு சில நாட்கள் கழித்துச் சில திருத்தங்கள் செய்தேன்".

"அகலிகை கதையினை எத்தனையோ பேர் தத்தம் பார்வையில் திரும்பத் திரும்பப் படைப்பாக்கியுள்ளனர். மாறிவரும் சமுதாயத் தேவைகள் இப்படி எழுதுவதற்குத் தூண்டுதலாக அமைகின்றன. எனது முயற்சி மார்க்சிய வட்டாரத்தவர் ஒருவரின் முயற்சி. என் பார்வைக்கு ஏற்றபடி, பழங்கதையில் சில மாறுதல்களைப் புகுத்தியுள்ளேன். இப்படிச் செய்வதற்கான உரிமை, படைப்பாளிக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. கதையில் செய்து கொண்ட மாறுதல்கள், அவற்றுக்கான தேவை முதலியவை பற்றி வாசக நண்பர்கள் மதிப்பீடு செய்வார்களாக!

என விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். *

தன் இளமைப் பருவத்துக் கனவினை ஒரு மோக மனமலராக உருவகித்த கல்லிகை அந்தக் கனவோடுகூட இளங்கொடியாகிய தன்னைக் கௌதம முனிவன் மனைவியாக்கியதால் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை,

"எதிர்காலக் கனவு நறுமணத்தைச் சுமந்து
புன்னகைத்த என்மனத்தை
உடற்கொடியோடு சேர்த்து
தானமளித்தனர்... தாய்தந்தையர்
நல்லதோர் தவமரத்தில் பற்றிப்படார எண்ணி
கட்டித் தழுவினேன்
ஓ... கையறுபட்டேன்"

என வெளிப்படுத்துகின்றாள்.

---

* நூலாசிரியரின் இந்த நேர்மையான கணிப்பினைப் படித்துத் தெளிவு பெறாமலேயே ஒரு வாசக அன்பர், "அகலிகை கதையை, கற்பு என்பதற்கான புதிய வரைவிலக்கணம் தேடும் முயற்சியாகத் திரும்பக் கதை எழுதியவர் - விளக்கம் தந்தவர் - செய்தது ஒரு கயமைத்தனமே" என இந்நூலினைப் பாராட்டும் உரையில் மற்ற படைப்பாளர்களைச் சாடியிருப்பது அவர் அறிவின் தெளிவின்மையையே காட்டுவதாகும்.

முதலிரவினை ஆவலோடு எதிர்பார்த்தவளுக்கு முனிவனின் யோக நித்திரை வியப்பைத் தருகின்றது. இல்லற வாழ்வில் ஏற்படும் இச்சுகச் குறை அவளுடைய ஏமாற்றத்திற்கும் காரணமாகி விடக்கூடியதல்லவா? இரவில் அந்தச் சுகத்தை இழந்தவள் தன் வாழ்வில் பகலிலும் உலகியல் மீது பற்றுக் கொள்ள வைக்கும் உரிமைகளை இழக்கின்றாள். கௌதமன் மானோடு ஓட விரும்பிய தன் கால்களில் மந்திரக் கயிறு பூட்டிக் குடிசைக் கொட்டிலில் கட்டிப் போட்டதாக கூறும் அவள் வாழ்வில் இந்திரன் வருகை ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகிறது.

இந்த இந்திரன், இரவோடு இரவாக ஒரு நாள் மட்டும் வந்து அகலிகையிடம் இன்பம் துய்த்துச் சாபம் பெற்றுச் சென்ற இதிகாசம் கூறும் வழக்கமான இந்திரனிலும் முற்றும் வேறுபட்டவனாகப் படைக்கப்பட்டிருப்பதே கல்லிகை காவியம் புதுமை இலக்கியமாக - மார்க்சிய நோக்கிலான படைப்பாகக் - கருத அடிப்படையாக ஆகின்றது. இவன் தேவருலகத்து அதிபதியினும் வேறானவன். எனினும் இவனைப் பற்றிய அறிமுகம் தெளிவற்றதாகவே உள்ளது. இவன் உழைக்கும் மறவர் கூட்டத்தினை எதிர்த்துத் தன் ஆதிக்கத்தினை நிலைநாட்டியவன். உழுவிப்போர் மற்றும் உழுவோர் எழுச்சி குன்றியபின் தொழில் புரட்சியின் வழி புதிதாய். அமைந்த முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதிநிதி என இவனைக் காட்ட முற்பட்டிருக்கின்றார் காவியத்தின் ஆசிரியர். இந்தச் சமுதாயத்தின் எழுச்சி சமய - மடாலயங்களின் ஆட்சியின் செல்வாக்கைக் குறைக்கவும் பின் குலைக்கவும் செய்த தல்லவா? சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் நிகழ்ந்த சமூக மாற்றங்களையே இங்கே இந்திரன் கௌதமனிடையே - முதலாளித்துவ, மத நெறியிடையேயான போராட்டமாக உருவகித்துள்ளார். இந்த இரு சக்திகளின் ஒடுக்குதலுக்கு உள்ளாகி உரிமையற்றுப்போய் விழிப்பின்றி கிடந்த உழைக்கும் வர்க்கத்தின் உருவகமே அகலிகை என்று கொள்ளும் அளவிற்குக் காவியத்தில் இடமுள்ளது. உழைக்கும் வர்க்கம் முதலாளித்தத்துவத்திற்கு அடிகோலும் தொழிற்புரட்சியால் புத்துயிர் பெற்றதாக மயங்கிய மயக்கமே கல்லிகை இந்திரனிடம் கொண்ட மயக்கமாக உருவகிக்கப்பட்டுள்ளது.

கல்லிகைக்கு மகப்பேறு வாய்க்கப் பெறவில்லை. அது அவளுக்குப் பெருங்குறையாக உள்ளது. அப்பேற்றினைக் கௌதமனிடம் முறையாகப் பெற முடியாது என உணர்ந்த அவள் இந்திரனுக்கு அடிமையாகித் தன்னை முழுமையாக அவனிடம் ஒப்படைக்கின்றாள். இவர்களிடையேயான கள்ளக்காதல் இதிகாசம் கூறுவது போன்ற ஓர் இரவு உறவு அன்று. அவ்வப்போது வந்து கல்லிகையிடம் காதல் மொழிபேசி இன்பத்தைக் களவாடித் தின்று சென்றவன் அவன். ஒரு நாள் இரவு கல்லிகை அவன் தன்னைக் கட்டித் தழுவி இன்புற்றிருந்தபோது தான் கருவுற்றிருப்பதைக் கூறுகின்றாள். அவனோ, கம்பளிப்பூச்சியைக் கட்டித் தழுவியனைப்போல வெருட்டென எழுந்துவிட்டான். அவள் தன் குழந்தைக்கு ஆட்சி உரிமை கேட்பாளோ என்ற கள்ளக்காதலன்கள் நெஞ்சில் எழும் வழக்கமான அச்சம்தான் அவனது அந்த விலகலுக்குக் காரணம்.

இந்த இக்கட்டான சமயத்தில் முனிவன் அன்றுபார்த்துத் திரும்பி வருகின்றான். அவர்களிடையேயான கள்ள உறவு வெளிப்படுகிறது. இந்திரன் அங்கிருந்து கோழைபோல் நழுவி ஓடுகின்றான். இதனால் மனம் ஒடிந்த கல்லிகையின் ஏக்கப் புலம்பல்,

எனது உடலின் மூலை முடுக்குகளில்
ஊறிய இன்பத்தை ஒரு துளி விடாது
உறிஞ்சிக் குடித்த சுரண்டல் மன்னனுக்கு
என்னை நானே இழந்துவிட்டது எப்படித்
தெரியும்?
கொடுத்தேன் வாங்கினேன் என்ற
கொள்கைவாத வணிகப் பேய்க்கு
எனது நட்டம் எப்படித் தெரியும்?
அதிகார மாலையில் அழகு மங்கையரைக்
கோத்து
மார்பிலிட்டுச் செருக்கித் திரியும் காமுகனுக்கு என்
இதயக் கருவின் ஏக்கம் எப்படித் தெரியும்?

....

....

இவன் என்னை மட்டுமா கேவலப்படுத்தினான்?
இவன் ஒருவன் மட்டுமா எங்களைக்
கேவலப்படுத்தினான்?
இவர்கள் எங்கும் இருந்தார்கள்
எத்தனையோ பேர் இருந்தார்கள்
இவர்கள்
உடற்பாத்திக்காகவே உயிர்ச்செடி வளர்ப்போர்!

என ஏமாற்றத்துக்குள்ளாகிக் கற்பிழந்து சமூகத்தின் சாபக்கேட்டுக்கு உள்ளாகிக் கல்லிகைகள் ஆகிவிட்ட ஏமாந்த அபலைகள் அனைவருக்காகவுமான புலம்பலாக ஒலிக்கின்றது.

கல்லிகையைத் துறந்து, அவளைக் கல்லாகிய பின் கௌதமன் வடக்கு நோக்கிச் சென்று விடுகின்றான். அவளை மேலும் மனதுள் சபித்தபடி செல்லும் அவன் இதயத்தைக் காலம் கனியச் செய்கின்றது. கல்லாகிவிட்ட அவளுக்கான சாப விமோசனமும் அவன் உள்ளத்தில் சுரக்கின்றது.

கல்லிகை தான் முன்பொரு நாள் கண்ட கனவினை இப்போது நினைவு கூர்கின்றாள். அந்தக் கனவில் இந்திரனோடு முனிவன் இணைந்து அவனை நீயே இறைவன் என வாழ்த்துகின்றான். அவர்கள் காலடியில் ஓர் அனாதை மனிதன் கழுத்து நெறிபடுவது புலனாகின்றது. தான் உற்று நோக்கியபோது அந்த அனாதையின் கண்களில் தன் முகத்தின் உருவைக் காண்கின்றாள் கனவு காணும் கல்லிகை. இந்தக் கனவே காவியத்தின் கருப்பொருள். அந்த இருவரும் - முதலாளித்துவமும் சமயமும் - மனிதனை உழைக்கும் வர்க்கத்தை - இணைந்து அடிமையாக்கி விட்டதன் குறியீடே. அந்தக் கூட்டுறவில் மிதிபட்டுக் கல்லாகி விட்ட மனித சமுதாயத்திற்கு விமோசனம் உண்டு என்பதைக் காவியத்தின் இறுதிப்பகுதியில் நம்பிக்கையின் விடியல் ஒளியாகக் கோடி காட்டுகின்றார் காவியத்தின் படைப்பாசிரியர்.

இராமனின் வருகையே அந்த விடியல். அது அவள் மனக் கண்ணுக்குப் புலனாகின்றது. கல்லாக ஆகிவிட்ட அவள் காலத்தையும் வென்றவளாக எதிர்கால நோக்குடையவளாகப் பார்க்கின்றாள்.

இங்கு கவிஞர் இராமன் தாடகையை வதைத்தவனாகத் தன் கைவண்ணம் காட்டிய திறத்தைக் கூறவில்லை. அவன் தன்கால் வண்ணத்தால் கல்லிகையை உயர்ப்பித்தபின் நிகழ்த்தபோகும் அற்புதங்களையே இராம காதையினைப் பின்பற்றியவராக கல்லிகை வாயிலாக எடுத்துரைக்கின்றனார்.

தேய்ந்து கிடந்த தெய்வீக வில்லை
எடுத்த எடுப்பிலேயே இரண்டு துண்டாக்கி
நிலமகளைத் தன் நெஞ்சோடு சேர்த்து -

நிலத்தின் சாரத்தைத் தின்று பெருத்த
அரச மரங்களை வேரோடு பறித்த
பரசுராமனின் பலத்தைத் தாங்கி -

காலம் இயங்காத காட்டு வெளியில்
பக்திப் பெருக்கிலே படகோட்டி வாழ்ந்த
வேடர் குலத்தைத் தோழமை கொண்டு -

உடமைப் போரால் உறவு குலைந்து
நாடு விட்டோடி நடைப்பிண மாகிய
பேதை மாக்களுக்கு ஆற்றல் கூட்டி -

மலைகளைக் தகர்த்து கடல்களை நிரப்பி
உழைப்புக் காற்றிலே உயரப் பறக்கும்
வீரர் குலத்தைச் சோதர ராக்கி -

இராமன் வருகின்றான் என நடக்க இருப்பவைகளைக் களிப்போடு குட்டி இராமாயணமாகக் கல்லிகை கூற்றாக கூறுகிறார். கல்லிகை அவனை சுரண்டல் சாம்ராஜியக் கொடியேற்றி மக்களின் எலும்பையும் மாதர் கற்பையும் தன் ஆதிக்க ஆட்சி இயந்திரத்தில் அரைத்து அழித்து ஆண்டு வரும் அரக்கனின் கொடுமையை

ஒழிப்பவனாகவும் காணுகின்றாள். இவன் வருகையால் விண்ணும் மண்ணும், வீரமும் வேதமும் இணைந்து உலகம் பொதுவென ஆகும்போது அந்த இலட்சிய உலகிலேயே தன் ஆன்மா முக்திபெற முன்னேறும் என்று அவள் அன்று கொண்ட நம்பிக்கை என்னாயிற்று?

கொள்வாரும் கொடுப்பாரும் இல்லாத கம்பன் கண்ட கனவு ராஜ்யம் தானா அது? அது மலர்ந்ததா மலருமா என்பதற்கு காலம் தான் விடை கூறவேண்டும்.

இந்திரனையும், கௌதமனையும் சுயநலம் கொண்ட ஆண் வர்க்கத்தின் பிரதிநிதிகளாகக் கண்ட கல்லிகை இராமனை மட்டும் இலட்சிய மகனாகக் காண்கின்றாள். கல்லான தன்னைப் பெண்ணாக்க வரும் இராமன் வாழ்வின் பின் நாள் நிகழ்ச்சிகளைத் தொலைநோக்கு உணர்வோடு காணும் அவள், அவன் பின் சீதையை மண்ணாக்க இருப்பதைக் காணாதவளாக இருப்பது இக்காவியத்தின் ஒரு குறை எனலாம். இந்திரனும் கௌதமனும் இணைந்ததான அந்த ஆண் ஆதிக்கக் கூட்டத்தில் இராமனும் இணைந்தவனே என்பது சமூக வரலாறு கூறும் உண்மை. எவ்வளவு தான் தியாக உணர்வு படைத்தவனாயினும் ஆண்வர்க்கத்தின் உள்மன ஆழத்தில் பதிந்து கிடக்கும் சுயநல உணர்வுக்கு அவனும் இறுதியில் இரையாகி ஒரு பெண்ணை நெருப்பில் தோய்த்தெடுத்து மண்ணில் புதைத்ததை எப்படிக் கல்லிகை மறந்தாள் அல்லது மன்னித்தாள் என்பது புரியவில்லை!

சிற்பி செதுக்கிய இரு வடிவஙகள்

- சிற்பி

அகலிகையின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு புதுமைப்பித்தன் இரண்டு கதைகளைப் படைத்தது போல சிற்பியும் அகலிகையின் அவலத்தின் தாக்கத்திற்கு உள்ளானவராக இரண்டு கவிதைகள் படைத்துள்ளார்.

புராண இதிகாச மரபிலான அகலிகை வரலாற்றினை 94 வரிகளில் புதுக்கவிதையாக "அகலிகை இன்னமும் காத்திருக்கிறாள்", என்ற தலைப்பில் படைத்துள்ள இக்கவிதை "ஒளிப் பறவை" தொகுதியில் இடம் பெற்றுள்ளது.

"யாருமற்றது அப்பாழ்வெளி
ஏருகின்றதொரு காலடி"

என்ற கவிதையின் பல்லவிபோல அமைந்துள்ள முதலிரண்டு வரிகள் இடையிடையே திரும்பத் திரும்ப வந்து கவிதைப் போக்கிற்கு வேகமும் நயமும் ஊட்டுகின்றன.

விடியல் நெருங்கியது என நினைத்து முனிவன் குடிலை விட்டு வெளியேறி நடப்பதன் காலடியோசையினையும், பின் பூனைபோல் மெல்ல அடி எடுத்து வந்து இந்திரன் அகலிகையைத் தழுவ வரும் காலடியோசையினையும், விடியல் வரவில்லை என உணர்ந்து கோபமாக நடந்து வந்து சாபமிடும் கோதமன் காலடியோசையினையும் பல்லவியாகத் திரும்பத் திரும்ப வரும் ஈரடிகள் படிப்பவர் நெஞ்சில் புதியச் செய்கின்றன.

கோபம் கொண்ட கோதமன் இந்திரனுக்கும் அகலிகைக்கும் சாபம் தருகின்றான். சாப விமோசனமும் உடன் தருகின்றான். அவன்

தந்த சாப விமோசனமே இங்கு கவிதையின் கருப்பொருளாகி கவிதைக்கு உயிர்நிலையாய் அமைகின்றது. கல்லாகிப்போன அகலிகை கேட்கும் ஒவ்வொரு காலடியோசையினையும் இராமனது காலடியோசையாகவே எண்ணி ஏங்குகின்றாள். அப்பொழுதெல்லாம் அவள் மனநிலை எப்படி இருந்தது என்பதனை,

"கல்லியதக் கூண்டுக்குள்
உயிர்ப்பறவை சிறகடிப்பு
நெல்மணியின் ஈரமுனை
கீறிவரும் கிளுகிளுப்பபு
அல்லிமலர் நெஞ்சகத்தில்
ஆனந்தத் தேன்சுரப்பு"

என வருணித்துப் பின்,

"இல்லை! அந்தக் கால்டிகள்
இராமனல்ல... வெறுந்தவிப்பு"

என முடித்துள்ளார்.

எதிர்பார்க்கும் நெஞ்சத்தின் ஏக்கமே கவிதையில் எதிரொலிக்கின்றது - காலடியோசையாக.

தன் கணவனிடம் இன்பத்தை எதிர்பார்த்துப் பின் காமுகன் பசிக்கு பலியாகி ஏமாற்றமுற்றது போல இராமன் காலடியோசையை எதிர்பார்த்து விடுதலையை விரும்பி ஏங்கும் உள்ளம் கொண்டவளாகக் கல்லாகக் கிடக்கும் அகலிகையின் அவலச் சித்திரமே இக் கவிதை.

சிற்பியின் "இராமன் பார்வையில் அகலிகை" அவரது முந்தைய படைப்புக்குச் சில ஆண்டுகளுக்குப் பின் படைக்கப்பட்டது. கம்பன் விழா கவியரங்கில் மேடையில் ஒலித்த கவிதை 1982 இல் வெளியான "புன்னகை பூக்கும் பூனைகள்" தொகுதியில் இடம் பெற்றுள்ளது.

புதுக்கவிதைச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றி உருவாக்கிய கவிதைப் பெண்ணாயினும் புராணப் பள்ளத்தாக்கிலிருந்து வெட்டிக் கொணர்ந்த பழைய களிமண்ணே மூலப்பொருள் என்பதனை,

"அவள் தந்தை
தேவலோகத்தின் அழகுச் சந்தையில்
கேவலம் பந்தயப் பொருளாய்
ஆக்கினான்!
தந்திரக் கௌதமன்
பந்தயம் வெல்ல
இந்திரன் கோட்டை
இடிந்து தகர்ந்தது!
சௌந்தர்யப் பேழை
ஆசிரமக் குடிலில்!
கௌதம எறும்புக்கு
அமுதக் கலசம்!

என்ற புராண மரபிலான கதைக்கரு மெய்பிக்கின்றது.

ரிஷிபத்தினியாகிவிட்ட பருவமங்கையான அகலிகையின் உள்ளத்தைச் சபல மில்லாத கௌதமனின் தவயாக நெருப்புச் சுட்டுப் பொசுக்குகின்றது.

காதல் முக்கோணப் போட்டியில் தோல்வியைத் தழுவிய இந்திரன் ஓரிரவில் கொக்கரக்கோ எனக் கூவி, முனிவனை விடியுமுன்பே குடிசையிலிருந்து வெளியேற்றிய பின், அகலிகையைத் தழுவித் தன் காம இச்சையைத் தணித்துக் கொள்கின்றான் இந்திரன். பூனையாகி, திரும்பிய முனிவனுக்கு அஞ்சி வெளியேறுகின்றான்.

அகலிகை கல்லானதால் அந்தப் பர்ண சாலையில் நிகழ்ந்த துயரத்தை,

பனிப்பூக்கள் கண்ணீர் சூடும்
சிறுமான்கள் புல் வழங்கும்
இளங்கரம் தேடிவாடும்

என வர்ணித்துள்ளது பிற படைப்பாளிகளின் கற்பனையில் பிடிபடாத புதுமை.

"மனதினால் பிழைப்பிலாத மங்கையர்க்கு உற்ற தீமைக்குத்" தீர்வுகாண இராமன் வருகின்றான். அவன் பாத தூசிகள் பட்ட அளவில் பேசரிய பேரழகு கல்லில் வெடிக்கிறது. அவள் கதை கேட்ட இராமன் அன்னையென அவளை வணங்குகின்றான். அன்னை என்று அழைத்து அகலிகை பழியில்லாதவள் என உலகிற்கும் கோதமனுக்கும் உணர்த்துகிறான்.

தனது இக்கவிதை புதுமைப்பித்தன், கு.ப.ரா. ச.து.சு. யோகி, வெ.ப.சு ஆகியவர்களின் படைப்புகளின் தூண்டுதலால் பிறந்தது என ஆசிரியர் குறிப்புத்தந்துள்ளார். எனினும் கவிதையின் சுதைப்போக்கும் கருவும் கம்பனின் அகலிகைப் படலத்தை அடியொற்றியதாகவே அமைந்துள்ளது.

கோதமனின் பத்தினியை அன்னையென்று கும்பிட்டவன் சீதைக்கு மட்டுமென்றோர் அக்கினி குண்டத்தை நெஞ்சில் வைத்தான் என இளமையில் முற்போக்குவாதியான இராமன் உலகியலில் உருண்டு புரண்டு பின் எப்படிப் பிற்போக்குவாதியானான் என்பதனையும் முடிப்புரையாகக் கவிதையில் புகுத்தியுள்ளார்.

ஞானியின் "கல்லிகை" காவியத்தில் ஆய்வின் இறுதிப் பத்தியில் விடியலாகத் தனக்கு வாழ்வளிக்க வரும் இராமன் பற்றிய கல்லிகையின் எதிர்கால நோக்கிலான கற்பனையில் ஒரு குறை உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளேன். கல்லிகையால் இராமன் சீதைக்கு இழைக்க உள்ள நெருப்புக் கொடுமையை அவளது தொலைநோக்கு உணர்வால் காண இயலாது போனது புதிராக உள்ளதாகக் குறைப்பட்டுக் கொண்டுள்ளேன். இந்த அகலிகை பற்றிய கவிதை அந்தக் குறையையும் நிறைவு செய்வது போல இராமக்காவியத்தை முழுமையாகத் தழுவி உள்ளடக்கியதாக அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்பு. இது புதுமைப்பித்தனின் சாபவிமோசனம். அவருக்குப் பின்வந்த கவிஞர்கள் பார்வை ஏற்படுத்திய தாக்கத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைகின்றது.

மஹாகவியின் கற்பனையில்

- மஹாகவி

பதினாறு விருத்தப் பாக்களால் அமைந்த ஈழத்துக் கவிஞரான மஹாகவியின் கவிதை கற்பனை நயங்கள் நிறைந்தது. அகலிகையினை எப்படியும் தன் காமத்திற்குப் பலியாக்க வேண்டும் என இந்திரன் தேவர் உலகிலிருந்து இமயமலைச் சாரலில் உள்ள கோதமன் தவச்சாலை அமைந்துள்ள காட்டினை அடைகின்றான்.

சந்தனம் கமழும் அவன் மார்புச் சால்வையின் பொன்னிழைகளில் தேய்பிறை நிலவின் ஒளிபட்டுச் சிதறுகின்றது. தீயவரைக் கண்டு அழும் குழந்தையும் வாய்மூடும் அல்லவா? காட்டில் ஓயாது இரைச்சலிடும் சிள்வண்டும் இவன் வருகையால் ஓசை அடங்கி ஊமையாகின்றது.

வாசனை அற்ற பொன்மலர்களையே கண்ட அவன் காலையில் மலர உள்ள ஒரு போதினைப் பிடுங்கி மோந்து அதன் மணத்தை வியந்து பின் தூர எறிகின்றான். கற்பு நெறி நில்லாத தேவமகளிரையே தன் காம விளையாட்டுக்கு உரியவர்களாக்கி இன்பம் துய்த்து வந்த அவன் கற்பினை வாழ்வின் நெறியாகக் கொண்ட ஒருத்தியின் வாழ்வைப் பாழ்படுத்த உள்ளான் என்பதற்கு ஏற்ற குறியீடாக இக் கற்பனை அமைந்துள்ளது.

ஒரு குகையில் இந்திரன் தன் அணிமணிகளைக் கழற்றி வைத்துத் தவச் சாலையை அடைந்து ஓலையாலான கதவிடுக்கின் வழியே அகலிகையின் அழகை நோக்கிக் காமத்தால் மறுகுகின்றான். அப்போது அகலிகையின் கரம் அருகில் தூங்கும் கோதமன் மார்பின் மீது விழுகின்றது. அந்த மார்பினை "நரைத்த மயிர்களோடு கூடிய" மார்பு என வருணித்து கோதமன் வயது முதிர்ந்த முனி என்பதனைப்

புலப்படுத்துகிறார் கவிஞர். இதனால் விழிப்புற்ற கோதமன் பொழுது புலர உள்ளதால் தன்னை அவள் எழுப்புகின்றாள் என எண்ணிக்குடிலை விட்டு வெளியேறுகின்றான். அகலிகையின் கரங்கள் அருகில் உள்ள கணவன் ஆதரவு தேடிக் காணாது மீண்டும் அவள் மார்பின் மீதே பதிந்தன என்பதனைக் கொண்டு அவள் அந்த வேளையில் காம விருப்புடையவளாகப் படுக்கையில் தனித்துத் தவித்திருந்தாள் என்பதை உணர்த்துகின்றது. அவள் இந்திரனிடம் அன்று தன்னை இழந்தது இயற்கையின் நிகழ்வு என்பதைக் குறிப்பில் உணர்த்தற்கேற்ற பின்புலமாக இதனை அமைத்துள்ளார் கவிஞர்.

இதுவரை விலங்குகள் நுழைந்தறியாத அந்தக்குடிலில் இந்திரன் நுழைந்து ஆடை குலைந்த நிலையில் பாட்டுக்கு ஓர் உருப்போல் கிடந்த அஃவளை அணைத்தபோது அவன் பிடியினின்று விடுபட இயலாதவளாக அவள் அவன் இச்சைக்குப் பலியானாள் என்பதை,

"துடித்தனள், எனினும் பட்ட
தும்பினுள், வலியோன் கைக்குள்
பிடித்தது பிடித்ததால் அப்பிடி
கொடுத்தாள் வந்த
அடுத்தவன் அழுத்த மாக
ஆசைகள் புதைத்த கண்கள்
எடுத்து நோக்காது சோர்ந்தும்
உலகையே இழக்க லானாள்"

என விவரிக்கின்றார்.

கண்ணிமை திறந்து தனக்கு நேர்ந்த அவலத்தைக் கண்டுணர்ந்த அகலிகை மேனி படபடத்திடத் துவண்டு உடல் வேர்த்தாள். உடல் விறைத்தாள். மூர்ச்சை நொடியில் நின்றது. கண்விழித்துப் பார்த்த அதே நிலையில் கல்லாகி விட்டாள். நல்லார்கள் மிதிக்கும் நாள் வரை அவள் அங்கேயே கிடந்தாள் கல்லாக.

அப்போது அங்குற்ற முனிவர் சினம் கொள்ளவோ சாபம் இடவோ இல்லை. அங்கிருந்து வெளியேறினார் எனக் குணம் என்னும் குன்றேறி நின்ற பெருமைக்குரியவராகக் கோதமனை உயர்த்தியுள்ளார் மஹாகவி.

இந்திரன் உடலில் உண்டான புண்களும் முனிவன் சாபத்தால் தோன்றியன அல்ல. தீமை புரிந்த அவன் மனச்சான்று நெடுங்காலம் அவன் உள்ளத்தைத் தொடர்ந்து உருக்கியதால் தோன்றிய நெஞ்சு சுட்டவடுக்கள் அவை என்பது கவியின் புதுமையான கருத்து.

கவிஞர்கள் சமுதாய நோக்கிற்கேற்ப பாத்திரங்கள் உயர்வும் தாழ்வும் பெறுவர் என்பதற்கு மஹாகவியின் இக்கவிதை மற்றுமொரு சான்று. தாழ்ந்த அவர்கள் தங்கள் குற்றம் உணர்ந்து விழிப்புற்றுத் திருந்தினர் எனக்கூறி அவர்களை மன்னிப்புக்குத் தகுதியுள்ளவர்களாக்கியுள்ள கவிஞரின் புதிய நோக்கு அவரது மனித நேயத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அகலிகை என்ற அவரது இந்தக் கவிதையில்.

அகலிகையின் வரலாறு இந்தியக் கவிஞர்களை மட்டுமன்றி ஈழத்துக் கவிஞர்கள் சிந்தனையையும் தூண்டியுள்ளது. நுட்பமான பிரச்னைகள் நாடு, மொழி எல்லைகளைத் தாண்டி மீண்டும் மீண்டும் புத்துயிர்ப்பு பெறும் என்பதனை நிறுவும் மற்றொரு சான்று இது.

கற்கனி

– கம்பதாசன்

கம்பதாசன் **கற்கனி*** என்ற தலைப்பில் பதினான்கு பாடல்களில் அகலிகையின் வரலாற்றைக் கவிதையாக வடித்துள்ளார். இவரது நோக்கு பிறபடைப்பாளிகளின் நோக்கில் வேறுபட்டது.

கௌசிகனோடு, மிதிலை நோக்கிச் சென்ற இராமன் காட்டுவழியில் ஏற்பட்ட வேட்கையைத் தணித்துக் கொள்ள ஒரு சுனையில் கால்வைக்கின்றான். அதில் கல்லாகக் கிடந்த அகலிகை தன்னைக் கரையேற்றுமாறு அவன் பாதங்களைப் பற்றிச் சரணடையக் கருணை மனத்தினனான இராமன் அவளை மீட்டுப் பெண்ணாக்கிக் கரையேற்றுகின்றான். பின் அவளைப் பற்றிய விவரங்களைக் கேட்கின்றான்.

தனக்கு நேர்ந்த அவலத்தினை அகலிகையே எடுத்துரைப்பதுபோல கவிஞர் ஒன்பது பாடல்களில் அகலிகையின் வரலாற்றை வடித்துள்ளார்.

ஐந்து வயதுச் சிறுமியான அகலிகையினைக் முதுகிழவரான கௌதமன் அவள் தந்தையிடம் கன்னிகாதானமாகப் பெற்று மணந்து தன் தவச் சாலைக்கு அழைத்து வருகிறார். பத்தாண்டுகள் அவருக்குப் பணிவிடைகள் செய்தபடி வாழ்ந்தவள் அவள். பருவம் அடைந்த பிறகும் ஒரு கணவன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய இல்லறக் கடமைகளைப் புறக்கணித்தவராக கௌதமர் இருந்ததை எண்ணி அவள் படும் மன வேதனையை,

---

* தொகுதிகளில் இடம் பெறாத கவிதை. இதன் படியினைத் தந்துதவியவர் கவிஞர் சிற்பி.

கத்தும் கிளிகள் இணைகூடும் - எழில்
காட்சியைக் காணினும் என்கணவர்
நித்தம் உபநிஷத் ஆய்வினிலே - கண்ணும்
நினைவுமே வைத்து எனை மறந்தார்

எனக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு வறண்ட பாலையாக அவள் வாழ்வு நகர்ந்து கொண்டிருந்த போது ஒரு மழைநாள் இரவில் கௌதமன் ஆசிரமத்துக்கு வந்த இந்திரனைக் கௌதமர் அதிதியாக வரவேற்று உபசரிக்கின்றார். மான்கறியும் சோமபானமும் விருந்தில் படைக்கப்படுகின்றன. உண்டு மகிழ்ந்த இந்திரன் காமன் கதையினைப் பற்றிய விவரம் கேட்டு, பாடி மகிழ்ந்ததோடு இரவை அங்கே கழித்துக் காலையில் புறப்படுவதாகக் கூறித் தங்கிவிடுகின்றான்.

குடிலின் உள்ளே அகலிகையும் வெளியே திண்ணையில் கௌதமனும் இந்திரனும் படுத்து உறங்குகின்றனர். தூக்கத்தில் அகலிகை ஒரு விசித்திரக் கனவு காண்கின்றாள். அதில் அவள் கணவன் சிவனாகத் தோன்றுகின்றான். இந்திரன் காமனாகி மலர்க்கணை தொடுக்கின்றான். விழித்த அகலிகை தன் அருகே இந்திரன் இருக்கக் காண்கின்றாள். அப்போது வெளியே சென்று தவறுணர்ந்து திரும்ப வந்து அந்தக் காட்சியினைக் கண்ட கோதமன் அவளைச் சினந்து,

குற்றம் புரிந்தனை விபசாரி - என்றன்
குடிலில் இருக்கத் தகுந்தவளோ!
அற்றது இன்றொடு உன்உறவு - சுனை
ஆழத்திலே உன்றனைச் சாகடிப்பேன்!
வெற்றுரை வேண்டுதல்; மன்னிப்பது - தலை
விதிக்கதை வேண்டாம்......"

எனக்கூறி அவளைக் கொண்டுபோய் சுனையில் கல்லோடு கட்டித் தள்ளுகின்றான். இந்திரனோ இதனைக் கண்டு கொள்ளாமல்

பூனைபோல் பதுங்கி நழுவி விடுகின்றான். அவள் பதினான்கு ஆண்டுகள் அந்தச் சுனையில் கிடந்தப் பின் இராமன் அருட்பார்வையால் விடுதலை பெற்றதாகத் தன் கதையைக் கூறி முடித்த பின் தனக்கு ஏன் இந்த விடுதலை எனக் கேட்டுமனம் வருந்துகின்றாள். விபசாரியாகப் பட்டம் சூட்டப்பட்ட தன்னைத் தன் கணவர் மீண்டும் ஏற்பாரோ எனச் சந்தேகம் கொள்வதோடு இராமனிடம் பின்வருமாறு நியாயம் கேட்கின்றாள்.

அகலிகை கோதமன் மீது சாட்டும் குற்றங்கள்

1. கிழவன் சிறுமியை மணந்தது
2. பருவம் அடைந்த பின்னும் தன்னோடு கணவன் கூடாதிருந்தது.
3. அறிவு நாட்டம் மட்டும் கொண்ட கோதமன் அவள் அழகை அனுபவியாது புறக்கணித்தது.
4. இரவில் வந்த இந்திரனுக்கு விருந்தில் மதுவைப் பருகக் கொடுத்தது.
5. அதனால் மதிமயங்கி இந்திரன் தன்னைத் தன் காமத்திற்கு இரையாக்கியதைப் பெருங்குற்றமாகக் கொண்டது.
6. வேதம் அறிந்த கோதமன் முன்னாளில் ஆரியர் விருந்தினருக்கு மனமொப்பி மனைவியினை அனுபவிக்கக் கொடுத்ததை அறியாது தன்னைத் தண்டித்தது.

இக் குற்றச்சாட்டுகள் அறிவுடைய ஒரு பெண்ணின் நியாயமான குற்றச்சாட்டுக்களே எனப்புரிந்து கொண்ட இராமன் அவளைக் கோதமனுடன் சேர்த்து வைப்பதாகக் கூறிச் சபதம் செய்கின்றான்.

இராமனது சபதத்தால் விபரீதம் நிகழ்ந்து விடக் கூடாது என அஞ்சிய கௌசிகன், கௌதமன் குடிலடைந்து அவனுக்கு,

"செவ்விய அகலிகை மனமாசிலாள் - இராம
தெய்வமே நல்கிடும் கற்கனியாள்
இவ்வித பாக்யம் பெரிதலவோ? - உடன்
ஏற்பீர் இகழா உலகம்"

என அறிவுறுத்த கௌதமன் அகலிகையினை ஏற்க உடன்படுகின்றான்.

கௌசிகன் காலடியில் வீழ்ந்து வணங்கிய அகலிகையின் உயிர் பிரிவதாகக் கவிஞர் தன் கவிதையை முடித்துப் படிப்பவரை வியப்பில் ஆழ்த்துகின்றார். செப்பின் புணர்ச்சி போல் கூட்டினும் கூடாதது பிரிந்த உறவு என்ற உண்மை உணர்ந்தவராக அகலிகையின் பாத்திரப் படைப்பை உயர்த்தியிருப்பது இக்கவிஞர் காட்டும் புதிய நுட்பம். எனினும் மனமாசில்லாதவள் அகலிகை என்ற பழைய நோக்கையும் உடன்பட்டு ஏற்றுக் கொண்டுள்ளார். புதுமைக்கும் பழைமைக்குமான பாலம் போல அமைந்த கவிதையின் உட்கருத்தும் ஆழ்ந்து சிந்தித்து கவிஞரால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திரன் அகலிகையை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கௌதமன் குடிலுக்கு விருந்தினனாக வந்தான் எனக் கவிஞர் வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும் அவனுடைய அந்த வஞ்சக நோக்கத்தைப் படிப்பவர் குறிப்பாகப் புரிந்து கொள்ளும் வகையில் உண்டு மகிழ்ந்த அவன் காமன் கதை விவரம் கேட்டதாக்க் கூறியுள்ளார்.

பார்வதியைத் துறந்து சிவன் தவத்தில் ஈடுபட்டது போலவே கௌதமனும் அகலிகை அருகிருந்தும் அவளைப் புறக்கணித்து அறிவு நாட்டம் கொண்டவனாக இருப்பதை தான் புரிந்து கொண்டிருப்பதைக் குறிப்பாக அகலிகைக்கு உணர்த்தவே அவன் அப்பழங்கதை பற்றிப் பேசுகின்றான். இக்கதை நிகழ்ச்சி கௌதமன் புறக்கணிப்பால் தாபவயப்பட்டவாளாக இருக்கும் அகலிகையின் அகமனத் தவிப்பைத் தூண்ட அப்புராண நிகழ்ச்சி அவள் வாழ்வோடு பின்னியதாக, கனவாக உருக்கொள்கின்றது. அக்கனவு மயக்கத்தில் இருந்த அகலிகையை இந்திரன் புணர்கின்றான்.

அத்தவற்றினைச் செய்யும் முன் சேவலெனக் கூவி கௌதமனைக் காலைக்கடனுக்கு இந்திரன் அனுப்பிய தந்திரத்தையும் ஆசிரியர் வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும் இரவு விருந்தாளியாக வந்த அவன் சேவல் கூவும் நேரம் வரை அங்கு தங்கப் போவதாகக் கூறுவது முன் கூட்டியே ஒரு தந்திரத் திட்டத்தோடு வந்தவன் இந்திரன் என்பதனைக் குறிப்பாக உணர்த்துவதாக உள்ளது.

சுருங்கிய அளவினதாயினும் இக்கவிதை ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்குப் பழங்கதையின் நுட்பம் அனைத்தையும் உட்கொண்டு முந்தைய படைப்பாளர்கள் எவரும் பயன்படுத்தாத சில புதிய உத்திகளைப் பயன்படுத்தி படைக்கப் பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு கவிஞரும் தங்கள் கற்பனைத் திறத்தால் அகலிகை வாழ்வின் அவலத்தைப் புதிய ஒளியில் காண இடந்தருவதாலேயே அகலிகை பற்றி படைப்புகள் தொடர்ந்து கவிஞர்கள் கருத்ந்தைக் கவர்ந்த வண்ணம் உள்ளன.

அவதார புருஷனில் அகலிகை

- வாலி

இராமகாதையினை "அவதார புருஷன்" என்ற தலைப்பில் வசன கவிதைத் தொடராக வாலி தொடங்குகிறார் என்ற அறிவிப்பு ஆனந்தவிகடனில் வெளியாயிற்று. இராமன் கதையோடு இராமாயணக் கிளைக் கதைகளும் இடம் பெறுமா என்று அறிய ஆவலோடு காத்திருந்தேன்.

வான்மீகி தொடங்கி வைத்த அகலிகை வரலாற்றை வாலி எத்தகைய கண்ணோட்டத்தில் அணுகுகின்றார் என்பதனைச் சிந்தித்தபடி காத்திருந்தேன். அகலிகை பற்றிய இந்த ஆய்வில் இன்று வரையான படைப்புகளையும் உள்ளடக்கியதாகச் சிறக்கும் என்பதே என் ஆவலுக்குக் காரணம்.

30.4.95, 7.5.95 ஆகிய ஆனந்தவிகடன் இதழ்களில் சுமார் 200 வரிகளில் அகலிகை வரலாற்றினை வாலி சுருக்கமாகப் படைத்திருந்தாலும் அகலிகை தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தையும் அதில் இடம்பெறச் செய்துள்ளார்.

முதல் பகுதியில் பண்டை இதிகாசங்களில் இடம் பெறாத அகலிகையின் பிறப்பு, அவள் அழகு, அவளை மனைவியாக அடையத் தேவர்களிடையேயான போட்டி ஆகியன பிற்கால புராண மரபுகளை ஒட்டி,

"அமுதத்தோடு அவள் பிறந்ததனால்
அமுதம் போலவே அவளும் சிறந்தாள்
பகல் விளக்கான சூரியன் கூட
அகல் விளக்காவான் அவள் முன் நின்றால்
அந்த

அழகுப் புதையலை அடைய விரும்பி
அமரர் கூட்டம் அல்லாடியது
அல்லும் பகலும் மல்லாடியது"

என எடுத்துரைக்கின்றார்.

அகலிகையினை யாருக்கு மணம் செய்து தருவது என்ற பிரச்னைக்குத் தீர்வுகாண அவள் தந்தையான பிரமன் அறிவித்ததாக இருவேறு போட்டிகள் புராணங்களில் கூறப்பட்டுள்ளன. முதலில் உலகை வலம் வருபவனுக்கே அகலிகை உரியவள் என்ற மரபோடு இருதலைகளையுடைய பசுவை முதலில் கண்டு வலம் வருபவர்களுக்கே அகலிகை உரியவள் என்ற மரபும் வழங்குகின்றது.

உலகினை முதலில் வலம் வருபவனுக்கே அகலிகை உரியவள் எனப் பிரமன் அறிவிக்கின்றான். இதனைக் கேட்ட இந்திரன் தன் ஐராவதத்தில் ஏறிப் புறப்படுகின்றான். கலகப்பிரியரான நாரதர் இந்திரனுக்குப் போட்டியாக அகலிகையை கௌதமனுக்கு மணம் முடிப்பது என்ற முயற்சியில் ஈடுபடுகிறார். அகலிகையின் அழகைப் பற்றிக் கௌதமனிடம் கூறி அவரை அழைத்துச் சென்று கன்று ஈன்று கொண்டிருக்கும் பசுவை வலம் வரச் செய்கிறார். பிரமனிடம் அவரை அழைத்துச் சென்று கன்றை ஈன்றபடி உள்ள பசு அண்டசராசரங்களையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் உயிராகும் என்று அவன் படைத்த வேதத்திலேயே பிரமன் கூறியுள்ளதை எடுத்துக் கூறி அத்தகைய பசுவை வலம் வந்தது உலகை வலம் வந்ததற்கு இணையாகும் என்ற கௌதமனுக்கு அகலிகையை மணம் முடித்து வைக்கின்றார். உண்மையாகவே உலகை வலம் வந்து முடித்த இந்திரன் ஏமாற்றத்துக்கு உள்ளாகின்றான். இது முதலாவது மரபின் படியான புராண வழக்கு.

இரண்டாவது மரபின் படியான வழக்கில் பிரமன் அறிவிப்புப்படி தேவர்கள் இரண்டு தலையுடைய பசுவைத் தேடியலைகின்றனர். நாரதரோ கௌதமனை கன்றை ஈன்றபடி உள்ள பசுவை - அதன் கன்றின் தலை முதலில் வெளிப்படும் சமயத்தில்

- வலம்வரச் செய்து பிரமனிடம் அழைத்துச் சென்று மணம் முடிக்கின்றார். வாலி தனது அகலிகை கதையில் இரண்டாவதான இந்த மரபை ஏற்றுக் கொண்டவராக,

முகங்கள் இரண்டு
முளைத்த பசுவை
சகங்கள் இரண்டிலும்
தேடினர் தேவர்!
நாராயணின் நாமம் பாடும்
நாரத முனிவன் நிறைமா தத்துக்
காராம் பசுவைக் கண்டு பிடித்துக்
கௌதம முனிவன் குடிலில் சேர்த்தான்
ஆனும் கன்றை
ஈனும் பொழுது
முதலில் கன்றின்
முகம்வெளி வந்தது.
ஒருமுகம் முன்புறம்
ஒருமுகம் பின்புறம்
இருந்திடும் தருணம்
நலந்தரு நாரதன்
நற்றவ முனிவனை
வலம்வரச் சொன்னான்
வந்தான் முனிவனும்
பிரமனும் தனது
பேச்சுப் படியே
அகலிகை என்னும்
அமுதக் குடத்தை
கௌதம முனிவன்
கையில் தந்தான்

எனக் கவிதையை நடத்திச் செல்கிறார்.

இரண்டாவது பகுதியில் இந்திரன் பின்னிய சூழ்ச்சி வலையும் அதன் பின் நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன. இந்திரன் கொண்டைச்

சேவலாய் வந்து கூவி கௌதமனை வெளியேறச் செய்தபின் குடிலினுள் கௌதமன் வேடத்தில் நுழைந்து அகலிகையைத் தழுவி மகிழ்கின்றான். இந்திரன் கலவியின் போதான அகலிகையின் உணர்வினை வான்மீகி விரிவாகவும் கம்பன் நுட்பமாகவும் உணர்த்துவதுபோல அகலிகையின் அக உணர்வினை வாலி தெளிவு படுத்தினாரில்லை.

கணவன் என்றே காரிகை நினைத்தாள்
கட்டிய கைக்குள் தன்னைப் புதைத்தாள்

எனச் சுருக்கமாகக் கூறி முடிக்கின்றார்.

முனிவன் திரும்பியதை உணர்ந்து இந்திரன் பூனை வடிவில் வெளியேற முற்பட்டபோது அவனை யாரென உணர்ந்த முனிவன் சபிப்பதிலும் பின் அகலிகைக்குச் சாபம் தருவதிலும் எத்தகைய மாற்றமும் இல்லை. ஆனால் கல்லாகும்படி சபிக்கப்பட்ட அகலிகை கோபம் கொண்டவளாக,

இது -
பெண் பிழை யல்ல;
புல்லன் ஒருவன் புருஷன் வேடம்
புனைந்ததை அறியாக்
கண்பிழை யாகும்
கணவன் என்றே
கருதிய பின்னே
கலவியில் நானும் கலந்தது எப்படி
என் பிழையாகும்?
பாவி யொருத்தன்
சேவலைப் போலே
கூவிய உடனே குளிக்கப் போனது
உன் பிழை யாகும்.
என்னைப் போலே
இந்திரனாலே
நீயும் தானே
ஏய்க்கப் பெற்றாய்

எனக் கௌதமன் தன்னைச் சபிக்கத் தகுதியற்றவன் என வாதிடுகின்றாள்.

ச.து.சு. யோகியாரின் குறுங்காவியமான அகல்யாவில் கல்லான அகலிகை இராமன் திருவடி அருளால் பெண்ணானபின் அவளை மீண்டும் ஏற்றுக் கொள்ளுமாறு இராமன் கூறியதைக் கௌதமன் மறுத்தபோது இந்த அவல நிகழ்ச்சியில் கௌதமன் பேரிலும் தவறு உண்டு என்பதை எடுத்துக்காட்ட இராமன் இதுபோல் அவனோடு வாதிடுவதாகப் படைக்கப்பட்டுள்ளது. அதே வாதத்தினை அகலிகையே இங்குத் தன் கணவன் முன் வைப்பதாக வாலி படைத்துள்ளதில் புதுமையில்லை. எனினும் கணவன் சாபமிட்டவுடன் அதனை மௌனமாக ஏற்றுக் கொண்டு விமோசனம் எப்போது எனக் கேட்கும் புராணகால அகலிகையினைக் காட்டிலும் முன்னேற்றம் உடையவளாகக் படைக்கப்பட்டுள்ளாள். அவளது இந்த வாதத்திற்குப் பிறகே கௌதமன், "வருவான் ஒருநாள் தசரத ராமன் தருவான் உனக்கு விடுதலை" எனச் சாபவிமோசனம் தருகின்றான்.

இவ்வரலாறு முழுதும் தன் பாத துளிபட்டு

கல்லொரு பெண்ணாய்க்
கனிந்தது கண்டு
வில்லுடை ராமன்
வியந்து நின்றபோது

அவனுக்கு விசுவமித்திரனால் எடுத்துரைக்கப்படுவதாகப் பழைய மரபினைப் பின்பற்றி வாலியால் படைக்கப்பட்டுள்ளது.

அகலிகையும் கௌதமனும் மீண்டும் இணைந்தவர்களாக,

"பிழைத்த பெண்மை
பிழைத்தது இன்று
பிழைக்க வைத்த உன்
பாதம் நன்று"

என ராமனை வாழ்த்தி வணங்குவதாக அகலிகை வரலாறு முடிகின்றது.

வான்மீகி முதலில் படைத்துவிட்ட அகலிகையை இன்றைய தலைமுறையினரான வாலிவரை கவிஞர்களும் கதையாசிரியர்களும் தத்தெடுத்துக் கொண்டு தங்கள் மனோபாவத்திற்கும் தாங்கள் வாழும் சமூக சூழலுக்கும் ஏற்பப் புரட்சிப் பெண்ணாகவும் புதுமைப்பெண்ணாகவும் வளர்த்து விட்டுள்ளனர். பாஞ்சாலிக்குப் புதுமைப் பெண் மெருகு சேர்த்த பாரதியின் மனோபாவத்தைப் பலரது படைப்புகளிலும் காண்கின்றோம் வருங்காலத்தில் இதே அகலிகை படைப்பாளர்களால் மேலும் வளர்வாள். அப்போது அவள் கற்பின் கனலி சீதையைப் போல அடங்கிப் போகாமல் கணவனுக்குத் தீங்கு புரிந்தவர்கள் மீது சீறி எழுந்த கண்ணகிபோல தன் கற்புக்குத் தீங்கிழைத்த இந்திரனுக்குத் தானே சாபம் இடும் நெஞ்சில் அக்னியை வைத்த தீவிரவாதப் புரட்சிப் பெண்ணாக உருவெடுத்தாலும் வியப்பதற்கில்லை. புதுக்கவிதை படைக்கும் படைப்பாளர்களில் யாரேனும் ஒருவர் என்னுடைய இந்தக் கருத்தின் அடிப்படையில் அகலிகை வரலாற்றைப் படைப்பாக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

அகலிகை

- ரவீந்திரநாத் தாகூர்

சாகித்ய அகாடமி 1961 இல் முதல் பதிப்பாக வெளியிட்டுள்ள ரவீந்திரர் கவிதைத் திரட்டில் அகலிகை பற்றிய தாகூரின் கவிதை இடம் பெற்றுள்ளது. இதனை வசன கவிதையாகத் தமிழில் மொழி பெயர்த்திருப்பவர் த.நா. குமாரசுவாமி.

புதுயுகப் படைப்பாளர்கள் அகலிகை பற்றிச் சென்ற நூற்றாண்டிலேயே சிந்தித்துப் புதிய போக்கில் கவிதை படைத்துள்ளனர் என்பதற்கு இக்கவிதை எடுத்துக்காட்டு. 1890 ஆம் ஆண்டில் "மாநஸி" மே மாத இதழில் வங்க மொழியில் இக்கவிதை வெளியாகி உள்ளது. அகலிகை பற்றிய புதிய சிந்தனை செய்த படைப்பாளர்களுள் முன்னோடியாக விளங்கிய பெருமை தாகூருக்கு உரியது. வரலாறு, புராண இதிகாசத் தொடர்புடைய நாடகங்களைப் படைத்துள்ள தாகூர் அகலிகை வாழ்க்கையை கருவினை மையமாகக் கொண்ட நாடகம் படைக்காத குறையினை நிறைவு செய்யும் வகையில் இவரது கவிதை அமைந்துள்ளது.

இக்கவிதையில் அகலிகை வரலாற்றைச் சுருக்கமாகக் கூடக் கவிஞர் தொட்டுச் செல்லவில்லை. அவள் வாழ்க்கையில் நிகழ்ந்த அவலம் காரணமாகச் கல்லாய்ச் சபிக்கப்பட்டு மண்ணின் மடியில் கிடக்கும் அவளுடைய உணர்வுகள் எத்தகையனவாக இருந்திருக்கும் என்று கவிஞர் தன் கற்பனை ஆற்றல் கொண்டு உணர்ச்சிமயமான கவிதையாக இதனைப் படைத்துள்ளார். அவருக்குப் பின்னர்கூட வேறுயாரும் இந்த நோக்கில் அவள் வாழ்வை அணுக வில்லை.

"நீள் இரவு பகல் மண்மீது கல்லுருவாகி
வேள்வித் தழல் அவிந்து தவசியர் துறந்து
சூனியம் நிலவும் தபோவன நிழலிடை நீ
எக்கனவு கண்டு காலங் கழித்தனை அகலிகையே?"

என அகலிகையை நோக்கிக் கவிஞர் தொடுக்கும் வினாவாகக் கவிதை தொடங்குகின்றது.

இத்தொடக்கமே உருவகமாக அகலிகை வாழ்வின் ஒரு சித்திரமாக அமைந்துள்ளது. வேள்வித் தீ அணைந்தது போல் அவளும் உயிர் அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றாள். சூனியத்திடை நிற்கும் சிதைந்த தபோவனக்குடிலைப்போல துணையாருமற்று எதிர்காலக் கனவு கண்டபடி அவள் கிடப்பதாகக் கூறும் கவிஞர் அக்கனவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்ய இயலாதவராக அவளையே அது பற்றி வினவுகின்றார். ராமன் வருவான், தன் வாழ்வு மீண்டு உயிர்ப்புடையதாகும் என்ற நம்பிக்கையோடு கூடிய கனவா அல்லது இனி விமோசனம் இல்லை என்ற வகையில் தன் வாழ்வு மண்ணோடு மாய்ந்து உயிரொளி காணாது அழிந்து போகப் போகின்றது என்ற கனவா எனத் துணிய இயலாததாக அவள் வாழ்வு அமைந்துள்ளமையே கவிஞரின் இந்த வினாவிற்குக் காரணமாகின்றது.

கல்லாகித் தன் மடியில் வீழ்ந்த அகலிகையை வாழ்வில் தாழ்வுற்று பிறந்தகம் திரும்பும் மகளை ஒருதாய் பரிவோடு ஏற்று அணைத்து ஆறுதல் செய்வதுபோல மண்மடந்தை ஏற்றுத் தழுவியபடி உள்ளாள் என்பதனை,

"பரந்த இம்மண்ணகமதில் ஒன்றி ஓர் உடலாகி
மறைந்து இருந்தனையோ?
மாநில அன்னையவள் காட்டிய அன்பினை
எவ்வண்ணம் உணர்ந்தனை அச்சமயம்?"

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

மக்கள் தொடர்ந்து நடமாடும் சாலை மருங்கில் அமைந்த குழலில். தெருவோடு அமைந்த வீட்டில் வாழ்பவர்கள் தெருவில் போவோர் வருவோருடைய சிரிப்பு, சீற்றம், பேச்சு, அழுகை, அன்பு, அரவணைப்பு ஆகியவற்றை கேட்கும் வாய்ப்புப் பெறுவர். அது அவர்கள் வாழ்க்கையின் தனிமை உணர்வை போக்க உதவும் சில சமயங்களில் அவை உழைத்து, பின் களைத்து உறங்குபவர்கள் தூக்கத்தைக் கலைத்து அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தவும் செய்வதுண்டு. அகலிகை வாழ்க்கையில் இத்தகைய அவலம் குறுக்கிட்டிருக்கக் கூடுமோ என்ற ஐயம் கவிஞர் மனதில் தோன்றுகின்றது. அதனை அவளிடமே,

"இரவும் பகலும் எண்ணிலா உயிர்க்கணம்
கூடுவது, ஊடுவது; அலைவது, அழுவது;
சிரிப்பது, சீறுவது; வழிச்செல்வோர்
காலடியோசையுடன்
இவை யாவும் உனது சாப உறக்கம் - தனைக்
கலைத்து
உன் செவிக்குள் புகுந்தனவா?
கண்விழிப்பு அறியாக் கடுந்துயிலினின்று
உன்னை மெல்ல எழுப்பவில்லையா இவை?"

எனக் கேட்கின்றார் கவிஞர்.

"கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும்" ஐம்புலன்களின் இயக்கத்தைக் கொண்டதல்லவா உயர் வாழ்க்கை? கேட்டலாகிய செவிப்பொறி வழி நிகழும் உணர்வினைக் கல்லாகி இருந்த அகலிகை இழந்ததற்காக வருந்திய கவிஞர், அடுத்து, உற்றறிதலாகிய மெய்ப் பொறியால் உயிர் எய்தும் அந்த உணர்வும் அகலிகைக்கு வாய்க்கும் வாய்ப்பு உள்ளதா இல்லையா என்பதனில் ஐயுற்றவராக,

"வசந்த ருதுவில் புதுமாருதம் வீசுகையில்
தரணியின் மேனியில் எழும் புல்லரிப்பு
உனது கல்லுடலிலும் தோன்றியதோ?
வறட்சியை வென்றிட, உயிர் உணர்வு

பல உருவில் கிளர்ந்து எழுகையில்,
நீ உறையும் பாறையில் படர்ந்து -
கரம்பென விளங்கும் உன் சாபமதை
நீக்கிட வில்லையா?"

என வினவுகின்றார். உடலிருந்து உயிர் நீங்கிட அது உணர்விழந்ததாகக் கிடப்பது கரம்பு போன்றது என்ற கவிஞரது கற்பனை புதுவிருந்து. நிலம் என்றிருந்தால் அது பயன் தருதல் வேண்டும். அவ்வாறு பயன்தர, அதில் நீரின் சேர்க்கை ஏற்படும்போது பல்லுயிர்களையும் அது படைத்து அளிப்பதாதல் வேண்டும். கரம்பு நிலம், நீரும் சூரிய ஒளியும் பெற்றதாயினும் உயிர்ப்புடையதாதலில்லை. அதுபோன்றதே உணர்வற்றுக் கல்லாகுமாறு அகலிகை பெற்ற சாபம் என்பதை "கரம்பெண விளங்கும் உன் சாபம்" என நுட்பமான பொருளுடையதாகக் கற்பனை செய்துள்ளார்.

குளிர்காலம். பனிபெய்யும் இரவு நேரம். "பனியத்துச் செல்லாதே" என்பது நெடுங்காலமாக வழக்கில் இருக்கும் பழமொழி. உயிர் வாழ்வோர் பனிக்கஞ்சிப் பாதுகாப்புத் தேடுவர். பாவம்! கல்லாகிவிட்ட இந்தக் காரிகை எப்படி இப்பனிப் பொழிவிலிருந்து தப்பமுடியும்? இரவெல்லாம் பெய்த பனிப்பொழிவு நீண்ட அவள் கருங்கூந்தலில் வெண்முத்துக்களென மின்னுகின்றன. அந்த அழகுக் கோலத்தினை,

"அன்றெழுந்த தரணியின் இளங் கன்னிகையாய்
அழகும் எளிமையும் தூய்மையும் கொண்டே
தோன்றினை.
வைகறைப் பொலிவுகொள் உலகினை நோக்கியே
வியப்பால் பேச்சிழந்தே நிற்கின்றாய் நீ
உனது பாறை உடல்மேல் இரவெல்லாம் உறைத்த
பனித்துனிகள் தாள்வரை புரளும்
உன் தார்நறுங் கூந்தலிடையே இப்பொழுது
மகிழ்வுடன் மின்னுகின்றன"

என வருணித்திருப்பது அவலச் சுவை காட்டும் ஓவியம் ஒன்றின் அழகில் மெய்மறப்பதற்கொப்பான கற்பனையாக அமைந்துள்ளது.

அழகு சேர்க்கும் ஆடையினை விரும்பாத மகளிருண்டா என்ன? சிலையுருவில் அருள்செய்யும் தெய்வ அன்னை வடிவங்களைக்கூட வேளைதோறும் விதவிதமான ஆடையும் அணியும் பூட்டி அழகு செய்து கண்டு மகிழ்கின்றனரே பக்தர்கள். கற்சிலை ஆகிவிட்ட இந்த அழகு மகளுக்கும் தன் கற்பனையால் ஆடை அணிவித்து மகிழ்கின்றார் கவிஞர். பனிப்பருவம் முன்பு அவள் கூந்தலை அழகு செய்ததுபோலவே மாரிக்காலமும் தன்கொடையாக அவளுக்கு புத்தாடை அணிவிப்பதை.

"மண்மிசைப் பல்லூழ் பசுந்துகில் எனத்திகழ்ந்து
பல மழைப் பெருக்கால் செழித்தே விளங்கும்
இப்பாசிக் கொடி உன் உடலை மறைத்து.
இன்று உன் தூய மேனியை வளைத்தே அதுதான்
அன்னை தந்த ஆடையென அன்பின்
மென்மையுடன் திகழ்கிறது"

என வருணித்துள்ளார்.

பருவங்கங்ள் உலகை எழிலூட்டும் அழகினைப் பல கவிதைகளில் புனைந்துள்ள கவிஞர் இங்கும் பருவங்கள் அகலிகைக்காக அவள் கல்லாயினும் அழகு செய்து மகிழ்வதாகத் தன் இயல்பிற்கேற்பக் கற்பனை செய்துள்ளார்.

ராமன் வருகைக்காக அகலிகை காத்திருக்கிறாள். அதனை நான், மாதம், ஆண்டு எனக் கணக்கிட்டு கூற இயலாதபடி காலப் பாதையில் அவள் பதித்த அடிச்சுவடுகள் மறைந்துவிட்டன. அவள் உலகுக்கே ஒரு புதிராக இருக்கின்றாள்.

இந்த அவளுடைய நிலைக்கான குற்றவாளி யார்? கணவனான கௌதமனா? காம இச்சையோடு வந்த இந்திரனா? அந்த இந்தினை அவனாக அறிந்தோ அறியாமலோ அவனது இச்சைக்குப் பலியான அவளா?

தீர்ப்பு வழங்க வேண்டியது உலகத்தின் பொறுப்பு என்பது கவிஞரது உள்ளக்கிடக்கை ஆனால் அது அவ்வளவு சுலபமான வேலையில்லை என்பதனையும், அவரே இவ்வாறு,

"நாற்றிசையிலிருந்து உலகின் பழைய
நினைவுகள் யாவும்
விரைந்து வந்தன; உன் முன்னால் கூட்டம் கூடியே
வாழ்வின் பொலிவனைத்தும் வந்தன.
உன்னை அணுகியே அவை திடுக்கிட்டு
இமையா விழியுடன் நின்றன"

என எடுத்துரைக்கின்றார்.

ராமன் கால் செய்த தவமோ என்னும்படி அவன் கால்பட்டு அவள், தன் "முழு எழிலுடன் குழவிப் பருவமும் இளமையும் இணைந்து ஒரு காம்பில் பூத்த புதிய மலர்போல" நிற்கின்றாள். இதுவரை அவள் உணர்வுகளை விழுங்கி அவளை மூழ்கடித்திருந்த மறதி என்ற கடலிலிருந்து மீண்டவளாக இந்த உலகை வியப்போடு பார்க்கின்றாள். அவள் செய்த புண்ணியம் இது. இனி உலகம் அவள் மீது பழி கூற இடமில்லை. அது வாய்மூடி மௌனமாகி விட்டதை, "உன்னைக் காணும் இப்பேருலகம் ஒன்றும் பேசாமல் இருப்பதைக் காண்" எனக் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

ராம லட்சுமணருக்கும் இது பேச இயலாததான வியப்பாக உள்ளது. அவர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி "இது என்ன வியப்பு?" எனக் கேட்பது போல் வாயடைத்து நிற்கின்றனர்.

ஆம்! இது அந்தக் காடு மட்டுமே அறிந்த ரகசியம். புதுமை மிக்க ஓர் இன்ப அனுபவம் எனக் கவிஞரும் தமது வியப்பை வெளிப்படுத்தியவராகக் கவிதையை முடித்துள்ளார்.

நடந்ததை நடந்தபடி வெளிப்படையாகச் செய்தியேட்டுப் பாணியிலேயே பலரும் அகலிகையின் வாழ்வின் அவலத்தையும் அதன் தீர்வையும் படைப்பாக்கி உள்ளனர். வங்கக் கவி தாகூர் நிகழ்வுகளை முதன்மைப் படுத்தாமல் அந்த நிகழ்வுகளின்

விளைவான உணர்வுகளுக்கு வடிவம் தந்து இக்கவிதையைப் படைத்துள்ளார்.

மன்மகளைத் தாயாக உருவகித்து அவள் மடியில் துயரத்தோடு வந்து விழுந்த குழவியாக அகலிகையை உருவகித்துள்ளார் மண்மகளின் அனுதாபத்தோடு கூடிய அணைப்பு அகலிகையின் துயரத்தை ஆற்றுகின்றது. பருவங்கள் மாறி மாறி நிகழக்காலம் விரைந்தோட அகலிகை எதிர் பார்த்த நாளும் வந்தது. ராமன் திருவடி தீண்ட அவள் மீண்டும் புதுப்பொலிவோடு பெண்ணாக உயிர்பெற்றாள்.

அதற்குக் காரணமான ராமன் வருகை கூடக் கவிதையில் குறிப்பாகவே கூறப்பட்டுள்ளது. கதையைப் பற்றிக் கருவைப் பற்றி கவிதையின் உருவைப் பற்றி எல்லாம் கவலைப்படாது கல்லாகிவிட்ட அகலிகையின் உணர்வுகள் என்னவாக இருந்திருக்கும் என்பதனைக் கற்பனை செய்வதனையே கவிஞர் முதன்மைப் படுத்தி இக்கவிதையைத் தந்துள்ளார்.

பிறந்து ஒரு நூறாண்டு ஆன பின்னரும் இளமையும் இனிமையும் குன்றாததாகப் படிப்பவர் மனத்தைத் தளர்நடையிட்டும். புதிர் முறுவல் காட்டியும் மகிழ்விக்கும் கவிதைக் குழவி இது என்பதில் ஐயமில்லை. இந்தக் குழவியின் வளர்ச்சியாகவே அகலிகை பற்றி அடுத்தடுத்துப் படைக்கப்பட்ட கவிதைகளும் கதைகளும் தோற்றம் தருவதில் வியப்பேதுமில்லை.

பின்னிணைப்பு

அகலிகை வாழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட கதை, கவிதை, நாடகம் ஆகியவற்றின் திறனாய்வினை முடித்து அச்சுக்குத் தந்து நூல் அச்சேறி முடியும் சமயத்தில் மார்ச் 1998 அமுதசுரபி இதழில் கவிஞர் முருகு சுந்தரம் அவர்களின் வெள்ளை யானை என்ற வசன கவிதை வெளிவரக் கண்டேன்.

எனது இந்தத் திறனாய்வு நூலின் கட்டுரை ஒன்றில் "வருங்காலத்தில் அகலிகை வாழ்வைக் கருவாகக் கொண்டு மேலும் பலர் இலக்கியம் படைப்பர்'' என்ற என் நம்பிக்கையை வெளியிட்டிருந்தேன். அந்த என் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் முதல் முகிழ்ப்பாக இக்கவிதை அமைந்து விட்டதில் ஒரு மகிழ்ச்சி. அத்துடன் இக்கவிதை பற்றிய திறனாய்வுக் கட்டுரையும் எனது விமர்சன நூலில் இடம் பெறச் செய்தால் நூல் முழுமை பெறும் என்பதால் இத்திறனாய்வுக் கட்டுரை நூலின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

வெள்ளை யானை

- முருகு சுந்தரம்

கவிஞர் முருகு சுந்தரம் புதிய நோக்கில் அகலிகை வரலாற்றினை அணுகியுள்ளார் என்பதனை வெள்ளை யானை என்ற தலைப்பே உணர்த்துகின்றது. கவிஞரின் அறிமுக முன்னுரை இல்லையாயின் இது அகலிகை வாழ்வினைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட வசன கவிதை என்பதனை வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ளுதல் இயலாது. புதுமைப்பித்தனின் "சாபவிமோசனம்" ந. பிச்சமூர்த்தியின் "உயிர்மகள்" ஞானியின் "கல்லிகை" தவிர பிற படைப்பாளர்களின் படைப்புகள் கதைத் தலைவியான அகலிகையின் பெயரையே படைப்புக்குத் தலைப்பாகக் கொண்டுள்ளன. பிற படைப்பாளர்கள் பெரிதும் கம்பனது அகலிகைப் படலத்தைத் தழுவியவர்களாகத் தங்கள் படைப்பிலான நிகழ்ச்சிகளை விவரித்திருக்க இவர் அத்துடன் வான்மீகம் கூறும் அகலிகை வரலாற்று நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்துக் கவிதை படைத்துள்ளது தனிச்சிறப்புக்கு உரியது.

இவரது இந்த வசனகவிதை 700 வரிகள் அளவினதாக நீண்டிருப்பினும் இது உள்ளடக்கியுள்ள சொற்கள் ஆயிரத்துக்கும் சற்றுக் கூடுதலானவையே. சிறுகதை என வகைப்படுத்தப்பட்டுள்ள புதுமைப்பித்தனின் "சாபவிமோசனம்" 2000 க்கும் மேற்பட்ட சொற்களைக் கொண்டதாக இருப்பினும் அதனைக் குறுநாவல் என்பாரில்லை. அதே அள்வுகோல் கொண்டு பார்க்கும்போது இதனைக் குறுங்காப்பியம் என்பதனைவிட கவிதை எனக் கொள்வதே பொருத்தமான வகைப்பாடாகத் தோன்றுகின்றது.

தனது அகலிகை வரலாற்றினைக் கவிஞர் ஐந்து பகுதிகளாக வழங்கியுள்ளார். ஒவ்வொரு பகுதியும் காண்டம் என

அழைக்கப்படுகிறது. பாலகாண்டம், ஆரண்யகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என நான்கு பகுதிகள் ராமாயணக் காண்டத் தலைப்புகளைப் பெற்றிருக்க இரண்டாவதான சுயம்வர காண்டம் மட்டும் புதியதான தலைப்பைப் பெற்றுள்ளது.

பாலகாண்டத்தில் அகலிகையின் பிறப்பும் வளர்ப்பும் கூறப்படுகின்றன. இதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் வான்மீகத்திலோ கம்பராமாணத்திலோ இடம்பெறவில்லை. பிற படைப்புகள் அகலிகையின் தந்தை பிரமன் எனக் கூற, இதனுள் முக்தல முனிவர் என்பர் அகலிகையின் தந்தையாகக் கூறப்படுகிறார். இப்புதிய செய்திக்கான ஆதாரம் வேறு புராணங்களில் இருத்தல் கூடும்.

சுயம்வர காண்டம் அகலிகையின் திருமண நிகழ்ச்சியை விவரிப்பதாக அமைந்துள்ளது. பிற படைப்புகளில் பிரமன் போட்டி நடத்தில் அதில் வெற்றி பெற்ற கௌதமனுக்கு அகலிகையை மனைவியாக்கினான் என்ற செய்தி விவரிக்கப்பட்டுள்ளது. இதனுள் பிரமனைப் போலவே முக்தல முனிவரும் போட்டி நடத்தி அதில் வென்ற கௌதமனுக்குத் தன் மகளைத் தருவதான செய்தி புதிய நோக்கில் விவரிக்கப்பட்டுள்ளது.

சுயம்வர காண்டம் என்பதைவிட போட்டிக் காண்டம் என்பதே இப்பகுதிக்கு ஏற்ற தலைப்பு என்பது என் கருத்து. இரண்டு பழம்பெரும் இதிகாசங்களின் நாயகிகளான சீதையும் திரௌபதியும் சுயம்வரத்தில் தங்கள் கணவர்களை அடைந்ததாகப் பொதுவாகப் பேசப்படுகிறது. வில்லை ஒடித்து ராமன் சீதையை மணந்தான். மச்சத்தை வீழ்த்தி அர்ச்சுனன் திரௌபதியை அடைந்தான். கணவர்களைத தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு முழுமையாக வழங்கப்படும்போதே அது சயம்வரம் என்ற தகுதிக்கு உடையதாகும். உடல்வலிமை அல்லது அறிவுத்திறன் காட்டிடும் போட்டியில் வெற்றி பெறுபவனுக்கே ஒருத்தி உரியவளாவாள் என்பது எப்படி சுயம்வரம் ஆகும்? கூடியிருந்தவர்களிடையே தன் உரிமையை, விருப்பத்தை வெளிப்படுத்தி உண்மையான சுயம்வரத்தில் நளனைக கணவனைத் தேர்ந்தெடுத்தவள் தமயந்தி ஒருத்தியே. சீதையும் திரௌபதியும்

வென்றவனுக்கு மாலையிட்டவர்கள். அகலிகையும் இங்கு அதுபோலப் போட்டியில் வென்ற - அதுவும் குறுக்கு வழியில் - கௌதமனுக்கு மனைவியாவதால் இதனைப் போட்டிக் காண்டம் என்பதே பொருத்தமானது.

முக்தல முனிவர், அகலிகையை மனைவியாக அடையத் தன் ஆசிரமத்தில் வந்து கூடியுள்ள தேவர் மற்றும் மனிதர்களிடையே,

"உலகை
யார் முதலில்
வலம் வருகின்றாரோ
அவருக்கே உரியவள்
எனது
தளிர் மேனித்
தங்கப் பதக்கம்"

என முன்னறிவிப்புச் செய்கின்றான்.

தன் மனதை முன்பே கவர்ந்த கன்னி அகலிகையை எளிதில் அடையலாம் என்ற நம்பிக்கையோடு ஐராவதத்தின் மீதேறி வேகமாகப் பறக்கின்றான் இந்திரன். கௌதமனோ பசுவை வலம் வந்து போட்டியில் வென்றதாக நிலைநாட்டி அகலிகையைக் கைப்பிடிக்கின்றான்.

இங்கு கவிஞர் இந்நிகழ்ச்சி பற்றிய தன்னுடைய விமர்சனமாக அன்றும் இன்றும் ஓட்டப்பந்தயங்களில் பலரும் வஞ்சக வழியிலேயே வெற்றி தேடிக் கொண்டுள்ளனர் என்பதனை,

"அன்று
கணபதி
அர்கொனாட்ஸ்,
இன்று கௌதமன்"

என விமர்சித்துள்ளதோடு குறுக்கு வழியில் வென்ற "பெருந்தாடிப் பென்ஜான்சனான" கௌதமனைத் தகுதி நீக்கம் செய்ய அங்கு யாருக்கும் துணிச்சலில்லை எனக் கூறி, புராண வரலாற்று

நிகழ்ச்சிகளோடு இந்த நூற்றாண்டில் ஒலிம்பிக் போட்டிகளில் கூடக் குறுக்குவழி வெற்றி நிகழ்வுகள் உண்டு என்பதனை எடுத்துக்காட்டியுள்ளது புதுமையானது.

"தந்தை தாரை வார்க்கத்
தலை நிமர்ந்த கோலமயில் எதிரில்
தலைவிரித்துக்
குலை சரிந்த ஈந்தாகச்
சடா முடியோடு
தாடிக் கௌதமன்"

என்ற வரிகளோடு சுயம்வர காண்டத்தை முடித்திருப்பது கானகத்தில் சோலைகளிடையே ஆடி அழகு செய்ய வேண்டிய மயில் பாலையில் ஈச்ச மரங்களுக்கிடையே தன் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ள இருப்பதைக் குறிப்பாக உணர்த்துவதாக உள்ளது.

✣ ✣ ✣

ஆரண்ய காண்டத்தின் தொடக்கத்தில் கௌதமன் ஆசிரமத்தில் அகலிகையின் முதலிரவின் போதான அனுபவம்,

"கூரையில்
ஒரு சிலந்திக் கூடு
அவள் மனச்சிக்கல் போல்
அதுவும் பெரிதாகிப் படர,
அதன் நடுவில்
ஒட்டிக் கொண்டிருந்த
சிலந்தியும்
உருண்டு திரண்டு
ஒரு ராட்சதச் சிலந்தியாக வளர
தான் ஓர் ஈயாக மாறி
வலையில் சிக்கிக் கொள்ள
சிலந்தியின் வளைந்த
இடுக்கிப் பற்கள்

தன்னை நெருங்கிவர
அவள்"

பரிதாபமான இசிப்போடு கதறி மயங்கி விழுகிறாள் என விவரிக்கப்பட்டுள்ளது. கௌதமனின் தந்திரவலையில் எதிர்பாராது அகப்பட்ட அபலை அகலிகை என்பதனை இந்த உருவகம் மனதில் பதியும்படி புலப்படுத்துகிறது.

உடலளவில் கட்டிலில் இரவில் இவ்வாறு அவதிக்கு உள்ளானாலும் பகலில் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் அகலிகை தவறினாலில்லை. நாளும் அவள் நெஞ்ச மலர் வாடித்துவண்டது. அதற்குக் காரணம் "மலரினும் மெல்லிது காமம்" என்பதனை உணராதவனாகக் கௌதமன் அகலிகையின் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாதவனாகத் தனக்கு உடல் தினவு தோன்றியபோது மட்டுமே தன் காமவேட்கையைத் தீர்க்கும் கருவியாக அவளைப் பயன்படுத்தியதேயாகும் என காட்டில் அகலிகையின் அன்றாட வாழ்க்கையைச் சித்தரிப்பதாக ஆரண்ய காண்டம் முடிவுறுகின்றது.

✤ ✤ ✤

யுத்த காண்டம் அகலிகையின் மனப்போராட்டத்தை உணர்த்தி, அப்போராட்டத்தில் தோற்ற அவள், இந்திரன் காமவேட்கைக்குப் பலியாவதை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. பகல் நேரத்தில் கடமைகளில் தன் மனக்கவலையை மறந்தவளான அகலிகை இரவு நேரங்களில் மனப் போராட்டத்திற்கு உள்ளாகின்றாள். அதன் விளைவான கனவுகள். அடிக்கடி அவளை அச்சுறுத்துகின்றன. காட்டில் சத்துக்கள் பொறுக்கும்போது அவளைச் சுற்றி வட்டமிட்டுப் பறந்து பின்னாலிருந்து தாக்கும் வெள்ளை யானை பற்றிய கனவே அடிக்கடி தோன்றும் கனவாகும். அது நான்கு கொம்புகளிலும் நவமணிப் பூணிகள் அணிந்த சிறகு முளைத்த பறக்கும் யானை. அந்த யானை கனவில் வரும்போதெல்லாம் அவள் தன்னையும் அறியாமல் ஒரு பெண்யானையாக மாறி விடுகின்றாள். தப்பி ஓட முயலும் அவள் மரக்கிளையிடையே

அகப்பட்டுக்கொள்ள அந்த வெள்ளை யானை பிடியாக மாறிவிட்ட அவளைப் பின்னாலிருந்து காமவெறியோடு தாக்குகிறது. கனவிலேற்படும் இந்த தாக்குதலால் அஞ்சிக் கூக்குரலிட்டு விழித்துக் கொள்ளும் அவளை ஆறுதலடையச் செய்வது கௌதமன் வழக்கம்.

கனவு மனதில் ஏற்படுத்திய இனம்புரியாத சஞ்சலத்தால் அவள் அவதிக்கு உள்ளான காலகட்டத்தில் இந்திரன் சேவலாகக் கூவி கௌதமனைக் குடிலிலிருந்து வெளியேற்றியபின், கௌதமன் உருவில் குடிலில் நுழைகின்றான். காலம் அல்லாத காலத்தில் சென்ற கணவன் மீண்டும் சிற்றின்பவேட்கையோடு திரும்பி வந்ததை எண்ணி அவள் வியப்புற்றாள். வந்தவன் கை தன் உடம்பைத் தீண்டிய அளவிலேயே தன் உடம்பு வழக்கம்போலக் கட்டையாக மாறாமல் புத்துணர்வால் பூரித்ததை வைத்து வந்தவன் யாரென்ற உண்மையைப் புரிந்து கொண்டாள். அமரர் தலைவனே தன்னைத்தேடி வந்ததில் பெருமிதம் கொண்ட அவள் எந்தத் தடையும் செய்யாமல் தன்னை அவனுக்க அர்ப்பணிக்கிறாள். ஆனந்த வெள்ளத்தில் மிதந்த அவர்கள் வெளியே பாத குறட்டுச் சத்தம் கேட்டுப் பதறுகின்றனர்.

"வானவர் தலைவா
வந்துவிட்டார் கௌதமர்
தப்பிப் பிழைத்துக்கொள்"

என்ற அகலிகையின் எச்சரிக்கையால் யானையாக வந்த இந்திரன் பூனையாகிப் புறப்பட்டான் எனக் கூறும் கவிஞர் இங்கு சங்ககாலம் தொட்டு (பரிபாடல்) வழக்கில் இருந்து வருவதான பழைய மரபைப் பின்பற்றியுள்ளார். அவன் உண்மையிலேயே பூனையாக உருக்கொள்ளாவிடினும் கௌதமனின் தவ வலிமையை அறிந்துள்ளதால் ஏற்பட்ட அச்சத்தால் பூனை போலப் பதுங்கிச் சென்றான் எனப் பொருள் செய்யவும் இங்கு இடம் உள்ளது.

கௌதமன் அவனை நோக்கி,

"எந்த உறுப்பின்
தினவுக்கு

அடிமையானாயோ,
எதைத் தேடி வந்தாயோ
அதுவே உன் உடம்பாக"

என்று சபித்த அளவில் கொச்சைப்பட்டு நின்ற அவன், உலகமே தன்னை ஏளனமாகப் பாப்பதாகக் கருதிக் கூசி நடுங்கினான்.

அடுத்து கௌதமன் அகலிகையைப் பார்த்து.

"வாயு பக்ஷா நிரா ஹாரா
தப்யந்தீ பஸ்மசாயினி..."

என்று சாபமிடத் தொடங்கியபோது அகலிகை குறுக்கிட்டவளாக

"சுவாமி
கொஞ்சம் பொறுங்கள்
என் தவறு
இச்சை கலந்த
திருமணம் ஆன
நாளிலிருந்து
என்னையும் அறியாமல்
இரண்டு வாழ்க்கை
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
இந்த விலாங்கு வாழ்க்கை
எனக்கு வேண்டாம்
உங்கள் கையில்
இதுநாள் வரை
நான் கல்தானே?
இப்போதும்
நான் கல்லாக
அனுக்கிரகம் செய்யுங்கள்"

என வேண்ட அவள் விருப்பபடியே கல்லானாள் என்பதாக யுத்த காண்டம் முடிகின்றது.

இப்பகுதி கௌதமனுக்கு வாழ்க்கைப்பட்ட பின்னும் சுயம்வரத்தின்போது தான் கண்டு காதல் கொண்ட இந்திரனை அவள் மறக்காதவளாக இருந்ததே அவளுடைய வெள்ளை யானைக் கனவுகளுக்குக் காரணம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

கல்லாகும்படி சாபம் பெற்ற அகலிகை தன் சாபத்திற்கான விமோசனம் எப்போது என்று கேட்பதான புராண நிகழ்ச்சி கவிதையில் இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது. பின்னர் மீண்டும் உயிர்த்தெழுந்த அவள் கௌதமனோடு வாழ உடன்படாதவளாகப் படைக்கப்பட்டுள்ள கவிதைப் போக்கிற்கு அத்தகைய சாபவிமோசனத்தை அவள் கேட்டுப் பெறுவது முரண்பாடானதாக அமையலாம் என்பதால் கவிஞர் அதனைக் கூறாது விட்டார் போலும்.

மனப் போராட்டத்திற்கு உள்ளானவளாக இருந்த அகலிகை சந்தர்ப்பவசத்தால் அந்தப் போராட்டத்தில் தோல்வியுற்று இந்திரன் காம இச்சைக்கு உடன்பட்டாள் என்பதால் இது யுத்தகாண்டம் எனப் பெயரிடப்பட்டது எனலாம். காமம் மதங்கொண்ட யானையைப் போன்றது. அது கல்விப்பாகன் அங்குசத்திற்கும் அடங்காது என்பார் இளங்கோ. ஒழுக்கநெறி நிற்கும் விருப்பம் உடைய பெண்களும் உடல் உறவில் கைப்பிடித்த கணவனிடம் நிறைவு காணாத போது இத்தகைய போராட்டத்திற்கு உள்ளாவது இயற்கை. அதில் வெல்வோர் மிகச் சிலரே. அகலிகை போலத் தோல்வியைத் தழுவி வாழ்வை முழுமையாக இழப்பவர்களே பலராக உள்ளனர் என்பதை உணர்த்தும் வகையில் அமைந்தது கவிஞரின் இந்த யுத்தகாண்டம்.

✤ ✤ ✤

ராமன் பாதம்பட கல்நித்திரையிலிருந்து விழித்த அகலிகையின் மறுபிறவி வாழ்க்கையைச் சித்தரிப்பதாக அமைந்தது இறுதிக் காண்டமாக அமைந்த உத்திர காண்டம்.

மீண்டும் உயிர்பெற்ற அகலிகையை விசுவாமித்திரர், "தீர்க்க சுமங்கலி பவ" என வாழ்த்துகின்றார். தவக்கோலத்தில் மீண்டும் ஒரு முனிவரைக் கண்ட அகலிகை காய்ச்சிய இரும்பை மிதித்தவள் போல மிரண்டு அஞ்சுகின்றாள். விசுவாமித்திரரின் வாழ்க்கை அப்போது அவள் மனதில் சித்திரமாக விரிகின்றது. கைக்குழந்தையை ஏந்தியபடி நிற்கும் மேனைகயைக் காணப்பிடிக்காது முகம் திருப்பிக் கொண்டவராகத் தன் குழந்தையையும் காதலித்தவளையும் கைவிட்டவரல்லவா இவர் என்ற நினைப்பு அகலிகை மனதைச் சுடுகின்றது. இருந்தாலும் அவள் தன்னை அறியாமலேயே அவர் காலில் விழுந்து வணங்குகின்றாள். தன்னை வணங்கிய அவளிடம் விசுவாமித்திரரும் அவளுக்குச் சாபவிமோசனம் கிடைத்துவிட்டதாகவும் அவள் கற்பின் மீது படிந்திருந்த களங்கம் காலத்தால் காய்ந்து உதிர்ந்து விட்டதாகவும் கூறுகிறார்.

அவரது இந்தப் பேச்சு அகலிகைக்குப் பிடிக்கவில்லை. தன்னைக் கற்பிழந்தவள் எனக்கூறிய விசுவாமித்திரரிடம் அவள்,

"நான்
என் வாழ்நாளில்
ஒரே ஓர்
ஆடவனைத்தான்
உள்ளத்தால் வரித்து
ஆராதனை செய்கிறேன்
என் கற்பின் மீது
களங்கம் படிவது
எப்படி சுவாமி?"

எனக் கேட்கின்றாள்.

வியப்புற்ற விசுவாமித்திரர், "யார் அந்த ஆடவன்?" எனக் கேட்க, "இந்திரன்" என்ற அவள் பதில் அவரை மேலும் அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றது. "தேவர், முனிவர் சாட்சியாக நீ கைபிடித்த கெளதமன்?" எனப் பதற்றத்தோடு கேட்ட அவரிடம்,

"கை பிடித்தவர்
கௌதமர்!
நான் வெறும் தர்ப்பை;
இரவில் அவர்
ஒதுங்கி மூட்டும்
ஓம குண்டத்தில்
ஒடித்துப் போடப்படும் சமித்து
நான் அதில்
அடிக்கடி சாம்பலாகிக் கொண்டிருந்தேன்
என்பதுதான் உண்மை"

எனக் கௌதமனோடு தான் வாழ்ந்த காலத்தில் தன் அகவாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றத்தை எடுத்துரைக்கின்றாள்.

கௌதமன் அவளை இப்போது மீண்டும் மனைவியாக ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கின்றான் என்று விசுவாமித்திரர் கூறக்கேட்ட அவள் தான் மனதில் ஒருவனை வரித்தவளாக உடலளவில் வேறொருவனோடு இனியும் வாழ முற்படுவது சோர வாழ்க்கையாகும் எனக்கூறிக் கௌதமனோடு மீண்டும் வாழ்வைத் தொடங்க மறுத்து விடுகிறாள்.

"அகல்யா உன் முடிவுதான் என்ன?" என்று கேட்ட விசுவாமித்திரரிடம் அகலிகை,

"சுவாமி!
நீர் சர்வ வல்லமை படைத்தவர்
என்னை
ஒரு பெண்யானையாக்கி
அமராபதியின்
கற்பகச் சோலையில்
விட்டுவிடுங்கள்"

எனக் கூறித் தலைகுனிவதாகத் தன் வெள்ளை யானைக் கவிதையை முடித்துள்ளார் கவிஞர்.

கௌதமன் வேடத்தில் வந்த தன் கனவுக் காதலனான இந்திரனிடம் தன்னை இழந்துவிட்ட அகலிகை மீண்டும் அவன் உறவையே விரும்புகிறாள். இன்பதனையே இந்திரனுடைய கற்பகச் சோலையில் திரியும் பெண் யானையாகத் தன்னை மாற்றி அனுப்பும்படி அகலிகை கேட்டுக் கொள்வது காட்டுவதாக உள்ளது.

அவ்வாறான அவளது விருப்பம் நிறைவேற்றி வைக்கப்பட்டதா என்பதற்கான விடை கவிதையில் இல்லை.

பிற படைப்புகளில்போல ராமனும் கௌதமனும் இப்படைப்பில் நேரிடையாகப் பாத்திரங்களாகப் பங்குபெறவில்லை. அகலிகையின் மனப்போராட்டத்தை வெளிப்படுத்துவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கவிஞர் இக்கவிதையைப் படைத்துள்ளார். இந்திரன் அழகிலும் ஆண்மையிலும் மயங்கிச் சுயம்வரத்தின்போது அவனே தனக்கு மணவாளன் ஆதல்வேண்டும் என்ற அகலிகையின் நிறைவேறாத ஆசை அவளுடைய அடிமனத்தில் வேர்விட்டிருந்தது. அவளுக்குக் கணவனாக வாய்த்த கௌதமன் அகவாழ்வில் அவளைப் புரிந்துகொள்ளாதவனாக அமைந்துவிட்டது அந்த ஆசை மடிந்து போகாமல் உயிர்பெற்றுத் தழைக்கக் காரணமானது.

இந்திரன் கௌதமன் உருவில் வந்து அவளைத் தொட்ட அளவிலே அது தன் கணவனில்லை தன் கனவுக் காதலன் என்பதைப் புரிந்து கொண்டாள் என்றாலும் உடல் வேட்கைக்கு அடிமையாகித் தன்னை மறந்தவளாக அவனோடு இன்புற்றாள். சாபத்தால் கல்லானாள். மீண்டும் உயிர்பெற்ற போதும் அவள் நாட்டமும் வேட்கையும் அந்தக் காதலனிடமே அவளைப் பிணைத்துவிட்டிருந்தது என்பதே கவிஞர் உணர்த்தும் செய்தி.

உத்திரகாண்டத்தில் அகலிகை விசுவாமித்திரரோடு மாறுபடுவதும் வாதிடுவதும் பிரபஞ்சனது அகலிகை நாடகத்தில் அகலிகைக்கும் விசுவாமித்திரருக்கும் நடக்கும் கற்பு. உடல்தூய்மை பற்றியதா மனத்தூய்மை பற்றியதா என்ற விவாதத்தின் சுருக்கம்போல அமைந்துள்ளது என்பதை இங்கே நினைவில் கொள்ளாமல் இருக்க

இயலவில்லை. பிரபஞ்சனது அந்த நாடகத்தின் தாக்கம் இது எனலாம்.

கவிஞர் முருகசுந்தரம் தனது இக்கவிதையின் அறிமுக முன்னுரையில்,

> "டாக்டர் ஃப்ராய்டின் ஆழ்மனத் தத்துவம் (Psychoanalysis) உலகக்கலை, இலக்கியங்களை வெகுமாகப் பாதித்தது. அந்தப் பாதிப்பின் விளைவாக எழுந்ததுதான் மீமெய்ம்மை இலக்கியம் (Surrealistic Literature) அகலிகையின் ஆழ்மனக் கூறுபாடுகளும் அவற்றின் விளைவுகளுமே இக்காப்பியத்தின் கரு."

எனத்தான் கம்பன் படைத்த அகலிகையிலிருந்து மாறுபட்ட ஒரு பாத்திரமாக அவளைப் படைத்திருப்பதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். அப்படியிருக்க அமுதசுரபி ஏப்ரல் 1998 இதழில் வெளியான இக்கவிதையைப்பற்றி பிரேமா நந்தகுமார், எழுதியுள்ள விமர்சனக் கடிதம், இவர் படைப்பு அகலிகையினைக் காமத்துக்கு ஆட்பட்டு உயர்ந்ததான பெண்மை நலத்தினை இழந்தவளாகச் சித்தரித்து இருப்பது ரசிக்கக்கூடியதாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இல்லை எனக் குற்றம் சாட்டுகின்றது. இது புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் வெளியானபோது ராஜாஜி அவர்கள் வெளியிட்ட கண்டனக் கருத்துரையின் எதிரொலி போல அமைந்துள்ளது. இலக்கிய விமர்சனத்தில் பழமைவாதிகள் அன்றும் இன்றும் என்றும் ஒரே மாதிரியான பார்வையினர் என்பதனை மெய்ப்பிப்பதாக இவரது கடிதம் அமைந்திருப்பதில் வியப்பேதுமில்லை.



28.12.1931இல் கோவை மாவட்டத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் க.ரத்னம். கோவையிலும் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் கல்லூரிப் படிப்பை முடித்தபின் அரசுக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 1961இல் இவரது *'பேதை நெஞ்சம்'* என்ற வசன கவிதைத் தொகுதி வெளிவந்தது. *உருவகக் கதைகள், காலத்தேரொலி* என்பன தொடர்ந்து வெளியான படைப்புக்கள். *கனவுமாலை, நினைவின் நிழல்* என்ற நாவல்களை அடுத்து 1963இல் வெளியான *கல்லும் மண்ணும்* என்ற நாவல் புதுமையான முயற்சி என்ற பாராட்டைப் பெற்றது. *தென்னிந்தியப் பறவைகள், தமிழில் பறவைப்பெயர்கள்* என்பன பறவையியலில் இவருக்கு உள்ள ஆர்வங்காரணமாகப் படைக்கப்பட்டவை. Thurston 1900இல் வெளியிட்ட Caste and Tribes of South India என்ற ஏழு தொகுதிகளையும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்காகத் தனி ஒருவராகவே தமிழில் மொழி பெயர்த்தவர். எனினும் அண்மைக்காலம் வரை அச்சேறாது, புதைந்து கிடந்த புதுமைப்பித்தனின் *ஸ்டாலினுக்குத் தெரியும்* என்ற கையெழுத்துப் பிரதியை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்ததையே தனது சாதனையாகக் கருதுகிறார். பழைய அரிய நூல்களைத் தேடித் தொகுப்பதிலும் ஆர்வமுள்ள இவர் தனது பத்தாண்டு காலத் தேடல்களின் பயனாகக் கிடைத்த அகலிகை பற்றிய படைப்புகளின் விமர்சன நூலே *இவர்கள் பார்வையில் அகலிகை* என்ற இந்தப் படைப்பு.